

நானும் ஒரு பெண் தான் பக்கம் 09



தடை நீங்கியது பக்கம் 11



சுயாதீன சர்வதேச விசாரணைதான் பக்கம் 14



இங்கிலாந்து பலம் பக்கம் 27

www.onlineuthayan.com

பக்கங்கள்: 36

# உதயன்

சுடர் 27
கதிர் 132

வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 24 வெள்ளிக்கிழமை (06/04/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# போர்க் குற்றங்கள் குறித்து சுயாதீன விசாரணை தேவை

## அமெரிக்கா மீண்டும் வலியுறுத்து ஸ்ரீபன் ராப் அறிக்கை சமர்ப்பிப்பு

கொழும்பு, ஏப்ரல் 6

நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக் குழு விசாரிக்கத் தவறிய, கவனம் செலுத்தத் தவறிய போர்க்குற்றச்சாட்டுக்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசு சுயாதீனமானவிசாரணை ஒன்றை நடத்தவேண்டும் என்று அமெரிக்கா மீண்டும் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் விசேட மனித உரிமை அலுவலரான ஸ்ரீபன் ராப், இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பில் தான் நடத்திய விசாரணை தொடர்பான அறிக்கையை அமெரிக்க நாடாளுமன்றத்தில் நேற்றுச் சமர்ப்பித்தார்.

அந்த அறிக்கையில், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழுவின் அறிக்கையையும் நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழுவின் அறிக்கையையும் விமர்சித்துள்ளார். அவரது அறிக்கையின் முடிவுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கற்றுக்கொண்ட பாடங்களுக்கும் நல்லிணக்கப்பாட்டுக்குமான ஆணைக்குழுவின்பரிந்துரைகளை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். இலங்கை அரசை அமெரிக்க வெளியுறவு அமைச்சு தொடர்ந்தும் ஊக்குவிக்கும்.

அதேவேளை, நல்லிணக்கப்பாட்டுக்கான ஆணைக்குழு குறிப்பிடத்தவறிய நம்பகமான குற்றச்சாட்டுகள் தொடர்பாக சுயாதீன விசாரணைக்குழுவொன்றை இலங்கை அரசு நிறுவவேண்டும்.

பொதுமக்களின் இலக்குகள் மீதான தாக்குதல்கள், யுத்த சூனியமண்டலப்பகுதி மீதான ஷெல் தாக்குதல்கள், சரணடைந்த புலிகள் படுகொலையுண்டமை, பாலியல் சம்பந்தமான வன்முறைகள் ஆகியவை தொடர்பான குற்றச்சாட்டுகள் என்பன ஆராயப்பட வேண்டியுள்ள விடயங்களில் அடங்கும்.

மனிதாபிமான நிவாரண விநியோகம், காணாமல் போகச் செய்தல், கைது செய்வதற்கும் தடுத்துவைப்பதற்குமான நடவடிக்கைகள் ஆகியவை சம்பந்தப்பட்ட முறைமீடுகளும் விசாரிக்கப்படவேண்டும். 04

## இலங்கை - இந்திய உறவில் இப்போது சுமுகமான நிலை

### நாடாளுமன்றில் ஜி.எல்.பீரிஸ்

கொழும்பு,ஏப்.6

இலங்கை தொடர்பான அமெரிக்கத் தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவாக வாக்களித்துள்ள நிலையில், இலங்கை - இந்திய உறவுகளில் விரிசல் இன்றி சுமூக நிலை காணப்படுவதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

என்ன நடந்தது என்பதை அவதானித்து அதற்கு ஏற்றாற்போல் நகர விரும்புவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவுடனான உறவு குறித்து நாடாளுமன்றில் நேற்று எதிர்கட்சி எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த வெளிவிவகார அமைச்சர், இந்தியாவுடன் இலங்கைக்கு கோபமோ, பகையோ இல்லை எனக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மேலும் இலங்கை - இந்திய உறவைச் சுட்டிக் காட்டும் வகையிலேயே இந்திய எதிர்கட்சித் தலைவர் சுஸ்மா சுவராஜ் தலைமையிலான அனைத்து கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் குழு இலங்கை வருகிறது.

ஜெனிவாவில் இந்தியாவின் முடிவு வேறு சில நாடுகளையும் எதிராக வாக்களிக்க வழி செய்தது.

இந்தியாவின் முடிவை அடுத்து, 04

## இரும்புக் கூண்டுக்குள் இணைந்த ஜோடிகள்



கொழும்பு, ஏப்.6

வெலிக்கடை சிறைச்சாலையில் சிறைப்பறவைகளாக இருந்த இரண்டு இளைஞர்களை சுதந்திரப்பறவைகளாக வெளியில் வாழும் இரு இளம் பெண்கள் மனதார விரும்பி திருமணம் முடித்துக்கொண்டனர். இந்தச் சம்பவம் நேற்று கொழும்பு வெலிக்கடை புதிய மகஸின் சிறைச்சாலை 04

## இலங்கை வரும் குழுவில் தமிழகக் கட்சிகள் 'அவுட்'

சென்னை,ஏப்.6

இந்திய நாடாளுமன்ற மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையில் எதிர்வரும் 16ஆம் திகதி இலங்கை வரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் தமிழகத்தைச் சேர்ந்த அரசியல் கட்சிகளான அ.தி.மு.க, ம.தி.மு.க, விடுதலைச் சிறுத்தைகள் ஆகியவை இடம்பெறவில்லை. இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அழைப்பு இல்லை.

இலங்கைப் பயணம் தொடர்பாக தங்களுக்கு எந்த விதத் தகவலும் அளிக்கப்படவில்லை என்று இந்திய 04

## அரசியல் கைதிகளை தொடர்ந்தும் சிறை வைக்கமுடியாது

கொழும்பு,ஏப்.6

அரசியல் கைதிகளை தொடர்ந்தும் சிறைப்படுத்தி வைத்திருக்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேக்காவை பார்வையிட்ட பின்னரே நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய இதனைக் கூறினார்.

தமிழ், சிங்களப் புத்தாண்டு காலம் அடுத்த வாரம் ஆரம்பமாகின்றது, பழைய பிரச்சினைகளை மறந்து நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டிய காலம் இதுவாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். 04

## மஹிந்த மீதான வழக்கு தள்ளுபடி அமெ. நீதிமன்றில் மேன் முறையீடு

நியூயோர்க்,ஏப்.6

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான வழக்கு அமெரிக்க நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டதை எதிர்த்துக் கொலம்பியா மாவட்ட மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கைப் படையினரால் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினரான காசிப்பிள்ளை மனோகரன், கலைச்செல்வன், ஜெயக்குமார் ஐயாத்துரை ஆகியோரின் சார்பில் சட்டவாளர் புரூஸ் பெய்ன், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதி 04

## பொருந்தாததைச் செய்யமாட்டோம்; சர்வதேசத்துக்கு இலங்கை சவால்

கொழும்பு, ஏப்.6

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என சர்வதேச சமூகம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வரும்வேளையில், மேற்குலகம் மட்டுமல்ல, வேறு எவர் கூறினாலும் நாட்டுக்குப் பொருந்தாத விடயங்களை நாம் ஒருபோதும் செய்யமாட்டோம். நல்லிணக்க ஆணைக் குழு விடயத்திலும் இதே அணுகுமுறையைத்தான் நாம் கையாள்வோம் என இலங்கை அரசு நேற்று ஆணித்தரமாக கூறியுள்ளது. 04

இன்றும் நாளையும் மாபெரும் மலிவு விற்பனை

SALE

சில்வர், பித்தளை மற்றும் அலங்கார அன்பளிப்பு பொருள்களும் எம்மிடம் உண்டு

பலாலி வீதி, கோண்டாவில் சந்தி, கோண்டாவில்

பாரதி

### துமிந்தவுக்கு மற்றொரு சத்திரசிகிச்சை

தற்போது சிங்கப்பூரில் சிகிச்சை பெற்றுவரும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு அடுத்தவாரம் மற்றொரு சத்திர சிகிச்சை செய்யப்படவுள்ளது. சிங்கப்பூரிலுள்ள எலிசபெத் வைத்தியசாலையில் இந்தச்சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளதாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

### ஆர்ப்பாட்டம்

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்படும் கொடுமைகளைக் கண்டித்து இந்தியத் தலைநகர் புதுடில்லியில், சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்பாளர்கள் அமைப்பு நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தியது. இலங்கைத் தூதரகம் முன்பாக நடந்த போராட்டத்தில் இலங்கை இராணுவத்தின் போர்க் குற்றங்களுக்கும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. டில்லி தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் இதில் கலந்து கொண்டனர். தமிழர்களுக்கு எதிரான கொடுமையை நிறுத்த இந்திய அரசு இலங்கை அரசுக்கு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றது.

### சீனப் பிரஜை கடலில் மூழ்கினார்

வெலிகம - கிராகல கடலில் நீராடிக் கொண்டிருந்த யங் நங் லீ சுஜியன் என்ற சீன நாட்டுப் பிரஜை நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளார். நேற்று முன்தினம் பகல் காணாமல் போன இவர் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. கடற்படையினர், கரையோரப் பாதுகாப்பு பிரிவினரின் உதவியுடன் வெலிகம பொலிஸார் காணாமல் போன சீன நபரைத் தேடி வருகின்றனர். காணாமல் போன சீனப் பிரஜை கடந்த மாதம் 30ஆம் திகதி தொடக்கம் மிரிஸ்ஸ - உடுபிலி சந்தியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்துள்ளார்.

### 2000 ஊழியர்களை நிறுத்தியது யாகூ

2000 ஊழியர்களை தங்களது நிறுவனத்திலிருந்து பணிநிறுத்துவதாகப் பிரபல இணைய நிறுவனமான யாகூ உறுதிப்படுத்தியுள்ளது. தங்களது நிறுவனத்தைச் சிறியதாக, சுறுசுறுப்பானதாக, அதிக இலாபமுடையதாக, பாவனையாளர்கள் விரும்பும் விதத்திலுடையதாக, புத்தாக்க சிந்தனையுள்ளதாக மாற்றுவதற்காக இந்த நடவடிக்கையை மேற்கொள்வதாக யாகூ நிறுவனம் அறிவித்துள்ளது.

### பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு 6300 கோடி நிலுவை

அரச மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த 21 நிறுவனங்களிடமிருந்து பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 6300 கோடி ரூபாவை இன்னும் வசூலிக்க வேண்டியுள்ளதாக நாடாளுமன்றத்தில் நேற்று அறிவிக்கப்பட்டது. ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளித்த பெற்றோலியத் துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இத்தகவலைத் தெரிவித்தார். ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் மாத்திரம் 1200 கோடி ரூபாவை செலுத்த வேண்டியுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானுடன் இலங்கை நெருங்கிய வர்த்தக உறவு



பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படும் 'திவிநெகும' திட்டத்தின் மூன்றாம் கட்டம் நேற்று வியாழக்கிழமை நாடளாவிய ரீதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் பிரதான நிகழ்வு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையின் தோட்டத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வின் போது ஜனாதிபதி முருங்கைக் கன்று ஒன்றை நாட்டினார். (த)

**சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள போதும் இரு நாடுகளுக்கும் இடையில் மிகக்குறைவான 344 மில்லியன் தொகை வர்த்தகமே இடம்பெற்று வருகிறது**

இஸ்லாமாபாத்,ஏப்.6

பாகிஸ்தானுடனான வர்த்தக உறவுகளை மேம்படுத்திக் கொள்ள இலங்கை அதிக ஆர்வம் கொண்டுள்ளதென பாகிஸ்தானுக்கான இலங்கை தூதுவர் ஜயலத் வீரகொடி தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளும் அரசியல் ரீதியில் சிறந்த நட்புறவைக் கொண்டு இயங்கி வருவதாகவும் வர்த்தக நடவடிக்கையிலும் இதனைக் கடைபிடிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான் ராவல்பிண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பாகிஸ்தான் வர்த்தகர் சங்கத் தலைவர் ஜவாத் அக்தார் பாத்தியுடனான சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தெற்காசிய வலயத்தில் உள்ள பெரிய நாடுகளான பாகிஸ்தான் - இலங்கை இடையிலான வர்த்தக உறவுகள் வலய மட்டத்தில் நன்மைகளை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும் என ஜயலத் வீரகொடி கூறியுள்ளார்.

இலங்கை பாகிஸ்தானில் முதலீடுகளைச் செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் பாகிஸ்தான் வர்த்தகப் பிரதிநிதிகள் இலங்கைக்குப் பயணம்செய்து சந்தைக் கேள்விகள் குறித்து ஆராய வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானும் இலங்கையும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள போதும் இரு நாடுகளுக்கும் இடையில் மிகக்குறைவான 344 மில்லியன் தொகை வர்த்தகமே இடம்பெற்று வருவதாகப் பாகிஸ்தான் வர்த்தக சங்கத் தலைவர் ஜவாத் அக்தார் பாத்தி இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். எனவே இலங்கை - பாகிஸ்தானுக்கு இடையிலான வர்த்தக உறவுகள் மேம்படுத்தப்பட வேண்டும் என அவர் கோரியுள்ளார். (த)

## 1000 ரூபா ஆசனப்பட்டி அணியாதவர்களுக்கு இனி அபராதம்

கொழும்பு,ஏப்.6

வாகன ஆசனப்பட்டி போக்குவரத்து விதிமுறையில் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

இதன்படி வாகன ஆசனப்பட்டி அணியாத சாரதிகளுக்கு 1000 ரூபாவும் முன் ஆசனத்தில் அமர்ந்து ஆசனப்பட்டி அணியாதவர்களுக்கு 100 ரூபாவும் தண்டப்பணமாக உடனடியாக அறவிடப்படும் எனப் புதிய விதிமுறை கொண்டுவரப்பட்டுள்ளது.

அரசதகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய பதில் ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன இதனைக் குறிப்பிட்டார்.

மோட்டார் வாகனத் திருத்தச் சட்டத்தின் 157 ஏ (4) பகுதியைத் திருத்தியமைக்கப் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்துக்கு அனுமதி கிடைத்துள்ளது.

## வாகனங்கள் வரி அதிகரிப்பு இறக்குமதியாளர் விசனம்

கொழும்பு,ஏப்.6

வாகனங்கள் மீதான அதிகரித்த இறக்குமதித் தீர்வை மற்றும் நிபந்தனைகள் தொடர்பான தீர்மானத்தை அரசு மாற்றாவிடின் தமக்கு இந்த வியாபாரத்தைக் கைவிடுவது தவிர வேறு வழியில்லை என மீளமைக்கப்பட்ட வாகனங்களை இறக்குமதி செய்வோர் கூறியுள்ளனர்.

வாகனங்கள் மீதான வரியை அதிகரித்தமையை விட அவற்றின் பாவனைக் காலம் குறைக்கப்பட்டமையே பெரிய பிரச்சினையாக உள்ளது. முன்னர் இரண்டு வருடங்கள் வரை பயன்படுத்தப்பட்ட கார்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டது.

இப்போது ஒரு வருடம் அல்லது அதிலும் குறைந்த காலம் பயன்படுத்தப்பட்ட கார்களையே இறக்குமதி செய்ய முடியும். வான்களுக்கான அல்லது அதிலும் பெரிய வாகனங்களுக்கான பாவனைக்காலம் ஐந்து வருடங்களிலிருந்து மூன்றரை வருடங்களாகக் குறைக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக 120 சதவீத தீர்வை செலுத்திய கார்களுக்கு 200 சதவீத தீர்வையும் 51 சதவீத தீர்வையுடன் இறக்குமதியான ஓட்டோக்களுக்கு 100 சதவீத தீர்வையும் செலுத்தவேண்டியுள்ளது.

2009 இல் 3421 வாகனங்களும், 2010இல் 37134 வாகனங்களும், 2011இல் 54285 வாகனங்களும் இறக்குமதி செய்யப்பட்டதாக திறைசேரி அறிவித்துள்ளது.

முன்பு ஒரு குடும்பத்துக்கான காரின் விலை 1.2 மில்லியன் ரூபாவாக இருந்தது. இனிவரும் காலங்களில் அதுபோன்றதொரு கார் வாங்குவதற்கு 5 மில்லியன் ரூபா தேவைப்படும் என வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் யோகா பெரேரா தெரிவித்தார்.

இந்த நிலைமையில், எம்மால் தொழில் செய்ய முடியாது. எனவே இந்த துறையில் வேலை செய்யும் ஒரு மில்லியன் பேர் தமது தொழிலை இழக்கும் ஆபத்தில் உள்ளனர் என்று அவர் மேலும் கூறினார். (த)

## மிதிவெடி அபாயம் நீங்க நீண்ட காலம் செல்லும்

கொழும்பு,ஏப் 06

இலங்கையில் நிலக் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும், கண்ணிவெடி அபாயம் முழுமையாக நீங்குவதற்கு நீண்டகாலம் செல்லும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

மிதிவெடிகள் பற்றிய விழிப் புணர்வுக்கான சர்வதேச தினத்தையொட்டி வவுனியாவில் நடைபெற்ற வைபவத்தில், 2020 ஆம் ஆண்டில் இலங்கையை கண்ணிவெடி அபாயமற்ற நாடாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்த பகுதிகளில் 90 வீதமான இடங்கள் துப்பரவு செய்யப்பட்டு, இடம்பெயர்ந்திருந்த 3 லட்சம் மக்கள் மீளக்குடியேற்றம் செய்யப்பட்டிருப்பதாகப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் தேசிய மிதிவெடிச் செயற்பாட்டு நிலையப் பணிப்பாளர் மொன்டி ரணதுங்க கூறினார்.

வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் 1.5 மில்லியன் வெடி பொருள்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று கடந்த 2002 ஆம் ஆண்டு மதிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் விடுதலைப் புலிகளினால் எத்தனை மிதிவெடிகள், கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டன என்பது பற்றிய விவரங்கள் தெரியாத காரணத்தினால் இந்தப் பிரதேசங்களில் உள்ள வெடிப்பொருள்களின் சரியான எண்ணிக்கையை அறிய முடியாதிருக்கின்றது. இதனால் கண்ணிவெடி அகற்றும் பணி கடினமாகியிருக்கின்றது என்றும் மொன்டி ரணதுங்க குறிப்பிட்டிருக்கின்றார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு மிதிவெடிகளினால் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவில் குறைந்திருக்கின்றது.

எனினும் சந்தையில் பழைய இரும்புக்கு நல்ல விலை கிடைப்பதால் மிதிவெடி அபாயத்தையும் பொருட்படுத்தாமல் பலர் கண்ணிவெடிகள் நிறைந்த பிரதேசங்களில் இரும்பு சேகரிக்கும் முயற்சியில் ஈடுபடுவதாக அதிகாரிகள் கவலை வெளியிடுகின்றனர். (த)

## 5 நாடுகளில் தூதரகங்களை திறக்கிறது இலங்கை அரசு



கொழும்பு,ஏப்.6

துருக்கி, நைஜீரியா, அஸர்பைஜான், சீஷெல்ஸ், மொரிஷியஸ் ஆகிய நாடுகளில் தூதரகங்களை அமைப்பதற்கு இலங்கை தீர்மானித்துள்ளது.

ஜெனிவா தீர்மானத்துக்குப் பின்னர் ஐரோப்பிய நாடுகளிலுள்ள சில தூதரகங்களை மூடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக வெளியான செய்திகள் குறித்து வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரீஸ் கூறுகையில்,அப்படிச்செய்வது விவேகமற்றது என்றார்.

எனினும் புதிய உலக போக்கிற்கமைய, தூதரகங்களை மீளமைக்க வேண்டியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

'எமக்கு நிதிக் கட்டுப்பாடுகள் உள்ளன. உலகில் 193 நாடுகள் உள்ளன. எனினும் 46 நாடுகளில் மாத்திரமே எமக்குத் தூதரகங்கள் உள்ளன. எமது தேவைக்கிணங்க நாம் இவற்றை மீளமைக்க வேண்டும். துருக்கியில் நாம் தூதரகமொன்றை அமைக்கவுள்ளோம். மறைந்த முன்னாள் அமைச்சர் மனோ விஜேரட்னவின் பாரியார் எமது தூதராக இருப்பார். 160 மில்லியன் மக்களைக் கொண்ட நைஜீரியா குறித்தும் நாம் யோசிக்கின்றோம். அஜர்பைஜானில் இலங்கையின் நீலக்கற்களுக்கு அதிக கேள்வி உள்ளது' என்றார்.

இந்து சமுத்திரத்தின் தெற்கிலுள்ள மொரிஷியஸ், சீஷெல்ஸ் ஆகிய நாடுகளுடன் மீன்பிடித்துறை அபிவிருத்திக்காக தொடர்புகளை விருத்தி செய்வது அவசியம்.சில நாடுகளில் பல தசாப்தங்களுக்கு முன்னர் தூதரகங்களைத் திறந்தோம். தற்போது அவற்றின் அரசியல்பூகோள முக்கியத்தும் குறைந்து விட்டது.

சில நாடுகளில் எமது தேயிலைத் துறைக்காகத் தூதரகங்களைத் திறந்தோம். ஆனால் இன்று அவர்களின் வரிக்கொள்கை காரணமாக அந்த நாடுகளில் எமது தேயிலை வர்த்தகம் வீழ்ச்சியடைந்து விட்டது. அத்துடன் சில நாடுகள் அரசியல் ரீதியில் முக்கியத்துவமற்றவையாகிவிட்டன என்றும் அவர் கூறினார். (த)

## மரியன்னை பேராலயத்தில் வழிபாடுகள்

யாழ்ப்பாணம்,ஏப் 06

யாழ்.மரியன்னை பேராலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை, நாளை சனிக்கிழமை, நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள ஆராதனைகள் பற்றிய விவரம் யாழ்.மரியன்னை பேராலயப் பங்குத்தந்தை வண.பிதா எச்.சகாயநாயகம் அடிகளாரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று பெரிய வெள்ளிக்கிழமை தினமாகும். காலை 6.30 மணிக்கு சிலுவைப் பாதை நடைபெறும். இன்று மாலை 4 மணிக்கு யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் பெரிய வெள்ளி தின வழிபாடு நடைபெறும். நாளை காலை 6.30 மணிக்கு யேசு கிறிஸ்துநாதர் சிலுவை மரத்தில் தொங்கிய போது உதிர்த்த ஏழு வார்த்தைகள் தியான வழிபாடும் இரவு 10.30 மணிக்கு யாழ்.ஆயர் தலைமையில் திரு விழிப்பு திருப்பலியும் இடம்பெறும். நாளை மறுதினம் உயிர்த்த ஞாயிறு திருப்பலி காலை 5.45 மணிக்கு யாழ்.ஆயர் தலைமையிலும், தொடர்ந்து இரண்டாம் திருப்பலி காலை 7.15 மணிக்கும் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-51)

## வடக்கு அரச நிர்வாகத்தில் ஆளுநர் தேவையற்ற தலையீடு

### அரச உயரதிகாரிகள் கடும் விசனம்

யாழ்ப்பாணம், ஏப். 6

வடக்கு மாகாண அரச நிர்வாகத்தில் மாகாண ஆளுநர் தேவையற்ற தலையீடுகளை மேற்கொண்டு வருவதால் தங்களால் பணிகளைச் சுதந்திரமாக முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக வடக்கு அரச உயரதிகாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர். ஆளுநர் தம்மை அடியாள்கள் போல நடத்துவதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தனது மாகாண சபை விடயங்கள் தவிர்ந்த ஏனைய அரச நிர்வாகக் கட்டமைப்பிலும் தலையீடு செய்கிறார். பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களின் உயர்மட்ட அரச அதிகாரிகளையும் தனது கட்டளைக்கு கீழ் படிந்து நடக்க வேண்டும் என்று ஆளுநர் வற்புறுத்துவதாக அந்த அரச அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் கூட்டம் ஒன்றைக் கூட்டிய ஆளுநர் வடமாகாணத்தின் கீழ் உள்ள மாவட்ட அரச அதிபர்கள் உட்பட அனைத்து அதிகாரிகளும் தனக்கு கீழ் பணிந்து நடக்க வேண்டுமென்ற தகவலை ஜனாதிபதி விசேட செயலணியின் செயலாளர் திவாரட்ண மூலம் சொல்லியிருக்கிறார். இதற்காகவே அந்தக் கூட்டம் கூட்டப்பட்டதாக அரச அதிகாரிகள் விசனம் தெரிவித்தனர்.

வெளிவிவகார அமைச்சினால் அரச அதிகாரிகளுக்கு வழங்கப்படும் பணிப்புரைக்கமைய அவர்கள் வெளிநாட்டுத் தூதுவர்கள், இராஜதந்திரிகளைச் சந்திக்கின்றபோதும் அவர்களைத் தன்னிடம் அழைத்து வரவேண்டும் என ஆளுநர் பணித்துள்ளதாக அரச அதிகாரிகள் கூறுகின்றனர்.

வடமாகாண ஆளுநரின் இந்த அடாவடி தொடர்பில் 'உதயனு'க்கு கருத்துத் தெரிவித்த அரச உயர் அதிகாரியொருவர், ஆளுநர் இப்போதும் இராணுவ ஆட்சியே நடத்திக்கொண்டிருக்கிறார். எங்களது வேலைகளைச் செய்ய விடாமல் தொந்தரவு தருவதுடன் தான் பணிக்கும் வேலைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் எனக் கட்டளையிடுகிறார் - என்றார்.

வடமாகாண ஆளுநரின் இந்தத் தேவையற்ற தலையீடு காரணமாக மக்களுக்கு மேற்கொள்ள வேண்டிய பணிகளைச் செய்ய முடியாத நிலை உள்ளதாக அதிகாரிகள் கூறினர். (த-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவடிநிலை, காட்டுப்புலம் கரையில் தொழிலுக்கு தடை

## ஆக்கிரமித்த விகாரை, வீடுகளால் மீனவருக்கு நேர்ந்த அவலம்

யாழ்ப்பாணம், ஏப்.6

*சுழிபுரம் திருவடிநிலை, காட்டுப்புலம் கடற்பிரதேசங்களில் கடற்றொழிலுக்கு அனுமதி மறுக்கப்பட்டு வருவதால் அந்தப் பகுதிகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் பெரும் அவலம் அடைந்துள்ளனர்.*

இந்த விடயம் தொடர்பாகத் திருவடிநிலை கெங்காதேவி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் பல்வேறு தரப்பினருக்கும் மனுக்களை அனுப்பி வைத்துள்ளது. அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தக் கரையோரப் பகுதியில் பெரியளவில் விகாரை ஒன்று அமைக்கப்பட்டுள்ள நிலையிலும் தொழிலைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்தோம்.

இந்த நிலையில் அந்தப் பகுதிக் கடற்பரப்பில் தொழில் செய்வதற்குக் கடற்படையினர் அனுமதி மறுத்திருந்தனர்.

தற்போது விகாரை அமைந்துள்ள பகுதியில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் வீடமைப்புப் பணிகள் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது தொழிலுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ள கடற்பகுதி களங்கட்டி மீன்பிடிக்கு உகந்த இடம். இந்த நிலையில் இந்தப் பகுதிகளில் இருந்து பெரும் வருவாயைப் பெற்றோம்.

தற்போது இந்தப் பகுதிகளில் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதால்எமது தொழிலை இழக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. வருமானத்தைப் பெற முடியாமையால் பெரும் சிரமங்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இந்தப்பகுதிகளில்தொடர்ந்தும் கட்டப்பட்டுவரும் வீடுகளே எம்மை இந்த நெருக்கடி எமக்கு ஏற்பட காரணம் என்று கருதுகிறோம்.

இந்த விடயம் தொடர்பாக கடற்படையினருக்கும் தெரியப்படுத்தியிருந்தோம். ஆனால் இது குறித்து பதில் எதையும் அவர்கள் கூறவில்லை.

எனவே இந்த விடயத்தில் உரிய நடவடிக்கை எடுத்து இந்தப் பகுதிகளில் தொழில் செய்வதற்கான வசதிகள் ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்- என்றுள்ளது. (ம)

## கொள்வனவில் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஏப் 6

யாழ். நகரில் மோட்டார் சைக்கிள்களைக் கொள்வனவு செய்வதில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

வாகனங்களுக்கான இறக்குமதி வரியை அரசு அதிகரிக்கவுள்ளதாகத் தெரிவித்திருந்த நிலையில், திங்கள், செவ்வாய் இரு நாள்களும் விற்பனை நிலையங்களில் மக்கள் குழுமியிருந்தனர். நேற்று முன்தினம் விற்பனை நிலையங்கள் வெறிச்சோடிக் கிடந்தன.

யாழ். நகரிலுள்ள ஒரு விற்பனை நிலையத்தில் நேற்று 13 மோட்டார் சைக்கிள்கள் விற்பனையாகியுள்ளன. 'பள்சர்' வகை மோட்டார் சைக்கிளுக்கே அதிக கேள்வி காணப்படுகிறது. கடந்த இரண்டு நாள்களும் 45 மேட்டார் சைக்கிள்கள் விற்பனையாகின. நேற்று முன்தினம் அது 13 ஆகக் குறைந்துள்ளது. பலர் முற்பணம் செலுத்திச் சென்றுள்ளனர் என்றும் விற்பனை நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

திங்கள், செவ்வாய் நாள்களில் தலா 30 இற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள் விற்பனையாகின. நேற்று முன்தினம் ஒரேயொரு மோட்டார் சைக்கிள் மட்டும் விற்பனையாகியுள்ளது என்றார் மற்றொரு விற்பனை நிலைய அதிகாரி.

இதேவேளை பலர் விலை உயரமுன்னர் குறைந்த விலைக்கே மோட்டார் சைக்கிள்களை வாங்க வேண்டும் என்பதற்காக கொள்வனவு செய்தனர். (ம-4)

## பிரதேச செயலகங்களில் மரம் நடுகை



தென்மராட்சி, ஏப்.6

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 'திவிநெகும' வேலைத் திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு நேற்று தென்மராட்சி பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

உதவிப் பிரதேச செயலர் செல்வி இ.நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு சாவகச்சேரி நகரசபையின் எதிர்க் கட்சித் தலைவர் சூ.அலெக்ஸாண்டர் முதன்மை விருந்தினராகவும் மதத் தலைவர்கள் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

காலை 9 மணிக்கு முதன்மை விருந்தினரால் தேசியக் கொடி ஏற்றப்பட்டு சுபநேரமான 9.10 மணிக்கு மரக்கன்றுகள் நடப்பட்டன.

பின்னர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கூட்டமும் இடம்பெற்றது.

இதேவேளை பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன் மரக்கன்றை நட்டு வைத்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அத்துடன் 3 ஆயிரத்து 500 பயனாளிகளுக்கு மரக்கன்றுகளும் விதைகளும் வழங்கப்பட்டன. நிகழ்வில் வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் எஸ்.அனந்தராஜா, பிரதேசசபைத்தலைவர், உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம-9-253)

## குருநகர் கடற்கரை வீதியில் திடீரென தோன்றும் விகாரை

### அப்பகுதி மக்கள் அதிருப்தி; ஆத்திரம்

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ்ப்பாணம் குருநகர் கடற்கரை வீதியில் - மாநகர சபை வளாகத்துக்குச் சமீபமாக - அவசர அவசரமாக பௌத்த விகாரை அமைக்கப்பட்டு வருகிறது என்று யாழ். மாநகர சபை எதிர்க் கட்சி உறுப்பினர் ஆ.பரஞ்சோதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தப் பகுதியில் புராதன அம்மன் கோயில் உள்ளது. இந்தக் கோயிலுக்கு முன்பாக அரச மரத்தின் கீழ் இந்த விகாரை அமைக்கும் பணிகள் இரவு பகலாக - மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இதனால் பிரதேச மக்கள் அதிருப்தியும் ஆத்திரமும் அடைந்துள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள கண்டனக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜெனிவா மனித உரிமைச் சபையின் இலங்கைக்கெதிரான இன நல்லிணக்கத்தை நோக்கிய தீர்மானத்தின் பின்னரும் இலங்கை அரசானது இன்னமும் இன, மத முரண்பாடுகளை வளர்ப்பதிலேயே கவனஞ்செலுத்தி வருகின்றது. இணக்க அரசியல் மூலம் தமிழரின் உரிமைகளை வெல்லலாம் எனக் கூறிக் கொண்டு அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கிக் கொண்டிருக்கும் தமிழ்க் கட்சிகளும் அரசின் செயல்களை ஆதரிப்பது போல் தெரிகிறது.

யாழ். நாகவிகாரைக்கு அடுத்த பெரிய விகாரையொன்று மிக ரகசியமாக மாநகரசபை எல்லைக்குள் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டு வருகின்றது. குருநகரில் கடற்கரை வீதியில் மாநகரசபை வளாகத்துக்கு அண்மையாக மிகப் புரதான கால அம்மன் கோயிலுக்கு முன்பாக அரச மரமொன்றின் கீழ் சுமார் 15 மீற்றர் தூரத்தில் எவரது அனுமதியுமின்றி இவ்விகாரை அமைக்கப்பட்டு வருகின்றது.

நேற்றுமுன்தினம் ஆரம்பமான இவ் வேலைகள் இடைவேளையின்றி இரவு பகலாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இது சம்பந்தமாக மாநகரசபை முதல்வருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அரச அதிபரைத் தொடர்பு கொண்டபோது அவர் கொழும்பு சென்றுள்ளதாக அறிய முடிகிறது. பின்னர் மேலதிக அரச அதிபரைத் தொடர்பு கொண்டபோது எழுத்து மூலம் தருமாறு வேண்டிக் கொண்டுள்ளார்.

இந்து கலாசார அமைச்சுக்கு அமைச்சர் எவரும் இல்லாத நிலையில் புத்த சாசன அமைச்சருக்குக் கீழேயே இந்து சமய விவகாரமும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

கோயில்கள் அமைக்கும் போது புத்த சாசன அமைச்சின் அனுமதி பெற்ற பின்பே கட்டவேண்டுமென அரச சுற்று நிருபமொன்று கூறுகிறது. ஆனால் இந்தச் சுற்றறிக்கையானது இந்து, கிறிஸ்தவ கோயில்கள் கட்டுவதைத் தடுப்பதற்காகவே உருவாக்கப்பட்டதுபோல் தெரிகிறது.

தமிழ் பிரதேசங்களில் அமைக்கப்படும் புத்தவிகாரைகளுக்கு இது விதிவிலக்கானது போலும். அரசுடன் ஒட்டி உறவாடிவரும் தமிழ், முஸ்லிம் கட்சிகள் இவ்விடயத்தில் கரிசனை எடுத்து இதைத் தடுத்து நிறுத்த ஆவண செய்ய வேண்டும். முன்னரும் இதே போல் திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலைக்கு முன்பாகவும் புத்தர் சிலை அமைக்க முயன்றபோது பொது மக்களதும் மாநகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களதும் எதிர்ப்பினால் அம்முயற்சி கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது - என்றுள்ளது. (ஒ-13)

## சித்திரைப் புத்தாண்டுக்கு முன் புதிய சம்பளத்தை வழங்குக

### கூட்டுறவுப் பணியாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.6

சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் கூட்டுறவுப் பணியாளர்களுக்கான புதிய சம்பளத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பணியாளர்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பணியாளர்கள் தமது தேவைகளை ஓரளவு நிறைவு செய்து கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளனர்.

எனவே புத்தாண்டுப் பரிசாக கிடைக்க இருக்கும் இந்தப் புதிய கொடுப்பனவை விரைந்து வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாகச் சங்கக் கிளைகளில் அதிக ரொக்க வியாபாரத்தை மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு கூட உரிய முறையில் வழங்கப்படுவதில்லை.

சங்கத்தின் வருமானத்துக்கு ஏற்ப வழங்கப்படும் 2,875 ரூபா ஊக்குவிப்புக் கொடுப்பனவை அதிகமான சங்கங்கள் வழங்க முன்வந்துள்ளன.

இவ்வாறு தற்போது வெளியாகி உள்ள புதிய சம்பளக் கொடுப்பனவைக் கூட உரிய காலத்தில் பணியாளர்களுக்கு வழங்குவதற்குச் சங்கங்கள் இழுத்தடிப்புச் செய்கின்றன. இவ்வாறான செயற்பாடுகளால் பணியாளர்கள் உளரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கூட்டுறவு அதிகாரிகள் இதில் கூடிய கவனம் செலுத்தி இந்தக் கொடுப்பனவை விரைவாக பணியாளர்களுக்கு வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-17)

### கஞ்சா வைத்திருந்த இருவருக்கு அபராதம்

யாழ்.நகரில் 14 கிராம் கஞ்சா வைத்திருந்த தென்பகுதியைச் சேர்ந்த இருவருக்கு யாழ்.நீதிமன்றம் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது. நகரில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நின்ற இருவரையும் யாழ்.பொலிஸார் விசாரணை செய்த போது அவர்களிடம் கஞ்சா பக்கற்றுகள் இருந்தமை தெரிய வந்தது. இதன்போது கைது செய்யப்பட்ட இருவரும் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அபராதம் விதிக்கப்பட்டது. கொழும்பு பண்டாரவளையைச் சேர்ந்தவர்களான நிமல் பண்டார, விஜேசேகரே ரத்னசேன ஆகிய இருவருக்குமே அபராதம் விதிக்கப்பட்டது. (10-4)

### யாழ்.பஸ் நிலையத்தில் நடந்த சுவாரஸ்யம்

*யாழ்ப்பாணம், ஏப்.6*

*யாழ். நகரில் வைத்து பெண் ஒருவரின் கைத் தொலைபேசியை பறித்து எறிந்து உடைத்தார் என்று யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபர் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையில் யாழ். நீதிமன்றால் விடுவிக்கப்பட்டார்.*

*இதனால் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் பெண் பொலிஸில்முறைப்பாடு செய்திருந்ததை அடுத்தே குறித்த நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தார்.*

*இது தொடர்பான முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:*

*திருமணமான ஆண் ஒருவருடன் திருமணமாகாத 57 வயதுடைய பெண் ஒருவர் தொலைபேசியில் தொடர்பு வைத்திருந்துள்ளார்.*

*இந்த நிலையில் குறித்த நபரை பல பேர் முன்னிலையில் அவமானப்படுத்தும் விதத்தில் 57 வயதான அந்தப் பெண் நடந்து கொண்டார் என்றும் அதனால் கோபமடைந்த குடும்பஸ்தர், பெண்ணின் கையடக்கத் தொலை பேசியைப் பறித்து உடைத்துச் சேதப்படுத்தியுள்ளார் என்றும் ஆரம்பகட்ட விசாரணைகளில் கூறப்பட்டுள்ளது.*

*பிரஸ்தாப இருவரும் நெல்லியடியைச் சேர்ந்தவர்கள். 24 வயதுடைய திருமணமான குடும்பஸ்தரின் மனைவியும் 57 வயதான திருமணமாகாத பெண்ணும் நெருக்கிய நண்பர்கள் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.*

*இந்த நிலையில் குறித்த பெண் இந்த நபரை அவமானப்படுத்தும் வகையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் நடந்துள்ளார்என்றும் நேற்று முன்தினமும் யாழ். நகரில் இவ்வாறு நடந்து கொண்ட போதே கைத் தொலைபேசி பறித்து உடைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)*

## நிகழ்வுகள் இன்று

**அந்தர்யோகம்**

இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையம் நடத்தும் அந்தர்யோகம் நிகழ்வு காலை 9 மணிக்கு இல.17 மருதனார் மடம் வீதி உரும்பிராய் சந்தியில் அமைந்துள்ள நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

**பேச்சுத்திறன் காணல்**

யாழ்.பாலர் கல்விக் கழக நிர்வாகத்தின் கீழ் ஞானக் குழந்தை இல்ல 14 பாலர் பாடசாலைகள் இணைந்து வழங்கும் பேச்சுத்திறன் காணும் வைபவம் காலை 8.30 மணிக்கு யாழ்.சன்மார்க்க வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாலர் கல்விக் கழக தலைவர் எஸ்.பி.காசிநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கோட்டக் கல்வி அதிகாரி திருமதி வ.சிவபாலன் கலந்துகொள்வார். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸியில் இலங்கையருக்கு பல மில்லியன் டொலர் நட்டஈடு

சிட்னி, ஏப்.6

இலங்கையர் ஒருவருக்கு ஆஸ்திரேலிய அரசால் மில்லியன் கணக்கான அமெரிக்க டொலர் நஷ்டஈடு வழங்கப்பட உள்ளது.

சட்டத்துக்கு புறம்பான வகையில் குடிவரவுத் தடுப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டார் என்பதற்காகவே இவருக்கு நட்டஈடு வழங்கப்பட உள்ளது.

இவரின் பெயர் பெர்ணாண்டோ. வயது 50. ஆஸ்திரேலியாவில் நிரந்தரமாக வசித்து வந்தவர். நீதிமன்ற உத்தரவுக்கு அமைய 1203 நாள்கள் குடிவரவு தடுப்பு முகாமில் போடப்பட்டார். இவரின் தரப்பு நியாயத்தை நீதிமன்றம் செவிமடுக்கத் தவறி இருந்தது. 2003 ஆம் ஆண்டுக்கும் 2007 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட நாள்களில் இந்தச் சிறை வைப்பு இடம்பெற்று இருந்தது.

சிறையில் இருந்து வெளியில் வந்த இவர் சட்டத்துக்குப் புறம்பாகவும், தவறாகவும் சிறை வைக்கப்பட்டமையை ஆட்சேபித்து வழக்குத் தாக்கல் செய்திருந்தார். இது தொடர்பான தீர்ப்பு அண்மையில் வழங்கப்பட்டது.

இவர் சட்டத்துக்கு புறம்பாகவும், தவறாகவும் தடுத்து வைக்கப்பட்டு இருந்திருக்கின்றார் என்பதை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் ஒரு நாள் சிறை வாழ்க்கைக்கு 3 ஆயிரம் டொலர்கள் என்கிற கணக்குப்படி இவருக்கு அரசு நட்டஈடு வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டு உள்ளது. (த)

# இலங்கை வரும் குழுவில் தமிழகக் கட்சிகள் 'அவுட்'

01↘ கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலர் டி.ராஜா, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் உறுப்பினர் தொல். திருமாவளவன் ஆகியோர் தெரிவித்தனர்.

இலங்கைப் பயணம் தொடர்பாக அ.தி.மு.கவுக்குக் கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால், நாடாளுமன்றக் குழுவில் பங்கேற்பது குறித்து அந்தக் கட்சி மேலிடம் எந்த முடிவும் எடுக்கவில்லை என்று தெரிகிறது.

இலங்கை செல்லும் இந்திய நாடாளுமன்றக் குழுவில் தி.மு.க சார்பில் மக்களவை உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன், காங்கிரஸ் மக்களவை உறுப்பினர்கள் மாணிக்கம் தாகூர், கிருஷ்ணசாமி, என்.எஸ்.வி. சித்தன், மாநிலங்களவை உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இவர்களைத் தவிர சில வடமாநிலங்களில் உள்ள கட்சிகளின் நடாளுமன்ற உறுப்பினர்க்ளும் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

குழுவின் தலைவராக பா.ஜ.கவைச் சேர்ந்த சுஷ்மா சுவராஜுடன், கட்சியின் மூத்த தலைவர் வெங்கய்யா நாயுடுவும் இடம்பெற்றுள்ளார்.

இலங்கையில் உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, இந்திய அரசு நிதியுதவியுடன் மறுவாழ்வுத் திட்டங்களும் மீள் குடியேற்றப் பணிகளும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகளில் இலங்கை அரசு முழுமையான ஈடுபாடு காட்டவில்லை என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில், இலங்கையில் போரின்போது மனித உரிமை மீறல் நடைபெற்றதாகவும், அதில் தொடர்புடையவர்கள் மீதும் இலங்கை அரசு நியமித்த நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கடந்த மாதம் தீர்மானம் கொண்டு வந்தது.

இலங்கைக்கு எதிராகக் கருதப்பட்ட இந்தத் தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது. இந்த செயலால் இந்தியா மீது இலங்கை அரசு அதிருப்தி அடைந்ததாகக் கூறப்பட்டது.

இந்த நிலையில், இலங்கையில் தமிழர்கள் பகுதியில் நிலவும் சூழ்நிலைகளை இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் சென்று பார்வையிட ஏற்பாடு செய்யப்படும் என்று நாடாளுமன்றத்தில் பிரதமர் மன்மோகன் சிங், வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா ஆகியோர் தெரிவித்தனர். இதன் தொடர்ச்சியாக இந்தியக் குழு ஏப்ரல் 16ஆம் திகதி இலங்கை வருகிறது. (த)

## மோசடி சந்தேக நபருக்கு விளக்கமறியல்

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி 7 லட்சத்து 10 ஆயிரம் ரூபா பணத்தை மோசடி செய்த மட்டக்களப்பைச் சேர்ந்தவரை எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் இந்த முறைப்பாட்டைச் செய்திருந்தார். அதனடிப்படையில் 32 வயதான மட்டக்களப்பைச் சேர்ந்த சந்தேக நபரை தாம் நேற்று முன்தினம் கைது செய்ததாக யாழ். பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் அத்தியட்சகர் சமன் சிகேரா தெரிவித்தார். அன்றைய தினம் நீதிமன்றில் அவர் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார். (10-4)

# இரும்புக் கூண்டுக்குள் இணைந்த ஜோடிகள்

01↘ யில் இடம்பெற்றது. தலைமை சிறைச்சாலைப் பணிப்பாளர் டி.எம். ஏ.நிமால் சாந்த தலைமையில் இவ்விரு ஜோடிகளுக்குமான பதிவுத் திருமணம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

வவுனியா பாவற்குளத்தில் பெற்றோருடன் வசித்தவர் சக்திவேல் இலங்கேஸ்வரன் (வயது - 34). இவர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டவர். இவருக்கு கொழும்பு உயர் நீதிமன்றம் 30 ஆண்டு கால சிறைத்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளது. 2010ஆம் ஆண்டு இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

வவுனியா இல. 228 வீரபுரம், நெழியகுளம் என்ற இடத்தில் வசிப்பவர் செல்வி குணசேன சுதர்ஷினி (வயது - 32). இவர் ஒரு பெரும்பான்மையின சிங்கள யுவதி. இவர் இப்பொழுதும் பெற்றோருடன் வவுனியாவில் வசிக்கின்றார்.

ஆனால், இந்த இருவருக்குமிடையில் மலர்ந்த காதல் பல தடைகளையும் மீறி இன்று திருமணப் பந்தத்தில் முடிந்தது.

இதில் முக்கிய விடயம் என்னவென்றால், மணமகன் இலங்கேஸ்வரன் 30 வருடகால சிறைத்தண்டனைக்கு உள்ளாக்கப்பட்ட ஒரு சிறைக் கைதி. இந்த நிலையிலும், தனது காதலைக் கைவிடமாட்டேன் என்று பெற்றோரையும் சம்மதிக்க வைத்து காதலித்தவரையே திருமணம் செய்து கொண்டுள்ளார் சுதர்ஷினி.

காதலியின் உறுதியான காதல், தன்னம்பிக்கை என்பன இலங்கேஸ்வரனுக்குத் தெம்பை ஏற்படுத்தியுள்ளது. நான் 12 வருடங்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளேன். ஏற்கனவே 12 வருடங்களை சிறையில் கழித்துள்ளேன். இந்த 12 வருடங்களையும் எனக்கு விதிக்கப்பட்டுள்ள 30 வருடகால சிறைத்தண்டனையில் இருந்து கழிக்கப்படவேண்டும் என அவர் மேன்முறையீடு செய்துள்ளார்.

அடுத்த ஜோடி கொழும்பு ஜெம்பட்டா வீதியைச் சேர்ந்தவர்கள். பாலச்சந்திரன் புஸ்பராஜாவுக்கும் அதே பிரதேசத்தில் வசிக்கும் மொஹமட் காசிம் பாத்திமா என்ற முஸ்லிம் யுவதிக்கும் இடையில் காதல் ஏற்பட்டு கணவன் - மனைவியாகவும் வாழ்ந்துள்ளனர்.

பாத்திமா கர்ப்பிணியாக இருக்கும்போது மூன்றரை வருடங்களுக்கு முன்னர் சந்தேகத்தின்பேரில் புஸ்பராஜா கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்தத் தம்பதிகளுக்கு இப்பொழுது ஒரு குழந்தையும் இருக்கின்றது.

தாயும் சேயும் வெளியே. தந்தை சிறையில். இவர்கள் கணவன் - மனைவி போல் கூடி வாழ்ந்திருந்தாலும் மணமகளுக்குத் திருமணம் செய்யும் வயது போதாது என்பதால் திருமணப்பதிவு நடைபெறவில்லை. இதனால், இந்த ஜோடிக்கும் நேற்று சட்டரீதியாக திருமணப் பதிவு இடம்பெற்றது.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவின் பணிப்பின்பேரில் அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் எஸ்.சதீஷ்குமார் இந்தத் திருமணங்களுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான விநாயகமூர்த்தி, ஈ.சரவணபவன், சிறிதரன் ஆகியோர் சமுகமளித்து மணமக்களை ஆசீர்வதித்தனர்.

இந்தத் திருமணங்களில் ஒரு விசேட அம்சம் என்னவென்றால், மணமகன்மார் இருவரும் தமிழ்ச் சிறைக் கைதிகள் - தண்டனை அனுபவிப்பவர்கள். அதேவேளை, மணமகள்மார் இருவரும் சுதந்திரமாக வெளியில் வாழ்பவர்கள். ஒருவர் சிங்களவர். மற்றவர் இஸ்லாமியர். காதலுக்கு ஜாதி, மதம் எதுவுமே தடைக்கல்லாக இருக்காது அல்லவா? (சி)

# பொருந்தாததைச் செய்யமாட்டோம்; சர்வதேசத்துக்கு இலங்கை சவால்

01↘ சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு நாம் அடிபணியவில்லை. இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே கடன் நடவடிக்கை முன்னெக்கப்படுகின்றது என்றும் அது தெரிவித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சரவைப் பதில் பேச்சாளரும், ஊடகத்துறை பதில் அமைச்சருமான லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். அதன் சிபாரிசுகளைத் தற்போது நடை முறைப்படுத்தி வருகிறோம்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளில் நடைமுறைப்படுத்த முடியாத பரிந்துரைகளை இன்னும் நாம் இனங்காணவில்லை. சிபாரிசுகளை நடைமுறைப்படுத்திக் கொண்டுசெல்லும்போதுதான் அவற்றை இனங்காணலாம்.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் அமைச்சர் பீரிஸ் தெளிவானதொரு உரையை நாடாளுமன்றில் நிகழ்த்தினார். நல்லிணக்க ஆணைக்குழு 160 சிபாரிசுகளை முன்மொழிந்துள்ளது. அவை அனைத்தையும் நடைமுறைப்படுத்துவது கடினமல்லவா? அதுகுறித்து ஆராயவேண்டியுள்ளது.

எது எப்படியிருப்பினும், நாட்டுக்குப் பொருந்தாத எந்த விடயத்தையும் நாம் ஒருபோதும் செய்யமாட்டோம். மேற்குலகம் மட்டுமல்ல, வேறு எவர் சொன்னாலும் நாம் இதனைச் செயயப்போவதில்லை. நல்லிணக்க ஆணைக்குழு விடயத்திலும் நாம் இதே அணுகுமுறையைத்தான் கையாள்வோம் - என்றார்.

அதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது எனக் கூறப்படுகின்றதே என அமைச்சரிடம் கேட்டபோது, இல்லை.... இல்லை... சர்வதேச நாணயநிதியத்தின் எந்தவொரு நிபந்தனைக்கும் நாம் அடிபணியவில்லை எனக் குறிப்பிட்டார்.

இல்லை அமைச்சரே! மூன்று நிபந்தனைகளை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது எனத் தெரியவருகிறதே என மறுபடியும் கேட்டபோது, இல்லை, எந்தவொரு நிபந்தனையையும் நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. இணக்கப்பாட்டின் அடிப்படையில்தான் கடன் பெறுகின்றோம் எனப் பதிலளித்தார் அமைச்சரவைப் பதில் பேச்சாளர்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அடிபணிந்துதான் வாகனவரி அதிகரிக்கப்பட்டுள்ளது எனக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றனவே எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு, ''அதற்கும் இதற்கும் முடிச்சுப் போடவேண்டாம்'' எனக் குறிப்பிட்டார் ஊடகத்துறைப் பதில் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா. (சி)

## அரசியல் கைதிகளை தொடர்ந்தும் சிறை வைக்கமுடியாது

01↘ இலங்கை தொடர்பில் வெளிநாடுகளிடமிருந்து குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படும் வேளையில், பல்வேறு விமர்சனங்கள் விடுக்கப்படும் வேளையில், சரத் பொன்சேகாவை விடுவித்தால் அவர் நாடு தொடர்பில் பேசுவார் எனக் கரு ஜயசூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியல் கைதிகளை தொடர்ந்தும் இவ்வாறு தடுத்து வைத்திருக்க முடியாது என குறிப்பிட்ட இவர் எப்போதாவது ஒரு நாள் உண்மை வெளியில் வரும் எனவும் தெரிவித்தார். (த)

# இலங்கை – இந்திய உறவில் இப்போது சுமுகமான நிலை

01↘ வாக்களிப்பில் இருந்து விலகியிருக்க நினைத்த சிலர் வாக்களித்தனர். இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்க நினைத்தவர்கள் வாக்களிப்பை தவிர்த்தனர்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரையில் உள்ள அனைத்து விடயங்களையும் செயற்படுத்த மாட்டோம். நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்ப நல்லிணக்க நடவடிக்கைகளில் ஈடுபடுவோம் -என்றார் அமைச்சர் பீரிஸ். (த)

# மஹிந்த மீதான வழக்கு தள்ளுபடி: அமெ. நீதிமன்றில் மேன் முறையீடு

01↘ ராக கொலம்பியா மாவட்ட நீதிமன்றத்தில் நட்டஈடு வழக்குத் தொடுத்திருந்தார்.

ஆனால், ஜனாதிபதிக்கு இராஜதந்திர விலக்குரிமை உள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் பரிந்துரைத்ததன் அடிப்படையில், இந்த வழக்கைத் தம்மால் விசாரிக்க முடியாதிருப்பதாகக் கூறி, கொலம்பியா மாவட்ட நீதிபதி கொலீன் கொல்லர் கொட்டெலி கடந்த பெப்ரவரி 29ஆம் திகதி வழக்கைத் தள்ளுபடி செய்திருந்தார்.

எனினும் 30 நாள்களுக்குள் தீர்ப்புக் குறித்து மேன்முறையீடு செய்யும் வாய்ப்பின் அடிப்படையில், கொலம்பியா மாவட்ட நீதிமன்றத்தில் இந்த வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டதற்கு எதிராக கொலம்பியா மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சட்டவாளர் புரூஸ் பெய்ன் மேல்முறையீடு செய்துள்ளார். இந்த மேன்முறையீட்டு வழக்கை மூன்று நீதிபதிகளைக் கொண்ட அமர்வு மன்றம் விசாரிக்கும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

# போர்க் குற்றங்கள் குறித்து சுயாதீன விசாரணை தேவை

01↘ ஒவ்வொரு விசாரணையும் அரசின் செல்வாக்குக்கு அப்பாற்பட்டதாகவும், சுயாதீனமாகவும், நம்பகத்தன்மை கொண்டதாகவும் அமையவேண்டும்.

சாட்சிகளுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். அதேவேளை, இலங்கையின் நீண்டகால நட்பு நாடு என்ற நிலைப்பாட்டில் அமெரிக்கா இலங்கையின் நல்லிணக்கப்பாட்டுக்கான அனைத்து முயற்சிகளுக்கும் ஆதரவு அளிக்கும். போரின்போது இரு தரப்புகளாலும் கட்டவிழக்கப்பட்ட மீறல்கள் தொடர்பாக பொறுப்புக்கூறவேண்டிய கடப்பாடு இலங்கை அரசுக்கு உண்டு.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிட்டவேண்டும். நல்லிணக்கப்பாட்டைப் பொறுத்தமட்டில் இது பெரிதும் கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயமாகும். அப்படியானால்தான் நீதியின் கோட்பாடு அனைவருக்கும் ஒன்றே என்ற நிலைப்பாடு சமூகங்களின் மத்தியில் உருவாகும்.

நம்பகத்தன்மை வாய்ந்த பொறுப்புக்கூறல் கடப்பாட்டுக்கான முயற்சிகளை முன்வைக்கும்போது, அவை இரு தரப்புகளையும் உள்ளடக்கியவையாகவே இருக்க வேண்டும். போரின் இறுதி மாதங்களில் இழைக்கப்பட்ட குற்றச்செயல்கள் சம்பந்தமான உண்மை நிலைப்பாடு, தண்டனைகளிலிருந்து தப்புவதைத் தடுக்கும். அதேவேளை, விடுதலைப்புலிகளை எதிர்கால வீரர்களாக மாற்றமுனைவோரின் தவறையும் சுட்டிக் காட்டிவிடும்.

இலங்கையின் அனைத்தையான எதிர்காலம் நம்பிக்கையிலேயே தங்கியுள்ளது. அனைத்து இலங்கை மக்களுக்குமிடையிலான நம்பிக்கை, இலங்கையர்களுக்கும் அவர்களின் அரசுக்குமிடையிலான நம்பிக்கை ஆகியவற்றிலேயே தங்கியுள்ளது. உண்மையை ஏற்றுக்கொள்ளுதல், பாதிக்கப்பட்டோருக்கான நீதி, பொறுப்பு, தெளிவு, கடந்த காலத் தவறுகளுக்கான முறையான பரிகாரங்கள், பாதுகாப்புக்கான உத்தரவாதம் ஆகியவற்றின் மீதே இந்த நம்பிக்கை தங்கியுள்ளது - என்று குறிப்பிட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 ஆவது வீரர்களின் போர்

## ஸ்கந்தவரோதயக் கல்லூரி

எதிரணிக்கு அச்சுறுத்தலை விடுக்கக் கூடிய வீரர்களைக் கொண்ட அணியாக ஸ்கந்தா வீரர்களின் போரில் களமிறங்குகிறது. ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் முதல் இறுதிவீரர் வரை போட்டியைத் தம்பக்கம் கொண்டு செல்லும் வல்லமை இந்த அணிக்கு உண்டு. பந்துவீச்சு, துடுப்பாட்டம் இரண்டிலும் பலமானதாகவே ஸ்கந்தா அணி கருதப்படுகின்றது. 12ஆவது வீரர்களின் போரில் மகாஜனாவை வீழ்த்திவிடும் கங்கணத்தோடு காத்திருக்கிறது ஸ்கந்தா.


சி.சஞ்சயன்
- அணித்தலைவர்
சகலதுறை ஆட்டக்காரர். இக்கட்டான வேளைகளில் பந்துவீச்சு, துடுப்பாட்டம் இரண்டிலும் கலக்கும் சஞ்சயன் ஸ்கந்தா அணிக்கு தலைமை தாங்குகிறார்.




த.சிந்துஜன்
- அணி உபதலைவர்.


ல.குமுதன்


கே.றொபேட்சன்

வீரர்களின் போர் போட்டியில் வெல்லப்போகும் அணியை ஊகிப்போருக்கு உதயனின் 5,000/=

விவரங்கள் 26ஆம் பக்கத்தில்....


க.துஷிசன்


சி.கோபிகாந்


த.நிறோஜன்


கு.கதியோன்


ச.செந்தூரன்


க.நிலக்சன்


ஜெ.ஜெனக்சன்


க.துவாரகன்


ப.சுஜிதரன்


கெ.[illegible]


கே.சயந்தன்


க.பிரசாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 ஆவது வீரர்களின் போர்

## மகாஜன கல்லூரி

மகாஜன அணி சிறந்த பந்து வீச்சாளர்கள் ஆறு பேரைக்கொண்டுள்ளது. இதேவேளை மூன்று இடது கைத்துடுப்பாட்ட வீரர்கள் மூவர் அந்த அணியில் இருப்பது ஒரு சிறப்பம்சம். இதனால் எதிரணியினர் களத்தடுப்பு வியூகங்களை அடிக்கடி மாற்றியமைக்க வேண்டிய நிலை ஏற்படும். இதன்மூலம் ஓட்டங்களை குவிக்கும் வாய்ப்பு மகாஜன அணிக்குக் கிட்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



சு.அஜித்
- அணித்தலைவர்.

மகாஜன அணியின் நம்பிக்கை நட்சத்திரம். சூழ் நிலைக்கேற்ப வியூகங்களை மாற்றியமைத்து வெற்றியை அணியின் பக்கம் கொண்டு செல்லும் வல்லமைமிக்கவர்.



வீரர்களின் போரில் அதிசிறந்த சதம் விளாசும் வீரருக்கு உதயன் வழங்கும் 25,000/= சிறப்புப் பணப்பரிசில் காத்திருக்கிறது.



ர.மதுசன்
- உதவி அணித் தலைவர்.



த.டிலோசன்



தி.திலக்சன்



ஜெ.ஜனந்தன்



த.சுபதீபன்



ஜெ.பிரணவன்



சி.டிலக்ஷ்சன்



ச.ரமேஸ்குமார்



த.சாரங்கன்



அ.பிரசாந்



ஜெ.பிரதீபன்



த.கஜேந்திரன



த.நிமல்ராஜ்



க.பிரராஜ்



ம.துவாரகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும், அந்தியேட்டி



மனம் மகிழ 12 ★ 08 ★ 1945

மனம் நெகிழ 09 ★ 03 ★ 2012

## அமரர் வைத்திலிங்கம் செல்வமணி

எங்கள் அன்புத் தெய்வத்தின் பிரிவுத் துயரில் பங்கேற்று ஆறுதல் கூறி எல்லா வழிகளிலும் உதவி நல்கி உள்நாட்டில் இருந்தும் வெளிநாட்டில் இருந்தும் எமக்கு ஆறுதல் தந்த எம் இனிய உறவுகள் அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (06.04.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணியளவில் மண்கும்பான் வெள்ளைக்கடற்கரை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் தொடர்ந்து (08.04.2012) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அம்பாள் வீதி,
கொக்குவில் மேற்கு.

வைத்திலிங்கம் (கணவர்)
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி சிவக்கொழுந்து சதானந்தா



கச்சாய் வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், இல. 457, தபாற் கட்டைச்சந்தி, கண்டி வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து சதானந்தா நேற்று (05.04.2012) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி சிதம்பரப்பிள்ளை (சின்னப்பர்) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் சதானந்தாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. திருமதி நாகலிங்கம் தம்பதி யரின் அன்பு மருமகளும், திருமதி, மகேஸ்வரி நடராஜாவின் அன்பு சகோதரியும், கிருபானந்தா (ஆஸ்திரேலியா), நந்தினி (சுவிஸ்), தர்மினி (ஜேர்மனி), கிரிஷாணி (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு தாயும், தியாகேந்திரன் (சுவிஸ் - ஸ்தாபகர் தியாகி அறக்கொடை நிறுவனம், யாழ்ப்பாணம்), சுப்பிரமணியம் (ஜேர்மனி), சோபனா (ஆஸ்திரேலியா), கமலநாதன் (பணிப்பாளர், தியாகி அறக்கொடை நிறுவனம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியும் தாட்சாயினி, நிலாயினி, அர்ஜூனா, பாலாஜி, ஜஸ்வர்யா, அருண், ஆருதி, மாதினி, மாலவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.04.2012) சனிக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.457, தபாற்கட்டைச்சந்தி,
கண்டிவீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
செ. கமலநாதன் (மருமகன்).




# 7ஆம் ஆண்டு நினைவலைகள்

## அமரர் சி.சு. பொன்னுத்துரை

(உரிமையாளர் - பொன்மலர் ஸ்ரோர்ஸ், சண்பிறாண்ட் ரொபி தொழிற்சாலை)

பிறப்பு: 27.03.1946

இறப்பு: 06.04.2005

திதி : திரயோதசி

அன்பான அப்பாவே! அந்த அவலப் பொழுதில்
நாங்கள் உடனிருக்கவில்லை நீங்கள் சொல்ல
நினைத்த நிறைவுச் சொற்களை அறிவோம்
என்ன வார்த்தைகள் சொல்ல நினைத்தீர்கள் அப்பா!
அவனியில் யாம் வாழும் வரை உங்கள்
பொற்பாதம் தொழுது நின்று காத்திடுவோம்
உறவுகள் எமக்கு அருகில் நாங்களோ உங்களைத் தேடி

அளவெட்டி வடக்கு, அளவெட்டி

உங்கள் நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடாளுமன்ற விசேட விவாதம் வெளிக்கொணர்ந்த உள்ளார்ந்தம்

அரசாங்கம் நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும். அவை செயற்படுத்தப்பட மாட்டா என்று அரசாங்கம் ஒருபோதும் தெரிவிக்கவில்லை. அவற்றில் சில நடைமுறையாக்கப்படுவதனை, அதிலுள்ள முன்னேற்றத்தை இன்னும் சில மாதங்களில் காணக்கூடியதாக இருக்கும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்று கோரும், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் (ஜெனிவாவில்) நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அரசு மதித்துச் செயற்படுத்துமா என்பதில் சந்தேக நிலை, (பல அமைச்சர்களின் நிலைப்பாடுகள், கூற்றுகள் மூலம்) தோற்றுவிக்கப்பட்டிருந்தது. இறைமை உள்ள ஒரு நாட்டின் மீது, அத்தீர்மானத்தைத் திணிக்க முடியாது என்று ஜனாதிபதி தொடக்கம் அமைச்சர்கள் வரை சண்டப்பிரசண்டம் செய்திருந்தனர்.

குறிப்பாக -

தாம் நியமித்த ஆணைக்குழுக்களின் சகல பரிந்துரைகளையும் எந்த ஓர் அரசும் முழுமையாக நிறைவேற்றியதில்லை. அரசுகளால் நியமிக்கப்படும் ஆணைக்குழுக்கள் மக்களின் ஆணையைப் பெற்றவை அல்ல. அவற்றுக்கு பரிந்துரைகளை முன்வைக்கும் அதிகாரம் மட்டுமே உண்டு என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வியாக்கியானம் வேறு கொடுத்திருந்தார்.

வெளிவிவகாரம் குறித்த விடயங்களைக் கூறுவதற்கு அதிகாரம் உள்ளவர் அவரே என்பதால், ஜெனிவாத் தீர்மானத்தின் பின்னரும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பிரதான பரிந்துரைகள் அரசால் நிறைவேற்றப்படுமா, அதனை நாடி அரசு உழைக்குமா என்ற பெரும் சந்தேக நிலை நிலவியது.

அமைச்சர் பீரிஸைப் போன்றே ஜெனிவாத் தீர்மானத்தில் கூறப்பட்ட பரிந்துரைகளைச் செயற்படுத்த வேண்டிய கடமையோ, கட்டப்பாடோ இலங்கை அரசுக்குக் கிடையாது என்று ஆளும் தரப்பைச் சேர்ந்த மிகப் பலரும் கொட்டி முழக்கினார்கள். எனினும் அவர்களின் மத்தியில், ஜெனிவாத் தீர்மானத்தைக் கருத்தில் எடுத்து, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்த வேண்டும் என்று இடதுசாரிச் சார்புடைய அமைச்சர்களும் சில மூத்த அமைச்சர்களும் வலியுறுத்தினர்.

ஜெனிவாத் தீர்மானத்தையும், அதில் முதன்மைப் படுத்தப்பட்டுள்ள நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்துவதில் கூட, அரசு மெத்தனப் போக்குடனேயே செயற்படும் என்ற கடும் பிடி சற்றுத் தளர்ந்திருக்கிறது என்பதனை வெளிவிவகாரங்களில் கள அனுபவமுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸின் 'அறிவிப்பு' எடுத்துக் கூறுகிறது. அவ்வளவே.

தான் உருவாக்கிய நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவது இலங்கை அரசின் தட்டிக் கழிக்க முடியாத பொறுப்பு.

இறுதிப் போரின் போது, அதனை நிறுத்துமாறும், ஐ.நாவின் படைகளை வன்னிக்குள் அனுமதிக்குமாறும், அனைத்துலக மட்டத்திலிருந்து வந்த அழுத்தங்களை ஏற்க மஹிந்த அரசு அடியோடு மறுத்தது. அதற்கு மறைமுகமாகத் தண்டனை விதிக்கும் ஏற்பாடே ஜெனிவாத் தீர்மானம் என்று இலங்கை அரசு உள்ளூரக் கறுவிக்கொண்டிருக்கிறது என்பது மறுபக்கம்.

நாட்டின் இறைமையைப் பாதிக்கும் விதத்தில் அனைத்துலகச் சட்டங்களில் இடமில்லை. அதனால் ஜெனிவாத் தீர்மானம் இலங்கை அரசை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது என்று வரிந்து கட்டிக்கொண்டு நிற்கும் போக்கினாலேயே, நல்லிணக்க ஆணைக்குழுவின் அனைத்துப் பரிந்துரைகளையும் செயற்படுத்த முடியாது என்று இரண்டு நாள் விவாதத்தின் போதும் அரச தரப்பில் ஊன்றிப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

எனினும்-

சர்வதேச நீதிக்குப் புறம்பாகச் சென்று உலகின் எந்த ஒரு நாடும் செயற்பட முடியாது. அந்த வகையில் பொறுப்புக் கூறும் விவகாரத்திலிருந்து தப்ப இயலாது. இலங்கை, ஏழு அனைத்துலக ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது. அவற்றில் மனித உரிமைகள், இறைமைத்துவம் ஆகியனவும் உள்ளடங்கும். அதனூடாக இலங்கையில் நடைபெற்ற போர் குறித்த விடயங்களில் தலையிடுவதற்கான உரிமை தானாகவே சர்வதேச அமைப்புக்களுக்குத் தாரை வார்க்கப்பட்டுள்ளது என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இதேவேளை -

2009 ஆம் ஆண்டில், இலங்கை அரசு, அதன் வெளிவிவகார அமைச்சு, ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்துடன் இணைந்து வெளியிட்ட கூட்டு ஒப்பந்தம் ஒன்றில், உள்ளடக்கப்பட்டிருந்த சகல விடயங்களும், அம்சங்களும் இலங்கை அரசு நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ளன. அதேவகையில் -

சர்வதேச சட்ட மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறும், நம்பகமான சுயாதீன விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துமாறும் - ஜெனிவாத் தீர்மானத்தின் மூன்று முக்கிய பகுதிகளில் ஒன்று வலியுறுத்துகிறது.

ஆனால், ஏனைய பகுதிகளைப் போன்றே, ஜெனிவாப் பிரேரணை இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நல்லிணக்க முயற்சிகளையும், நாட்டின் இறைமையையும் நிர்மூலமாக்கும் ஏற்பாடு என்று ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டின் போது, இலங்கை அரச தரப்பில் பரப்புரை செய்யப்பட்டமை நினைவில் கொள்ளத் தக்கதாகும்.

ஜெனிவாத் தீர்மானத்தின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது என்று அரசு பின்னடிப்பதற்கான காரணத்தை, இப்போது புரிந்துகொள்ள முடிகிறது அல்லவா?

## பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த மருத்துவருக்கு மேலதிக கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஏப் 06

வடமாகாணத்தில் பின்தங்கிய பிரதேசத்திலுள்ள பிரதேச வைத்திய சாலைகள் மற்றும் ஆரம்பப் பிரிவு சுகாதார வைத்திய நிலையங்களில் பணியாற்றும் வைத்தியர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகளை அதிகரித்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள இவ்வாறான வைத்திய நிலையங்களுக்குச் சென்று பணியாற்ற வைத்தியர்கள் பின்னடித்து வருகின்றனர்.

அவர்களுக்கான போக்குவரத்து உட்பட பல காரணங்களால் அவ்வாறான இடங்களுக்குச் செல்ல அவர்கள் பின்நிற்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனவே அந்த இடங்களுக்குச் சென்று பணியாற்றுவதை ஊக்குவிக்கும் பொருட்டு பின்தங்கிய இடங்களுக்குச் செல்லும் வைத்தியர்களுக்கு மாத்திரம் மேலதிக கொடுப்பனவுகள் அதிகரித்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்க பிரதிநிதிகளுக்கும் வடமாகாண ஆளுநர் மற்றும் வடமாகாண சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையே நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

பொதுவாக பின்தங்கிய பிரதேசங்களுக்குச் செல்லும் ஏனைய அரச உத்தியோகத்தர்கள் தத்தமது கடமை முடிந்ததும் அல்லது வேலை நேரம் நிறைவடைந்ததும் உடனேயே தமது இடங்களுக்குத் திரும்பி விடுகின்றனர். ஆசிரியர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள் அனைவரும் இந்த வகைக்குள் அடங்குகின்றனர்.

ஆனால் வைத்தியர்கள் இரவு பகலாகத் தொடர்ந்து அந்தந்தப் பகுதி வைத்தியசாலைகளில் தங்கி நின்றுபணியாற்றவேண்டியநிலைமை காணப்படுகிறது.

வைத்திய சேவை அவசர, அத்தியாவசியமான ஒன்றாகக் காணப்படுவதனால் மக்கள் மீது அதிகளவில் தாக்கம் செலுத்துகிறது.

எனவே பின்தங்கிய பிரதேசங்களுக்குச் சென்று பணியாற்ற ஏனையவர்களை விட வைத்தியர்களுக்கு கட்டாய தேவை உள்ளது.

வட மாகாணத்தில் பொதுவாகவே வைத்தியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது. பின்தங்கிய பிரதேசங்களிலேயே இந்தப் பற்றாக்குறை அதிகளவாகக் காணப்படுகிறது. தற்போது சுமார் 50 வைத்தியர்கள் இவ்வாறு கடமை புரிகின்றனர். எனவே இவர்களுக்கு மேலதிக கொடுப்பனவு அதிகரித்து வழங்க வேண்டும் எனக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதனையடுத்தே அந்தக் கொடுப்பனவை அதிகரித்து வழங்க ஆளுநர் இணக்கம் தெரிவித்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

## வடக்கிலுள்ள 191 பாடசாலைகளில் சமையல் மற்றும் களஞ்சிய அறைகள்

யாழ்ப்பாணம்,ஏப்.6

வடமாகாணத்தில் உள்ள 191 பாடசாலைகளுக்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் சமையலறை மற்றும் களஞ்சிய அறை என்பன அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

ஒரு மாதத்தில் இவற்றுக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு விடும் என்று வடமாகாண கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

உலக உணவுத்திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு மதிய நேர போசாக்கு உணவு வழங்கப்பட்டு வருகின்றது.

அந்தப் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படும் உணவுப் பொருள்களைக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான களஞ்சிய அறையும் மற்றும் சமையலறையும் ஏனைய பாடசாலைகளுக்கு ஏற்கனவே அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

முன்னர் இவை அமைத்துக் கொடுக்கப்படாத பாடசாலைகளுக்கு இந்த அறைகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணமும், 500 மனிதவலுவுக்கான உலர் உணவுப்பொருள்களும் அந்த அறைகள் அமைப்பதற்கென வழங்கப்படவுள்ளன. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினூடாக இந்த நிதி கையாளப்படவுள்ளது.

அறைகள் அமைப்பதற்கான சீமெந்துக்கல், மண் என்பனவற்றுக்கு, முன்னர் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா பணம் ஒதுக்கப்பட்டது.

தற்போதைய விலை அதிகரிப்பை அடுத்து அது ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அறைகளை அமைக்கும் பணி பெற்றோர்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னிப் பிராந்தியத்திலுள்ள வலயங்களுக்கே இவை அதிகளவில் அமைக்கப்பட வேண்டி உள்ளது. யாழ். மாவட்டத்திலுள்ள வலயங்களிலுள்ள பாடசாலைகளில் அமைக்கப்பட்டு விட்டன என மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-4)

## அரச உத்தியோகத்தருக்கு வீடமைப்புக் கடனுதவி

யாழ்ப்பாணம்,ஏப்.6

அரச ஈட்டு முதலீட்டு வங்கியினர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் அரச உத்தியோகத்தர்களுக்கான வீடமைப்புக் கடன் வழங்கவுள்ளனர்.

கடனுக்கு விண்ணப்பிப்பவர்கள் வடபகுதியில் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டிருப்பதுடன் நிரந்தர உத்தியோகம் பார்ப்பவராகவும், கடனின் மாதாந்த தவணைப் பணத்தை மீளச் செலுத்தக் கூடிய தகுதியுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

ஆகக் கூடிய கடன் தொகை இரண்டு லட்சம் ரூபா எனவும், இந்தக் கடனுக்கு 8 வீத வட்டி அறவிடப்படுமெனவும் மீளச் செலுத்தும் கால எல்லை ஆகக் கூடியது பத்து வருடங்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

காணி அல்லது வீட்டு உறுதியை அடமானமாக வைத்து அல்லது வங்கியால் வழங்கப்படும் கடன் ஒப்பந்தப் பத்திரம் அல்லது கடன் அனுமதிப்பத்திரங்களை ஏற்று சம்மதம் தெரிவிப்பதன் மூலம் இந்தக் கடனைப் பெற்றுக் கொள்ள முடியும்.

கடன் பெற விரும்புவோர் யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள வங்கிக் கிளையுடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளது. (ம-9)

## மத்திய வங்கியின் அறிக்கை ஜனாதிபதியிடம் திங்கள் கையளிப்பு

கொழும்பு,ஏப்.6

இலங்கை மத்திய வங்கியின் 2011 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கும் நிகழ்வு எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொழும்பு ஜனாதிபதி மாவத்தையிலுள்ள அட்ரியம் மண்டபத்தில் இடம் பெறும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிக்கையின் முதல் பிரதியைப் பெற்றுக் கொள்வார். மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் வங்கியின் நிதி ஆளுகை சபையினால் இந்த நிகழ்வு நடத்தப்படவிருக்கின்றது. (ப)

## யாழ்.மாவட்ட வாக்காளர் பட்டியல் இம்மாத இறுதியில் வெளியாகும்

யாழ்ப்பாணம்,ஏப்.6

2011 ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்துக்குரிய பெயர்ப் பட்டியல் இந்த மாதம் 30 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளதாக, யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கை கடந்த 2011 ஆம் ஆண்டு [illegible] மாதம் ஆரம்பமானது. மக்களிடம் 'பிசி' படிவங்கள் விநியோகிக்கப்பட்டு அவை மீளவும் பெறப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட்டு தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.

2010 ஆம் ஆண்டு வாக்காளர் எண்ணிக்கை 4 லட்சத்து 84 ஆயிரத்து 791 ஆகக் காணப்பட்டது.

இந்த எண்ணிக்கையில் சிறிது தளம்பல் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது இந்த எண்ணிக்கையை விட 4 ஆயிரம் பேர் மேலதிகமாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இரட்டைப் பதிவுகள் மேற்கொண்ட வாக்காளர்களின் விவரங்கள் இறுதிப்படுத்தப்படவில்லை. அது இறுதிப்படுத்தப்பட்ட பின்னரே யாழ்.தேர்தல் தொகுதியின் உண்மையான வாக்காளர் எண்ணிக்கை தெரியவரும்- என்றார்.

* இதே வேளை, வழமையாக தேர்தல் திணைக்களத்தால் ஜூன் மாதம் முதலாம் திகதியே வாக்காளர் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டு வருகின்றது. இருப்பினும் இந்த முறை யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட வாக்காளர் பெயர்ப் பட்டியலை இந்த மாதம் 30 ஆம் திகதி வெளியிடுமாறு தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 59 ஆண்டுகளுக்குப் பின்னர் வன்னேரிக்குளத்துக்கு மின்சாரம்

அக்கராயன், ஏப்.6

வன்னேரிக்குளம் கிராமம் உருவாக்கப்பட்டு 59 ஆண்டுகளுக்குப் பின்னர் மின்சாரம் வழங்குவதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

வன்னேரிக்குளம் 1953 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் உருவாக்கப்பட்ட ஒரு குடியேற்றக் கிராமமாகும்.

இந்தக் கிராமம் உருவாக்கப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை இந்தக் கிராம மக்கள் மின்சாரத்தைப் பெறவில்லை. எவரும் இவர்களுக்கு மின்சாரம் வழங்குவது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தற்போது இங்கு சுமார் 470 இற்கும் மேலான குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ளன.

இந்த நிலையில் தற்போதுதான் மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

தற்போது இங்கு மின்சாரம் இல்லாததால் பாடசாலைகள், மருத்துவமனை என்பன பல்வேறு நெருக்கடியை எதிர்கொள்கின்றன.

அத்துடன் மாணவர்களின் இரவு நேரக் கற்றல் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன. (க-18)

## அரசியல் விழிப்புணர்வை ஊட்ட மாணவர் நாடாளுமன்றங்கள்

வவுனியா,ஏப்.6

வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளில் மாணவர்கள் மத்தியில் ஜனநாயக அரசியல் உரிமைக்கான விழிப்புணர்வை ஊட்டும் வகையில் மாணவர் நாடாளுமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தரம் 6 தொடக்கம் 13 வரையான வகுப்புக்களைக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட சுமார் 10 பாடசாலைகளில் இந்த நாடாளுமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கோமரசங்குளம் மகா வித்தியாலயம், கோவில்குளம் இந்துக்கல்லூரி, இலங்கைத்திருச்சபை அ.த.க. பாடசாலை, பூந்தோட்டம் மகா வித்தியாலயம், விபுலாந்தாக் கல்லூரி வெளிக்குளம் அ.த.க. பாடசாலை, வீரபுரம் மாணிக்க வாசகர் வித்தியாலயம், அல்காமியா முஸ்லிம் வித்தியாலயம், பூவரசங்குளம் மகா வித்தியாலயம், கணேஸ்வரா மகா வித்தியாலம், ஆகிய பத்துப் பாடசாலைகளில் முதற்கட்டமாக இந்த மாணவர் நாடாளுமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடசாலையிலும் அரசியலமைப்பில் காணப்படும் முறைமையைப் போன்று பிரதமர், சபாநாயகர் மற்றும் அமைச்சர்கள் ஆகியோர் தெரிவு செய்யப்படுவர். பாடசாலை அபிவிருத்தித் திட்டம், பாடசாலைகளின் குறைபாடுகள் தொடர்பான விவாதித்து இவற்றை முன்னேற்றுவதற்கான முன்மொழிவுகளை உரியவர்களிடம் மாணவ நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வைப்பர்.

இவர்களின் முன்மொழிவுகளின் அடிப்படையிலேயே பாடசாலை தொடர்பான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-402)

## தங்கேஸ்வரனின் மறைவுக்கு த.வி.கூட்டணி அனுதாபம்

பூநகரி,ஏப்.6

தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினரும், பூநகரிப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினருமாகிய த.தங்கேஸ்வரனின் மறைவுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி அனுதாபங்களைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அதன் நிர்வாகச் செயலாளரும், மாநகரசபை உறுப்பினருமாகிய இரா.சுப்பையா விடுத்துள்ள அனுதாபச் செய்தியில்;

பூநகரி பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளரும் எமது கட்சியின் இளம் உறுப்பினருமான தங்கராசா தங்கேஸ்வரன் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். வைத்தியசாலையில் மரணமானார் என்ற செய்தி எம்மை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

பதவிகளுக்காக முட்டி மோதிக்கொண்டு போட்டி போடும் இந்தக் காலகட்டத்தில் சட்டப்படியும், தனது அயராத உழைப்பின் மூலமும் கிடைத்த பதவியை இராஜினாமா செய்து பதவி மீது மோகமில்லாத தனது இன உணர்வுத் தன்மையை வெளிக்காட்டினார்.

இவ்வாறான ஓர் இனப்பற்றுள்ள இளைஞனின் மரணம் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு மட்டுமல்ல தமிழினத்துக்கே ஒரு பேரிழப்பாகும்.

அமரர் தங்கேஸ்வரனை இழந்து தவிக்கும் அவர் மனைவி மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## துணுக்காய், மல்லாவியில் சிக்கிக் கொண்ட வர்த்தகர்கள்

அக்கராயன்,ஏப்.6

துணுக்காய் மற்றும் மல்லாவிப் பிரதேசங்களில் முறையற்ற வகையில் செயற்பட்ட 14 வர்த்தக நிலையங்கள் சிக்கிக் கொண்டன.

கொழும்பில் இருந்து வருகை தந்த விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளிடமே இவர்கள் மாட்டிக் கொண்டனர்.

விலைப்பட்டியலை முதன்மைப்படுத்தாமை, பனடோல், டிஸ்பிறின் ஆகியவற்றை அதிக விலைக்கு விற்றமை, மீதமாகவுள்ள சில்லறைக்குப் பொருள்கள் வழங்கியமை, கூடுதல் விலையில் ஒயிலை விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் இந்த வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மீது சுமத்தப்பட்டன.

எதிர்வரும் 24 ஆம் திகதி இவர்கள் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர். (க-18)



கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியில் இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட வவுனியா மாவட்ட வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரியான மருத்துவர் சத்திய மூர்த்தி மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குகின்றார். (6)

## 2,000 மாணவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ்கள்

முள்ளியவளை, ஏப்.6

இந்த ஆண்டு 2 ஆயிரம் மாணவர்களுக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக் கொடுப்பது தங்களின் இலக்கு என 'ஒஃபர்' அரச சார்பற்ற நிறுவனம் தெரிவித்துள்ளது.

போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகளைச் சேர்ந்த பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் தொலைந்த மற்றும் இல்லாத மாணவர்களுக்குப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பெற்றுக் கொடுக்கும் பணிகளில் 'ஒஃபர்' அரச சார்பற்ற நிறுவனம் முழுமூச்சுடன் ஈடுபட்டு வருகின்றது.

பிறப்பு அத்தாட்சிப் பத்திரமின்றி இலங்கையில் எந்தக் கருமத்தையும் தற்போது ஆற்ற முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (க-433)

# போரின் பின்னரும் சாதனை புரியும் புனித திரேசா கல்லூரி

### மருத்துவர் சத்தியமூர்த்தி புகழாரம்

கிளிநொச்சி, ஏப் 6

போருக்குப் பின்னரும் சாதனை படைக்கின்றது கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி.

இவ்வாறு பாராட்டியிருக்கிறார் வவுனியா மாவட்ட வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரியான மருத்துவர் த.சத்தியமூர்த்தி கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியின் வருடாந்த பரிசில் வழங்கும் வைபவத்தில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் பாடசாலையின் தகவல் தொழில் நுட்பப் பாட ஆசிரியர் சயாகரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கல்லூரியின் பழைய மாணவரான மருத்துவர் சத்தியமூர்த்தி இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

வன்னிப் பகுதியில் இயங்கும் ஒரே ஒரு மகளிர் கல்லூரி என்ற பெருமையைப் புனித பெண்கள் திரேசா கல்லூரி கொண்டுள்ளது. அத்துடன் இதற்கு ஒரு தனித்துவம் உண்டு. அதுபோல இங்கு கல்வி கற்கும் மாணவர்களுக்கும் ஒரு தனித்துவம் உண்டு. போருக்குப் பின்னராகிய காலத்தில் இப் பாடசாலை, மிகவும் எழுச்சி பெற்றுப் பல்வேறு துறைகளிலும் முதன்மை பெற்று விளங்குகின்றது. அது போற்றுதற்குரியது.

குறிப்பாகக்கடந்த ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையிலும் ஏனைய துறைசார் போட்டிகளிலும் மாவட்ட மட்டத்தில் முதல் நிலை பெற்ற இந்தக் கல்லூரியின் பெருமைக்குரிய மாணவர்கள் இன்று சாதனையாளர்களாக மதிப்பளிக்கப்படுகின்றனர். இவர்கள் நல்ல கல்வியைக் கற்று எதிர்காலத்தில் பெரியவர்களாக வளரவேண்டும் என்பது எங்களின் அவா எனத் தெரிவித்தார். (க-6)

## கமக்கார அமைப்புகளுக்கு புதிய நிர்வாகங்கள்

அக்கராயன், ஏப்.6

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள 19 கமக்கார அமைப்புகளுக்கும் புதிய நிர்வாகங்களைத் தெரிவு செய்வதென முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பூநகரி கமநல சேவை நிலையத்தில் பூநகரி பெரும்பாக உத்தியோகத்தர் எஸ். சுந்தரமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற கமக்கார அமைப்புகளுடனான கலந்துரையாடலின் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கமக்கார அமைப்புகள் பயன்படுத்திய உழவு இயந்திரங்களின் கணக்குகளைச் சீர்செய்து மீண்டும் சிறுபோக நெற்செய்கைக்கு இவற்றைப் பயன்படுத்துவது மற்றும் ஏனைய பல விடயங்கள் தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது. (க-18)

## பதவியுயர்வு

முல்லைத்தீவு, ஏப்.6

நேப் திட்டத்தின் பிரதித் திட்டப் பணிப்பாளராகக் கடமையாற்றி வந்த சிவப்பிரகாசம் சிவஜெயந்தன் முல்லைத்தீவு மாவட்டத்தின் வடக்கு மாகனாண ஆளுநரின் பிராந்திய ஆணையாளராகப் பதவியுயர்வு பெற்றுள்ளார். வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி இவருக்கான பதவியுயர்வை வழங்கியுள்ளார். கடந்த 2 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வரையில் இந்தப் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இவர் முன்னர் முல்லைத்தீவு மாவட்டத்தின் திட்டப் பணிப்பாளராகக் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (க-500)

## கிராம அலுவலரை தாக்கிய ஆளும் கட்சி ஆதரவாளர்

கிளிநொச்சி, ஏப்.6

வண்ணிவிளாங்குளம் கிராம அலுவலர் ஆளும் கட்சி ஆதரவாளர் ஒருவரால் தாக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வன்னிவிளாங்குளம் கிராம அலுவலர், இந்திய அரசால் வழங்கப்பட்ட சைக்கிள்களுக்கான பயனாளிகளைத் தெரிவு செய்வதில் ஈடுபட்டபோது அவரது அலுவலகத்துக்குச் சென்று 'கலாட்டா' செய்துள்ளார். இவர் கடந்த உள்ளூராட்சி தேர்தலில் அரச தரப்பு ஆதரவு வேட்பாளராகப் போட்டியிட்டவர். பயனாளிகளுக்கான தமது தெரிவு ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் பயனாளிகளைத் தெரிவு செய்யும் உரிமை கிராம அலுவலர்களுக்கு இல்லையென்றும் தகாத வார்த்தைகளால் இந்தப் பிரகிருதி பேசியுள்ளார்.

பின்னர் கிராம அலுவலரைத் தாக்கியுள்ளார். இதனையடுத்துக் கடந்த ஒருவார காலமாகக் கிராம அலுவலர் கடமைக்குச் செல்லவில்லை. இதனால் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டனர்.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆளும் தரப்பு அரசியல் கட்சி ஆதரவாளர்களின் தலையீடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றமை தொடர்பாக அரச உத்தியோகத்தர்களும் மக்களும் விசனம் தெரிவித்துள்ளனர். (க-6)

## மூடப்பட்ட விடுதிகளைத் திறப்பதற்கு நிபந்தனையுடன் நீதிமன்று அனுமதி

மூடப்பட்ட ஒன்பது விடுதிகளையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை திறந்து வைப்பதற்கு வவுனியா மாவட்ட நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அடிப்படை வசதிகள் இல்லாமை, உரிய சுகாதார வசதிகளை மேற்கொள்ளாமை, சமூகவிரோதச் செயற்பாடுகள்இடம்பெறுகின்றமை, பதிவு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் இந்த ஒன்பது விடுதிகளும் அண்மையில் மூடப்பட்டன.

தற்போது சில நிபந்தனைகளின் கீழ் இந்த விடுதிகளை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை திறந்து வைப்பதற்கு வவுனியா மாவட்ட நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

19 ஆம் திகதிக்கு முன்னர் இந்த விடுதிகள் வவுனியா நகரசபையில் பதிவுகளை மேற்கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதுடன், போதிய வசதிகளையும் ஏற்படுத்த வேண்டும்.

சமூகவிரோதச் செயற்பாடுகள் இடம்பெறுவதாக முறைப்பாடுகள் எவையும் இந்த விடுதிகளுக்கு எதிராகத் தெரிவிக்கப்படக் கூடாது போன்ற நிபந்தனைகளே நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ளன. இவை மீறப்படுமாயின் இந்த விடுதிகள் நிரந்தரமாகவே மூடப்பட்டுவிடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகன உடைமை மாற்றும் படிவங்களை விற்கத் தடை

யாழ்ப்பாணம், ஏப்.6

வாகன உடைமை மாற்றப் படிவங்கள், யாழ்.நகரில் புத்தகசாலைகளில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக யாழ்.மாவட்ட செயலகத்துக்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து அதனை அவ்வாறு விற்பனை செய்யக் கூடாது எனவும் அதனையும் மீறி விற்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் யாழ்.மாவட்ட செயலகத்தால் அறிவுறுத்தப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

வாகன உடைமை மாற்றப் படிவங்கள், மாவட்ட செயலக மோட்டார் போக்குவரத்துக் கிளை மற்றும் பிரதேச செயலகங்களில் இலவசமாகவே வழங்கப்படுகின்றன. ஆயினும் யாழ்.நகரில் பிரபலமான புத்தகசாலைகளில் இவை மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இலவசமாக வழங்கப்பட வேண்டிய வாகன உடைமை மாற்றப் படிவங்கள் புத்தகசாலைகளில் 100 ரூபா வரை விற்கப்பட்டு வருகின்றது. இந்த விடயம் தொடர்பில் மாவட்ட செயலகத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.நகரில் உள்ள புத்தகசாலைகளிலிருந்து மேற்படி உடைமை மாற்றப் படிவங்கள் விற்பனை செய்யப்பட்டமை யாழ்.மாவட்ட செயலகத்தால் உறுதிப் படுத்தப்பட்டது.


மாவட்ட செயலகங்களால் விநியோகிக்கப்படும் உடைமை மாற்ற விண்ணப்பப் படிவம் போன்றே தனியார் புத்தக சாலைகளில் விற்பனை செய்யப்படுகின்ற விண்ணப்பங்களும் காணப்படுகின்றன.

இவ்வாறு மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட வேண்டிய விண்ணப்பப் படிவங்கள் விற்கப்படுவது தொடர்பில் உடனடியாக நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கொழும்பிலுள்ள மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் வர்த்தகர் சங்கம் ஊடாக யாழ்.நகரப் புத்தக விற்பனை நிலையங்களுக்கு இதனை விற்பனை செய்யக் கூடாது என்று அறிவித்தல் வழங்கப்படவுள்ளது.

இதனையும் மீறி விற்பவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-5)




தென்மராட்சிப் பிரதேசத்தில் 523 ஆவது படைப் பிரிவுக்குட்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு வயதுக் குழந்தைகளுக்கு தலா ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பால்மா பைக்கெற்றுக்கள் வழங்கப்பட்டன. நேற்று முன்தினம் சாவகச்சேரி சிவன்கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் வைத்து குழந்தைகளுக்குப் பால்மா பைக்கெற்றுகள் வழங்கப்பட்டன. (ம-9)

## துர்நாற்றம் வீசும் மீன்சந்தை

தென்மராட்சி, ஏப்.6

கொடிகாமம் பொதுச் சந்தையில் உள்ள மீன்சந்தை தினமும் துப்புரவு செய்யப்படாமையால் அந்தப் பகுதியில் பெரும் துர்நாற்றம் வீசுவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாகப் பிரதேச சபைக்குப் பல தடவைகள் தெரிவிக்கப்பட்டபோதும் பயன் எதுவும் கிடைக்கவில்லை என்றும் கூறப்பட்டது.

வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள குப்பைவாளிகள் கட்டி வைக்கப்படாததால் நகர்ப்பகுதியில் நடமாடும் நாய்கள், மாடுகள் அவற்றை வீழ்த்தி விட்டுச் செல்வதால் அதற்குள்ளிருக்கும் குப்பைகள் அப்பகுதிகளை நிறைத்து விடுகின்றது.

காகங்கள் அவற்றை அங்கும் இங்கும் தூக்கிச் செல்லும் வேளையில் பொது மக்கள் சிரமங்களை எதிர் கொள்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:

''பிரதேச சபையில் சுத்திகரிப்பு பணிக்கென மூன்று ஊழியர்களே உள்ளனர். இதனால் அனைத்து கடமைகளும் ஒரே நேரத்தில் செய்ய முடியாதுள்ளது.

எம்மால் முடிந்தவரை மக்களுக்குச் சேவையாற்றி வருகிறோம். குறைகளை நிவர்த்தி செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றோம்'' என்று கூறினார். (ம-9)

## மீண்டும் சந்திகளில் கூடும் இளைஞர்கள்

யாழ்ப்பாணம், ஏப்.6

யாழ்.குடாநாட்டு வீதிகளிலும் சந்திகளிலும் மீண்டும் இளைஞர்கள் கூடி வருகின்றனர்.

அண்மைக்காலமாகப் பொலிஸார் மேற்கொண்ட திடீர் நடவடிக்கைகள் காரணமாக வீதிகளில் கூடும் இளைஞர்களைக் காண்பது அரிதாகவே இருந்தது.

இந்த நிலையில் மக்கள் வீதிகளில் பயணிக்கும் போது சிரமம் இன்றிப் பயணித்து வந்தனர்.

பொலிஸாரின் நெருக்கடி நிலைமைகள் சற்றுத் தளர்வடைந்துள்ள நிலையில் மீண்டும் இளைஞர் வீதிகளில் கூடி வருகின்றனர்.

சந்திகளில் கூடும் இளைஞர்கள் குறித்த பாதையூடான போக்குவரத்துகளுக்கு இடையூறு செய்யும் விதத்தில் நிற்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (ம)

## குப்பைகளால் குளிப்பாட்டப்படும் மாணவரும் பொதுமக்களும்

கொடிகாமம், ஏப்.6

கொடிகாமம் பகுதியில் தினமும் மாணவர்களும் பொதுமக்களும் குப்பைகளால் குளிப்பாட்டப்படுவது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி பிரதேச சபை உழவு இயந்திரத்தில் குப்பைகள் ஏற்றிச் செல்லப்படும் வேளையில் இவ்வாறு இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டது.

குப்பைகள் ஏற்றிச் செல்வதற்கு போதிய பாதுகாப்பான பெட்டி இல்லாத போதிலும் அதன் பின்பக்க கதவும் காணப்படவில்லை.

இதனால் நகர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களிலிருந்து எடுத்துச் செல்லப்படும் குப்பைகளை வாகனங்களில் கொண்டு செல்லும்போது அருகே செல்லும் பொதுமக்கள், மாணவர்கள் மீது பறந்து உடைகளை அழுக்காக்குகின்றன.

இதனால் கழிவகற்றல் நேரத்தை மாற்றி மாலை வேளைகளில் அகற்ற ஏற்பாடு மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டது.

இந்த விடயத்தில் உரியவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (ம-9)

## தீயணைப்பு சேவை தற்காலிக நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஏப்.6

யாழ்.மாநகர சபையின் தீயணைப்பு வாகனத்தின் திருத்த வேலைகள் மேற்கொள்ளவுள்ளமையால் தற்காலிகமாக இந்த தீயணைப்புச் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது என யாழ்.மாநகர சபையால் அறிக்கப்பட்டுள்ளது. (ம-14)

## அனுமதியின்றி ஒலிபெருக்கி பாவனை செய்தால் நடவடிக்கை

### வலி. கிழக்குப் பிரதேச செயலக சிவில் பாதுகாப்புக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப்.6

அனுமதிபெறாது ஒலி பெருக்கிப் பாவனை செய்வோர் மீது சட்ட நடிவடிக்கை எடுக்கப்படும் என்று வலி.கிழக்குப் பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அண்மையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒலிபெருக்கிப் பாவனை அதிகரித்துக் காணப்படும் நிலையில் பரீட்சைகளுக்குப் படிக்கும் மாணவர்கள் உட்பட நோயாளர்களும் பொதுமக்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் ஒலி பெருக்கிப் பாவனையைக் கட்டுப்படுத்துமாறு பல தடவைகள் தெரிவிக்கப்பட்டபோதும் இது குறித்து எவரும் கவனம் செலுத்துவதாகத் தெரியவரவில்லை.

இந்த நிலையில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம)

## கச்சான் சாப்பிட வைக்கும் 'கரண்ட்'

தென்மராட்சி, ஏப்.6

கடமையில் மும்முரமாக ஈடுபடவேண்டிய நேரத்தில் கரண்ட் இல்லாததால் கையில் விசிறியுடன் கூட்டம் கூட்டமாக இருந்து கச்சான் சாப்பிடும் நிலையில் அலுவலர்கள் உள்ளனர்.

தென்மராட்சி கல்வி வலய அலுவலகங்களிலேயே இவ்வாறான நிலையை அவதானிக்க முடிந்தது.

100 இற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் கடமையாற்றும் இந்த அலுவலகத்துக்கு 5கே.வி. மின் பிறப்பாக்கி பிரதேசத்தில் மின்தடை ஏற்படும் வேளைகளில் பயன்படுத்தப்பட்டு வந்தது.

இந்த மின் பிறப்பாக்கி கடந்த வாரம் பழுதடைந்ததால் உத்தியோகத்தர்கள் தமது கடமைகளைச் செய்வதற்கு மின்சாரம் இல்லாததால் கையில் விசிறியுடன் அமர்ந்துள்ளனர்.

கடும் வெப்பத்தால் அலுவலகத்தினுள் அமர்ந்திருக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனவும் இதனால் கடமைகளை செய்ய முடியாதுள்ளதாகவும் அலுவலர்கள் காரணம் கூறுகின்றனர். (ம)



காரைநகர் அஞ்சல் ஊழியர்களுக்கான சீருடை வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை காரைநகர் தபாலகத்தில் இடம்பெற்றது. காரைநகர் தபால் அதிபர் என்.ஜீவநாதன் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கிறார். வடக்கு மாகாண பிரதி அஞ்சல்மா நாயகம் என்.இரத்தினசிங்கம் அருகில் உள்ளார். (ம-250)

### பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை

## பழைய இடத்தில் இயங்க ஆளுநர் மறுப்புத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.6

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பழைய இடத்தில் இயங்குவதற்கு ஆளுநர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இந்தக் கலாசாலையின் பழைய இடம் அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ளமை, பலாலி விமான நிலையத்தை அண்மித்துள்ளமை [illegible] இதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகிறது.

இதேவேளை பலாலியில் உள்ள வேறு ஓர் இடத்தைத் தெரிவு செய்யும் பட்சத்தில் அங்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியைப் பெற்றுத் தர முடியும் என்று ஆளுநர் கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஆளுநரைச் சந்தித்துக் கோரிக்கை விடுத்த குழுவிடமே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலாசாலையில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம், கிறிஸ்தவம் ஆகிய பாடநெறிகளைத் தரம் வாய்ந்தனவாக வழங்க வேண்டும்.

பலாலி ஆசிரிய கலாசாலையை மூடுவதற்கான எந்த ஏற்பாடும் இல்லை எனவும் ஆளுநர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-4)

### மின் தடை இரத்து

கிறிஸ்தவ பெருநாளை முன்னிட்டு மின்தடை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார். கிறிஸ்தவ பெருநாள்களான பெரிய வெள்ளி மற்றும் உயிர்த்த ஞாயிறு ஆகிய தினங்கள் இன்றும் ஞாயிற்றுக் கிழமையும் கிறிஸ்தவர்களால் அனுஷ்டிக்கபடவுள்ளதால் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் இந்தத் தினங்களில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த மின்தடையை ரத்துச் செய்யுமாறு அரச அதிபரிடம் கோரியிருந்தார். இதனையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. (ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயில் தரிசனத்தின்போது ஆண்கள் மேல் உடைகள் அணியலாமா?

நம்மவர்கள் பலர் பல்வேறு நாடுகளில் வாழ்வதால் அங்கு கடைப்பிடிக்கின்ற நடைமுறைகளை இங்கு வந்தும் அதைச் செய்வதால் எமது பண்பாடு கலாசாரம் அழியும் நிலை ஏற்படலாம். சில கோயில்களில் தரிசனம் செய்யும்போது ஆண்கள் மேற்சட்டை அணியத் தடை விதிக்கப்பட் டுள்ளது. இந்த ஆசாரத்தை பலரும் ஏளனம் செய்கின்றனர். ஆனால் இந்துமத பிரமாணத்தின்படி ஆண்கள் மேல் ஆடைகள் அணியாமல் ஆராதிக்க வேண்டும் என விதிமுறை வகுக்கப்பட்டுள்ளது.

கோயில் தரிசனம் செய்யும்போது நாம் மனதில் கொள்வது இறைவன் அருள் நம்மில் வந்து நிறைய வேண்டும் என்பதே. கோயில் வாசலுக்கு முன் தெய்வ விக்கிரகத்துக்கும் சமாந்தரமாக வணங்கி நிற்கும் பக்தரில் இறையருள் வந்து நிறையும் என்பது நம்பிக்கை. விக்கிரகத்தின் மூலாதாரம் முதல் எல்லாப் பாகங்களிலிருந்தும் இறை வல்லமை புறப்பட்டு பக்தனின் ஒவ்வொரு பாகத்தையும் நோக்கி வந்து சேர்ந்து ஒவ்வொரு பாகமும் உணர்வடைகின்றன.

பொதுவாக அதிகாலையிலும் மாலையிலும் கோயில் தரிசனம் செய்வது வழக்கம். இந்த நேரங்களில் ஆண்கள் மேலாடை இன்றி ஆலய தரிசனம் செய்யவேண்டும் என்பது விதி. உதய சூரியனிலும், மறையும் சூரியனிலும் இருந்து புறப்பட்டு வரும் ஒளிக்கதிர்கள் ஆடை அணியாத உடற்பாகங்களில் பதிந்து விட்டமின் "டி" யை உள்வாங்க உதவுவது உடல்நலத்துக்கு மிகச் சிறப்பானது என்று விஞ்ஞானம் கண்டறிந்துள்ளது. எனவே முன்னவர்கள் வகுத்த பண்பாடு கலாசாரங்களை பேணுவது காலத்தின் தேவையாகும்.




## உயர்தர மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

தென்மராட்சி,ஏப்.6

சாவச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

நகரசபை பொது நூலகங்களின் செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் வழிகாட்டல் கருத்தரங்குகளை கல்வியாளர்கள் மூலம் நடந்த திட்டமிட்டுள்ளனர்.

இதன் பிரகாரம் ஆரம்ப வழிகாட்டல் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது. தமிழ் பாடத்துக்கான கருத்தரங்கே நடத்தப்படவுள்ளது.

உள்ளூராட்சி உதவியாளர் திருமதி ஹேமமாலினி ஜெயந்தன் தலைமையில் நடைபெறும் ஆரம்ப நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளையும் சிறப்பு விருந்தினர்களாக இளைப்பாறியகிராம அலுவலர்வை.இராசரத்தினம், நகராட்சிமன்ற உறுப்பினர் பொ.செல்வரத்தினம் யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலக நிர்மாண வேலைகள் அத்தியட்சகர் கு.செல்வரத்தினம் ஆகியோரும் கலந்து கொள்வர். கருத்தரங்கின் சிறப்புரையை நகரசபைச் செயலாளர் சு.புத்திசிகாமணியும் கருத்துரைகளை தென்மராட்சி பிரதேச செயலக கலாசார அலுவலர் சி.முகுந்தன், சாவ கச்சேரி நகர்ப்பகுதி பொது சுகாதாரப் பரிசோதகர் ரி.டி.தவசிரோஜன் ஆகியோரும் நிகழ்த் தவுள்ளனர். (ம-9)

## பிரதேச ரீதியாக புத்தாண்டுச் சந்தை

யாழ்ப்பாணம், ஏப்.6

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்தின் சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் இரு தினங்கள்கொண்ட புத்தாண்டுச் சந்தை நடத்தப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட உள்ளூர் உற்பத்தியாளர்கள், தமது உற்பத்திப் பொருள்களை இலகுவாகச் சந்தைப்படுத்தும் நோக்குடன்இலங்கை சமுர்த்தி அதிகார சபை, கமநல அபிவிருத்தித் திணைக்களம், கூட்டுறவுத் திணைக்களம், சமுர்த்தி ஆணையாளர்நாயகத்திணைக்களம் ஆகியவை ஒன்றிணைந்து இந்த வாழ்வெழுச்சிப் புத்தாண்டுச் சந்தையை நடத்த தீர்மானித்துள்ளன.

இதற்கமைவாக நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும், மறுநாள் திங்கள்கிழமையும் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுச் சந்தை நெல்லியடி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறும்.

எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கள்கிழமையும், மறுநாள் செவ்வாய்க்கிழமையும் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுச் சந்தை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்திலும், சங்கானை பிரதேச செயலர் பிரிவுச் சந்தை பன்னாகம், மெய்கண்டான் மகா வித்தியாலயத்திலும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவுச் சந்தை திருநெல்வேலி சந்தியில் அமைந்துள்ள வை.எம்.சி.எ. கட்டடத்திலும், மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுச் சந்தை மருதங்கேணி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்திலும் நடைபெறவுள் ளன.

எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும், மறுநாள் புதன் கிழமையும் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுச் சந்தை குருநகர் அரச தொடர்மாடி விளையாட்டுக் கழகமைதானத்திலும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுச் சந்தை கோப்பாய் கந்தசுவாமி ஆலயத்திலும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுச் சந்தை தெல்லிப்பழை பிரதேசசபை சந்தைக் கட்டடத்திலும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுச் சந்தை மானிப்பாய் பிரதேச சபைமண்டபத்திலும், வேலணை பிரதேச செயலர் பிரிவுச் சந்தை பிரதேச செயலகத்துக்கு அருகிலும், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுச் சந்தை ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரியிலும், காரைநகர் பிரதேச செயலர் பிரிவுச் சந்தை காரைநகர் சைவ மகா சபைக் கட்டடத்திலும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுச் சந்தை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்திலும், உடுவில் பிரதேச செயலர் பிரிவுச் சந்தை இணுவில் பழைய சந்தைக் கட்டடத்திலும், நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுச் சந்தை நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்திலும் நடைபெறும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம-14)

## திருமுறை தேவாரத்திரட்டு முற்றோதல்

யாழ்ப்பாணம்,ஏப்.6

அகில இலங்கை திருமுறை மன்றம் நடத்தும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல் பன்னிரு திருமுறைப் பாராயணம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூரில் உள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.6

அகில இலங்கை திருமுறை மன்றம் நடத்தும் மாதாந்த திருமுறை முற்றோதல் நிகழ்வு நல்லை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் தினமும் மாலை 4.30 மணி முதல் இடம்பெற்று வருகிறது.

இந்து சமய அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் அனுசரணையுடன் நடைபெற்று வரும் திருமுறை முற்றோதலில் ஆர்வலர்கள் கலந்து பயன்பெறலாம் என மன்ற அமைப்பாளர் சி.கிருஸ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார். (ம-14)

## நாட்டுக்கூத்து போட்டி நாளை

தென்மராட்சி,ஏப்.6

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான இவ்வருடத்திற்குரிய தமிழ்மொழி தினத்திற்கான நாட்டக்கூத்துப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் சாவச்சேரி இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறுமென வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார் (ம-9)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### சுப்பிரமணியம் குணரத்தினம்

குடும்பத்து நிழலாக இருந்த பெருமையரே
நிழல் தேடி நித்தமும் நாமே அலைகின்றோம்
மாசி மகமதனில் சிவபதமடைந்த பேருயிரே
இந்நாளில் உமை நினைத்து
கண்ணீர் வடிக்கின்றோம்

கடந்த 07.03.2012 அன்று இறைபதமடைந்த எமது அன்புத்தந்தையின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசிமூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பலவழிகளில் உதவி செய்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன். இன்று (06.04.2012) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

A9 Road, Kodikamam
077 2980757, 077 7465537

குடும்பத்தினர்

## 'எம்.ஆர்.ரி.சி' யின் ஆவணத் திரைப்பட விழா -2

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் ஏற்பாட்டில் ஆவணத் திரைப்பட விழா நாளை சனிக்கிழமை காலை-மாலை என்ற இரு அமர்வுகளாக இடம்பெறவுள்ளது.

காலை அமர்வு முற்பகல் 10 மணிக்கும் மாலை அமர்வு பிற்பகல் 2 மணிக்கும் ஜும்மா பள்ளி ஒழுங்கையில் அமைந்துள்ள ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பர்மா நாட்டின் ஜனநாயகப் போராட்டம் தொடர்பான புலனாய்வு ஆவணங்களைக் கொண்ட 'பர்மா வி.ஜே.', தென்னாபிரிக்கப் போராட்டத் தலைவர் நெல்சன் மண்டேலாவின் வரலாற்றைப் பிரதிபலிக்கும் 'மண்டேலா ஆபிரிக்காவின் தந்தை' ஆகிய ஆவணத் திரைப்படங்கள் காண்பிக்கப்படவுள்ளன.

ஆர்வம் உள்ள அனைவரும் இந்த ஆவணத் திரைப்பட விழாவில் கலந்து கொண்டு அவற்றைப் பார்த்து ரசிக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஙு-15)

### தேவை

பில்பதிவாளர், விற்பனையாளர் தேவை.
( சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)
வெங்கடேஸ்வரா
No. 125/127, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

### வீடு வாடகைக்குண்டு

யாழ் நகரை அண்மித்த 31, மடம் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: ரி. வில்வரெட்ணம்,
இல.31, மடம் வீதி, யாழ்ப்பாணம்.
(Convent School அருகில்)
(16486)

### சாவகச்சேரி தனங்கிளப்பு கிழக்கு அருள் மிகு நரசிங்க வைரவ ஆலய

## பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம்

காலம்: 06.04.2012 வெள்ளிக்கிழமை
காலை 6 மணிதொடக்கம்
6. 45 மணிவரை
ஆலய பிரதமகுரு வேதாகம கிரியாகலாபூஷணம்
சிவப்பிரம்ம ஸ்ரீ
தி. கிருஷ்ணமூர்த்திக்குருக்கள் B.A
ஆசிரியர் (கல்வயல்) அவர்கள் தலைமையில்
நடைபெறும்.

தனங்கிளப்பு
சாவகச்சேரி.

சின்னப்பு இராசையா
குடும்பம்
ஆலய தர்மகர்த்தா

### விற்பனையாகிறது

- அரச திணைக்கள அலுவலக முறைமை நிதி முறைமை - ஆக்கம்: த.ஜெயராஜ், ந. கமலநாதன்.
- பொது நிதி முகாமைத்துவம் - கில்பேட் குணம்
- O/L - Pass Paper 2011- இணைக்கப்பட்ட சகல பாடங்களும்.

அன்னை புத்தகசாலை, யாழ்ப்பாணம்
222 - 9881
Face Book I.D. annai book depot @ gmail.Com.

### துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலக திட்டமிடல் பிரிவில் பிரதம முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும்
திருமதி கிருஷாணி கமலநாதன் அவர்களின் அன்புத் தாய்
திருமதி சிவக்கொழுந்து சதானந்தா
அவர்களின் பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.
யாழ். பிரதேச செயலக நலன்புரி சங்கம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டவட்டமான முடிவை ஈரானிடம் எதிர்பார்க்கும் அமெ.

வொஷிங்டன்,ஏப்6

அணுஆயுதத் திட்டம் குறித்து திட்டவட்டமான கருத்தை வழங்க வேண்டும் என அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் ஈரானைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, சீனா ஆகிய நாடுகளுடன் இந்த மாதம் ஈரான் பேச்சு நடத்த உள்ளது. இந்தப்பேச்சின்மூலம் அணு ஆயுத தயாரிப்பு குறித்த பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள ஒரு வாய்ப்பு ஈரானுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நாங்கள் மிகவும் திட்டவட்டமான உறுதிமொழிகளை ஈரானிடம் இருந்து எதிர்பார்க்கிறோம். அணு ஆயுதத் திட்டம் குறித்து உண்மையை ஒளிவு மறைவின்றி ஈரான் மற்ற நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.



**அணு ஆயுதத் திட்டம் குறித்து உண்மையை ஒளிவு மறைவின்றி ஈரான் மற்ற நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.**

சர்வதேசக் கடமைகளை ஈரான் சரிவரச் செய்ய வேண்டும். அதேநேரத்தில் ஈரானுக்குத் தேவையான அழுத்தங்களையும், விரிவான தடைகளையும் நாங்கள் நடைமுறைப்படுத்துவோம். நாங்கள் கொடுத்து வந்த தொடர்அழுத்தம்தான் இன்று ஈரானை பேச்சுக்கு இணங்க வைத்துள்ளது.

பேச்சு மூலம் தேவையான நடவடிக்கைகளுக்கான திட்டம் தீட்டப்படும். அதன் மூலம் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும். ஈரானுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகள் எடுப்பதால் ஏற்படும் விளைவுகள் குறித்து ஒபாமா நிர்வாகம் எச்சரித்துள்ளது. அதற்குப் பதில் பொருளாதார நெருக்கடிகளை கொடுப்பது என அமெரிக்கா முடிவு செய்துள்ளது.இவ்வாறு ஹிலாரி தெரிவித்தார்.

## சிரியாவில் ஒரே நாளில் 96 பேர் சாவு

பெய்ரூட்,ஏப்6

சிரியாவில் இட்லிப் மாகாணத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இராணுவத்தினரின் தாக்குதலில் 58 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அதே நாளில், இன்னொரு பகுதி யில் போராட்டக்காரர்களுக் கும், இராணுவத்துக்கும் நடந்த மோதலில் 20 பேர் இறந்தனர். மேலும், இரா ணுவ வீரர்கள் 18 பேர் இறந்தனர்.

சிரிய அதிபர் பஷர் அல் ஆசாத்துக்கு எதிராகக் கடந்த ஓராண்டாகப் போராடி வரும் மக்களை இராணுவம் தாக்குதல் மூலம் ஒடுக்கி வருகிறது.

## ஆஸ்திரேலிய விமான உணவுப் பொதியில் கூட்டுப்புழுக்கள்

ஆஸ்திரேலியாவின் காண்ட்டாஸ் விமானத்தில் லொஸ் ஏஞ்சல்ஸிலிருந்து மெல்போர்ன் நோக்கிப் பயணித்த பெண்ணொருவர் உணவுப் பொட்டலத்தில் உயிர்ப் புழுக்கள் இருந்தமை கண்டு கடும் அதிர்ச்சியடைந்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை காண்ட்டாஸ் விமானத்தில் பயணித்த அந்தப்பெண், இருக்கை விளக்கை ஒளிரச் செய்யாமலேயே தனக்கு அளிக்கப் பட்ட உலர்பழங்கள், பருப்புகள் கொண்ட உணவுப் பொட்டலத்தை பிரித்து உண்ணத் தொடங்கியுள்ளார்.

இதுதொடர்பாக அந்தப் பெண் கூறியதாவது:-

''முதலில் சுவை வித்தியாசமாக இருந்ததை உணர்ந்தேன்; உடனடியாக விளக்கை ஒளிரச் செய்து பார்த்தேன். பொட்டலம் முழுதும் லார்வா எனப்படும் கூட்டுப் புழுக்கள் உள்ளதைக் கண்டு அதிர்ந்தேன்'' என்றார் அந்தப் பெண்.

உடனடியாக அந்தப் பெண்ணின் பதினைந்து வயது மகனும் தனக்கு அளிக்கப்பட்ட உணவுப் பொதியைப் பிரித்துப் பார்த்தபோது அதிலும் கூட்டுப்புழுக்களே குவிந்திருந்தன. இதனையடுத்து காண்ட்டாஸ் விமான நிறுவனம் அந்தப் பெண்ணிடம் தனது மன்னிப்பைத் தெரிவித்ததுடன் விசாரணைக்கும் உத்தரவிட்டுள்ளது.

## நானும் ஒரு பெண் தான்

போட்டியில் இருந்து விலக்கப்பட்ட கனடா அழகி வருத்தம்

நானும் ஒரு பெண் தான், எனவே என்னை மிஸ் கனடாப் போட்டியில் கலந்து கொள்ள அனுமதிக்க வேண்டும் என்று கனடாவைச் சேர்ந்த அழகி வருத்தத்துடன் தெரிவித்துள்ளார்.

ஜென்னா தலக்கோவா என்ற அழகி மிஸ் கனடா போட்டியின் இறுதிச் சுற்று வரை வந்தார். அவர் ஆணாக இருந்து அறுவைச் சிகிச்சை மூலம் பெண்ணாக மாறியவர். இயற்கையான பெண் இல்லை. எனவே அதற்கு மேல் இவரை அனுமதிக்க முடியாது என்று போட்டியை நடத்தும் 'டொனால்ட் டிரம்ப்' அமைப்புக் கூறிவிட்டது.

இதுகுறித்து அழகி ஜென்னா கூறியதாவது:-

எனது கடவுச்சீட்டில் பெண் என்றுதானே போட்டிருக்கிறார்கள். அப்படியிருக்கையில் எப்படி நான் ஆணாக முடியும். என்னைத் தொடர்ந்து போட்டியில் அனுமதிக்க முடியுமா, முடியாதா என்பதை டிரம்ப் தெளிவுபடுத்த வேண்டும். இதில் நான்வெற்றி பெற்றால் 'மிஸ் யுனிவர்ஸ்' போட்டியில் பங்கேற்க முடியும்- என்றார். ஜென்னாவின் சட்டத்தரணி குளோரியா அல்லர்ட் ''ஜென்னா ஓர் அழகான பெண். அவரை போட்டியில் பங்கேற்க அனுமதிப்பதோடு, இயற்கையாகவே பெண்ணாகப் பிறந்தவர்கள் மட்டுமே போட்டியில் பங்கேற்க முடியும் என்ற விதி முறையையும் கூட டிரம்ப் நீக்க வேண்டும்'' -என்றார்.



## சீன வங்கிகளின் ஏகபோகம் தகர்க்கப்படும்

பீஜிங்,ஏப்6

சீனாவில் 4 முக்கிய வங்கிகளின் ஏகபோகம் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று சீனப் பிரதமர் வென் ஜியாபோ அழைப்பு விடுத்துள்ளார்.

அதன்மூலம் உலகப் பொருளாதாரம் மந்தமடையும் நிலையில், சிறிய தனியார் நிறுவனங்களுக்கு கடன் வாங்கக் கூடிய வாய்ப்புக் கிடைக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

இந்த வங்கிகள் மிகவும் சுலபமாக இலாபமடைகின்றன என்று 'வென்' கூறியதாக அரச ஊடகம் செய்தி வெளியிட் டுள்ளது.

இந்த வங்கிகள் முக்கியமாக அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கே கடன் வழங்கும்.

தனியார் தொழில் புரிவோர் அதிக வட்டியில் அதிகாரபூர்வமற்ற கடன் வழங்குநர்களிடம் கடன் வாங்க வலியுறுத்தப்படுவார்கள்.

90 தனியார் வணிகர்கள் தமது கடன்களைக் கட்ட முடியாமல் ஓடுவிட்டதால், வென்சுவா நகர் பெரும் கடன் நெருக்கடியைக் கடந்த வருடத்தில் எதிர்கொண்டது என்றும் வென் கூறியதாக அரச ஊடகம் மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

## சோமாலியாவில் தற்கொலைத் தாக்கு

மயிரிழையில் உயிர் தப்பினார் அந்நாட்டுப் பிரதமர்

சோமாலியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்றகுண்டு வெடிப்பில் அந்த நாட்டு தேசிய ஒலிம்பிக் குழுவின் தலைவர் ஏடன் யப்ரோவ் வீஸ் மற்றும் கால் பந்தாட்டச் சம்மேளனத் தலைவர் சயீட் மொஹமட் நூர் உட்படப் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

சோமாலியத் தலைநகர் மொகாதிஸுவில் தொலைக் காட்சியொன்றின் முதலாவது ஆண்டு நிறைவுவிழா வைபவத்தின்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அந்த நாட்டுப் பிரதமர், அப்டிவேலி மொஹமட் அலியும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார். எனினும் அவருக்குப் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குண்டுத் தாக்குதலுக்கு அல் சஹாப் என்னும் குழுவினர் உரிமை கோரியுள்ளனர். இசைக் குழுவொன்று இசைத்த பாடலுக்கு ரசிகர்கள் கரகோஷம் செய்துகொண்டிருந்தவேளை இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் சோமாலியத் தொலைக் காட்சி ஊடகவியலாளர்கள் மூவர் உட்படப் பலர் காயமடைந்துள்ளனர்.




பிரேசிலில், அரசின் தொழிற்கொள்கையைக் கண்டித்து தொழிலாளர்கள் மற்றும் ஒன்றியத் தலைவர்கள் சாவோபாலோ நகரில் கண்டனப் பேரணி நடத்தினர். இதில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

## அமெரிக்கப் படைகள் ஆஸியில் தரையிறக்கம்

ஆஸ்திரேலியாவின் வடபிராந்திய நகரான டார்வினில் அமெரிக்காவின் மரைன் படையினர் 200 பேர் நேற்றுமுன்தினம் தரையிறங்கினர்.

ஆஸ்திரேலியாவுக்கு கடந்த வருடம் நவம்பர் மாதம் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா சென்றிருந்தபோது, அவருக்கும் ஆஸ்திரேலியப் பிரதமர் ஜூலியா கிலார்ட்டுக்கும் இடையில் கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கையின்படி அமெ ரிக்கப் படையினர் ஆஸ் திரேலியாவுக்குச் சென்றுள்ளனர்.

இந்த உடன்படிக்கையின்படி 2016-1917 ஆம் ஆண்டளவில் சுமார் 2500 அமெரிக்கப் படையினர் ஆஸ்திரேலியாவில் தங்கியிருப்பர். தற்போது ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ள படையினர் 6 மாதகாலம் சுழற்சி அடிப்படையில் அங்கு பணியாற்றுவர்.

ஆஸ்திரேலியப் பிரதமர் ஜூலியா கிலார்ட், பாதுகாப்பு அமைச்சர் ஸ்டீபன் ஸ்மித், வடபிராந்திய முதலமைச்சர் போல் ஹெண்டர்சன் ஆகியோர் அமெரிக்கப் படையினரை வரவேற்று கூட்டறிக்கையொன்றை விடுத்துள்ளனர்.

அதில் 'அமெரிக்காவுடனான 60 வருடகால உறவில் இது புதிய அத்தியாயம்' என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவுக்கு அமெரிக்கப் படையினர் வருவதை சீனா ஏற்கனவே விமர்சித்திருந்தது. தற்போது பனிப்போர் கால மனோபாவத்துக்கு ஆதாரமாக இது உள்ளது எனச் சீனா தெரிவித்துள்ளது.

# செப்.11 தாக்குதலின் பின்னணியில் இஸ்ரேல்

## அமெரிக்க நிபுணர் அதிர்ச்சித் தகவல்.

''நியூயோர்க் உலக வர்த்தக மையம் மீது தொடுக்கப்பட்ட செப்ரெம்பர், 11 தாக்குதலின் பின்னணியில் இருந்தது இஸ்ரேல்தான். அமெரிக்க மக்களுக்கு இது ஐயமின்றித் தெரியவரும் போது, இஸ்ரேல் இருந்த இடம் தெரியாமல் நிர்மூலமாகிவிடும்'' என்று அமெரிக்கக் கடற்படைத் துறை நிபுணரும் பிரபல எழுத்தாளருமான ஸப்ரொஸ்கி உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் தேசிய மற்றும் சர்வதேச பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான நிபுணத்துவம் பெற்ற வளவாளரும் எழுத்தாளருமான அலன் ஸப்ரொஸ்கி மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த இரு வாரங்களாக கப்பற்படைத் தலைமையகத்தில் உள்ள இராணுவக் கல்லூரியுடன் தொடர்ச்சியான நீண்ட கலந்துரையாடல்களில்ஈடுபட்டுவந்தேன். அதன் விளைவாக, செப்ரெம்பர் , 11 தாக்குதல்களின் பின்னணியில் இஸ்ரேலிய 'மொசாட்' இருப்பதை 100 சதவீதம் உறுதிப்படுத்திக் கொண்டேன்.

இதுபற்றிய தேடலில் இறங்கியபோது, தற்போதும் இராணுவப் படையணிகளில் உள்ள எனது நண்பர்கள், ஆரம்பத்தில் சந்தேகம் கொண்டனர். பின்னர் தாக்குதல் நடைபெற்றுள்ள விதம் குறித்து நான் விரிவாக விளக்கியதும், அந்தச் சந்தேகம் மாறி கடுஞ்சீற்றம் கொண்டனர்.

செப்ரெம்பர் 11 தாக்குதலின் பின்னணியில் இஸ்ரேல் தான் இருக்கிறது என்பதை அமெரிக்க மக்கள் ஐயம் திரிபறத் தெரிந்து கொள்ளும் போது, அவர்கள் இஸ்ரேலை இருந்த இடம் தெரியாமலாக்கி விட எள்ளளவும் தயக்கம் காட்டமாட்டார்கள்'' என்று ஸப்ரொஸ்கி அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துள்ளார்.



2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 அமெரிக்காவில் உள்ள உலக வர்த்தக மையமான இரட்டைக் கோபுரங்கள் மீதும், அமெரிக்கப் பாதுகாப்பு மையமான பென்ரகன் மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 3,000 பேர் உயிரிழந்தனர். ஏராளமானோர் படுகாயமடைந்தனர்.

## செர்பியாவின் ஜனாதிபதி இராஜினாமா

செர்பியாவின் ஜனாதிபதி போரிஸ் ராடிக் இராஜினாமா செய்துள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அவரின் பதவிக் காலம் நிறைவடைவதற்கு இன்னும் 10 மாதங்கள் உள்ள நிலையில் ஜனாதிபதி பதவி விலகியுள்ளார். அவரது இராஜினாமாக் கடிதம் உத்தியோகபூர்வமாக சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மே மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவுள்ள நிலையில் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புக்கள் காரணமாக ஜனாதிபதி பதவி விலக நேரிட்டுள்ளது என்று தகவல்கள் குறிப்பிடுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் சீனக் கடற் பகுதியிலிருந்து உடனடியாக வெளியேற வேண்டும்

## இந்தியாவுக்கு சீனா எச்சரிக்கை

பீஜிங், ஏப் 6

தென் சீனக் கடற் பகுதியிலிருந்து இந்தியா உடனடியாக வெளியேற வேண்டும். இல்லையெனில் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று இந்தியாவுக்கு சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.



சீனாவின் தென்கடற் பகுதியில் இந்தியா கச்சா எண்ணெய் எடுத்து வருகிறது. இதற்கு சீனா கடும் ஆட்சேபமும் எதிர்ப்பும் தெரிவித்துள்ளது. சீனாவின் தென் கடற் பகுதியில் கச்சா எண்ணெய் எடுக்க இந்தியாவுக்கு கடந்த ஆண்டு நடந்த ஆசியன் உச்சி மாநாட்டின் போது ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதைத் தொடர்ந்து இந்தியா, எண்ணெய் இயற்கை எரிவாயு விதேஷ் நிறுவனம் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்தநிலையில் நேற்று முன்தினம் கம்போடியாவில் ஆசியன் நாடுகளின் அரசியல் விவகாரம் தொடர்பாக நடைபெற்ற மாநாடு நிறைவுற்ற நிலையில் இது குறித்து தென் சீன தேசிய நிறுவனத் தலைவர் ஷூசிஹூன், கூறியதாவது:-

இந்தியாவுடன் , சீனா எந்த வகையிலும் சர்வதேசக் கடற்பகுதி ஒப்பந்தம் மேற்கொள்ளவில்லை. இங்கு இந்திய எண்ணெய் நிறுவனம் கச்சா எண்ணெய் எடுக்க தார்மீக உரிமை இல்லை. இந்திய எண்ணெய் நிறுவனங்களுக்கு பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் நெருக்கடி ஏற்படும். இந்தப் பகுதியில் 40 சதவீத கச்சா எண்ணெய் எடுப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது. உடனடியாக இந்தியா தென் கடற் பகுதியிலிருந்து வெளியேற வேண்டும். இல்லையெனில் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும். இந்தப் பகுதியில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படுத்த இந்தியாவும், சீனாவும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சீனாவின் தேசநலன்களைக் கருத்தில் கொண்டு இந்தப் பகுதியில் உள்ள தீவுகளை சீன அரசு விட்டுக்கொடுக்காது-என்றார்.

சர்ச்சைக்குரிய தென்கடற் பகுதியில் 52 தீவுகள் உள்ளன. இதில் 7 தீவுகள் சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ளன. வியட்நாம் கட்டுப்பாட்டில் 40 தீவுகளும், பிலிப்பைன்ஸ் கட்டுப்பாட்டில் 9 தீவுகளும், மலேஷியக் கட்டுப்பாட்டில் 5 தீவுகளும் தாய்வான் கட்டுப்பாட்டில் ஒரு தீவும் உள்ளது.

## ஜனாதிபதி வேட்பாளர் தேர்வில் 3 மாநிலங்களில் ரோம்னி வெற்றி



வொஷிங்டன், ஏப் 6

அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் தேர்வில் 3 மாநிலங்களில் ரோம்னி வெற்றி பெற்றுள்ளார். ஒபாமாவை எதிர்த்துப் போட்டியிடும் வேட்பாளராகக் குடியரசுக் கட்சியின் மிட் ரோம்னி உருவெடுத்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் இந்த ஆண்டு இறுதியில் நடக்கிறது. அதில் ஆளும் ஜனநாயகக் கட்சி சார்பில் அதிபர் ஒபாமா மீண்டும் போட்டியிடுகிறார். எதிர்க் கட்சியான குடியரசுக் கட்சியில் யாரை நிறுத்துவது என முடிவு செய்ய மாநில வாரியாக உட்கட்சி தேர்தல் நடக்கிறது. அதில் சுமார் 5 பேர் களத்தில் உள்ளனர். அவர்களில் மிட் ரோம்னி (65) அதிக வாக்குகளுடன் முன்னிலை வகிக்கிறார்.

வொஷிங்டன், மேரிலண்ட், விஸ்கான்ஷின் ஆகிய 3 மாநிலங்களில் இதற்கான தேர்தல் நேற்று முன்தினம் நடந்தது. மூன்றிலும் ரோம்னி அமோக வெற்றி பெற்றார். அவருக்கு இதுவரை 655 வாக்குகள் கிடைத்துள்ளன. அடுத்த இடத்தில் உள்ள சான்டா ரோம் 278 வாக்குகளே பெற முடிந்தது. ஜிங்ரிச் 135, ரான் பால் 51 வாக்குகள் பெற்று மிகவும் பின்தங்கிய நிலையில் ஜனாதிபதி வேட்பாளராகும் வாய்ப்பை இழந்தனர்.

## பொக்லாந்து தீவு விவகாரம் ஆர்ஜென்டினாவில் பேரணி

பிரிட்டிஷ் வசம் உள்ள பொக்லாந்து தீவை மீண்டும் வழங்க வேண்டும் என்று கோஷமிட்டபடி, ஆர்ஜென்டினா தலைநகரான புயுனாஸ் ஏர்ஸில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்தைநோக்கி 2000 பேர் கலந்து கொண்டு பேரணி நடத்தினர்.

பிரிட்டிஷ்காரர் தங்கள் தீவைத் திருடிய கடற்கொள்ளைக்காரர்கள் என்று கலவரத்தில் ஈடுபட்ட ஆஜென்டினாப் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

பொக்லாந்து பிரிட்டிஷ் வசமானதன் முப்பதாவது நினைவு நாளை முன்னிட்டு இந்தப் போராட்டத்தை ஆர்ஜென்டினாவின் கியுபராக்கோ இயக்கத்தினர் நடத்தினர். இந்த நாட்டிலுள்ள கியுபராக்கோ என்ற வன்முறை இயக்கம் அண்மைக் காலமாகப் பிரிட்டனுக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தியுள்ளது. இந்தப் போராட்டம் பொக்லாந்துக்காக ஆர்ஜென்டினா மக்கள் நடத்தும் மூன்றாவது போராட்டமாகும்.

## மீண்டும் உருவாகிறது ஷேக்ஸ்பியரின் கையெழுத்து

வொஷிங்டன், ஏப் 6

புகைப்படத் தொழிநுட்ப ஆராய்ச்சியாளர்கள் நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டு பிரபல இலக்கிய எழுத்தாளர் வில்லியம் ஷேக்ஸ்பியரின் கையெழுத்தை மீண்டும் உருவாக்க முடியும் என்று தெரிவித்துள்ளனர். முதலாம் எலிசபெத் ஆட்சி காலத்தில் வெளியிடப்பட்ட ஷேக்ஸ்பியரின் ஆய்வுக் கட்டுரைகளில் சில வார்த்தைகள் தெளிவாக இல்லை என்பதால் இதனை மீண்டும் உருவாக்கும் பணியில் மிசி சிப்பி பல்கலைக்கழகப் பேராசிரியர் கிரிகோரி ஹேவொர்த் ஈடுபட்டார். இவரது ஆய்வின் மூலம் சிதைவடைந்த பல்வேறு கட்டுரைகளை மீண்டும் உருவாக்கலாம் என்பது தெரியவந்துள்ளது.

ஒளியின் உதவியுடன் 12 பல்வேறு அலைகற்றைகளை பயன்படுத்தி கையெழுத்தை உருவாக்க ஆராய்சியாளர்கள் முயற்சித்து வருகின்றனர்.

## முன்னாள் பிரதமரை கொல்ல கிரேக்கத்தில் சதி முயற்சி

கிரேக்க நாட்டின் முன்னாள் பிரதமர் கோஸ்டாஸ் சிமிட்டிஸ் குண்டு தாக்குதலில் இருந்து அதிஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளார்.

முன்னாள் பிரதமர் கோஸ்டாஸ் சிமிட்டிஸின் அலுவலகம் ஏதென்ஸ் நகரில் உள்ளது. அந்த அலுவலகத்தில் வைத்து அவரைக் கொலை செய்யும் நோக்கில் நேற்றுமுன்தினம் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அந்தத் தாக்குதலில் இருந்தே அவர் உயிர் தப்பினார்.

கிரேக்க நாட்டில் அடுத்த மாதம் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

## பிரான்ஸ் படுகொலையுடன் தொடர்புடைய பலர் கைது

பிரான்ஸில் அண்மையில் இடம் பெற்ற படுகொலைகளுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பிரான்ஸ் பொலிஸார் நடத்திய சுற்றிவளைப்பின்போது இஸ்லாமியக் கிளர்ச்சியாளர்களே பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

முஹமட் மேரா என்ற ஆயுததாரி ஒருவரால் நடத்தப்பட்ட தாக்குதல்களில் மாணவர்கள், இராணுவத்தினர் உள்ளிட்டவர்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

பிரான்ஸில் பெரும் பரபரப்பை இந்தத் தாக்குதல் ஏற்படுத்தியிருந்தது.

இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




காரைநகர் அரசடிக்காடு அருள்மிகு
ஸ்ரீ கதிர்காமசுவாமி கோயில் புனருத்தாரண
சம்புரோசஷண பிரதிஷ்டா
மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

காரைநகர் மத்தி
அரசடிக்காடென்னும் பதியில்
கோயில்கொண்டு
உபயகதிர்காமமென
அடியவர்களால் வழிபடப்பெறும்
ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிக்கும்
பரிவாரமூர்த்திகட்கும் கீழ்க்கண்ட
தினங்களில் பிரதிஷ்டா
மஹாகும்பாபிஷேகம் நடைபெறும்

24.05.2012 - வியாழன் - விநாயகபூஜை, ஹோமம்
25.05.2012 - வெள்ளி - ஆலய மணவாளக்கோலதினம் விசேட பூஜை வழிபாடு
26.05.2012 - சனி - நவக்கிரக ஹோமம்
27.05.2012 - ஞாயிறு - அக்னி சங்க்ரகணம்
28.05.2012 - திங்கள் - மாலை கிராமசாந்தி வாஸ்து சாந்தி, மிருத்சங்கிரகணம்
29.05.2012 - செவ்வாய் - மாலை - கடஸ்தாபனம் யாகபூஜாரம்பம், தீபாராதனை வேத ஸ்தோத்திரம் திருமுறை ஓதல்
30.05.2012 - புதன் - காலை/மாலை யாகபூஜை மாலை - திபஸ்தாபனம், ஸ்தூபிஸ்தாபன வேதபாராயணம் திருமுறை ஓதல்
31.05.2012 - வியாழன் - காலை/மாலை யாகபூஜை, விசேட திரவ்ய ஹோமம், தீபாராதனை வேதஸ்த்திரு, திருமுறைபாராயணம்
01.06.2012 - வெள்ளி காலயாக பூஜை பூர்ணகுதி தூபி அபிஷேகம் கும்ப வீதி வலம்வருதல், காலை மணி 8.58 முதல் 11.06 மணிக்குள்வரும் கடகலக்ன சுபமுகூர்த்தத்தில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறும். மாலை சுவாமி வீதிவலம் வருகை. பிரசாதம் வழங்கல்.

(1) ப்ரம்ஸ்ரீ ஸ்ரீநிவாச மேருகிரீஸ்வரக்குருக்கள், ஆலய பராமரிப்பு தத்துவ அதிபரும், பிரதமகுருக்களும் (0027126502065)
(2) பிரம்மஸ்ரீ நா.ஞானசம்பந்தகுருக்கள்கள் திருப்பணிச்சபை தலைவர் (கும்பாபிஷேகம் ஒருங்கிணைப்பாளர்கள்) 021 3218803
(3) திரு சு. பாக்கியராஜா (குபேரன் களஞ்சியம், யாழ்ப்பாணம்) பொருளாளர் (077 3302069)

(16436)(6-9-8)





சுன்னாகம் கந்தரோடை ஆலடிப்பதி
அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய
புனராவர்தன பஞ்சகுண்டபக்ஷ
மகாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

"ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றோம்"

*விநாயகப்பெருமான் அடியார்களே:*

இந்துமா சமுத்திரத்தின் முத்தென விளங்கும் இலங்கைத் தீவின் வடபாலுள்ள யாழ்ப்பாணத்தில் சகல வளங்களும் நிறைந்த சுன்னாகம் கந்தரோடை ஆலடிப்பதியில் அடியார்களின் விக்கினங்களைத் தீர்த்து அருளாட்சி புரிகின்ற ஸ்ரீவீரகத்தி விநாயகப்பெருமானுக்கும் பஞ்சமுக விநாயகர், மகாலட்சுமி, பாலசுப்பிரமணியர் சண்டேஸ்வரர் ஆகியநூதன மூர்த்திகளுக்கும் மூசிகம், பலிபீடம், வைரவர் ஆகிய மூர்த்திகளுக்கும் நிகழும் மங்களகரமான கரவருடம் பங்குனி மாதம் 24 ஆம் நாள் (06.04.2012) வெள்ளிக்கிழமை அத்த நட்சத்திரமும் பூரணைத்திதியும் அமிர்தசித்த யோகமும் கூடிய காலை 9 மணி தொடக்கம் 10.15 மணிவரையுயள்ள இடபலக்கன சுபமுகூர்த்த வேளையில் மகாகும்பாபிஷேக பெரும்சாந்தி நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

காலை 6 மணி விநாயகவழிபாடு, யாகபூசைகள், ஓமம், மகாபூர்ணாகுதி, அந்தர் பலி, பகிர்பலிகள், விசேடதீபாராதனை, வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம், யாத்திராதானம், சுந்தர விமான தூபிகள் அபிஷேகம், பிரதான கும்பவீதி பிரதக்ஷணம், புஷ்பாஞ்சலி, காலை 9 மணிதொடக்கம் 10.15 மணிக்குள் வரும் இடபலக்கினத்தில் மகாகும்பாபிஷேகம், தசதர்சனம், ஸ்திராகுதி, எஜமான் அபிஷேகம், ஆசாரிய சம்பாவனை, ஆசீர்வாதம், மகாபிஷேகம், விசேடபூசைகள், பிரசாதம் வழங்கல், மாலை 6 மணி விநாயகப்பெருமான் திருவூஞ்சல், திருவீதியுலா வருதல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறும்.

பிரதிஷ்டா பிதமமகுரு சிவஸ்ரீ ச. ஸ்ரீசண்முகானந்தக்குருக்கள் மயிலணி

தொடர்ந்து 14 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று 15ஆம் நாள் சங்காபிஷேகமும் நடைபெறும். அடியவர்கள் வருகை தந்து எம்பெருமானின் திருவருளைப் பெறற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

ஆலடி கந்தரோடை,
சுன்னாகம்.

(சி/364) (45-9-6)

திருப்பணிச் சபையினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 ஜி ஒதுக்கீடு ரத்து: மறுபரிசீலனை இல்லை

## உச்ச நீதிமன்றம் திட்டவட்டம்

ராசாவின் மனு மீது தீர்ப்பளித்த நீதிபதிகள் சிறப்பு விசாரணை நீதிமன் றத்தில் நடந்து வரும் வழக்கு விசாரணை, உச்சநீதிமன்றத்தில் பெப்ரவரி மாதத்தின் தீர்ப்பால் பாதிக்கப்படாது என்று நீதிமன்றம் தெளிவாக்கியுள்ளதை நீதிபதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

டில்லி,ஏப்.6

இரண்டாம் தலைமுறை அலைக்கற்றை (2 ஜி) ஒதுக்கீடுகளை ரத்து செய்து இந்திய உச்சநீதிமன்றம் பிறப்பித்திருந்த தீர்ப்பை எதிர்த்து தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுக்களை உச்ச நீதிமன்றம் புதன் கிழமை நிராகரித்தது.

உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகள் ஜி எஸ்.சிங்வி மற்றும் கே.எஸ்.ராதாகிருஷ்ணன் ஆகியோரைக் கொண்ட அமர்வே இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

அலைக்கற்றை உரிமங்களை ஏலத்துக்கு விடாமல், முதலில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களுக்கு ஒதுக்கியது தவறு, இதனால் அரசுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டிருப்பதாகக் கூறி, கடந்த பெப்ரவரியில், இந்திய உச்ச நீதிமன்றம் இவ்வாறு செய்யப்பட்ட அனைத்து ஒதுக்கீடுகளையும் ரத்துசெய்தது.

இந்த வழக்கின் அடிப்படை விசாரணை சிறப்பு நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கும் நிலையில், தனது கருத்தைக் கேட்காமல், இந்தத் தீர்ப்பு தரப்பட்டது, கீழ் நீதிமன்றத்தில் நடக்கும் விசாரணையில் தனது வாய்ப்புகளைப் பாதிக்கும் என்று முன்னாள் தொலைத்தொடர்பு அமைச்சர் ஆ.ராசா தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இந்தத் தீர்ப்பால் உரிமங்களை இழந்த நிறுவனங்களும், மறு பரிசீலனை மனுவை செய்திருந்தன. மத்திய அரசின் தொலைத் தொடர்புத்துறையும் மறு பரிசீலனைக்குக் கோரியிருந்தது.

இந்த மனுக்களை விசாரித்த நீதிபதிகள், மத்திய அரசின் இரு மனுக்களைத் தவிர ஏனைய அனைத்து மனுக்களையும் நிராகரிப்புச் செய்திருக்கின்றனர். முந்தைய தீர்ப்புகளில் எந்த குறைபாடுகளும் இருப்பதாக தாம் கருதவில்லை என்பதால் அந்தத் தீர்ப்பை மறு பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று கூறி மேல்முறையீட்டு மனுக்கள் நிராகரிக்கப்படுவதாகத் தீர்ப்பளித்துள்ளனர்.

மேலும், மத்திய அரசின் மனுக்கள் மீதான விசாரணை எதிர்வரும் 13 ஆம் திகதி திறந்த நீதிமன்றத்தில் நடக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ராசாவின் மனு மீது தீர்ப்பளித்த நீதிபதிகள், சிறப்பு விசாரணை நீதிமன் றத்தில் நடந்துவரும் வழக்கு விசாரணை, உச்சநீதிமன்றத்தில் பெப்ரவரி மாதத்தின் தீர்ப்பால் பாதிக்கப்படாது என்று நீதிமன்றம் தெளிவாக்கியுள்ளதை நீதிபதிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அரச தரப்பில், ஒரு தனிநபர் அரசு ஊழியர் அல்லது அமைச்சர் மீது விசாரணை நடத்த வேண்டுமென்று கோரி மனுத்தாக்கல் செய்ய உரிமை இல்லை என்று போட்டி ருந்த மனு மற்றும், ரத்து செய்யப்பட்ட உரிமங்களை மீண்டும் வழங்க உச்சநீதி மன்றம் விதித்த காலக்கெடு போதாது என்று கூறி சமர்பித்த இரு மனுக்களும் எதிர்வரும் 13 ஆம் திகதி விசாணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

## விவாகரத்துகளில் முதலிடத்தில் தமிழகம்

டில்லி, ஏப்.6

இந்தியாவில் 2010 ஆம் ஆண்டில் கணவன் அல்லது மனைவியை இழந்தோர், விவாகரத்தானவர்கள் மற்றும் பிரிந்து வாழ்பவர்கள் பட்டியலில் 8.8 சதவீதத் துடன் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. இந்த பட்டியலில் டில்லி 4.1 சதவீதத்துடன் கடைசியில் உள்ளது.

இந்தப் பட்டியலில் தமிழகத்தைத் தொடர்ந்து 8.2 சதவீதத்துடன் ஆந்திரா, கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்களும், 7.2 சதவீதத்துடன் ஒரிசாவும், 7.1 சதவீதத்துடன் இமாச்சல பிரதேசமும், 7 சதவீதத்துடன் மகாராஷ்டிராவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

## திருப்பதியில்சிறப்பு தரிசன சேவை ரத்து

முக்கிய பிரமுகர்கள் மற்றும் பிரமுகர்களுக்கான சிறப்புத் தரிசன சேவை ரத்து செய்யப்பட்டுள்ளதாக திருப்பதி தேவஸ்தானம் அறிவித்துள்ளது.

முக்கியஸ்தர்கள் தரிசனத்துக்காக காலை மற்றும் மாலையில் நேரம் ஒதுக்கப்பட்டிருந்த போதும் ஏனைய நேரங்களிலும் முக்கியஸ்தர்களின் தரிசனத்துக்கு அனுமதி வழங்குவதால் பல லட்சம் பக்தர்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகி வருவதாக எழுந்த முறைப்பாட்டை அடுத்து தேவஸ்தான குழு இந்தமுடிவை மேற்கொண்டுள்ளது.

இருப்பினும் ஜனாதி பதி, பிரதமர், முதலமைச் சர்கள் உள்ளிட்டோருக்கு மட்டும் இந்தகட்டுப்பாடுகளில்இருந்து விலக்குஅளிப்பதாகவும் திருப்பதி தேவஸ்தானம் தெரிவித்துள்ளது. (வ)

## விஜயகாந்துக்கு தடை நீங்கியது



சட்டப்பேரவை நடவடிக்கைகளில் பங்கேற்க எதிர்க்கட்சித் தலைவர் விஜயகாந்துக்கு விதிக்கப்பட்டிருந்த 10 நாள்கள் தடை நீங்கியது. இதையடுத்து எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறும் சட்டப் பேரவைக் கூட்டத்தில் விஜயகாந்த் பங்கேற் கலாம் என்று தெரிகிறது.

கடந்த பெப்ரவரி முதலாம் திகதி ஆளுநர் உரை மீதான விவாதத்தில் விஜயகாந்திற்கும் முதல்வர் ஜெயலலிதாவுக்கும் நேரடி வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது அவைவிதிகளுக்கு முரணாக நடந்து கொண்டதாக அவர் மீது அதிமுக உறுப்பினர்கள் முறைப்பாடு தெரிவித்தனர்.

இதுதொடர்பாக உரிமை மீறல் குழு விசாரித்து அவரை 10 நாள்கள் இடைக்கால பணிநீக்கம் செய்தது. அதனைத் தொடர்ந்து எதிர்கட்சித் தலைவர் மற்றும் பேரவை உறுப்பினருக்கான சலுகைகள் அனைத்தும் தாற்காலிகமாகப் பறிக்கப்பட்டன.

எதிர்க்கட்சிக் தலைவருக்கான காரையும் விஜயகாந்த் தலைமைச் செயலகத்தில் ஒப்படைத்தார்.

இதன்காரணமாக தற்போது சட்டப் பேரவையில் நடைபெற்று வரும் பட்ஜெட் விவாதத்தில் விஜயகாந்தால் பங்கேற்க முடியவில்லை. அவருக்கான தடை நேற்றுமுன்தினம் புதன்கிழமையுடன் முடிவடைந்தது.

எனவே எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் நடைபெறும் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் அவர் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

## கவிழ்ந்தது பஸ்: 61 பேர் காயம்


திண்டுக்கல்,ஏப்.6

சிறுமலையில் தனியார் பஸ் கவிழ்ந்து, 61 பேர் காயம் அடைந்தனர். அவர்களில் மூவர் ஆபத்தான நிலையில் உள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த சிறுமலை பகுதி கடல் மட்டத்திலி ருந்து, 4,300 அடி உயரத்தில் உள்ளது. சிறுமலையில் இருந்து, நேற்றுமுன்தினம் முற்பகல் 10.30 மணிக்கு, எஸ்.வி.ஆர். என்ற பெயர் கொண்ட தனியார் பஸ், திண்டுக்கல் புறப்பட்டது. கொண்டை ஊசி வளைவில் 'பிரேக்' பிரயோகித்ததால், பஸ் நிலைதடுமாறியது. மூன்று மின் கம்பங்களில் மோதி, வீதியில் கவிழ்ந்தது. மின்சாரம் இல்லாததால், பெரிய விபத்துஏற்படவில்லை படுகாயம் அடைந்த மூன்று பேர், மதுரை அரச மருத்துவ மனையில் சேர்க் கப்பட்டனர்.

இது குறித்து பயணிகள் தெரிவிக்கையில் பஸ்ஸில் அதிக சுமை பிரேக் பிடிக்காமையே விபத்துக்குக் காரணம் என்றனர். (வ)

## 2012 இற்கான பத்மவிருதுகள் பிரதீபா பாட்டீல் வழங்கினார்



டில்லி,ஏப்.6

தமிழகத்தைச் சேர்ந்த 7 பேர் உட்பட 109 பேருக்கு பத்ம விருதுகளை ஜனாதிபதி பிரதிபா பாட்டீல் வழங்கினார். கலை, இலக்கியம், விளையாட்டு, மருத்துவம் உட்பட பல்வேறு துறைகளில் சாதனைகள் புரிந்தவர்களுக்கு ஆண்டு தோறும் இந்திய குடியரசு தினத்தை முன்னிட்டு பத்ம விருதுகள் வழங்கப்படுகின்றன.

இந்த ஆண்டு ஜனவரி 25 ஆம் திகதி தமிழகத்தைச் சேர்ந்த தொழிலதிபர் சுப்பையா முருகப்பா வெள்ளையன், வாய்ப்பாட்டு கலைஞர் டி.வி.கோபாலகிருஷ்ணன், வயலின் இசைக்கலைஞர் எம்.எஸ்.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் பத்மபூஷண் விருதுக்கும் கூத்துப்பட்டறை நாடக கலைஞர் நடேசன் முத்துசாமி, சமூக சேவகர் பி.கே. கோபால், நீரிழிவு நோய் மருத்துவர் விஸ்வநாதன் மோகன், மூப்பு நோய் மருத்துவர் வி.எஸ். நடராஜன் ஆகியோர் பத்மஸ்ரீ விருதுக்கும் தெரிவுசெய்யப்பட்டனர். புதுவையைச் சேர்ந்த தோட்டக்கலை நிபுணர் வெங்கடபதி ரெட்டியாருக்கும் பத்மஸ்ரீவிருது அறிவிக்கப்பட்டது. மேலும் இந்தி நடிகர் தர்மேந்திரா, நடிகை ஷ்பனா ஆஸ்மி, லஞ்ச ஒழிப்பு கமிஷன் முன்னாள் ஆணையர் விட்டல் ஆகியோர் பத்ம பூஷண் விருதுக்கு தெரிவாகினர். மொத்தம் 109 பேருக்குத் பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டன.

விருதுகள் வழங்கும் விழா ஜனாதிபதி மாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கு ஜனாதிபதி பிரதிபா பாட்டீல் விருதுகளை வழங்கிக் கௌரவித்தார். (வ)

## கடத்தப்பட்டோரை மீட்க நக்ஸலைட்டுகள் விடுதலை

### ஒரிசா முதல்வர் அறிவிப்பு

சிறையில் உள்ள நக்சலைட்டுகள் சிலரை விடு தலை செய்ய வேண்டும் என்று தீவிரவாதிகள் கோரினர்.


புவனேஸ்வர், ஏப்.6

ஒரிசா மாநில சட்ட மன்ற உறுப்பினரை மீட்க நக்சலைட் தீவிரவாதிகள் 27 பேரை விடுதலை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதாக ஒரிசா முதல்வர் நவீன் பட்நாயக் தெரிவித்தார்.

ஒரிசாவில் இத்தாலி சுற்றுலா பயணிகள் 2 பேரும், ஆளும் பிஜு ஜனதா தள சட்டசபை உறுப்பினர் ஒருவரும் கடந்த மாதம் நக்சலைட் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டனர். இவர்களில் இத்தாலி சுற்றுலா பயணி ஒருவரை மட்டும் நக்சலைட்டுகள் விடுவித்தனர். மற்றொரு இத்தாலியரான பாலோ பாசிஸ்கோவை விடுவிக்க நக்சலைட் பிரதி நிதிகளுடன் அரசு பேச்சு நடத்தியது. அப்போது, சிறை யில் உள்ள நக்சலைட்டுகள் சிலரை விடுதலை செய்ய வேண்டும் என்று தீவிரவாதிகள் கோரினர்.

பேரவை உறுப்பினர்ஜினா ஹிகாகாவை கடத் திய சாசி முலியா ஆதிவாசி சங்கம் என்ற நக்சலைட் அமைப்பு பேச்சு நடத்த மறுத்துவிட்டது. ஆனால், சிறையில் உள்ள தங்கள் இயக்க தீவிரவாதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று அரசுக்கு நிபந்தனை விதித்தது. இந்த நிலையில், ஒரிசா சட்டசபையில் முதல்வர் நவீன் பட்நாயக் நேற்றுமுன் தினம் மாலை பேசுகையில், இத்தாலி சுற்றுலா பயணியை மீட்பதற்காக நக்சலைட்கள் 4 பேரையும், எம்.எல்.ஏ ஹிகாகாவை மீட்பதற்காக 23 நக்சலைட்டுகளையும் விடுதலை செய்ய அரசு முடிவு செய்துள்ளதாகத்தெரிவித்தார்.

## 'டைம்' இதழ் கணக்கெடுப்பு மோடி மோசடி; காங். குற்றச்சாட்டு




உலகின் சக்தி வாய்ந்த 100 மனிதர்களைத் தெரிவு செய்யும் டைம் இதழின் தற்போதைய கணக்கெடுப்பில் குஜராத் முதல்வர் நரேந்திர மோடி மோசடி செய்துள்ளார் என்று காங்கிரஸ் தலைவர் ஒருவர் குற்றம் சாட்டியுள்ளார்.

குஜராத் மாநிலத்தின் காங்கிரஸ் கட்சித் தலைவராக அர்ஜுன் மோத் வாடியா உள்ளார். இவர் ஆமதாபாத்தில் ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில் மோடியின் மோசடி பற்றி குறிப்பிட்டார்.

குஜராத் அரசின் பல்வேறு இணையத் தளங்களில் இருந்து பொதுமக்களுக்கு நூற்றுக்கணக்கான மின்னஞ்சல்களை நரேந்திர மோடி அனுப்பியுள்ளார். அதில் டைம் இதழின் ஒன்லைன் கணக்கெடுப்புக்கு தனக்காக வாக்களிக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார் எனத் தெரிவித்தார்.

உலகில் எந்த தலைவரும் மோடியைப் போன்று செய்ததில்லை. இதெல்லாம் டைம் இதழின் பட்டியலில் வரவேண்டும் என்ற சாதாரண காரணத்துக்காகத் தான் என்று மோத் வாடியா குற்றம்சாட்டினார்.

டைம் இதழின் ஒன்லைன் கணக் கெடுப்பில் மோடிக்கு தற்போது 96, 741 வாக்குகள் கிடைத்துள்ளன. இந்த பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

Reddit.com பொது மேலாளர் எரிக் மார்ட்டின் 123,840 வாக்குகளுடன் முதலிடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## புதிய இராணுவத் தளபதிக்கு எதிராக மனுத் தாக்கல்

டில்லி,ஏப்.6

இந்திய இராணுவத்தின் புதிய தலைமைத் தளபதி பிக்ரம் சிங்கின் நியமனத்துக்குத் தடை விதிக்கக் கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

தற்போதைய இராணுவத் தலைமைத் தளபதி வி.கே.சிங்கின் பதவிக் காலம் மே மாதத்துடன் முடிவடைகிறது. இதைத் தொடர்ந்து கிழக்குப் படைப்பிரிவின் துணைத் தளபதி பிக்ரம்சிங் புதிய தலைமைத் தளபதியாக நியமிக்கப்படுவார் என்று மத்திய அரசு அறிவித்திருந்தது.

இந்நிலையில் பிக்ரம் சிங்கை புதிய தலைமைத் தளபதியாக நியமிக்கக் கூடாது என்று கோரி முன்னாள் கடற்படைத் தளபதி லட்சுமிநாராயண் ராம்தாஸ் தலைமையிலான ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் குழு உச்சநீதிமன்றத்தில் பொதுநல வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த அதிகாரிகள் குழு தாக்கல் செய்த மனுவில்,-

அரசியல் செல்வாக்கினால் பிக்ரம் சிங்குக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாகவும் காஷ்மீரில் 2001 ஆம் ஆண்டு போலி என்கவுண்டர் நடத்திய தில் பிக்ரம்சிங்குக்குத் தொடர்பு உள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயா... மாயா.... எல்லாம் Maya 2



த.சிவநேசன் (DAE)
(3D Animation & Visual Effect)



மாயா" என அழைக்கப்படுகின்ற இந்த மென்பொருளினது முழுப்பெயர் Autodesk Maya என்பதாகும். இதன் ஆரம்பத்திற்கு வித்திட்டவர்கள் Alias System Corporation நிறுவனமாகும். இருப்பினும் அதனை வாங்கி விருத்தி செய்து அதன் உரிமைக்காரர்களாக விளங்குபவர்கள் Autodesk Inc. இந்த மென்பொருளானது 1998ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது.

"மாயா"வில் உள்ள மிக முக்கியமான இரு அம்சங்கள் 3D digital, Visual effects. சுருக்கமாக கூறின் "மாயா" என்பது ஒரு 3D Animation, 3D modelling application ஆகும்.

Autodesk நிறுவனமானது தங்களுடைய சகலமென்பொருள்களையும் ஒன்றிணைத்து Autodesk Creation Suites ஒன்றினை உருவாக்கியுள்ளது. அதுதான் "Autodesk Maya Entertainment Creation suite premium 2012". இது ஒரு all-in-one animation pipeline ஆக உருவாக்கப்பட்டுள்ளது. இது Maya, 3DMax என இரண்டு Flavorகளில் வந்துள்ளது. Maya Entertainment creation suite ஆனது சகல விதமான வசதிகளையும் உள்ளடக்கி 3D production pipeline ஆக காணப்படுகின்றது. இது ஒவ்வொருவருடமும் பல புதிய தொழில்நுட்பம் மூலம் விரிவுபடுத்தப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த Maya software ஆனது சர்வதேச ரீதியாக பல துறைகளின் வளர்ச்சிக்கு பெரும் பங்கினை அளித்த வண்ணம் அமையப்பெற்றுக் காணப்படுகின்றது. அந்த வகையில்

1. வைத்தியத்துறையானது (medical industry) உடல்கூறுகள் (organs) பற்றி தெளிவாக விளக்குவதற்கு மாதிரிகளை உருவாக்குவதற்கு இந்த மென்பொருள் பயன்படுத்துகின்றது.

2. அனைத்து சிறுவர்களாலும் விரும்பப்படுகின்ற விளையாட்டுகளில் ஒன்றாக விளங்குவது Video Games. இதனை சிறுவர்கள் மட்டுமன்றி பெரியவர்கள் கூட விரும்புகின்றனர். அந்த அளவிற்கு யாவரையும் கவர்கின்ற இந்த Video gamesன் உருவாக்கத்திற்கும் இந்த மென்பொருள் பயன்படுத்தப்படுகின்றது.

3. Sceince sectors இராசயன சேர்க்கைகள் (Chemical Compounds) பற்றி தெள்வாக விளக்குவதறகு models களை உருவாக்குவதற்கு பயன்படுத்துகின்றனர்.

4. கட்டடக்கலை துறையானது (Archicture Industry) கட்டடம், நிலத்தோற்றம் போன்றவற்றின் மாதிரிகளை உருவாக்குவதற்குப் பயன்படுத்துகின்றது.

5. வாகனங்களின் வடிவமைப்பிற்கும் முன்னோடியாகவும் இந்த மென்பொருள் பயன்படுத்தப்படுகின்றது.

இவை யாவற்றிற்கும் மேலாக நாம் விரும்பி பார்க்கின்ற ரசிக்கின்ற சர்வதேச ரீதியாக மாபெரும் துறையாக விளங்கும் திரைப்பட உலகில் இந்த மென்பொருளானது அதி உச்சகட்ட பங்கினை வகிக்கின்றது. கிராமத்து மேடைகளில் அரங்கேறிய உலகக் கலைகள் சினிமா வடிவிலும் ஏனைய கட்புல ஊடக வழியிலும் அனேகமான உலகத்தின் கண்களையும் சிந்தனைகளையும் அடைந்திருக்கின்றது என்றால் அந்த மாற்றத்தை விரும்பியே ஏற்க வேண்டியவர்களாகவும் அந்த மாற்றங்களிற்கு ஈடுகொடுக்க வேண்டியவர்களாகவும் உள்ளோம். அத்தகைய மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும்





வித்தாக இந்த Autodesk Maya மென்பொருள் வடிவமைக்கப்பட்டுள்ளமை அதற்கேயுரிய தனித்துவமாகும்.

இன்றைய உலகத்திரைப்படத்துறையை பொறுத்தவரையில் அதன் வளர்ச்சிக்கும் அது ஒரு மாபெரும் துறையாக அதாவது கலை இலக்கிய ரீதியில் விஸ்வரூபம் எடுப்பதற்கும் இந்த "மாயா" மென்பொருள் பெரும் பங்களிப்பினை வழங்குவதோடு திரைப்பட உலகமானது(Film Industry) கடைசிக்கட்ட தொழில்நுட்ப பரிணாமத்தினை பயன்படுத்தி high quality productஐப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாகவும் அமைந்துள்ளது.

இன்றைய சர்வதேச பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் திரைப்படதுறையானது அதிகளவு வருமானத்தை ஈட்டித்தரும் துறையாக மட்டுமன்றி பல்வேறுபட்ட திறமைகளையுடைய மக்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்கக்கூடிய - அளித்துக்கொண்டிருக்கின்ற துறையாகவும் விளங்குகின்றது. இவ்வாறு திரைப்பட உலகமானது வளர்ச்சி காண இந்த "மாயா" எனும் மென் பொருளும் ஒரு காரணமாக அமைந்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சாதரண பாமர மக்களைக் கூட இலகுவாக சென்றடையும் துறையாக திரைப்படங்கள் விளங்குவதால் தகவல் பரிமாற்றத்தின் சிறந்த ஊடகமாக திரைப்படத்துறை விளங்குகின்றது. இன்றைய சினிமா உலகினைப் பொறுத்த வரையில் அதா வது சகல மொழிப்படங்களும் (Hollywood, Bollywood & etc) தமது கற்பனைகளுக்கு உயிரோட்டத்தினையும் தத்துரூபமான காட்சிகளை வடிவமைப்பதற்கும் இந்த "மாயா" வினைப் பயன்படுத்துகின்றனர்.

(அடுத்த வாரம் காத்திருங்கள்)



# செலவில்லாமல் வெள்ளை மாளிகையை சுற்றிக் காட்டும் கூகுள்!

அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகையை இருந்த இடத்தில் இருந்தே பார்க்க கூகுள் புதிய ஏற்பாடு செய்துள்ளது. அமெரிக்காவில் உள்ள வெள்ளை மாளிகையை பார்க்க வேண்டும்என்றகனவுஎல்லோரிடமும்இருக்கும்.

இது போன்ற ஆசைகள் நிறைவேற வழியே இல்லை என்று தான் அனைவரும் நினைப்போம். ஆனால் அமெரிக்க வெள்ளை மாளிகையை, கூகுள் ஆர்ட் ப்ராஜெக்ட், இணையத்தளத்தின் மூலம் எளிதாகப் பார்க்க ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி உள்ளது கூகுள்.

வெள்ளை மாளிகை என்பது தலைவர்களுக்கு மட்டும் அல்ல, பொதுவான மக்களுக்கும் சேர்த்துதான் என்று மிஷேல் ஒபாமா வீடியோ மூலம் தெரிவித்து இருக்கிறார்.

360 டிகிரி ஸ்ட்ரீட் வியூ கேமரா தொழில் நுட்பத்தினை பயன்படுத்தி கூகுள் இந்த வசதியினை ஏற்படுத்தி உள்ளது. இந்தத் தொழில் நுட்பத்தின் மூலம் பார்ப்பவையை மிக தத்ரூபமாக பார்க்க முடியும். நிஜமாகவே பயணித்துப் பார்ப்பதை போலவும் உணர முடியும்.

அசாத்தியமான விஷயங்களையும் கூகுள் சாத்தியப்படுத்திவிடுகிறது என்பதற்கு இதைவிட சிறந்த எடுத்து காட்டு இல்லை என்றே கூறலாம். பல ரகசியங்களை உள்ளடக்கியது அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகை. இதை பார்க்கும் வாய்ப்பை கூகுள் ஏற்படுத்தி இருப்பது ஓர் அற்புதமான விஷயம்தான்.

# புதிய லெனோவா லப்ரொப்..

## வீடியோ கேமில் ஒரு புதிய அனுபவம்!




லெனோவா நிறுவனம் தனது புதிய ஐடியாபேட் வை-570ஐ அறிமுகம் செய்திருக்கிறது. இந்த லப்ரொப் கேமிங் தேவைகளை சிறப்பான முறையில் நிறைவேற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்காக இந்த லப்ரொப் அகலமான திரை, அக்கு டைப்பில் அமைந்த கீபோர்டு போன்றவற்றை வழங்குகிறது.

இந்த ஐடியாபேட் சிறந்த தொழில் நுட்பங்களுடன் வருகிறது. அதாவது இந்த லப்ரொப் 15.6 இன்ச் அளவில் ஒரு எச்டி எல்இடி டிஸ்ப்ளேயைக் கொண்டிருக்கிறது. இதன் மொத்த எடை 2.6 கிலோவாகும். மேலும் இந்த லேப்டாப் கறுப்பு நிறத்தில் மிக அழகாக வருகிறது.

இந்த லெனோவா லப்ரொப் விண்டோஸ் 7 ஹோம் ப்ரீமியம் இயங்கு தளத்தில் இயங்குகிறது. இது இண்டெல் கோர் ஐ5-2410 ப்ராசஸர் மற்றும் இண்டல் எச்எம்65 சிப்செட்டையும் கொண்டிருக்கிறது.

மேலும் இந்த கமரா 1366 x 768 படங்களின் அளவு கொண்ட 2.0 எம்பி கமராவைத் தாங்கி வருகிறது. மேலும் இந்த கமரா வீடியோவையும் சப்போர்ட் செய்யும். இதன் ரெம் 4ஜிபி டிடிஆர்3 ஆகும். இந்த லப்ரொப்பின் சேமிப்பு 8ஜிபி ஆகும்.

இணைப்பு வசதிகளுக்காக இந்த லப்ரொப் ஜிகாபிட் [illegible] 2.1+ [illegible] யுஎஸ்பி x [illegible] 2.0 போன்ற [illegible]ள்ளது. இந்த லேப்டாப்பில் 2ஜி இணையத் தொடர்பு சப்போர்ட் உண்டு.

பொழுதுபோக்கு அம்சங்களுக்காக இந்த லப்ரொப்பில் ஓடியோ ப்ளேயர் மற்றும் வீடியோ ப்ளேயர் போன்றவை உண்டு. மேலும் இது உயர்தர ஓடியோ, இண்டர்னல் மைக் மற்றும் ஸ்பீக்கர்களைக் கொண்டுள்ளது.

அதாவது இதில் ஜேபிஎல் ஸ்பீக்கர்கள் உள்ளன. மின் திறனிற்காக இந்த லேப்டாப் 6 செல் லித்தியம் பற்றரியைக் கொண்டுள்ளது. குறிப்பாக இதில் சிறப்பாகக் கேம் விளையாடலாம்.

இத்தனை அமர்க்களமான வசதிகளைக் கொண்ட இந்த லப்ரொப்பின் ஆகக் குறைந்த விலை 1.2 லட்சம் ரூபா ஆகும். மேலும் இந்த லப்ரொப் 1 வருட உத்திரவாதத்துடன் வருகிறது.

**27.01.2012 உதயனின் 12 ஆம் பக்கத்தில் வெளியான 'புகைப்படங்கள் இனிப் பேசுமே' என்ற ஆக்கத்தை எழுதியவர் பவர்தாசன். அவரது பெயர் தவறுதலாக விடுபட்டுவிட்டது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுய மதிப்பிடல்

(5)

உங்களுக்காக இன்னொருவர் உண்ண முடியாது. உறங்க முடியாது. உங்கள் வாழ்க்கையை அடுத்தவர் வாழ முடியாது. அதை நீங்கள் தான் வாழ்ந்தாக வேண்டும். அதே போன்று உங்கள் தன்னம்பிக்கையையும் உருவாக்கிக் கொள்ள வேண்டிய பொறுப்பு உங்களுக்கே இருக்கிறது என்பதை முதலில் உணர்ந்து கொள்ளுங்கள்.

உங்கள் தோல்விகளுக்கும் துரதிர்ஷ்டத்துக்கும் பின்னடைவுக்கும் வேறொருவர் எப்படிக் காரணமாயிருக்க முடியும்?

"என்னுடைய எண்ணம், சொல், செயல் இப்படி இருக்க இன்னார் தான் காரணம்" என்று வேறொருவர் மீது நீங்கள் குற்றம் சுமத்திக் கொண்டிருந்தால் உங்கள் உரிமையை நீங்கள் உணரவில்லை என்றே அர்த்தம். உங்கள் தன்னம்பிக்கையின்மைக்கு பிறர் காரணம் என்றால் அதற்கு இடமளித்த பெருங்குற்றத்தை நீங்கள் தான் செய்திருக்கிறீர்கள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

நீங்கள் அடுத்தவர் பேச்சைக் கேட்கிறவராய், சுயமாய் முடிவெடுக்கத் தெரியாதவராய், எப்போதும் எவரையேனும் சார்ந்திருப்பவராகவே இருந்தால் உங்களுக்குள் தன்னம்பிக்கை எப்படித் தோன்றும்?

நம்முடைய வாழ்க்கைக்கு நாம் பொறுப்பேற்றுக் கொள்கிறபோது தான் உண்மையில் நாம் சுதந்திர மனிதர்களாவோம். சுதந்திரம் என்ற சொல் உரிமையோடு தொடர்புடையது.

எல்லோரையும் போல உங்களுக்கும் இந்த உலகில் உரிமை இருக்கிறது என்பதை நீங்கள் உணர்ந்தால், நீங்கள் அடுத்தவர் அபிப்பிராயத்தையோ, அங்கீகாரத்தையோ எதிர்பார்த்து நிற்க மாட்டீர்கள். அதனால் முதலில் நீங்கள் இந்த உலகில் தன்னம்பிக்கையோடு வாழவும், சுதந்திரமாகச் செயற்படவும் உரிமை உண்டு என்று நம்பத் தொடங்குங்கள்.

நம்பிக்கையூட்டும் மேற்கோள் வாசகங்களை, சின்னச் சின்னக் கதைகளைப் படியுங்கள். உங்கள் நம்பிக்கையை உயர்த்தக் கூடிய கருத்துக்களை மனதில் பதியுங்கள். உங்கள் வாழ்வுக்கு நீங்களே பொறுப்பாளியாக மாறுங்கள்.

உங்கள் உரிமையை நீங்கள் உணர்ந்தால், உங்கள் வேலையை மற்றவர்கள் தலையில் கட்டிவிட மாட்டீர்கள். அதே நேரத்தில் மற்றவர் பொறுப்பை, உங்கள் தலை மீது யாரேனும் சுமத்தினால், அதை ஏற்றுக் கொள்ளவும் மாட்டீர்கள். 'முடியாது' என்று சொல்லுங்கள். மற்ற வர்கள் அபிப்பிராயத்துக்காக ஒரு போதும் உங்கள் தலையில் சுமையை ஏற்றிக் கொள்ளாதீர்கள்.

**திறமையும் தன்னம்பிக்கையும்**

திறமையும் தன்னம்பிக்கையும் நேர்கோட்டில் பயணிப்பவை.

திறமை என்பது நீங்கள் உங்கள் துறையில் அடைந்துள்ள செயல்திறன்தான்!

ஓர் இயந்திரம் பழுதாகிவிட்டால், அந்தச் சூழலில் அந்த இயந்திரத்தைப் பழுது பார்க்கும் முழு திறமை பெற்ற ஒருவர் எவ்வளவு தன்னம்பிக்கையோடு இருப்பார் என்பதை எல்லோரும் அறிவார்கள். ஆனால் அரைகுறை வித்தை கற்றவர்கள் விழிபிதுங்கிக் கொண்டிருப்பார்கள் என்பதையும் நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்.

கூடுமானவரை நீங்கள் உங்கள் தொழிலில் திறமையை வளர்த்துக் கொண்டே ஆக வேண்டும். போட்டி மிகுந்த உங்கள் தன்னம்பிக்கையை அதிகரிக்க மட்டுமல்ல, நீங்கள் வெற்றி பெறவும்தான்!

இனி ஒட்டுமொத்தமாகப் பத்து வேலைகளை ஒருவரின் தலையில் கட்டிவிட்டால், அவர் மனம் தளர்ந்து போய் விடுவார். அம்மாதிரி சூழ்நிலையில் என்ன செய்ய வேண்டும்?

நிறைய வேலைகள் இருந்தால் அவற்றை ஒட்டுமொத்தமாக நினைத்துப் பார்த்தால் மலைப்பு ஏற்படும். உங்கள் தன்னம்பிக்கை குறைந்து போகவும் வாய்ப்பு உண்டு.

அந்தநேரத்தில் குழந்தைகளின் மனநிலையில் இருங்கள் என்கிறார்கள் மனோவியலாளர்கள்.

குழந்தையிடம் ஒரு வேலையைச் செய்யச் சொல்லுங்கள். மிக விரைவாக, துடிப்பாகச் செய்து முடிக்கும். காரணம் அந்த வேலைக்கு அடுத்துள்ள வேலைகளை நினைத்துத் திகைப்பு ஏற்படுவதில்லை.

உங்கள் முன்னால் காத்துக் கொண்டிருக்கும் பத்து வேலைகளை நினைத்து நீங்கள் மலைத்துக் கொண்டிருப்பதில் என்ன ஆகிவிடப்போகிறது. நாளாக நாளாக நீங்கள் செய்து முடிக்க வேண்டிய வேலைகள் குவிந்து கிடப்பதைப் பார்த்து உங்கள் மனம் தளர்ந்துதான் போகும்.

அதனால் உங்கள் பெரிய வேலைகளைப் பிரித்துச் சிறு சிறு வேலைகளாக மாற்றி, ஒவ்வொன்றாக முடித்துவிட்டு வாருங்கள். ஒவ்வொரு வேலையும் முடிய முடிய உங்கள் தன்னம்பிக்கையும் அதிகரித்துச் செயல்திறனும் அதிகரிக்கும்.

உங்கள் திறமையை மேம்படுத்த முதலில் நீங்கள் செய்ய வேண்டியது உங்கள் தொழிலைக் காதலிக்க ஆரம்பிப்பதுதான்.

ஒருவேளை நீங்கள் விரும்புவதைச் செய்வதற்கு உங்கள் குடும்பச் சூழலோ, உங்கள் கல்வியோ, உங்கள் பொருளாதார நிலைமையோ ஒத்து வராமல் போகும் போது நீங்கள் உற்சாகமாகப் பணிபுரிய ஒரே வழி நீங்கள் செய்யும் தொழிலை விரும்புவது ஒன்றுதான்.

மனமொன்றிச் செய்யும் எந்த வேலையும் சுமையாகத் தெரியாது. கீழ்வரும் கதையை நீங்கள் ஏற்கனவே கேட்டறிந்திருப்பீர்கள்.

(தொடரும்)

-ஷிவேந்த்ரா

# 3 வயதில் இருந்தே சிறுவர்களுக்கு குழுச்செயற்பாடுகள் அவசியம்

### வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் கருத்து

**சிறார் ஒருவரின் முழுமையான ஆளுமை வளர்ச்சியானது முதல் ஐந்து வயதுக்குள் நிறைவடைவதால் முன்பள்ளிச் சிறார் பருவம் மிக முக்கியமான ஒரு பருவம் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து சிறார்களின் ஆளுமை விருத்தியில் கூடிய கவனம் எடுக்க வேண்டும்.**

வடமராட்சி, ஏப்.6

சிறார்களை மூன்று வயதிலிருந்தே பல்வேறு குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி வர வேண்டும். இந்தச் செயற்பாடுகள் சிறார்களின் ஆற்றல்களைப் பெரிதும் வளர்த்துக் கொள்ள பேருதவி புரிகின்றன என வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் ந.அனந்தராஜ் தெரிவித்தார்.

முன்பள்ளிச் சிறார்களிடையே வாசிப்புத் திறனையும் ஆக்கத் திறனையும் மேம்படுத்துமுகமாக வல்வெட்டித்துறை நகரசபை நூலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அனந்தராஜ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:

சிறார்களின் அறிவு வளர்ச்சியானது ஐந்து வயதுக்குள் நிறைவடைவதால் பெற்றோர்களும், முன்பள்ளிச் சிறார்களின் ஆசிரியர்களும் சிறார்களின் அறிவு சார்ந்த வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும்.

சிறார்களின் ஆக்கத்திறன் சிந்தனையையும் பொது ஆற்றல்களையும் வளர்ப்பதற்கு அவர்களைப் பல்வேறு குழுச் செயற்பாடுகளில் மூன்று வயதிலிருந்தே ஈடுபடுத்தி வரவேண்டும். சிறார் ஒருவரின் முழுமையான ஆளுமை வளர்ச்சியானது முதல் ஐந்து வயதுக்குள் நிறைவடைவதால் முன்பள்ளிச் சிறார் பருவம் மிக முக்கியமான ஒரு பருவம் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து சிறார்களின் ஆளுமை விருத்தியில் கூடிய கவனம் எடுக்க வேண்டும் என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்.பிராந்திய முன்னாள் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பரமேஸ்வரி யோகராஜா தெரிவித்ததாவது:-

நூலக அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட இந்தச் செயற்பாடுகள் சிறார்களிடையே உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளன. கதை கூறும் நிகழ்வில் சிறார்கள் ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் கலந்து கொண்டதைப் பார்க்க முடிந்தது.

வாசிப்பு மற்றும் ஆக்கத்திறன் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் சிறார்களிடையே ஆராய்வு ஊக்கத்தையும் செயற்பாடுகளினூடாக ஆற்றல் மிக்க ஒரு சமுதாயத்தையும் உருவாக்கும் வகையிலும் அமைந்துள்ளது. இதேபோன்று தொடர்ச்சியாக ஒவ்வொரு வாரமும் நூலக அபிவிருத்திச் செயற்பாடுகளை வல்வெட்டித்துறை நகரசபை முன்னெடுக்கும் என்றார். (எ-8)

## சுய தொழிலில் ஈடுபடுவதற்கு பட்டதாரிகளும் முன்வர வேண்டும்

### செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன்

**வங்கிகள் மூலம் சுய தொழில் கடனைப் பெற முடியும். வேலையற்ற பட்டதாரிகள் அந்தக் கடன் மூலம் வேலை வாய்ப்பைப் பெற்று முன்னேற வழி ஏற்படும்.**

யாழ்ப்பாணம், ஏப்.6

யாழ்.மாவட்டத்தில் ஒருநாளைக்கு 3 லட்சம் தபால் உறைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தபால் உறைகள் தென்னிலங்கையில் சீதுவ கிராமத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன. வேலையற்றிருக்கும் 34 வயதுக்கு மேற்பட்ட பட்டதாரிகள் ஏன் இவ்வாறான தொழில் முயற்சியில் ஈடுபடக் கூடாது என சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

இலங்கை வங்கியின் கிளை அலுவலகம் சங்கானையில் அண்மையில் திறந்து வைத்த நிகழ்வில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கும் போதே செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

வங்கிகள் மூலம் சுயதொழில் கடனைப் பெற முடியும். வேலையற்ற பட்டதாரிகள் அந்தக் கடன் மூலம் வேலை வாய்ப்பைப் பெற்று முன்னேற வழி ஏற்படும். மேலும் இந்தக் கடன் சம்பந்தமாகக் கருத்தரங்குகளை நடத்துவதற்கும் வங்கியாளர்கள் முன் வர வேண்டும். இதன் மூலம் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் பட்சத்தில் வேலையற்ற பட்டதாரிகள் உட்பட பலர் சுயதொழில் மூலம் வருமானத்தை தேடிக் கொள்ள முடியும் என்றார்.

இந்த நிகழ்வில் சித்தங்கேணி சிவன் கோயில் பிரதம குருக்கள் சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்கள்;-

"வங்கிகள் வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன.

இந்த வகையில் இலங்கை வங்கியானது வலி.மேற்கில் உள்ள பின்தங்கிய கிராமங்களை இனங்கண்டு அந்தப் பகுதி மக்களின் மேம்பாட்டுக்குதமது பங்களிப்பைவழங்க வேண்டும்" என்றார். (எ-29)

## நிர்வாக உறுப்பினர் தெரிவு

யாழ்ப்பாணம், ஏப்.6

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த வாரம் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செல்லமுத்து சிறிநிவாசன் தலைமையில் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் ஆலயத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக ச.சிறிகௌரிபாலாவும் செயலாளராக கோ.பத்மநாதனும், பொருளாளராக யோ.கஜேந்திரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்களாக நீர்ப்பாசன பிரதித்திட்டப் பணிப்பாளர் என்.சுதாகரன், கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனப் பணிப்பாளர் எஸ்.விகிர்தன் உட்பட 25பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் முன்னாள் அரச அதிபர் தி.இராசநாயகம் மகாதேவா ஆச்சிரமத்தின் குருமுதல்வர் தவத்திரு. கணேசானந்த சுவாமிகள், மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் ஆலயத்தின் முன்னாள் நிர்வாகத்தினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(க-6)

## விஞ்ஞானப் போட்டி முடிவுகள்

**விவரண படமாக்கல் போட்டி**

முதலாமிடம் - யா/ பரியோவான் கல்லூரி - விக்கி னேஸ் வரராஜா எழிலன், கிங்ஸ்ரன்றமேஸ் டிவான்சியாந், கார்த்திகேசன் றகுபரன், மரைன் அல்போன்ஸ் அமல்ராஜ்.

இரண்டாமிடம் - யா/ வேலாயுதம் மகாவித்தியாலயம், பஞ்சாட்சரம் கருணேஸ், பி.றிசாந்தன், ரி.மயூரன், எஸ்.செந்தூரன், ஜே.பிரசாந்.

**விஞ்ஞான கண்காட்சிப் போட்டி**

முதலாமிடம் யா/ திருக்குடும்ப கன்னியர்மடம், பிறேமினி விஜயகுமார்.

இரண்டாமிடம் - யா/இந்து மகளிர் கல்லூரி, றூபினி நாகராஜா, நிலுக்சி [illegible]

மூன்றாமிடம் யா/ பரியோவான் கல்லூரி - மரைன் அல்போன்ஸ் அமல்ராஜ்.

(முற்றும்)

## நிர்வாக பயிற்சி

யாழ்ப்பாணம், ஏப்.6

புறநெகும திட்டத்தின் ஒப்பந்த நிர்வாக நடைமுறை தொடர்பான பயிற்சி எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

வடமாகாண உள்ளூராட்சி திணைக்கள் புறநெகும திட்டப் பணிப்பாளர் மரியதாசன் ஜெகூ இவ்வாறு அறிவித்துள்ளார்.

காலை 9 மணிக்கு இந்தப் பயிற்சிப் பட்டறை இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வீதி, முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## சொல்லும் செயலும் வேறுவேறு அபிவிருத்தியிலும் அதுவே நிலை

போருக்குப் பின்னர் வடக்கில் பெருமளவில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று அரசு தொடர்ச்சியாகக் கூறிவருகிறது. அவற்றைப் பற்றி உலக நாடுகளுக்குத் தெரியப்படுத்தப்படுவதில்லை என்று இந்த நாட்டின் தலைவர்களும் கவலைப்படுகிறார்கள்.

வடக்கின் சில உட்கட்டுமாணங்களை [சில பிரதான வீதிகள் மற்றும் பொதுக் கட்டடங்கள்] மேப்படுத்த அரசு நடவடிக்கைகள் சிலவற்றை எடுக்கின்றது என்பது உண்மை. அது தவிர பெருமளவு நிதி வடக்கிற்குச் செலவிடப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது. ஆனால் உண்மை வேறுவிதமாக இருக்கிறது.

கிராமிய ஆட்சி மன்றங்களை வலுப்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களுக்கும் 200 மில்லியன் ரூபா வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இரண்டு வருடத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பிரதேச சபைக்கும் இந்த நிதி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

பெரும் ஆராவாரங்களுடன் அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் நிலையை இப்போது கேட்டால் கண்ணீர் வடிக்க வேண்டி இருக்கிறது. 2013ஆம் ஆண்டு நிறைவடையும் இந்தத் திட்டம் 2011ஆம் ஆண்டின் பிற்பகுதியிலேயே இங்கு செயலுருவாக்கம் பெற்றது.

மக்கள் பங்களிப்புடனான இந்தத் திட்டம், அவர்களால் தெரிவு செய்யப்படும் அபிவிருத்தி வேலைகளுக்கே பணத்தைச் செலவிட வேண்டும் என்று கூறுகின்றது. அதனடிப்படையில் பல உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் தமது வீதிகளைத் திருத்தக் கோரினார்கள். அல்லது அதிகமாக இரண்டடுக்கு மாடிகளைக் கொண்ட பொதுக் கட்டடம் அமைக்கக் கோரினார்கள்.

இந்தத் திட்டங்களின் மூலம் சுமார் 50 மில்லியன் ரூபாக்களைத்தான் கடந்த ஆண்டு எந்தவொரு உள்ளூராட்சி மன்றத்தினாலும் ஆகக்கூடுதலாகச் செலவிட முடிந்தது.

இந்த நிலையில் தற்போது உள்ளூராட்சி மன்றங்களுக்கு 100 மில்லியன் ரூபா பணம் மட்டும் இந்தத் திட்டத்தின் கீழ் திறைசேரியால் விடுவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு செயற்படுத்தப்பட்ட திட்டங்களுக்கு கொடுக்கப்படும் நிதிபோக இந்த வருடத்திலும் அதேபோன்றளவு திட்டங்களை மட்டுமே இங்குள்ள உள்ளூராட்சி மன்றங்களினால் ஆகக்கூடுதலாகச் செலவிட முடியும். அப்படிப் பார்க்கையில் மேலும் ஒரு 50 மில்லியனை அவற்றால் செலவிட முடியும்.

அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் திட்டம் முடிவுக்கு வந்துவிடும் என்பதால், மீதி 100 மில்லியனுக்கான திட்டத்தை செயற்படுத்துவதற்கான கால அவகாசம் இங்குள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்குக் கிடைக்கப்போவதில்லை. எனவே அந்த நிதி ஒருபோதும் எமக்கு வரப்போவதில்லை என்று இந்த விவகாரத்தில் நிபுணத்துவம் மிக்க அதிகாரிகள் அடித்துச் சொல்கிறார்கள்.


ஆக மொத்தத்தில் வடக்கின் உள்ளூராட்சி மன்றங்களுக்கு என அறிவிக்கப்பட்ட நிதியில் அரைவாசிப் பகுதி சுருட்டப்பட்டு வேறு எங்கோ திருப்பப்பட்டுள்ளது.

மாற்றாந்தாய் மனப்பான்மை என்று இதனைத்தான் தமிழர்கள் கருதுகிறார்கள். போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளைக் காட்டி நிதி நிறுவனங்களிடம் இருந்து பெறப்பட்ட நிதியே இப்போது வேறு இடங்களுக்குப் பயன்படுத்தப்படப் போகிறது. அரசியல் விடயங்களைப் போன்றே தமிழர் பகுதிகளின் அபிவிருத்தி விடயங்களிலும் அரசு சொல்வது ஒன்றாகவும் செய்வது ஒன்றாகவும் நடக்கிறது.

# பரிந்துரையை நிறைவேற்றாவிட்டால் சுயாதீன சர்வதேச விசாரணைதான்

■ ரேணுபிரேம்

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது தீர்மானம் நிறைவேற்றப்பட்டமைக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இப்போது புதிய காரணம் ஒன்றைக் கூறியிருக்கிறார். கூட்டுக் கடப்பாடுகள் (collective commitments) காரணமாகவே தீர்மானம் நிறைவேறியது என்பதே அவரது வாதம்.



இலங்கை மீதான தீர்மானத்தை ஆதரிக்க ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த சில நாடுகள் மறுத்திருந்தன; ஆனாலும் ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானத்தை ஆதரிக்க முடிவு செய்ததால் இந்த நாடுகளும் வேறு வழியில்லாமல் தீர்மானத்தை ஆதரித்தன, அதனாலேயே அது வெற்றி பெற்றது என்பதே அவரது வாதம். ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடொன்றின் வெளிவிவகார அமைச்சர், ஜி.எல்.பீரிஸுக்குத் இந்தத் தகவலை வழங்கியிருந்தாராம்.

அமெரிக்க காங்கிரசைச் சேர்ந்த சில அரசியல்வாதிகளும் தீர்மானத்துக்கு ஆதரவாக இருக்கவில்லை. மனிதாபிமானம் தாண்டி இந்த விடயம் 'அரசியல் சார்ந்து' இருந்ததே இதற்கான காரணம் எனவும் பீரிஸ் அறிவித்திருந்தார்.

மேலும், உள்விவகாரத்தில் வெளிநாட்டுத் தலையீடு எந்தவொரு வகையிலும் மேற்கொள்ளப்படுவதை இலங்கை அரசு சகித்துக் கொள்ளாது என்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நாடாளுமன்றில் அறிவித்திருந்தார்.

ஜெனிவா தீர்மானத்துக்குப் பின்னான இலங்கை அரசின் நிலைப்பாடு இவைதான் எனில், அதன் அர்த்தம் என்ன?

இலங்கை அரசு ஜெனிவாவில் தனது நேரத்தையும், வளங்களையும் தவறாகப் பயன்படுத்தியுள்ளது.

தவிர, ஜெனிவா சென்ற இலங்கைப் பிரதிநிதிகள் குழுவுக்குத் தலைமை தாங்குவது யார் என்பது தொடர்பாகத் தெளிவான வரையறைகளை இலங்கை அரசு ஒருபோதும் எடுத்திருக்கவில்லை.

ஜி.எல்.பீரிஸா, பெருந்தோட்ட அமைச்சரும் மனித உரிமைகளுக்கான சிறப்புத் தூதருமான மஹிந்த சமரசிங்கவா குழுவுக்குத் தலைமை தாங்குவது என்பது தொடர்பில் தீர்க்கமான முடிவு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஜெனிவாவில் தற்போது நிறைவேற்றப்பட்ட தீர்மானம், தேசிய மீளிணக்கப்பாடு மற்றும் அனைத்துலக இராஜதந்திர நகர்வுகள் போன்றவற்றை ராஜபக்ஷ அரசு எவ்வாறு கையாளப் போகின்றது என்பதை பொறுத்திருந்து பார்ப்பது மிகவும் சுவாரஸியமானது.

இலங்கை அரசு, அடுத்த 12 மாதங்களுக்குள் நடைமுறைப்படுத்த வேண்டிய பரிந்துரைகளைக் கருத்திற்கொண்டு தெளிவான மூலோபாய திட்டங்களை வரைந்து கொள்ள வேண்டும். இலங்கை தனது அரசியல் முதிர்ச்சியைக் காண்பிக்க வேண்டிய பொருத்தமான நேரம் இதுவாகும். ஆனால் இலங்கை அப்படி நடப்பதுபோன்று தோன்றவில்லை.

இலங்கை மீதான தீர்மானம் 'கூட்டுக் கடப்பாடுகள்' அடிப்படையிலேயே நிறைவேற்றப்பட்டது என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தமை சில மேற்குலக நாடுகளை விசனப்படுத்தி உள்ளது.

இந்த நிலையில், ராஜபக்ஷ அரசு எவ்வாறு இந்தத் தீர்மானத்தை ஏற்று அதன் நடைமுறைகளுக்குக் கட்டுப்பட்டு, செயற்படப் போகிறது என்று கூறுவதற்கும் அதிக நேரத்தைச் செலவிட வேண்டும்.

அத்துடன் தனது அரசின் பலவீனமான இராஜதந்திர நகர்வு தொடர்பாகவும், தோல்வியடைந்த கொள்கைகள் தொடர்பிலும் ராஜபக்ஷ அரசு மன்னிப்பு கேட்பதற்கும் நேரத்தைச் செலவிட வேண்டும். வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் இதனை அது செயற்படுத்த வேண்டும்.

ஆனால், ஜனாதிபதி ராஜபக்ஷவோ எதிர்மாறாகச் செயற்படுகிறார். மேற்குலகின் பக்கச் சார்பான ஊடக அறிக்கைகளால் தனது அரசு பாதிக்கப்படுகிறது என்பதைச் சொல்லவே அவர் அதிக நேரத்தைச் செலவிடுகிறார். ஊடகங்கள் இவ்வாறான கருத்துக்களை, காணொலிகளை எப்போது வெளியிடத் தொடங்கின என்பதைக் குறிப்பிட அவர் வசதியாக மறந்து விடுகிறார்.

போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசு பொறுப்புக் கூறாது தட்டிக் கழித்த அவற்றுக்கான தண்டனைகளை வழங்க முன்வராத போதே ஊடகங்கள் சிறிலங்கா விவகாரம் தொடர்பான உண்மைகளை வெளியிடத் தொடங்கின.

ராஜபக்ஷ அரசு ஆரம்பத்திலிருந்தே உறுதியற்ற, தெளிவற்ற விதத்தில் தனது கருத்துக்களை வெளிப்படுத்தியதால், தற்போது அதனால் நடைமுறை யதார்த்தத்தை எதிர்கொள்ள முடியவில்லை.

இலங்கை மீதான தீர்மானத்துக்கு 40 நாடுகள் இணை அனுசரணை வழங்கியுள்ளன. இதன் மூலம் அவை எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றன என்பதை வெளிப்படுத்தியுள்ளன.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்ந்தும் கவனத்தில் எடுக்கப்படும் என்பதையும் குறைந்தது மார்ச் 2013 வரையாவது இது தொடர்பில் பேரவையின் உறுப்பு நாடுகள் கவனம் செலுத்தும் என்பதை நிறைவேற்றப்பட்ட தீர்மாணம் வெளிப்படுத்துகின்றது.

மார்ச் 2013இல் பேரவை 22 ஆவது கூட்டத்தொடரை நடத்தும் போது மனித உரிமைகளுக்கான ஐ.நாவின் ஆணையாளர் நிலைமைகளின் முன்னேற்றம் குறித்து சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசு நிறைவேற்றியபோது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகம் அதற்கு எவ்வாறு உதவியது என்பதை உள்ளடக்கிய அறிக்கையை சமர்ப்பிப்பார்.

இந்தத் தீர்மானத்தின்படி, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகமானது இலங்கை அரசின் அனுமதியுடனேயே உதவ முடியும். அப்படி இருந்த போதும் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் அதில் மேற்கு நாடுகளின் சதி, மனித உரிமைகள் சபையின் குறைபாடு தொடர்பாகத் தொடர்ந்து விமர்சித்து வருகின்றது.

அத்துடன் எந்தவொரு வெளிநாட்டு உதவிகளும் தனக்கு தேவையில்லை என்று இலங்கை அரசு வெளிப்படையாகவும் தெரிவித்து வருகின்றது. இந்தத் தடவை ஜெனிவா தீர்மானத்தில் குறிப்பிடப்படாவிட்டாலும்கூட, ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றாது இழுத்தடிக்கும் போக்கை இலங்கை அரசு தொடர்ந்தால் அனைத்துலக சமூகம் தனது தலையீட்டை மேற்கொள்ளும் என்பதை நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

ராஜபக்ஷ அரசு, ஜெனிவா தீர்மானத்தை அதிக சிரத்தையுடன் செயற்படுத்தாவிட்டால் பேரவையின் 22 ஆவது கூட்டத் தொடரில் தனக்கெதிராக எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளப்படாது எனக் கருதுகின்றது. ஆனால் ராஜபக்ஷ இந்தத் தீர்மானத்தை ஏற்றுச் செயற்படாவிட்டால் இலங்கைத் தீவில் வாழும் சிறுபான்மை மக்கள் தொடர்ந்தும் வன்முறைகளைச் சந்திப்பதுடன், சிங்களத் தேசியவாதம் மேலும் தீவிரம் பெறும். அத்துடன் ஐ.நாவின் பல்வேறு அமைப்புக்களின் அழுத்தங்களுக்கும் தொடர் விளைவுகளுக்கும் முகங்கொடுக்க வேண்டிவரும்.

தீர்மானத்தை ஏற்றுச் செயற்படும் பட்சத்தில், ராஜபக்ஷவால் தனது அதிகாரத்தை மேலும் அதிகரிக்க முடிவதுடன், மிகச் சிறந்த ஆட்சியாளராகவும் அவர் மதிக்கப்படுவார்.

அதேவேளை, இலங்கை அரசு தொடர்ந்தும் சட்டங்களை மதிக்காது, சிறுபான்மைத் தமிழ் மக்களின் உரிமைகளை மதிக்காது, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றாது தான்தோன்றித்தனமாக செயற்படுமிடத்து, போர் முடிந்து மூன்று ஆண்டுகளின் பின்னர், தற்போதும் உச்சரிக்கப்படும் "சுயாதீன சர்வதேச விசாரணை" என்பதை எதிர்கொள்வதைத் தவிர்க்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனச்சாட்சியை மறந்த சீனா

ராஜராஜன்

ஜெனிவாவில் அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்துக்கு எதிராக 15 நாடுகள் வாக்களித்தமைக்குச் சீனாவின் அழுத்தங்களே முக்கிய காரணமெனத் தகவல்கள் கசிந்துள்ளன.

சீன தேசத்தையும், அதனை ஆள்பவர்களையும் நன்கு புரிந்தவர்கள் இதில் ஒன்றும் ஆச்சரியப்பட்டிருக்கமாட்டார்கள். ஏனென்றால் மனச்சாட்சியுடன் சீனா ஒருபோதுமே செயற்பட்டதில்லை. தனது நலன்களை மட்டுமே முன்னிறுத்தி அது செயற்படுகின்றது என்று கூறுவதெல்லாம் ஒன்றும் மூடு மந்திரமான விடயங்கள் அல்ல.

சியாங்கே ஷேக்கைத் துரத்தி விட்டு மா-சே- துங்கினால் ஸ்தாபிக்கப்பட்ட கம்யூனிஷ மயப்படுத்தப்பட்ட சீனதேசம் இன்றில்லை. தலைவர்களும் இல்லை. சீனத் தலைவர்கள் தமது கொள்கைகளை மாற்றியது போன்று தமது ஆடைகளிலும் மாற்றங்களைச் செய்திருக்கின்றனர்.

மிக்கெயில் கொர்ப்பச்செவ் பலம் பொருந்திய இரும்புத்திரை நாடென வர்ணிக்கப்பட்ட சோவியத் ரஷ்யாவைத் துண்டு துண்டுகளாகப் பிரித்தபோது, ஆனந்தத்தில் முதலில் துள்ளிக் குதித்தது சீனாதான். ஏனென்றால் அந்த வேளையிலே அசைக்க முடியாத வல்லமை பொருந்திய கம்யூனிஷ நாடாக சோவியத் ரஷ்யா விளங்கியது. இந்த நாட்டை உரசிப் பார்க்கு மளவுக்குக்கூட சீனாவிடம் அன்று துணிவு இருக்கவில்லை. அன்றைய நிலையில் பொருளாதார, இராணுவ பலத்தில் இவ்விரு நாடுகளுக்குமிடையில் மலைக்கும் மடுவுக்குமுள்ள இடைவெளி காணப்பட்டது. உலக நாடுகளிலேயே சோவியத் ரஷ்யாவுக்கு சவால் விடும் துணிவு அமெரிக்காவிடம்தான் அப்போது இருந்தது. இதுவெல்லாம் சீனாவினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயங்களாக இருந்ததில்லை. உரிய சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தது.

சோவியத் ரஷ்யா துண்டாடப்பட்டு, கம்யூனிஷ சித்தாந்தங்களும் ஒழிக்கப்பட்ட போது சீனா நிம்மதிப் பெருமூச்சு விட்டது. தனது வளர்ச்சியில் இனித் தடைக்கற்கள் இல்லையென்ற ஆணவம் அதனுள் தலை தூக்கியது.

**ஒரு காலத்தில் சர்வாதிகாரி ஹிட்லர் உலக நாடுகளையெல்லாம் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கு பகிரங்கமாகப் போர் புரிந்தான். ஆனால் சீனாவோ மௌனமாக இருந்து இதனையே மெல்ல மெல்லச் செய்து கொண்டிருக்கின்றது**

நீதி நியாயங்களையெல்லாம் மூட்டை கட்டி ஒரு ஓரத்தில் எறிந்தது. எந்த நாட்டில் எது நடந்தாலும் அதில் தனக்கு என்ன இலாபம் கிடைக்குமென்ற சிந்தனையே சீன நாட்டிடம் இருந்தது.

இதுதான் இலங்கைப் பிரச்சினையிலும் நடந்தது. இறுதிப்போரின் போது ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் பல்வேறு கொடுமைகளுக்கும் ஆளாக்கப்பட்டு கொடூரமாகக் கொலை செய்யப்பட்டபோது சீனா மனச்சாட்சியே இல்லாமல் இலங்கை அரசுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வாரி வாரி வழங்கி கொண்டிருந்தது.

ஜனநாயகம் வேண்டி அகிம்சை வழியில் போராடிய தனது நாட்டைச் சேர்ந்த இளைஞர்களை இராணுவ தாங்கிகளால் மோதியும், நசித்தும் கொன்ற சீன அரசிடம் நாம் இரக்கத்தை எதிர்ப்பார்ப்பது முட்டாள் தனமானதே. இது போன்றுதான் திபெத்தில் வாழ்ந்த மக்களின் நிலையும் அவலமாக மாறியுள்ளது. தாய்வானை வேட்டையாடுவதற்கும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது.

ஒரு காலத்தில் சர்வாதிகாரி ஹிட்லர் உலக நாடுகளையெல்லாம் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கு பகிரங்கமாகப் போர் புரிந்தான். ஆனால் சீனாவோ மௌனமாக இருந்து இதனையே மெல்ல மெல்லச் செய்து கொண்டிருக்கின்றது.

இதற்கமைவாக இலங்கையில் தனது கால்களை அகலப் பரப்பி வருகின்றது. அம்பாந்தோட்டையிலிருந்து வடமாகாணம் வரை சீன நாட்டின் பிரசன்னம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்திய அரசின் மெத்தனப் போக்கு, கையாலாகாத செயற்பாடுகள் எல்லாம் சீன தேசத்தை உசுப்பி விட்டுள்ளமையைத் தெளிவாகக் காட்டுகின்றன.

இந்தியாவைச் சூழவுள்ள இலங்கை, மியன்மார், பாகிஸ்தான், வங்களாதேசம், மாலைதீவு, நேபாளம் ஆகிய நாடுகள் இப்போது சீனாவின் வலையில் மாட்டிய நிலையில் உள்ளன. இந்தியா தற்போது தனித்தே நிற்கின்றது. ஆப்கனிஸ்தானும் அமெரிக்கரைக் சுழட்டிவிட்ட பின்னர் சீனாவிடமே தஞ்சமடையும் சாத்தியங்களை மறுக்க முடியாது. சீனா அதற்கான காய் நகத்தல்களை ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது.

இந்த நிலையில் ஜெனிவாவில் அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்ட பிரேரணையை எவ்வகையிலாவது முறியடித்துத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காகப் போராடிய இலங்கைக்கு சீனா முழு அளவில் கை கொடுத்தது. பல நாடுகளிடம் மறைமுகமாக எச்சரிக்கைகளும் விடுக்கப்பட்டன. அவற்றின் பின் தங்கிய பொருளாதார நிலை சீனாவுக்குச் சாதகமாகின. இதன் விளைவாகவே ஆரம்பத்தில் இலங்கைக்கு ஆதரவான நாடுகள் 7 என்ற நிலை மாறி 15 ஆக உயர்ந்தது. 8 நாடுகள் அவற்றிலும் ஜோர்தான், மலேசியா தவிர விலாசமில்லாத நாடுகள் நடு நிலைமை என்ற போர்வைக்குள் முடங்கிக் கொண்டன.

அமெரிக்கப் பிரேரணைக்கு ஆதரவாகப்பலம் வாய்ந்த நாடுகள் அணி திரண்டுள்ளமையையும் நாம் அவதானிக்க முடிகின்றது.

சீனாவைச் சுட்டிக் காட்டி இலங்கையுடன் நெருங்கி நின்று தமிழ் மக்களை அழிப்பதற்குப் பெரும் பங்கு வகித்த இந்தியா உள்நாட்டு நெருக்குதல் காரணமாக இலங்கைக்கு எதிராக வாக்களித்தது. ஆனால் இதனைச் சீர் செய்யும் வகையில் முன்னரைவிட இலங்கைக்கு இந்தியா உதவிகளை வழங்குமென்பதில் ஐயமே இல்லை.

இந்திய எதிர்ப்பைக் காட்டியே சீனாவும் இலங்கையுடன் நெருக்கத்தை அதிகரிப்பதற்கான சாத்தியங்களும் நிறையவே உள்ளன.

இந்த நிலையில் இலங்கைத் தமிழர்கள் சீனாவின் உதவியுடன் இலங்கையரசு மேற்கொள்ளப் போகும் அநீதிகளுக்கும், கொடுமைகளுக்கும் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்வதைத் தவிர வேறு வழியே இல்லை. ✱

# மனிதாபிமானப் போராட்டக் காலம்

சி.ஜமுனாநந்தா
(மருத்துவர்)

கடலில் கூட்டமாக வாழ்ந்த மீன்கள் வலையில் அகப்பட்டு இறந்து பின் கருவாடாக்கப்பட்டுக் கடையில் கூட்டமாக விற்பனைக்குக் காட்சிப்படுத்தப்பட்டிருப்பது போன்று 2009ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஈழத் தமிழர்களின் மனித நேயத் தேவைகளும் சர்வதேச அவையில் இப்போது காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இதன் முதல்படியாகவே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அமர்வில் இலங்கை மீதான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கையின் ஜனாதிபதி நியமித்த நல்லிணக்கத் துக்கான படிப்பினைகள் ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக் கோருகிறது அந்தத் தீர்மானம். உண்மையில் இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான தீர்மானமே அது.

இலங்கை அரசின் ஊடாக இலங்கையின் இறைமையைப் பாதிக்காத வகையில் - பெருமளவு தமிழ் மக்கள் கொல்லப்பட்ட சூழலிலும் கூட அதனைக் கணக்கிலெடுக்காது - இலங்கை அரசுக்கு அரசுக்குச் சர்வதேச உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்குவதற்காக இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் உண்மையில் ஓர் உலக இராஜதந்திரச் சடங்கே அன்றி ஒருவரைக் குற்றங்காணும் நிகழ்வு அல்ல.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக இலங்கை அரசும் சிங்கள மக்களும் அதனை எதிர்மறையாக எதிர்கொள்கின்றனர்.

2009ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அழிவுகள் பற்றிய உண்மை சிங்கள மக்களுக்கு இன்னமும் தெரியவில்லையோ அன்றேல் தமிழர்களைத் தமது சக பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் இல்லையோ தெரியவில்லை, அவர்கள் ஐ.நா. தீர்மானத்தை மிக மூர்க்கமாக எதிர்கொள்கிறார்கள்.

இந்த நிலையில் மனித உரிமைகள் விடயத்தில் உலகம் இரு அணிகளாகச் செயல்படுவது ஜெனிவாவில் காட்சிக்கு வந்தது. உலக வல்லாதிக்கப் போட்டியில் நாடுகளிடையேயான ஆதிக்கப் போட்டியில் மனித உரிமைகளின் செயற்பாடு முக்கிய செல்வாக்குச் செலுத்துகின்றது.

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி, உலகில் மனித உரிமைகளைப் பேணுவதிலும் ஜனநாயக ஆட்சிகளைத் தக்க வைப்பதிலும் முக்கிய பங்காற்றுகிறது. பல நாடுகளில் ஆட்சி மாற்றங்களை இந்த தொழில்நுட்ப வளர்ச்சியே சாதகமாக்கியது. ஆசியாவிலும் அதன் தாக்கம் விரைவில் உணரப்படும்.

மனித உரிமைகளை முன்னிறுத்திய அமெரிக்காவின் அணுகுமுறை வெற்றியளித்து வருவதனால் இந்திய அரசும் அதனுடன் இணைந்தே செல்லவேண்டிய தேவை உள்ளது. இதனை எதிர்கால அமெரிக்க ஜனாதிபதியாகவும் எதிர்கால இந்தியப் பிரதமராகவும் வரக்கூடிய பெண்மணிகளான ஹிலாரி கிளின்டனும் ஜெயலலிதாவும் உறுதிப்படுத்தி உள்ளனர். மனித உரிமைகளை சர்வதேச மட்டத்தில் செயற்படுத்தும் தன்மையின் அடிப்படையிலேயே அவர்களும் இயங்குகின்றனர். மாறாக இது இலங்கைத் தமிழர் மீதான அக்கறையை மட்டும் கொண்டதல்ல.

ஐ.நா. தீர்மானத்தில் ஒரு நாட்டின் இறைமைக்குப் பங்கம் வரக்கூடாது என இந்தியாவினால் வலியுறுத்தப்பட்டதன் நோக்கம் இலங்கை அரசுடனான தனது உறவை வளர்ப்பதற்காக மட்டும் அன்று. மாறாக இதே போன்ற தீர்மானத்தினால் இந்திய அரசினால் காஷ்மீரில் மெற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைகளுக்கு சர்வதேச விசாரணைப் பொறிமுறையினை உருவாக்குவதனைத தடுப்பதுமே. மொத்தத்தில் இந்தியா தனது இராஜதந்திரத்தினை மிகவும் சாமர்த்தியமாகப் பயன்படுத்தி உள்ளது.

ஐ.நா. மனித உரிமை நகர்வின் தாக்கம் இலங்கையில் நல்லிணக்கத்தினை மட்டுமல்லாது ஆட்சி மாற்றத்தினையும் ஏற்படுத்தும் வகையில் உள்ளது. இதனைத் தற்போது ஆட்சியில் உள்ளவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

அரசியலில் தூண்டலுக்கான துலங்கல்களின் ஏதுக்களை ஆராய்ந்து அணுகுதல் ஆக்கபூர்வமானதாக அமையும். தமிழ் மக்களது அரசியல் நிலையினைக் கருதும் போது புலம்பெயர் அரசியல் தலைமைகளின் செல்வாக்கே தமிழர்களது அரசியலைத் தீர்மானிப்பதாக அமைந்துள்ளது.

இங்குள்ள அரசியல் கட்சிகள் சர்வதேச மட்டத்தில் செயற்படும் ஆற்றல் அற்றவையாகவே உள்ளன. மேலும் கட்சி அரசியல், தனிநபர் அரசியல் என்பவற்றிற்கு மேலாக தமிழினத்திற்குரிய அரசியல் நடத்துபவர்கள் அரிதிலும் அரிதாகி விட்டனர்.

சிங்கள மக்களும் சிங்களக் கட்சிகளும் ஒற்றுமையாக எவ்வளவுக்கு உள்ளனவோ அதற்கு மாறாகத் தமிழ்க் கட்சிகளின் செயற்பாடுகள் உள்ளன. மேலும் மக்கள் மயப்படுத்தப்பட்ட அரசியல் தலைமைகளும் இன்று எம்மிடம் இல்லை.

எமது பிரதேசத்தில் வேலையற்ற பட்டதாரிகள் என்று எத்தனையோ ஆயிரம் இளைஞர்கள் உள்ளனர். இவர்கள் சிறந்த சமூக சேவை மிக்க அரசியலில் ஈடுபடுவதற்கு எமது பழைய தலைமுறை அரசியல், பெரும் வெற்றிடத்தினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அதனைச் சிறந்த முறையில் நிரப்ப வேண்டியது எமது இளையவர்களது கடமையாகும்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைத் தீர்மானம் இலங்கையில் இந்திய எதிர்ப்புத் தன்மையினையும் தோற்றுவித்து உள்ளது. இலங்கையில் இந்திய விரோதத் தன்மை இலங்கையின் முதல் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்காவினாலேயே உருவாக்கப்பட்டது. இதன் அடிப்படையிலேயே இலங்கைக் குடியுரிமைச் சட்டம் மூலம் பலர் நாடு கடத்தப்பட்டனர். இந்திய இராணுவத்தினை எதிர்கொள்ளவே இங்கிலாந்துப் படையினர் இலங்கை சுதந்திரமடைந்த பின்னரும் திருகோணமலையில் நிலைகொள்ள வைக்கப்பட்டனர். மீண்டும் அதே நிலையினை உருவாக்க, இன்று சீனாவின் துணையினை இலங்கை நாடி உள்ளது.

சீனா சார்பு அரசியல் இலங்கையில் அரசியல்வாதிகளின் இருப்பினைத் தக்க வைக்க உதவியாக அமையும் என்பதால் அதனை நோக்கியும் மேற்கத்தைய எதிர்ப்பு அரசியலை சிங்கள மக்களின் உணர்வு அரசியலாக மாற்றியும் தென்னிலங்கை நகர்வுகளை மேற்கொள்கிறது.

இந்தக் காலத்தில் தமிழ் மக்கள் இன்னமும் அமைதியாகவும் அறிவுபூர்வமாகவும் அனுபவரீதியாகவும் இராஜதந்திர நகர்வுகளை உபயோகிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். மாறாக உலக வல்லரசுகளின் ஏவல்படியோ பிராந்திய வல்லரசுகளின் ஆலோசனைப்படியோ செயற்படுவதும் அறவழிக்கு அப்பாலான அரசியல் போராட்டங்களில் கவனம் செலுத்துவதும் வடக்கு - கிழக்கில் தமிழர்களது இருப்பினை இழக்க வைக்கும். மேலும் இன்று இந்தியா, அமெரிக்காவை நோக்கித் திசை திரும்பி இருக்கும். கோப அலை மீளவும் தமிழரைக் காவு கொள்ளாது இருக்கவும் நாம் கரிசனை எடுத்தல் வேண்டும்.

பொதுவாக 30 வருடகாலப்பிரச்சினை முடிந்துவிட்டு என்ற கருத்தே உள்ளது. ஆனால் 30 வருட கால ஆயுதப்போராட்டமே முடிந்து உள்ளது. ஆனால் மனித உரிமைகளை முழுமையாகப் பெற்றுக்கொள்வதற்கான போராட்டத்தின் ஆரம்பமே ஜெனிவா நகல் என்றால் மிகையில்லை. அறவழிப் போராட்டம் முதல் 30 வருடங்கள். ஆயுதப்போராட்டம் அடுத்த 30 வருடங்கள். அடுத்த 30 வருடங்களை மனித உரிமைக்கான போராட்டமாக ஈழத் தமிழர்கள் எதிர்கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் குருபக்தி

ஒரு பெரியவர் இருந்தார். அவருக்கு ஓர் ஆசை. ஒரு வீடு கட்டி அதற்குத் தன்னுடைய குருநாதர் பெயரைச் சூட்டி அழகு பார்க்க வேண்டும் என்று. ஆனால் அந்த நேரத்தில் அவரால் தன்னுடைய ஆசையை நிறைவேற்ற முடியவில்லை.

அவரிடம் சொந்தமாக வீடு இல்லை. அதனால் தனக்கே அந்தப் பெயரை வைத்துக்கொண்டார். குருநாதருடைய முதல் எழுத்தை எடுத்து தன்னுடைய முதல் எழுத்துடன் சேர்த்து அந்த மூன்று எழுத்துக்களையும் சேர்த்து தன் பெயராக சூட்டிக் கொண்டார். அவர்தான் கல்கி. அவருடைய பெயர்ரா. கிருஷ்ணமூர்த்தி. குருநாதர் திரு.வி. கல்யாணசுந்தரனார். இந்தப் பெயரை வைத்ததும் என்ன சொன்னார் தெரியுமா? ''கல் வீட்டுக்கு குருவின் பெயரைச் சூட்ட முடியாததால் அதைவிட உயர்ந்த இந்த நடமாடும் வீட்டுக்கு அந்தப் பெயரைச் சூட்டிக் கல்கியானேன்''என்றார். இதைப் பற்றி குருநாதரிடம் கூறியபோது சிரித்துவிட்டு கல்கி என்னும் பெயரினுள்ளே இருந்த அர்த்தம் குறித்து குருநாதருக்கு விளக்கினார்.

இவ்வாறு கல்கி எதைப்பற்றி யோசித்தாலும் உடனடியாக செய்து முடிப்பர். ஆனால் அவரால் ஒன்றை மட்டும் செய்ய முடியவில்லை. அது என்ன தெரியுமா? பாரதிக்கு மண்டபம் எழுப்பவேண்டும். அதற்காக தமிழ் இலக்கியங்களை எல்லாம் யானைமேல் ஊர்வலமாக வைத்து எடுத்துச் சென்றார். பாரதியின் குடும்பத்துக்கு நிரந்தரமாக ஒரு தொகை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்தார். காந்திக்கு நினைவு மண்டபம் எழுப்ப ஏற்பாடு செய்தார். பேராசிரியர் வ.ரா.வுக்கு மணிவிழா கொண்டாடி அவருக்குப் பணமுடிப்புக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தார். சாந்தி நிகேதனத்துக்கு தமிழ் நூல்களைக் கொண்டு சென்று தமிழுக்கு சிம்மாசனம் போட்டுக் கொடுத்தார்.


இவ்வாறு பல பெரிய காரியங்களை எல்லாம் சாதித்த கல்கியால் ஒரு விடயத்தை மட்டும் நிறைவேற்ற முடியவில்லை. அதை நிறைவேற்ற பெரும்பாடுபட்டார்.

தன்னுடைய குருநாதருடனேயே இருந்து இயலாத நேரத்தில் உதவி செய்ய ஆசைப்பட்டார். அதை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் அவர் மனம் உடைந்தார். தனி மனிதர் உதவியைத்தானே பெறமாட்டார். அதனால் அரச உதவியைப் பெற்றுக் கொடுக்க முடிவுசெய்தார். ஆனால் குருநாதர் எந்த உதவியையும் பெறுவதாக இல்லை.

கல்கி மறுபடியும் ஒருயுக்தி செய்தார். 250 ரூபாய் தன் நண்பர் ஒருவரிடம் கொடுத்து 70 ஆவது விழாவுக்கு நன்கொடையாக அனுப்பிவிடச் சொன்னார். அதுவும் தேவையில்லை எனக் கூறித் திருப்பி அனுப்பப்பட்டது. ஆனாலும் கல்கி தன் முயற்சியைக் கைவிடவில்லை. ஒரு ஐநூறு ரூபாவை எடுத்துத் தன் நண்பரிடம் கொடுத்து குருநாதரின் அச்சுக் கூடத்துக்குச்சென்று அவரின் நூல்களை வாங்கி வரச்சொன்னார். இப்போதுதான் அவரது மனம் ஆறுதலாக இருந்தது. இவ்வாறு மாதம்தோறும் நூல்களைப் வாங்கித் தன் நண்பர்களுக்கு அன்பளிப்பாகக் கொடுத்து வந்தார். ஆனாலும் தன் குருவுக்கு உதவ முடியவில்லையே என்ற ஏக்கம் அவருக்கு தொடர்ந்தும் இருந்து வந்தது.


இப்படிப்பட்ட ஒரு குரு ; இப்படிப்பட்ட ஒரு சீடர். இந்தக் காலத்தில் இப்படி ஒரு குருவையும், சீடனையும் காணமுடியுமா? குரு- சீடர் உறவு இப்படியா இருக்கிறது.

இந்தக் காலத்துச் சீடர் ஒருத்தர் தன் குருவிடம் சென்று, தான் அவருக்கு உதவி செய்ய ஆசைப்படுவதாகத் தெரிவித்தார். தன் குருவிடமே நேரே சென்று தன் விருப்பத்தைத் தெரிவித்த அவரை குரு பாராட்டினார். பின்னர், என்ன உதவி தான் செய்ய வேண்டும் என விரும்புகிறாய் என்று கூறிய குரு யோசித்து விட்டுச் சிறிது நேரத்தின் பின் ''நீ எனக்குச் செய்யக்கூடிய உதவி ஒன்றுதான் இருக்கிறது'' என்று கூறினார். இவர் ''என்ன?'' என்று கேட்டார். அதற்கு குரு ''நீ என் சீடன் என்பதனை வெளியில் கூறி என் மானத்தை வாங்காமல் இரு; அது போதும்'' - என்றார்.



**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# சமூகத்தின் கல்வி மேம்பாட்டில் சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை




சிறுப்பிட்டி ஜன சக்தி கிராமத்தின் கல்வி வளர்ச்சியிலும் சமூக மேம்பாட்டிலும் உறுதுணையாக இருந்து வரும் சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் ஆரம்பமும் வளர்ச்சியும் கிராமத்தில் வாழும் மக்களின் ஒருமித்த கருத்தினால் உருப்பெற்றன. யாழ்ப்பாணம் - பருத்தித்துறை, நெடுஞ்சாலையில் சிறுப்பிட்டி மடத்தடியில் அமைந்துள்ள கலைவாணி முன்பள்ளிக்கு அருகால் மேற்கு நோக்கிச் செல்லும் ஒழுங்கையில் 1500 மீற்றர் தூரத்தில் பாடசாலை அமைந்துள்ளது.

இந்தக் கல்விக் கூடம் குறித்த கிராமத்தில் வாழும் மாணவர்களின் கற்றல் வசதியை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டது. என்ன நோக்கத்துக்காக உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கத்தை முழுமையாக நிறைவு செய்து வருகின்றது.

யாழ்.குடாநாட்டில் நிலவி வந்த இறுக்கமான சாதிக் கட்டமைப்பு இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முந்திய காலப்பகுதியில் குறித்த சாதிப் பிரிவினருக்கு சமமான கல்வி வாய்ப்பை வழங்குவதற்கு முன்வரவில்லை. குறித்த பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாப் பாடசாலைகளிலும் கல்வி கற்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. அனுமதிக்கப்பட்டாலும் அவர்களுக்கு ஆசனம் வழங்கப்படாமல் தரையில் இருந்தே கற்கவேண்டும். அவர்கள் ஏனைய உயர் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களுடன் சேர்ந்து பழகவோ சமமாக இருக்கவோ சமமான சந்தர்ப்பம் வழங்கப்படவோ இல்லை. அவர்கள் மீது தீண்டாமை மிக மிகக் கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

அவர்கள் குறித்த வகுப்பறையில் ஒரு புறத்தில் தரையில் அமர்ந்திருந்து ஆசிரியர் கூறுவதைக் கேட்டு கற்றல் செயல்பாடுகளை சுயமாகவே மேற்கொள்ள வேண்டி இருந்தது. பின்தங்கிய சமூக மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட புறக்கணிப்பு மற்றும் தண்டனை என்பன அவர்களை தொடர்ந்து கற்றல் செயற்பாட்டை மேற்கொள்ளாமல் முதலாம், இரண்டாம் வகுப்புக்களுடன் இடைவிலகச் செய்துவிடும்.

1941ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ஆம் திகதி சிறுப்பிட்டி ''கெட்டியாக் கலட்டி'' என்ற தோப்புப் பெயர் காணியில் அமைக்கப்பட்ட கட்டடத்தில் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

சிறுப்பிட்டி கிராமத்துக்கு அயலில் உள்ள புத்தூரில் மழவராயர் கந்தையாவால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையில் (தற்போது ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில்) பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் 1970 வரையில் அனுமதிக்கப்படவில்லை.

இந்த வகையில் சிறுப்பிட்டி புத்தூர் பகுதியைச் சேர்ந்த பின்தங்கிய மாணவர்கள் சொந்த இடத்தில் இயல்பு நிலையில் கல்வியைத் தொடர முடியாத நிலை நிலவியது.

1940 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிறுப்பிட்டி மத்தியில் செயற்பட்டு வந்த ஆரம்பப் பாடசாலையில் குறித்த மாணவர்களைக் குறித்த காலப்பகுதியின் கட்டுப்பாடுகளுக்கு அமைய பாடசாலையில் இணைத்துக் கொண்டனர். இதனை ஏற்றுக் கொள்ளாத விசமிகளால் அன்று இரவு வேளையில் பாடசாலை தீ மூட்டி முற்றாக எரிக்கப்பட்டது. இதனை அடுத்து அடிதடி சண்டை ஏற்பட்டதோடு அது சாதிக்கலவரமாக் மாறியது.

இந்தச் சூழ்நிலையில் தமிழ் அரசியல் பிரமுகர் சிலர் தலையிட்டு சமாதானம் செய்ததோடு பின்தங்கிய சமூக மாணவர்கள் கல்வி கற்பதற்கு தனியான பாடசாலையை நிறுவித் தருவதாக உறுதி அளித்தனர். அந்த வகையில் சிறுப்பிட்டி ஜனசக்தி கிராமத்தின் முன்னோடிகளும் இதனை ஏற்றுக் கொண்டதை அடுத்து முடிக்குரிய காணியில் 1940 ஆம் ஆண்டு புதிய பாடசாலை

**ஞானி**

நிறுவுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

1941 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ஆம் திகதி சிறுப்பிட்டி ''கெட்டியாக் கலட்டி'' என்ற தோப்புப் பெயர் காணியில் அமைக்கப்பட்ட கட்டடத்தில் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. ஆரம்ப தினத்தில் 74 பிள்ளைகள் பாடசாலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். தலைமை ஆசிரியருடன் சேர்த்து மூன்று ஆசிரியர்கள் பணிபுரிந்தனர். பாடசாலையின் கற்றல் செயற்பாடுகளை வடமாநில வித்தியாதிபதி ஆரம்பித்து வைத்தார். தமிழ் அரசியல் பிரமுகர்களும் உள்ளூர் பிரமுகர்களும் வித்தியாரம்பத்தில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

பாடசாலை தனியாக ஆரம்பிக்கப்பட்டு தமது கிராமத்து பிள்ளைகளுக்கு வாழ்விடச் சூழலில் கற்பதற்கு வசதிகள் செய்யப்பட்டமை குறித்த கிராம மக்களுக்கு மனநிறைவைக் கொடுத்தது.

ஆரம்பத்தில் பாடசாலை 1-5 வகுப்புக்களைக் கொண்ட ஆரம்பப் பாடசாலையாகச் செயற்பட்டது. குறித்த காலப் பகுதியில் ஐந்தாம் வகுப்பு படித்தவர்களை ''படித்தவர்கள்'' என பெருமைப்படுத்தி சமூகம் மதிப்பளித்தது உண்டு.

பாடசாலையில் ஆரம்பத்தில் சேர்ந்து கல்வி கற்ற முதல் மாணவர்களில் ஒருவரான முதியவர் சிதம்பரி கோவிந்தன் ''தான் ஒருவருடம் பாடசாலையில் கல்வி கற்றதாகவும் கரவெட்டியில் இருந்து வந்த ஆசிரியர் தனக்கு கற்பித்ததாகவும் குடும்ப வறுமையினால் கல்வியைத் தொடர முடியவில்லை'' என்றும் கூறினார்.

கல்லு நிறைந்த பிரதேசமான கலட்டிப் பாடசாலை சூழலில் குடியேற்றத் திட்டத்தின் மூலம் மக்கள் குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டு பாடசாலைக்கு ஆரம்பத்தில் 1½ ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. ஆரம்ப காலப் பாடசாலைக்கான நிரந்தரக் கட்டடமும், கிணறும், தலைமை ஆசிரியருக்கான வதிவிட மனையும் கல்வித் திணைக்களத்தினால் நிறுவப்பட்டன. கல் நிறைந்த கலட்டியில் கட்டடம் நிர்மாணிக்கப்பட்ட போதிலும் பாடசாலைச் சுற்றாடல் பாடசாலைச் சமூகத்தினால் திருத்தி அமைக்கப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டுக்கு உரியனவாக சீரமைக்கப்பட்டது.

பாடசாலை ஸ்தாபிதம் செய்யப்பட்ட காலப் பகுதியில் ஆரம்பப் பாடசாலையாக (1-5 வகுப்பு) பின்னர் கனிஷ்ட இடைநிலைப் பாடசாலையாக (1-8 வகுப்பு)செயற்பட்ட போதிலும் தற்பொழுது தரம் 9 வரையான வகுப்புக்கள் நடை பெறுகின்றனர். புதிதாக இந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட 9 ஆம் தரத்தில் 28 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். பாடசாலையின் அதிபராக நா.மகேந்திரராசா (இலங்கை அதிபர் சேவை) கடமையாற்றுகின்றார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் கல்வித் தரத்தை உயர்த்த அரசு நடவடிக்கை எடுப்பதில்லை

### மருத்துவபீட மாணவர்கள் குற்றச்சாட்டு

கொழும்பு,ஏப்.6

உயர்கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுப்பதில்லை. மாறாக உயர்கல்வி முறைமையை தனியார் மயப்படுத்த முயன்று வருவதாக மருத்துவபீட மாணவர்கள் குழு குற்றஞ்சுமத்தியுள்ளது.

கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருத்துவ மாணவர்கள் பங்குபற்றிய ஆர்ப்பாட்டம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது அரசின் பல்வேறு தோல்விகள், மாலபேயில் தனியார் மருத்துவக் கல்லூரி ஒன்றை அமைத்த பாதிப்பு என்பவற்றை விளக்கும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியை சட்டபூர்வமாக அங்கீகரிப்பது ஆரம்பத்திலிருந்தே பெரும் பிரச்சினையாக இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## எதிர்ப்பை வெளிப்படுத்த...



மாலபேயில் தனியார் மருத்துவக் கல்லூரி ஒன்றை அமைத்தமைக்கு எதிராக மருத்துவ பீட மாணவர்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் கையெழுத்து வேட்டையில் ஈடுபட்டனர்.

# வெளி விவகார அமைச்சர் பதவி விலக வேண்டும்

### சஜித் பிரேமதாச எம்.பி. கூறுகிறார்

கொழும்பு,ஏப்.6

வெளிவிவகார அமைச்சர் பதவி விலக வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டுக்கு சாதகமான வெளியுறவுக் கொள்கை ஒன்றை நடைமுறைப்படுத்த முடியாவிட்டால்,வெளிவிவகாரஅமைச்சர் பதவி விலகவேண்டும்.

தேசிய நோக்கங்களைக் கருத்திற் கொண்டு நாட்டின் வெளியுறவுக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. மாறாக தனிப்பட்ட காரணங்ககளை முன்னிலைப்படுத்தி வெளியுறவுக் கொள்கைகள் நடை முறைப் படுத்தப்படுகின்றன.

இலங்கை தொடர்பில் உலக நாடுகளின் நம்பிக்கையை வென்றெடுக்கக் கூடிய வகையில் வெளியுறவுக் கொள்கைகளில் மாற்றம் அவசியம்- என்றார்.

இந்த நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்ததாவது:

அரசின் பிழையான வெளியுறவுக் கொள்கைகளே பிரச்சினைகளுக்குக் காரணம். பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க வெளிநாடுகள் ஒத்துழைப்பு வழங்கியிருந்தன.

போர் வெற்றிகொள்ளப்பட்டு மூன்று ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் சர்வதேச சமூகம் இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளன.

அரசின் நடவடிக்கைகள் காரணமாகவே ஜெனிவாவில் பிரேரணை நிறைவேற்றப்பட்டது- என்றார். (ச)

# அதிபர்களுக்கு பதவி உயர்வு உடன் வழங்க வலியுறுத்து

### இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் காட்டம்

கொழும்பு,ஏப்.6

அதிபர் சேவையில் 1994 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பதவி உயர்வு வழங்கப்படாத அதிபர்களுக்கு கல்வியமைச்சு உடனடியாக நியமனங்களை வழங்க வேண்டும். இல்லையெனின் இதற்கு எதிராக நீதிமன்றம் செல்வோம் என்று இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அதிபர் சேவை தரம் இரண்டு ஒன்றில் 1994ஆம் ஆண்டுக்குப் பின்னர் உள்ள அதிபர்களுக்கு, தரம் ஒன்று அதிபர் பதவி உயர்வுகள் எவையும் இதுவரையில் வழங்கப்படவில்லை

பலமுறை சேவைகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டபோதும் இவர்களுக்குப் பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை. இதனால் இவர்கள் பல்வேறு விதத்திலும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிபர் சேவை தரம் ஒன்றில் மூன்று வருடங்கள் கடமையாற்றினால் கல்வி நிர்வாக சேவையில் இணைந்து கொள்வதற்கான போட்டிப் பரீட்சை வாய்ப்பு உள்ளது.

உரிய காலப்பகுதியில் இவர்களுக்குரிய பதவி உயர்வுகள் வழங்கப்பட்டிருந்தால் இவர்களுக்கு அதற்குரிய சம்பளங்களும் வழங்கப்பட்டிருக்கும்.

இதுதொடர்பில் பொது சேவைகள் ஆணைக்குழுவுக்கு கல்வியமைச்சு அறிக்கை சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிக்கின்றபோதும் இதுவரையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இவர்களுக்கு சம்பளம் அதிகரிப்பு, பதவி உயர்வுகளை உடனடியாக கல்வியமைச்சு வழங்க உரிய நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும்.

இவ்வாறு மேற்கொள்ளாது போனால் இதற்கு எதிரான நடவடிக்கையில் இலங்கை ஆசிரியர் சங்கம் ஈடுபட்டு நீதிமன்றம் வரை செல்லும்.- என்றார். (ச)

# மீள்திருத்தப் பெறுபேறுகள் தாமதம்

கொழும்பு,ஏப்.6

கடந்த ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மீள் திருத்தப் பெறுபேறுகள் இன்னும் வெளியிடப்படவில்லை என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி மீள் திருத்தத்துக்காக விண்ணப்பித்த மாணவர்கள் கவலையுடன் இருப்பதாக சங்கத்தின்பிரதான செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சை பெறுபேறு வெளியானதன் பின் அதில் காணப்பட்ட சிக்கல்களால் சமூகத்தில் பரபரப்பு ஏற்பட்டது. அதனால் விடைத்தாள் மீள் திருத்தத்துக்கு ஒரு லட்சத்து 40ஆயிரம் மாணவர்கள் விண்ணப்பித்திருந்தனர் என்று அவர் தெரிவித்தார்.

இதற்கான பெறுபேறுகள் பரீட்சைகள் திணைக்களத்தால் இன்னும் வெளியிடப்படாமல் இருப்பதால், பரீட்சார்த்திகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர் என்றும் அவர் கூறினார். (ச)

# வெளிநாடு செல்ல தாய்மாருக்குத் தடை

### மகளிர் விவகார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.6

*18 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளைக் கொண்டுள்ள தாய்மார்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதைத் தடுப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக சிறுவர் மேம்பாடு மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்தார்.*

*தாய்மார் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்குச் செல்வதன் காரணமாகப் பிள்ளைகள் பாலியல்கள் மற்றும் வன்முறைச் சிறுவர் துஷ்பிரயோகங்கள் போன்ற செயற்பாடுகளுக்கு ஆளாவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.*

*சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் பெண்கள் மீதான வன்புணர்வுகள் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்குத் தண்டனைகள் வழங்கப்படவுள்ளன என்றும்-*

*இந்தக் குற்றவாளிகளுக்கான சட்ட திட்டங்களை மீளாய்வு செய்து கடும் தண்டனைகள் வழங்குவதற்கு அவசியமான சட்டங்களை நடைமுறைப்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-22)*

# நீரில் மூழ்கிய சீன நபர்; தேடுதலில் பொலிஸார்

வலிகம - கிராகல கடலில் நீராடிக் கொண்டிருந்த யங்நங் லீ சுஜியன் என்ற சீன நாட்டு நபர் நீரில் மூழ்கி நேற்று முன்தினம் காணாமற் போயுள்ளார்.

கடற்படையினர், கரையோர பாதுகாப்பு பிரிவினரின் உதவியுடன் வெலிகம பொலிஸார் இந்த நபரை தேடி வருகின்றனர். காணாமற் போன சீன நபர் கடந்த 30 ஆம் திகதி தொடக்கம் மிரிஸ்ஸ - உடுபலி [illegible] ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ச)

# விடைத்தாள்களை மதிப்பீடு செய்த ஆசிரியருக்கு கொடுப்பனவு இல்லை

### இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் கண்டனம்

கொழும்பு,ஏப்.6

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்த ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளை அரசு வழங்கத் தவறியமைக்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்தப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்பட்ட பின்னரும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளை பரீட்சைகள் திணைக்களம் வழங்கவில்லை என்று இந்தச் சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

பரீட்சைகள் திணைக்களத்துக்கான சுமார் 300 மில்லியன் ரூபாவை திறைசேரி வழங்கவில்லை என்று அவர் தெரிவித்தார்.

பரீட்சை நடைபெற்ற காலத்திலும், விடைத்தாள்களை மதிப்பீடு செய்த காலத்திலும் ஆசிரியர்களும் அதிபர்களும் உணவு, போக்குவரத்து மற்றும் ஏனைய செலவுகளுக்குத் தமது சொந்தப் பணத்தைச்செலவிட வேண்டியிருந்தது என்று அவர் கூறினார்.

தமிழ்-சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்க வேண்டும் என்று அவர் கோரியுள்ளார். (ச)

# பஸ்ஸில் பிச்சையெடுக்க அனுமதித்தால் சாரதிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை

### தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் எச்சரிக்கை

பஸ்களில் பிச்சையெடுப்பவர்களை அனுமதிக்கும் சாரதிகளுக்கும், நடத்துநர்களுக்கும் எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கும் சட்டமூலம் கொண்டு வரப்படும் என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் ரொஷான் குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது இந்த விதி நடைமுறையில் இருந்தபோதிலும் அது சரியாகக் கடைப் பிடிக்கப்படுவதில்லை.

புதுவருடத்தின் பின் அது நடைமுறைப் படுத்தப்படும். பிச்சைக்காரர்களால் பயணிகளுக்கு அசௌகரியங்கள் ஏற்படுவதாகவும், பிச்சைக்காரர்கள் வேடத்தில் திருடர்களும் போதைவஸ்து பாவிப்பவர்களும் பஸ்களில் ஏறுகின்றனர். ஆணைக்குழுவின் இந்தத் தீர்மானத்தால் பிச்சைக்காரர்களின் நிலைமை மோசமாகும். எனினும் பஸ் பிரயாணிகளின் நலனே பிரதானமாகும். பிச்சைக்காரர்கள் பஸ்களில் ஏறினால் பிரயாணிகள்011-2595555 அல்லது 0777595555 அல்லது 1955 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் மூலமாக முறைப்பாடு செய்யலாம்- என்றார். (ச)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவசிவ

## திருநெல்வேலி

# திருவருள் மிகு ஸ்ரீ நீலாதாட்ஷி சமேத காயா ரோகண சுவாமி தேவஸ்தான

# மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் - 06-04-2012



## ஆலய வரலாறு

திருநெல்வேலி திருவருள் மிகு நீலாயதாட்சி சமேத காயா ரோகண சுவாமியின் ஆலயம் 1774ஆம் ஆண்டு திருமடந்தை நாதமுதலியார் பரம்பரையினரால் கட்டப்பட்டது. ஆலயத்தில் வட புறத்தில் முத்துமாரியம்மன் ஆலயமும் வடகிழக்கில் தலங்காவற் பிள்ளையார் கோயிலும் தெற்கே வீரமாகாளி அம்மன் ஆலயமும் அமைந்து காட்சியளிக்கின்றன. இவ்வாலயக் காவல் தெய்வமாகத் தலங்காவற் பிள்ளையார் கோயில் விளங்குகின்றமையினால் தலங்காவற் பிள்ளையாரை காயாரோகண மூத்த நாயனார் எனவும் அழைக்கின்ற மரபுமுண்டு. இவ்வால யத்தின் மூலவராக காயாரோகணேஸ்வரரும் தெற்கு நோக்கியதிசையில் நீலாயதாட்சி அம்பாளும், உட்பிரகாரத்தில் ஏனைய பரிவார மூர்த்திகளும் காணப்படுகின்றனர். ஆண்டு தோறும் இரண்டு பெரும் மகோற்சவம் ஆலயத்தில் நடந்தேறி வருகின்றன. பிரதோசவிரதங்கள், கார்த்திகை, ஆவணிச்சதுர்த்தி, சிவராத்திரி, சேமவாரம், கந்த சஷ்டி, நவராத்திரி போன்ற விரதநாள்கள் மிகச்சிறப்பாக நடைபெறுவது குறிப்பிடத்தக்க தொன்றாகும். நீலாயதாட்சி சமேத நடராஜப் பெருமான் நடராஜர் சபையில் எழுந்தருளி காட்சியளிப்பது மிகவும் கண் கொள்ளாக் காட்சியாகும். ஆறு தடவைகள் நடராஜப் பெருமானுக்கு வருடத்தில் அபிஷேகம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. மார்கழித் திருவாதிரை விழா சிறப்பாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். 1980ஆம் ஆண்டு இவ்வாலயத்திற்கான புதிய சித்திரத்தேர் அமைக் கப்பட்டிருக்கின்றது.

இச் சித்திரத்தேரானது தஞ்சைப்பெருவுடையார் ஆலய மூலவர் ஸ்தூபியின் அமைப்பை ஒத்ததாகக் காட்சியளிக்கின்றது. அத்துடன் ஆலயத்திற்கு அழகு சேர்க்கும் சப்த தளங்களைக் கொண்டதாக இராஜகோபுரம் அமைந்து காணப்படுகின்றது. இவ் ஆலயத்தில் பல அற்புதங்கள் நடைபெற்றுள்ளன. ஒரு காலத்தில் மழை இல்லாத வேளையில் இங்குள்ள நந்தியெம் பெருமானுக்கு சிறந்த முறையில் அபிஷேகம் செய்ய உடனே மழை பொழிந்த வரலாறு இக்கோயிலுக்கு உண்டு. இந்த ஆலயத்தில் பரம்பரை பரம் பரையாக பூசகர்களாகவும் ஆதீன கர்த்தாக்களாகவும் விளங்கி வருபவர்கள் அந்தணர்களே. அந்த வழியில் பரமசாமிக்குருக்கள் வழி வந்தோரால் இன்றும் நித்திய, நைமித்திய கிரிகைகள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. 1994 இல் பங்குனி மாத உத்தர நட்சத்திரத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இவ்வாலயத் திருப்பணி வேலைகள் பொதுமக்களின் உதவியுடன் காலந்தோறும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இத்தகு சிறப்புக்களைக் கொண்டு விளங்கும் நீலாய தாட்சி சமேத காயா ரோகணேஸ்வரர் ஆலயத்தில் இன்று (06.04.2012) மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. - ஆலய வழிபடுவோர் சபை.

## பிரதம குருக்கள் அவர்களின் நல்லாசிகள்



யாழ்ப்பாணம் திருநெல்வேலி திருவருள்மிகு ஸ்ரீநீலாயதாட்சி அம்பிகா சமேதஸ்ரீ காயா ரோகண சுவாமிதேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்ட பக்ஷ மகா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று (06.04.2012) எம் பெருமானின் திருவருள் துணையுடன் நடைபெறுகின்றது. 'அவன் அருளாலே அவன்தாள் வணங்கி' என்கிற மணி வாசகப் பெருமானின் திருவாக்கிற்கமைய எங்கள் மூதாதையர்களால் நித்திய நைமித்திய பூசைகள் காலா காலமாக நிறைவேற்றி வழிபட்டு வந்த திருத்தலம் இதுவாகும். தொடர்ந்தும் எமது வழித்தோன்றல்களால் இவ் ஆலயம் பராமரிக்கப்பட்டு வருவதோடு காலந்தவறாது பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றது. ஆலயத்தில் பாலஸ்தாபனம் நடைபெற்று மிக விரைவாகக் குறுகிய காலத்தில் ஆலயப் புனரமைப்புப்பணிகள் நிறைவேற்றப்பட்டு கும்பாபிஷேகப் பெருஞ் சாந்தி நிகழ்வினை தரிசிக்கின்ற பேறு யாவர்க்கும் கிடைத்திருக்கின்றது. பன்னிரண்டு ஆண்டுக்கொருமுறை நடைபெறும் இக் கும்பாபி ஷேகத்தை காணும் திருவருட் பாக்கியம் எமக்குக் கிடைத்திருக்கின்றது. இப் புனித கிரியையின் மூலம் எமது நாட்டில் புரையோடிப்போயுள்ள துன்ப துயரங்கள் எல்லாம் நீங்கி சாந்தியும் சமாதான சக வாழ்வும் கிடைக்க வேண்டுமென எல்லாம் வல்ல அருள் மிகு திருநெல்வேலி திருவருள் மிகு நீலாயதாட்சி அம்பிகா சமேத நீலாயதாட்சி காயாரோகண சுவாமியின் பாதக்கமலங்களைப் பணிகின்றோம்.

- பிரம்ம ஸ்ரீ சதாசிவகுமாரக் குருக்கள், தேவஸ்தான பிரதமகுரு.

## நீரை சிறப்பிக்கின்ற தலையாய சடங்கு கும்பாபிஷேகம்



குடநீராட்டு குடமுழுக்கு என்ற பெயர்களில் வழங்கும் கும்பாபிஷேகம் புதிய கோயில் கட்டப்பெற்ற போதும் பழைய கோயில்களைப் புதுப்பிக்கும்போதும் நடைபெறும் திருவிழா. புனித நீரைக் கும்பங்களிலிருந்து குறிப்பிட்ட நாளிலும் நேரத்திலும் ராஜகோபுரம், விமானம் ஆகியவற்றில் தெளிப்பதே இத் திருவிழாவின் முக்கிய கட்டம்

உலகமும் உலகத்திலுள்ள எல்லாப்பொருள்களும் நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகிய பஞ்ச பூதங்களால் ஆனவை. இவை ஒவ்வொன்றும் ஒரு கருத்தின் சின்னம். நிலம் பொருளைக்குறிக்கும் நீர், உயிர் ஓட்டத்திற்கு அறிகுறி. தீ மனத்தை நினைவுட்டும். காற்று அறிவியலுக்கு அப்பாற்பட்ட சக்திகளுக்கு பிரகிருதி. வானம் பேரின்பத்திற்கு அடையாளம். இவ்வாறு பஞ்ச பூதங்கள் சமயச்சடங்குகளால் உருவகப்படுத்தப்படுகின்றன. நீரும் காற்றுமின்றி நிலத்தில் யாரும் வாழ்ந்துவிடமுடியாதல்லவா. அதிலும் நீர் இன்றியமையாததொன்றாகும். அத்தகு நீரைச் சிறப்பிக்கும் சடங்கே கும்பாபிஷேகம் ஆகும்.

- செந்தமிழ்கலைஞானி, வர்ணனைக்கலாநிதி, மதுரகவி, காரை எம்.பி. அருளானந்தன் J.P.

## திருப்பணி நிறைவேற்றி திருவருள் பெறுவோம்



ஆலயங்கள் எமது பண்பாட்டின் நிலைக்களனாக விளங்குபவை. வையத்தில் வாழ் வாங்கு வாழ்வதற்கு எம்மைக் காலங்காலமாக ஆலயங்களே நெறிப்படுத்தி வந்துள்ளன. அவை எமது மக்களின் சமய வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ளன. " கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' ''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்ற முதுமொழி களுக்கமைவாக ஆலயத்தின் முக்கியத்துவம் பேணப்படுகின்றது.

இந்த ஆலய புனர் நிர்மாணப் பணிகளை திருப்பணியாக நிறைவேற்ற தேவஸ்தான பரிபாலன சபையினரும் சிவனடியார்களும் விரும்பியமைக்கமைய மூன்று கோடி ரூபா செலவில் பணிகள் தொடங்கப்பட்டன, ஆனால் நித்திய, நைமித்திய வழிபாடுகள் தொடர்ந்து நடைபெறவேண்டுமென்ற நல்நோக்கத்துடன் முக்கியமான திருப்பணிவேலைகள் முடித்து தற்போது கும்பாபிஷேகத்தினை நிறைவேற்ற இறையருள் கூடிவந்துள்ளது.

எனினும் தொடர்ந்தும் ஆலயத்தின் பாரிய திருப்பணிகளாக வசந்த மண்டபம், யாகசாலை, நடேச சபை, வாகன சாலை, களஞ்சியசாலை, முகப்பு மணி மண்டபம் ஆகியன நிறைவேற்றப்படவுள்ளன. ஆலயம் ஒரு கலையம்சம் பொலிந்த திருக்கோயிலாக திருநெல்வேலி நகரத்தில் அமைய வேண்டுமென்ற நல்நோக்கத்துடன் இந்தப் பணிகள் தொடர்ந்தும் நடைபெறவுள்ளன. பூரணப் பொலிவோடு காட்சிதரவுள்ள எமது சிவாலய திருப்பணிகளுக்கு அடியவர்களின் பூரணமான பங்களிப்பினை பரிபாலன சபையினர் எதிர் பார்த்துள்ளனர்.

''நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்''
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளிர்'' என்ற சிந்தனைக்கமைய ''சிறு துளி பெருவெள்ளம்'' போல சிவனின் திருப் பணிக்கு அனைவரும் உங்களாலியன்ற உதவி கள் புரியவேண்டுமென வேண்டி இன்று (06.04.2012) நடைபெறும் கும்பாபிஷேகம் சிறப்புக்களைச் சேர்த்து பெருமானின் திருவருள் கடாட்சதத்தினை வேண்டுவோமாக.

திரு. கு. மயூரன், பொருளாளர். ஆலய வழிபடுவோர் சபை.

## திருப்பணிச் செயலாளரின் பிரார்த்தனை



சைவப் பாரம்பரியத்துக்கும் பண்பாட்டுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குவது மட்டுமல்ல பசு வதைக்கஞ்சி இரவோடிரவாக தமிழகம் சென்ற ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகள், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஆகியோரால் பெருமை யுள்ளதும், பழைமை வாய்ந்ததுமான ஆலயங் கள் பலவற்றை தன்னகத்தே கொண்டு விளங்கு வது திருநெல்வேலிநகரம். திருநெல்வேலிக் கிராமத் தில் இற்றைக்கு பல ஆண்டுகளுக்கு முன் 1774 ஆம் ஆண்டில் அமைக்கப்பபட்ட சிவாலயமாக விளங்கு வது திருவருள் மிகு ஸ்ரீ நீலாயதாட்சி அம்பிகா சமேத காயா ரோகண சுவாமி ஆலயமாகும். இந்த ஆலயத்தை எனது தந்தையாராக விளங்கிய நல்லையா மாஸ்டர் என எல்லோராலும் அழைக்கப்பட்ட பரஞ்சோதி அவர்கள் செயலாளராகவும், சிரேஸ்ட சட்டத்தரணி சி. நாகராசா அவர்கள் தலைவராகவும், டாக்டர் மு. கந்தசாமி அவர்கள் பொருளாளரகவும், சிவலிங்கம், சிவகாமி ஆகியோர் செயற்குழு உறுப் பினர்களாகவும் விளங்கி நீண்ட காலமாக பரிபாலன சபை யினர் அளப்பரிய பணிகளை ஆலயத்துக்கு நிறைவேற்றி வந்தனர்.

இவர்கள் அனைவரும் அமரத்துவ நிலை எய்தியதும், சிவனருளால் ஒரு புதிய பரிபாலன சபை உதயம் பெற்றது. ஆலய பிரதம குருவாக விளங்கும் சிவஸ்ரீ சதா. சிவகுமாரக் குருக்கள் தலைவராகவும் திரு. பத்ம நாதன், சிறி. இராஜீவன் உப தலைவராகவும் திரு. ந. ஸ்ரீதரன் செய லாளராகவும் திரு. கு. மயூரன் பொருளாளராகவும் விளங்கி ஆலய கட்டுமானத் திருப்பணிகளை செவ்வனே நிறைவேற்றும் பொறுப்பு எம்மிடம் சுமத்தப்பட்டது. அந்த வகையில் ஸ்ரீ நீலாயதாட்சி சமேத காயா ரோகண சுவாமியின் திருப்பணி வேலைகளை சிவனடியார்களின் பூரண மான ஒத்துழைப்புடன் ஆரம்பித்தோம், அதற்கமைய குறுகிய காலத்தில் இந்தப் பணிகளை நிறைவேற்றி 2012 ஆம் ஆண்டில் மகா கும்பாபி ஷேக பெரும் சாந்தி விழாவை காணும்பேறு கிடைத்துள்ளது.

அந்தவகையில் ஆலய கட்டடப் பணிகளை துரிதமாக நிறைவேற் றிய சீர்காழி தொல்லிடத்தைச் சேர்ந்த சிற்பாசாரி கலைஞர் புருஷோத் மன் அவர்களுக்கும், கட்டட ஒப்பந்தக் காரராக விளங்கிய ஊரெழு வைச் சேர்ந்த திரு. சண்முகநாதன் (JEYASUNJAN CONSTRUCTION) அவர் களுக்கும் ஆலயவர்ண வேலைகளை நிறைவேற்றிய திருநெல் வேலி ரவி ஆட்டிஸ் உரிமையாளர் தணிகாசலம் அவர்களுக்கும், ஆலய உட்பிரகார நிலவேலைகளை பொறுப்பேற்று அமைத்துத்தர முன்வந்த அன்பர்களுக்கும் செயலாளர் என்ற வகையில் மனம் நிறைந்த நன்றி யினை தெரிவிப்பதோடு கும்பாபிஷேகம் காணும் நீலாயதாட்சி சமேத காயா ரோகண சுவாமியின் நல்லருள் எல்லோருக்கும் கிடைக்க பிரார்த்திப்போமாக.

ந. ஸ்ரீதரன், செயலாளர் , தேவஸ்தான பரிபாலன சபை.


விளம்பர அனுசரணை

**சுப்ப தூஸ்**
இல.154, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021 222 6809

**தேனு களஞ்சியம்**
மொத்த சில்லறை விற்பனை
நிலையம்
நவீன சந்தை உட்புறம்
திருநெல்வேலி.

**ஹரன் புடைவையகம்**
KARAN TEXTILES
புத்தாண்டை முன்னிட்டு மலிவு
விலையில் புடைவைகளைப்
பெற்றுக்கொள்ளுங்கள்.
பலாலி வீதி, திருநெல்வேலி.
T.P. 021 222 2697

கும்பாபிஷேகம் சிறப்புற
வாழ்த்துகின்றோம்
**RUPA**
**Versatile Trades**
No. 104 A, Stanly Road,
Jaffna. T.P. 021 222 8330

**நவீன்**
Information Technologes
(PVT) Ltd.
195/4, பலாலி வீதி,
திருநெல்வேலி.
T.P.: 021 222 1121
021 222 1166

**கிருபா**
லேனர்ஸ்
அங்கீகாரம் பெற்ற சாரதிப்
பயிற்சிப் பாடசாலை.
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**கனகா**
**புத்தகசாலை**
பலாலி வீதி,
திருநெல்வேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸார் ஐவர் இடைநிறுத்தம்

ரங்கல பொலிஸ் நிலைய சார்ஜன்ட் மற்றும் நான்கு பொலிஸ் கான்ஸ்டபிள்களை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் தற்காலிக பணி நீக்கம் செய்யப்படுவதற்கு மத்திய பிரிவு சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எச்.எச்.ஜி அம்பன்வெல உத்தரவிட்டுள்ளார்.

ஒரு ராணுவ கப்டன் உட்பட ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினரையும் மற்றும் ஏனைய 10 பேரையும் தமது கடமையைச் செய்ய விடாது இடையூறு விளைவித்ததற்காகவும் அவர்களில் ஒருவரை தாக்கிய குற்றத்துக்காகவும் இந்தத் தற்காலிக பணி நீக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# பார்க் தோட்ட பாடசாலை மாணவரின் கல்வி பாதிப்பு

### நுவரெலியா பிரதேச சபை உறுப்பினர் தெரிவிப்பு

நுவரெலியா,ஏப்.6

நுவரெலியாக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட கந்தப்பளை பார்க் தமிழ்ப் பாடசாலை கடந்த ஒன்றரை வருடமாக இயங்காத காரணத்தினால் இந்தப் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிப்படைந்து வருகின்றன என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் நுவரெலியா பிரதேச சபை உறுப்பினர் அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

2010ஆம் ஆண்டு ஜூலை மாதம் கந்தப்பளை, டெனிஸ்கிளப் தோட்டப் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக இந்தப் பகுதியில் வசித்த 23 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பார்க் தோட்டப் பாடசாலை கட்டடத்தில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக பார்க் தோட்டப் பாடசாலை மாணவர்கள் கந்தப்பளை தமிழ் வித்தியாலயத்துடன் இணைக்கப்பட்டனர்.

> கந்தப்பளை பார்க் தமிழ் பாடசாலை கடந்த ஒன்றரை வருடங்களாக சொந்த இடத்தில் இயங்காமை குறித்து அதிகாரிகளிடம் எடுத்துக்கூறியும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

கந்தப்பளை தமிழ் வித்தியாலயத்தில் நிலவுகின்ற இடப்பற்றாக்குறைக்கு மத்தியில் இந்தப் பாடசாலையில் இணைப்புச் செய்யப்பட்டுள்ள பார்க் தமிழ் வித்தியாலய மாணவர்கள் மிகுந்த சிரமத்தின் ஊடே தமது கல்வியைத் தொடர வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மத்திய மாகாணக் கல்வியமைச்சு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார்.



மாவடிப்பள்ளி அல் - அஷ்ரப் மகா வித்தியாலயத்தின் சுற்றாடல் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சி நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கிழக்கு மாகாண பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.நஜீப் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## தோட்டத் தொழிலாளர்கள் பணி நிறுத்தப் போராட்டம்

கொட்டகலை,ஏப்.6

கொட்டகலை, மேபீல்ட் லொக்கில் தோட்டத்தைச் சேர்ந்த 260 தொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முதல்பணிநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தத் தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் இருவரைத் தோட்ட நிர்வாகம் பணியிலிருந்து இடைநிறுத்தியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே லொக்கில் தோட்டத் தொழிலாளர்கள் பணி நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறு பணி நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் தமது தொழிற்சங்கங்களில் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

தொழிலாளர்களின் பணிநிறுத்தப் போராட்டம் தொடர்பாக தோட்டத் தொழிற்சங்க தலைவர்களுடனும் தோட்டத் தொழிற்சங்க பிரதிநிதிகளுடனும் பேச்சு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தோட்ட முகாமையாளர் வசந்த டி சில்வா தெரிவித்தார்.

லொக்கில் தோட்டத் தொழிலாளர்கள் இருவருக்கும் சாமஸ் தோட்டத்தைச் சேர்ந்த தோட்ட உத்தியோகத்தருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாகவே லொக்கில் தோட் மேற் கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது (ச)

## நீரில் மூழ்கி யுவதி சாவு

நுவரெலியா,ஏப்.6

சிவனொளிபாத மலைக்கு யாத்திரை சென்று சீத்த கங்குலேவில் நீராடிய யுவதி ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றதாக குருவிட்ட பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தில்ருவன் வெல்லபகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய யுவதியே உயிரிழந்துள்ளார். (ச)

## பஸ் மோதியதால் 9 எருமைகள் காயம்

அம்பாறை,ஏப்.6

அம்பாறை, அரந்தலாவ பகுதியில் பஸ் ஒன்று மோதியதால் ஒன்பது எருமைகள் காயமடைந்துள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பஸ் எருமைகள் மீது மோதியுள்ளது. இது தொடர்பாக எருமைகளின் உரிமையாளர்கள் சிலர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சம்பவ இடத்திலிருந்து இந்த பஸ் செல்ல முற்பட்ட போதிலும் கிராமவாசிகள் பஸ்ஸை தடுத்து நிறுத்தியதை அடுத்து அரந்தலாவ பொலிஸாரினால் பஸ் சாரதி கைதுசெய்யப்பட்டார். (ச)

## யுவதியை இழுத்து சென்றது முதலை

அக்குரஸ்ஸ,ஏப்.6

அக்குரஸ்ஸ பகுதியில் நில்வள கங்கையில் முகம் கழுவச் சென்ற 18 வயது யுவதியை முதலை கவ்விச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை 6.20 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

அக்குரஸ்ஸ பிரதேச சபை படகு மூலம் யுவதியை தேடும் பணிகள் இடம்பெற்று காலை 9 மணிக்கு சடலம் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
11 ★ 01 ★ 1970

அநியாய அழிப்பில்
13 ★ 04 ★ 2006

அமரர்
பஞ்சாட்சரம் கிருபாகரன்

( உரிமையாளர் - சாரங்கன் நகை மாடம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். சிவா நகை மாடம், சாவகச்சேரி)

திதி : 06.04.2012 பூரணை

ஆண்டு ஆறு ஆனதுவோ!
கிருபா உமைப் பிரிந்து வாடுகின்றோம் நாமே
எமைவிட்டு எங்கேதான் ஓடிச் சென்றீரோ ?
பொல்லாத காலன் உமைக்கொண்டு சென்றானோ?
உம் பிரிவால் வாடிடும் எம் குரல்தான்கேட்கலையா?
இறைவனடி சேர்ந்திடவே உறுதிமொழி கொண்டீரோ?
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கண்டி வீதி,
சாவகச்சேரி

என்றும் உன் நி[illegible]
குடும்பத்தினர்

### உங்களுக்கு சுத்திகரிப்புத் தேவைகளில் பிரச்சினையா?

உங்களுக்கான எமது சேவைகள்
நிறுவனங்கள், வீடு, ஹோட்டல், Tiles, அல்ஹபோன் பார்டிஷன், ஷோ றூம், Show Room Glass, Floor Polishing / Vaccine / Carpet Shampoo போன்ற சுத்திகரிப்புச் சேவையைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

**Specialized Janitorial Services**

தொடர்பு: இல. 536/1 கே.கே.எஸ். வீதி, மனோகராச் சந்தி,யாழ்ப்பாணம்.
T.P: 021 4921108, 0777286069

### கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் இல.153, 2 மாடிக் கட்டடம், நீளம் 35 அடி, அகலம் 13 அடி கொண்ட சகல வசதிகளுடனும் கூடிய கடை வாடகைக்கு.
தொடர்புகளுக்கு:- 077 6618122

### கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2kg மேல் வளர்ச்சியடையக் கூடிய No-1 BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. விலை 100/=

★ றாஜீவ் நவாலி வீதி, ஆனைக்கோட்டை
★ R.M.B பாம், பருத்தித்துறை

T.P. NO : 077 6090926

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



2011 பங்குனி பூரணை திதியில்
அமரத்துவம் அடைந்த
அமரர் கனகசபை பரமநாதன்

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வும் இன்று (06.04.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு வடலியடைப்பு பாரத்தனை ஐயனார் ஆலயத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர்.
க.கந்தசாமி, சி.கமலாதேவி.
இந்துகல்லூரி வீதி,வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

(16485) (2-6-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லோயா சீனித் தொழிற்சாலை மீண்டும் செயற்பட ஆரம்பம்

எருவில்,ஏப்.6

கடந்த ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக செயற்படாதிருந்த கல்ஓயா சீனித் தொழிற்சாலை மீண்டும் தனது உற்பத்தி நடவடிக்கைகளை அடுத்த வாரத்தில் ஆரம்பிக்கவுள்ளதாக குறித்த சீனித் தொழிற்சாலையின் பிரதம நிறைவேற்று அதிகாரி காமினி இரத்நாயக்க தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சீனி உற்பத்தியை மேற்கொள்வதற்கு வசதியாக கல்லோயா பிளாண்டேசன் லிமிட்டெட்டினால் ஹிங்குரானை பிரதேசத்தில் 7659 ஹெக்ரேயர் காணி அரசினால் ஒதுக்கப்பட்டுள்ளது. இங்கு தற்போது 5200 ஹெக்ரேயரில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது.

இந்தத் தொழிற்சாலையில் 2000 தொன் சுத்திகரிக்கப்படாத சீனியை உற்பத்தி செய்யமுடியும்.

2015 ஆம் ஆண்டளவில் 6000 ஹெக்ரேயரில் கரும்பு பயிரிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் சுத்திகரிக்கப்படாத சீனி உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய முடியும்.

கல்ஓயா சீனித் தொழிற்சாலை இயங்க ஆரம்பித்ததும் 4400 விவசாயக் குடும்பங்களுக்கு தொழில் வாய்ப்பு கிடைக்கும்.

இந்தத் தொழிற்சாலையில் நவீன இயந்திரங்கள் பொருத்தும் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

நீண்டகாலமாக கரும்புச் செய்கை மேற்கொள்ளப்படாததன் காரணமாக பிரதேச விவசாயிகள் இந்தக் காணிகளில் நெற்செய்கையை மேற்கொண்டனர்.

இந்தக் காணிகளில் தற்போது நெற்செய்கையை மேற்கொள்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.- என்றார்.

(ச-31)



தெஹியத்தகண்டிய பிரதேசத்தில் 23 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சமூக பராமரிப்பு நிலைய கட்டடத்தை கிழக்கு மாகாண சுகாதார மற்றும் சமூக சேவைகள் அமைச்சர் எம்.எஸ்.சுபைர், கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் விமலவீர திஸாநாயக்க ஆகியோர் இணைந்து திறந்து வைக்கின்றனர்.

## மட்டு. நகருக்குள் புகுந்த முதலையால் மக்கள் பெரும் அச்சம்

மட்டக்களப்பு,ஏப்.6

மட்டக்களப்பு நகரின் எல்லை வீதி பிரதேசத்துக்குள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு முதலை ஒன்று புகுந்ததனால் மக்கள் மத்தியில் அச்ச நிலை ஏற்பட்டது.

மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பிரதேசத்துக்குள் முதலை புகுந்ததனால் மக்கள் ஓடத் தொடங்கியதால் அல்லோல கல்லோலம் ஏற்பட்டது.

இந்தப் பிரதேச இளைஞர்களின் முயற்சியினால் முதலை பிடிக்கப்பட்டு வனத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

(ச)

## மத்தியஸ்த சபைக்கு புதிய உறுப்பினர்கள்

மட்டக்களப்பு,ஏப்.6

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆறு பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள மத்தியஸ்த சபைகளுக்கு புதிய உறுப்பினர்களைத் தெரிவு செய்யுமாறு குறித்த சபைகளின் செயலாளர் குணவர்த்தன மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர்களுக்கு மனு மூலம் அறிவித்துள்ளார்.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி, மற்றும் ஏறாவூர், ஓட்டமாவடி மண்முனை வடக்கு, செங்கலடி, கிரான் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள மத்தியஸ்த சபைகளுக்கே இந்தப் புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இந்தப் பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு ஒருவர் வீதம் புதிய உறுப்பினர்களைத் தெரிவு செய்ய வேண்டும்.

இவ்வாறு புதிய உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் போது பத்து வருடம் அரசியல் சார்ந்த நடவடிக்கைகளில் சம்பந்தப்படாதவராகவும் நீதித்துறை நடவடிக்கைகளுக்காக மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடியவராகவும் இருக்க வேண்டும்.

அரச, தனியார் நிறுவனங்களில் கடமையாற்றுபவர்கள் அல்லது ஓய்வுபெற்றவர்களைத் தெரிவு செய்வது சிறந்ததாக அமையும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச)

## கல்வி அலுவலகங்களில் மின் நிலுவை அதிகம்

எருவில்,ஏப்.6

கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தின் கீழ் உள்ள கல்வி அலுவலகங்கள், பாடசாலைகள் மற்றும் நிறுவனங்கள் இலங்கை மின்சார சபைக்கு ஒரு கோடியே 49 லட்சத்து 86 ஆயிரத்து 492 ரூபாவை மின்சார நிலுவையாக செலுத்த வேண்டியுள்ளதாக மாகாண கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.ஈ.போல் தெரிவித்தார்.

இந்தத் தொகையினுள் தாமதக் கட்டணமும் உள்ளடக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் மின்சார சபை அதிகாரிகளுடன் கலந்துரையாடியதற்கமைய தாமதக் கட்டணத்தை நீக்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை மின்பாவனையை கட்டுப்படுத்துமாறு சகல அதிகாரிகளையும், பாடசாலை அதிபர்களையும் கேட்டுள்ளார்.

(ச-31)


# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 13 . 11 . 1931

விண்ணில் 21 . 03 . 2008



**திருமதி அன்னம்மா தியாகராஜா**
(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி)

**திதி: பூரணை – 06.04.2012**

பத்து மாதம் சுமந்து எமைப் பக்குவமாய் வளர்த்தெடுத்து
பார்போற்ற நாம் வாழ வல வழிகள் காட்டி விட்டு
இப்புவி விட்டேகி ஈரிரு ஆண்டுகள் ஆனது அம்மா!
எத்தனை யுகம் ஆனாலும் எம் உயிருள்ள வரை
நெஞ்சமதில் நினைவாக நீ இருப்பாய் தாயே!
நிலையான உன் நினைவும், பாசமும் நீக்கமற
நினைந்திருக்கும் அம்மா!
இன்நாளில் உன் ஆத்மா சாந்திபெற இறைவனை நாம்
வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நின் ஆத்ம சாந்திக்காய் அங்கலாய்க்கும்,
அன்புக் கணவர்: வை. தியாகராஜா (ஓய்வுபெற்ற ஆசிரியர்)
சத்தியபாமா ஸ்ரீகரன் குடும்பம், சிவானந்தராஜா குடும்பம்,
பாஸ்கரராஜா குடும்பம், சிவசோதிராஜா குடும்பம்,
சிவனேசராஜா குடும்பம், ரவீந்திரராஜா குடும்பம், பேரப்பிள்ளைகள்.

புத்தூர் மேற்கு, புத்தூர்



# மரண அறிவித்தல்



## இளையதம்பி வேலும்மயிலும் (E.V.M)

ஈஸ்வரி வீதி, மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், கதிரவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி வேலும்மயிலும் அவர்கள் 31.03.2012 சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான இளையதம்பி - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்புமகனும் செல்லக்கண்டு - சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும், மதுரம் (மாம்பழம்) அவர்களின் அன்புக் கணவரும் மணிவண்ணன் (கனடா), மதிவண்ணன் (பிரான்ஸ்), மேனகா (தங்கச்சி), மதியழகன் (வவி), மதிரூபன் (ரூபன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் மணிமாலா (கனடா), ரஜனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் சிவகாமி (ஐஸ்வர்யா - பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2012) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. தகனக்கிரியைக்காக பூதவுடல் சுப்பர்மடம் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கதிரவேற்பிள்ளை வீதி,
தம்பசிட்டி, பருத்தித்துறை

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்துக் கிடக்கிறார்கள்...!

கடந்தமாதம் 20ஆம்திகதிசெவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணி இருக்கும். ஒரு கூட்டம் முருகன் இடத்து பிரதேச சபை வாசலில் ஒன்று கூடியது. அவர்கள் ஒவ்வொருவரும் எதையோ பறிகொடுத்தவர்கள் போல நிற்கின்றனர். அந்தப் பிரதேச சபையில் ஒரு அலுவலாகச் சென்றிருந்த நான், என்ன ஏதுவென அறிவதற்காக அவர் கள் பக்கம் சென்றேன். ''கோடானு கோடி உழைக்கேக்கை வீட்டுக் கோடீக்கை ஒதுங்கி இருக்கிறவர்களுக்கு என்றைக்குமே விமோசனம் கிடையாது. அவர்களுக்கு ஒரு இடத்தையாவது இந்தச் சமூகம் விட்டுக் கொடுக்காது பாருங்கோ. ஒதுங்கிக் கொள்பவர்களை என்றைக்குமே பின்தங்கிய நிலைக்கு அடித்து துரத்தி விடுவார்கள். மக்களிடம் அடிக்கிற பணத்தை எண்ணி எண்ணியே காலத்த போக்காட்டுறாங்கள்'' என்று பிரபல சந்தையின் வியாபரி ஒருவர் புலம்பிக் கொண்டிருந்தார்.

உடலில் ஒரு சோர்வும், உழைப்பின் கனதியில் வியர்வைத் துளிகள் காய்ந்து ஓடு போலத் தேய்ந்து இருப்பதும் அவர் முகத்தில் தெரிகிறது. முடியும் என்று சந்தையில் வியா பாரியாக உழைக்கத் தொடங்கி நாளாந்தம் படும்பாடு வார்த்தைகளால் சொல்ல முடியாத அளவுக்கு அவரின் குரலில் தளம்பல் தெரிகிறது. எவர்தான் உதவுவார்கள். விழுந்து கிடந்தாலும் ஏறி மிதித்து செல்பவர்கள் இருக்கின்ற போது எப்படித்தான் இந்தக் கூட்டத்தின் மத்தில் அவர் பிரச்சினையை அவர்கள் தீர்த்து வைக்கப் போகிறார்கள். அந்த வியாபாரியின் புலம்பலை அந்தப் பிரதேச சபையில் வேலை செய்பவர்கள் எவருமே காதில் வாங்கியதாகத் தெரியவில்லை.

மக்களுக்காக வேலை செய்ய வந்தவர்கள் என்பதை மறந்து, தங்களுக்காக மக்களை வேலைக்கு இழுக்கின்றார்களோ, என்று எனக்குத் தோன்றியது. கோடிக்கணக்கான லாபத்தை பிரதேச சபைக்கு அள்ளிக் கொடுக்கும் அந்தப் பிரபல்ய சந்தையில் தான் பல பிரச்சினைகள் இன்றும் முடிவில்லாமல் தொடர்கிறது. பணம் இல்லாத போது தான் பல பிரச்சினை களை எதிர்கொள்ள நேரிடும். ஆனால் இங்கே கோடிக் கணக்கில் பணத்தினை இந்தச் சந்தையில் இருந்து எடுத்தும், கோடிக் கணக்கான பிரச்சினைகள் தீர்வு இன்றித் தொடர்கிறன.

சந்தைப் பிரச்சினை என்றாலே அந்தப் பிரச்சினையை எதிர்கொள்ள முடியாமல் ஒழிந்து விளையாடி வருகிறது பிரதேசசபை. சந்தை வியாபாரிகளால் என்ன செய்ய முடியும். பல மணித்தியாலயம் கடந்தும் அந்தப் பிரதேசசபை வாசலில் தவங்கிடக்கிறார்கள். அந்த முருகனே இவர்களைச் சந்தித்தாலும் வியப்பாக இருக்காது. இந்தப் பிரதேச சபையினரைச் சந்திப் பதுதான் வியப்பாக இருக்கும். எவருமே இக் கூட்டத்தைப் பார்க்கவில்லை. வேண்டாதவர்கள் அதாவது அழையா விருந்தாளிகள் வந்திருப்பது போல பிரதேச சபையினர் இவர்களைக் கண்டுகொள்ளவில்லை. வாசலில் தவம் கிடக்கும் இவர்களை பிரதேச சபையினர் சந்திக்க முடியுமா, முடியாதா என்று சொல்வதற்குக்கூட பெரிய வேலையாக கருதி நின்றனர் போலும், அதுதான் வியாபாரிகளை எவருமே கண்டுகொள்ளவில்லை. மதியம் கடந்து பசிக் களைப்பில் அந்த வியாபாரிகள் கூட்டமாக தவம் கிடக்கிறார்கள். திடீரென ஓர் ஊழியர் வந்தார். பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் நடக்கிறது என்று சொல்லிவிட்டு வியாபாரி களின் கதையைக் கேட்காமல் அரக்கப் பரக்கச் சென்று விட்டார். மணிரத்தினம் இயக்கிய 'அலை பாயுதே' படத்தில் வரும் ஒரு வசனம், ஒரு காட்சி போல. அந்த ஊழியர் வந்து வியாபாரிகளுக்குச் சொல்லிவிட்டுப் போன காட்சியும் இருந்தது.

வியாபாரிகளில் ஒருவர் ''அப்ப கூட்டம் முடியத்தான் எங்களை கூப்பிடப் போயினமோ.'' என்று சொல்ல, மற்ற வியாபாரி ''செயலாளரைச் சந்திக்க முடியுமோ? முடியாதோ?'' என்று தங்களுக்குள் கதைத்துக் கொண்டனர்.

என்ன செய்ய முடியும் வியாபாரிகளால்? நிற்போம், நின்று பார்ப்போம் என்று மீண்டும் முடிவெடுத்துக் கொண்டு நிற்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் அன்றைய நாள் வீண்பொழுதாகக் கழியப்போகுது என்பது தெரியாது. நேரம் செல்லச் செல்ல வீட்டு நினைவுதான் அவர்கள் மனதில் வந்து போகிறது.

ஒவ்வொருவரது வீட்டிலும் என்னென்ன வேலையோ. அவர்கள் இரண்டு மனநிலையில் நிற்கின்றனர். இதுவெல்லாம் வரி அறவிடுகின்றவர்களுக்குத் தெரியுமா?

30 வருடங்களுக்கு மேலாக அந்த சந்தையில் வியாபாரியாக தொழில் செய்து வந்தவர்களின் இடத்தினை எப்படி வேறொருவருக்குக் கொடுக்க மனம் வந்தது. வரி அறிவிடுகின்றவரின் காலில் விழுந்து கெஞ்சிப் பார்த்த போதும், மன்னர் பரம்பரை போல ஆதிக்கம் செலுத்தும் நாட்டாமை போல உதறித் தள்ளி விட்டு தனது கட்டளையைப் பிறப்பித்துக்கொண்டே இருக்கிறார். இவர் வரி அறவிட வந்தவரா? அல்லது வலியைக் கொடுக்க வந்தவரா என்பதுதான் தெரியாமல், அந்த வியாபாரிகள் அந்தப் பிரதேச சபை வாசலில் நிற்கின்றனர்.

பிற்பகல் 2.30 மணி ஆகிவிட்டது. கூட்டம் முடியவில்லைப் போலும். எவராவது வந்து சொல்லுங்களேன் என்று அலுவலக அறையை விவசாயிகள் எட்டிப்பார்ப்பது தெரிகிறது.

**கோப்பாய் சண்முகம்**

**கதையோடு செய்தி**

இந்த அதிகாரத்தை எவர் கொடுத்தது? கூட்டத்தில் மூழ்கி இருக்கும் அந்தப் பிரதேச சபை இந்தக் கூட்டத்தை பார்க்க நேரமில்லாமல் கைவிட்டது. பசி ஒரு பக்கம் வாடிய முகத்துடன் அந்தப் பிரதேச சபையை விட்டு வெளியேறினர். அந்த வியாபாரிகளைச் சந்திக்க நேரமில்லாத பிரதேச சபை எப்படி அந்த ஊர் மக்களின் அபிவிருத்தியில் முன் நிற்கப் போகிறது என்பது கேள்விக்குறியே.

கணக்குப் பரிசோதகர்களும் கடந்த மாதம் பிரதேச சபைகளுக்குள் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டு ''உலக்கை போற'' இடத்தை விட்டு விட்டு ஊசி போற இடத்தினைப் பிடித்துள்ளனர். இருந்தவரும் அப் படியே வந்தவனும் அப்படியே என்று எனக்குள்ளே சொல்லிக் கொண்டு அந் தப் பிரதேச சபையை விட்டு வெளியேறினேன்.


## வாகனங்கள் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் - வவுனியா, வவுனியா -யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம்-கொழும்பு சேவையில் ஈடுபடும் 54 இருக்கைகள் கொண்ட அசோக் லேலண்ட் 7 பஸ்கள், இசுசு லொறி (கண்டர்), உழவு இயந்திரம் (ரக்ரர்), ஓட்டோ, டிப்பர், மோட்டார் சைக்கிள் என்பன விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு இரு நாள்களும் நேரில் பார்வையிடலாம்.

உரிமையாளர்: S. ராஜன்

3ஆம் ஒழுங்கை, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 0770781516

(16461) (6,9,10)

## தேவ கிருபையின் திருநாள்



இறை இரக்கப் பெருவிழா

15.04.2012 திருப்பலி

பெரியவெள்ளி-

இறை இரக்க ஞாயிறு

நவநாள்:- 06.04.2012 - 14.04.2012 (தினமும் பிற்பகல் 3.00 மணி)

சாதி/ சமய/இன வேறுபாடின்றி தனியாகவோ, குழுவாகவோ இருக்கும் இடத்திலோ ஆலயத்திலோ 3 நிமிடமாவது தற்கொடையாகத் தன்னை எமக்குத்தந்து எம் மைத் தன்னுடன் இணைத்த இறையிரக்கம் உனக்குக் கிடைக்க இயேசுவிடம் ஜெபி.

(16469) (2-9-6) (உரோ 10:13, 10:20.) - ஆபிரகாம்


## மின்சாரம் தாக்கியவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஏப் 06

கட்ட வேலையில் ஈடுபட்டிருந்த வேளை மின்சாரத் தாக்குதலுக்கு ஆளான ஒருவர் எரிகாயங்களுடன்சிகிச்சைக்காக யாழ்.போதனாவைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் யாழ்.திருநெல்வேலி பொதுச் சந்தையில் நேற்றுமுன்தினம் மதியம் இடம்பெற்றது. சம்பவத்தில் உடுவில் தெற்கு புதுமடம் வீதியைச் சேர்ந்த கதிர் காமநாதன் கஜீதரன் (வயது-29) என்பவரே எரிகாயங்களுக்குள்ளானார்.

சந்தையின் மாடியில் கட்டடப்பணியில் ஈடுபட்டிருந்தபோது அலுமினியக் கம்பி ஒன்றை மேலே உயர்த்தியபோது அந்தக் கம்பி மின்சாரக் கம்பியில் மோதியதால் மின் தாக்கம் ஏற்பட்டதாகத் கூறப்பட்டது. (ந-4)


## வீடு வாடகைக்கு உண்டு

35/2, மின்சார நிலைய வீதி 3 ஆம் ஒழுங்கை (Cபொன்னம்பலம் வீதி), யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் விடு வாடகைக்கு உண்டு. தொடர்பு:-

INDRAN

0778810615, 0777231912

## பகுதிநேர வேலைவாய்ப்பு

வேலைவாய்ப்பை நாடி நிற்போருக்கு, சிரேஷ்ட அமைப்பாளரின் கீழ் காப்புறுதி ஆலோசகராக, யாழ்.மண்ணில் 50 வருடங்களாகச் சேவையாற்றிவரும் இலங்கைக் காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் பணியாற்ற வாய்ப்பு.

★ 2 வாரப் பயிற்சிக் காலத்தையுடையது.

★ பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

★ பணி நிலையங்கள்:

யாழ்ப்பாணம், நெல்லியடி, சங்கானை, கிளிநொச்சி.

அடிப்படைத் தகைமைகள்:-

★G.C.E.(O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.

★ 18 - 55 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையுடன் (*BIO DATA*) விண்ணப்பங்களை 25.04.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்க கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

C/O உதயன்,

விளம்பர இல. 4348,

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(16470) (2-9-6)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவை உயர்வு பாராட்டு



சிவப்பிரகாசம்
சிவஜெயந்தன்
முல்லைத்தீவு மாவட்ட
வடமாகாண
ஆளுனருக்கான பிராந்திய
ஆணையாளராகப் பதவி உயர்வு
பெற்று எமது மாவட்ட அபிவிருத்திக்
காகவும் மக்களின் உயர்வுக்கும்
அவர் இந்த சேவை உயர்வைப்
பெற்றமைக்கு எமது மனமுவந்த
மகிழ்ச்சியையும் பாராட்டையும்
தெரிவிக்கின்றோம்.

(16476) (2-6-7)

'லிப்கோ', முல்லைத்தீவு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், குமுழமுனை.





**பள்ளிச் சிறார்களுக்கான விடுமுறைகால வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன**

விவரங்களுக்கு :

Gateway Centre for ICT Education
347, Kasthuriyar Road, Jaffna
Phone : 021 567 5555 Fax : 021 222 7967
E - mail : gatewayjfn@sltnet.lk


## உடனடி வேலை வாய்ப்பு

1. ★ கனரக வாகன ஓட்டுநர்:
   i. செல்லுபடியான கனரக வாகன அனுமதிப்பதிரம் வைத்திருத்தல் வேண்டும்.
   ii. 2 வருடங்களுக்கு குறையாத கனரகவாகனத்தைச் செலுத்திய அனுபவம் வேண்டும்.
   iii. கொழும்பு ⇌ யாழ்ப்பாணம்
   யாழ்ப்பாணம் ⇋ திருகோணமலை
   பிரயாணப் பாதைகளில் ஊர்தியை செலுத்திய அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
   iv. வயது எல்லை : 25 - 45
   v. தமிழ்மொழியில் எழுத, வாசிக்கவும், சிங்களமொழியில் பேசவும் தெரிந்திருக்கவேண்டும்.
   vi. ஊதியம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
2. ★ கனரக வாகன உதவியாளர்:
   i. கனகர வாகனத்தில் உதவியாளராக பணியாற்றிய அனுபவம் உள்ளவர்கள்.
   ii. தமிழ்மொழியில் எழுத, வாசிக்கவும், சிங்களமொழியில் பேசவும் தெரிந்திருக்கவேண்டும்.
   iii. யாழ் ⇋ கொழும்பு
   யாழ் ⇌ திருகோணமலை
   பிரயாணப் பாதைகளில் வாகன உதவியாளராக பணியாற்றிய அனுபவம் உள்ளவர்கள்.
   iv. வயது : 20 - 40 வயது வரை
   v. ஊதியம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

★ நேர்முகப்பரீட்சை: 06,07, .4.2012 ஆம் நாள்களில் காலை 9 மணியில் இருந்து 12 மணிவரை நடைபெறும். சுயவிவரக்கோவையுடன் நேரில் வரவும்.

முகாமையாளர்,
லக்ஷ்மி என்ஜினியறிங், 105, இராஜ வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

## தவறணைகளுக்கு படையெடுப்பு

தென்மராட்சி, ஏப்.6

மது வகைகளின் விலை ஆதிகரிப்பை அடுத்து தவறணைகளை நோக்கிப் படையெடுப்பதால் மதுப்பிரியர்கள் திடீர் வருகையால் தவறணை வாடிக் கையாளர்கள் நீண்டநேரம் காத்திருக்க வேண்டியிருக்கிறது என்று விசனப்படுகின்றனர்.

மதுபானங்களின் விலைகள் அண்மையில் அதிகரிக்கப்பட்டதையடுத்து அதன் விலை கட்டுபடியாகாததால் அனுமதி பெறாத பெருமளவு மதுப் பிரியர்கள் (வயது வேறுபாடின்றி) தவறணை களைத்தேடி வருகின்றனர்.

இதனால் வாடிக்கையாளர்கள் நேர காலத்துடன் தவ றணைகளுக்கு சென்று காத்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

மதுபானங்களின் விலைகள் திடீரென அதிகரிக்கப்பட்டமை மதுபான நிலையங்களில் மதுபான வகைகளை வாங்குவோர் கண்காணிக்கப்படுகின்றமை போன்ற காரணத்தால் இரகசியக் குடிகாரர்கள் கள்ளுத் தவறணைகளை நாடுகின்றனர்.

பனங்கள் சீசன் ஆரம்பமாகி விட்டதால் மதுபானங்களின் விலை அதிகரிப்புக்கு தேவையான அளவு கள், பெறக்கூடியதாக இருந்த தாகவும், அண்மையில் ஏற்பட்டுள்ள சன நெருக்கடியினால் கள்ளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## ரூ. 250 மில். பெறுமதியான உபகரணம் வளிமண்டல திணைக்களத்துக்கு

கிழக்காசிய காலநிலை வலையமைப்பிலிருந்து செயற்கைக்கோள் மூலமாக காலநிலை தொடர்பான தகவல்களைப் பெறவும் பகுப்பாய்வு செய்வதற்கு மான கொழும்பு வளிமண்டலவியல் திணைக் களத்துக்கு 260 மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கொரியக் குடியரசு இந்த உபகரணங்களை நேற்றுக் கையளித்தது. இந்த நிகழ்வு கொழும்பு வளிமண்டல வியல் திணைக்களத்தில் நடைபெற்றது.

வளிமண்டலவியல் திணைக்களத்திலிருந்து கடல் மற்றும் வளிமண்டல வியல் சம்பந்தமான தரவுகளைப் பெறவும் அவற்றைப் பகுப்பாய்வு செய்யவும் இந்த வலையமைப் பினூடாக தகவல்களைக் பரிமாறவும் இவை பயன்படுத்தக் கூடிய தாக இருக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர, செயலாளர் எஸ்.எம்.மொஹமட், கொரியத்தூதர் கலாநிதி சூக்ஜோன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ம-4)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சிவப்பிரகாசம்
சிவ ஜெயந்தன்
வடமாகாண ஆளுனருக்கான
முல்லைத்தீவு மாவட்டப் பிராந்திய
ஆணையாளராகப் பதவி
ஏற்றுள்ளார். அவரின் சேவைகளின்
மூலம் எமது பிரதேசத்தில் துன்ப
துயரங்கள் நீங்கி மக்கள் நல்
வாழ்வு பெறவும் அவர்
பல்லாண்டு காலம் வாழவும்
வாழ்த்துகின்றோம்.

ந.வன்னியராசன்
கி.அ.சங்கம், முள்ளியவளை மேற்கு.

(16475) (2-6-7)

## சேவை நலன் பாராட்டு



சிவப்பிரகாசம்
சிவஜெயந்தன்
எமது மாவட்டத்தில் கடந்த காலங்
களில் ஆற்றிய சேவையை மேலும்
சிறப்பாக ஆற்றுவதற்கு
அவருக்குக் கிடைத்த முல்லை
மாவட்ட வடமாகாண
ஆளுனருக்கான பிராந்திய
ஆணையாளர் பதவி உயர்வை
எமது விவசாயிகள் சார்பில்
பாராட்டுவதில்
மகிழ்வடைகின்றோம்.

(16477) (2-6-7) - குமுழமுனை கமக்கார அமைப்பு.

## மாநகரசபை யாழ்ப்பாணம் கருங்கற்களுக்கான கூறுவிலை கோரல்

மாநகரசபையின் வேலைத்திட்டங்களுக்கு வேண்டிய கீழ்க்காணும் மூலப்பொருள்களை விரைவாக வழங்கக் கூடியவர் களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

கருங்கற்களின் அளவுகள் - கியூப் ஒன்றின் விலை

½" அளவுள்ள கருங்கல்
¾" அளவுள்ள கருங்கல்
1" அளவுள்ள கருங்கல்
1½" அளவுள்ள கருங்கல்
2" அளவுள்ள கருங்கல்
4" அளவுள்ள கருங்கல்
6" - 9" அளவுள்ள கருங்கல்
கருங்கல் கிறேசர் தூள்

குறிப்பு: 01. வற் வரி செலுத்துபவராயின் 01 கியூப்பின் விலையுடன் வற்வரியையும் உள்ளடக்கி விலையினைக் குறிப்பிடுக.
02. பறிக்கப்படுகின்ற இடத்தில் கருங்கற்கள் யாவும் கியூப்கட்டித் தரப்படல் வேண்டும்.

முடிவு திகதி: 18.04.2012 நண்பகல் 12 மணிக்கு பிந்தாமல் மேற்காட்டப்பட்ட வடிவில் படிவம் தயாரித்து பூர்த்தி செய்து "முதல்வர், மாநகரசபை, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு பதிவு தபாலில் அல்லது மாநகரசபையின் செயலாளர் பகுதியில் இதற்கென ஒதுக்கப்பட்ட பெட்டியில் கூறுவிலைகளை இடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி யோ. பற்குணராசா
மாநகர முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

## ஆறாம் ஆண்டு நினைவலைகள்

அமரர் நாகலிங்கம் கந்தையா



தோற்றம்: 26 ★ 03 ★ 1917
மறைவு: 13 ★ 04 ★ 2006

அன்பு எனும் சொல் அதனை
பாசம் என்னும் வலை வீசி
உறவு என்னும் ஓடம் அதில்
உரிமையுடன் வாழ்ந்து வந்தோம்
தேசம் விட்டு காலனால் விண்ணுலகுக்குச் சென்று
ஆண்டுகள் ஆறு ஆனதோ!
பொங்கி வரும் கண்ணீருக்கு அளவில்லையோ
உனை நினைத்துத் தேம்புகின்றோம்

42, வைரவர் கோயில் வீதி,
அரியாலை கிழக்கு.

பாசத்துடன்:
மனைவி, பிள்ளைகள்.

(16374) (2-6-7)


**பாடசாலை விடுமுறையை பயனுள்ளதாக மாற்றும் சிறுவர்களுக்கான கொம்ப்யூட்டர் பயிற்சி**

- Junior Diploma in Computer Science
- Junior Diploma in Computer Programming
- Junior Diploma in Graphics & Animation
- Junior Diploma in Digital Creativity
- Diploma in Cartoon Animation

Specially for Kids

இப்பயிற்சியின் சிறப்பம்சங்கள்

புதிய வகுப்புக்கள் 8-4-2012 ஆரம்பம்
Admissions are in progress - Register Now

பாடசாலைக்கல்வி மற்றும் தனியார் வகுப்புக்களை பாதிக்காத வகையில் பயிற்சி நேரங்களை தெரிவுசெய்யலாம்.

CSC-ASIAN COMPUTER EDUCATION
9, குமார வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம் T.P-021 2229191


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின்
உப அதிபர்
திருமதி பத்மமலர்
சிவகடாட்சம் அவர்களின் மாமி
திருமதி
கோபாலபிள்ளை பாக்கியலட்சுமி
அவர்கள் 03.04.2012 அன்று
இறைபதம்
அடைந்தமையையிட்டு
அன்னாரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்.**
யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்.

## இலங்கை வங்கியின் கிளைகள் நாளை திறந்திருக்கும்

யாழ்ப்பாணம், ஏப்.6

சித்திரைப் புத்தாண்டு தினத்தை யொட்டி இலங்கை வங்கிக் கிளைகள் அனைத்தும் நாளை 7 ஆம் திகதியும் எதிர் வரும் 12 ஆம் திகதியும் வாடிக் கையாளர் களின் நன்மை கருதி காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரையும் சேவைக்காக திறந் திருக்கும்.

மேலும் புத்தாண்டுக் கைவிசேடம் வழங்கல் எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை நடைபெறும்.

அன்றைய தினம் சேமிப்புக் கணக்கு களில் வைப்புச் செய்யும் வாடிக்கையாளர் களுக்கு அவற்றின் தொகைக்கேற்றவாறு சுவர்க்கடிகாரம், மின் அழுத்தி, வானொலி மற்றும் பெறுமதி யான பொருள்களும் பாடசாலை உபகரணங் களும் வழங்கப் படும் என்று அறி விக் கப்பட்டுள்ளது.

(வ-100)

## பணி நிலை வெற்றிடங்கள் சிவன் அருள் இல்லம், திருக்கேதீச்சரம்

மன்னார், அருள்மிகு திருக்கேதீச்சர ஆலயச் சூழலில் அமைந்துள்ள சிறுவர் இல்லத்திற்கு சமையலாளர்கள் பணிநிலையில் வெற்றிடங்கள் உண்டு. பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அமைந்து, இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்றக் கூடிய, இத்தகைய மனிதநேயப் பணிகளிலே ஆர்வமுள்ள, சைவசமய விழுமியங்களில் ஈடுபாடுள்ள நல்லொழுக்கமும் உடல் ஆரோக்கியமுள்ள, 30 முதல் 45 வயதுக்குட்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ தெரிவுகள் நேர்முகப் பரீட்சை மூலம் இடம்பெறும்.

அனுபவம், எதிர்பார்க்கும் வேதனம், தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம், பரிந்துரைக்கக் கூடிய நன்மதிப்புள்ள இரு தகுதிவாய்ந்த பெரியார்களின் பெயர்களையும் குறிப்பிட்டு விண்ணப் பிக்கவேண்டும்.

★ விண்ணப்ப முடிவு திகதி: 11.04.2012

முகவரி:
இல்லப் பணிப்பாளர்,
சிவன் அருள் இல்லம்,
திருக்கேதீச்சரம், மன்னார்.

தொலைபேசி: 023 323 0032
077 917 8244

## வணிகமாணி பெறுபேறுகள் வெளியாகின

யழ்ப்பணம்ஏப்.6

யாழ். பல்கலைக் கழகத்தின் வெளி வாரிப் பட்டப் பதிவு கள் பரீட்சை அலகி னால் இறுதியாக நடத் தப்பட்ட வணிகமாணி பகுதி-III பரீட்சைக் கான பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

பரீட்சார்த்திகள் பெறுபேறுகளை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சை அல கில் பார்வையிடலாம் என்று இணைப்பாளர் அறிவித்துள்ளார்.(ம-14)

## புதுவருட மலிவு விற்பனை

கோண்டாவில் நவரட்ணராஜா வீதியிலுள்ள D.S.I முகவர் களஞ்சியத்துக்கு அருகில் ஆண் கள், பெண்கள், சிறுவர்களுக்கான பாதணி கள் மற்றும் பூச்சாடிகள், பூக்கன்றுகளும் 7 ஆம், 8 ஆம் திகதிகள் (சனி, ஞாயிறு) மட்டும் விற்பனை செய்யப்படும்.

தொடர்பு:- 026 3265304

## கண்ணீர் அஞ்சலி

எமது குடும்பஉறவான
திருமதி
பாக்கிய லட்சுமி கோபாலபிள்ளை
அவர்களின் மறைவுச் செய்தி
கேட்டு மிகுந்த துயரடைவதோடு
அன்னாரின் மறைவால்
துய்ருற்றிருக்கும் அனைத்து எமது
குடும்ப உறவுகளுக்கும்
அனுதாபத்தைத் தெரிவித்து
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சர்ந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**நா.தெய்வேந்திரம் குடும்பத்தினர்.**
690/5, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

**டானியல் ஜேம்ஸ்**

*(ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர், துறைமுகக் கூட்டுத்தாபனம், திருகோணமலை)*

இளவாலை சென்.ஜேம்ஸைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட டானியல் ஜேம்ஸ் நேற்று (05.04.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற டானியல் - அன்னம்மா தம்பதியரின் ஏக புதல்வனும், காலஞ்சென்ற ஜெயம் நிரேசின் கணவரும் ஆவார். இவரது பூதவுடல் இன்று (06.04.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆனைக்கோட்டையில் இறுதி ஆரா தனை நடைபெற்று காக்கைதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிடாரி கோயிலடி, ஆனைக்கோட்டை. ஆ.அமலதாஸ் (சகோதரன்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** இன்று சில நபர்களின் சந்திப்பு நம்பிக்கை கூடும். திறமையை வெளிப்படுத்த சந்தர்ப்பங்கள் அமையும். தொழில் வகையில் சில மாற்றங்கள் ஏற்படுத்துவீர்கள். பணியில் சிறப்பு கூடும். நீண்ட நாள் கடன்மிகுதி ஒன்று வசூலாகும். நீதிமன்ற விவகாரங்கள் தங்களுக்குச் சாதகமாகும். தெய்வ வழிபாடுகள் மனமகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

**இடபம்:** உங்களின் பொறுப்பான செயற்பாடுகள் பிறரால் பெரிதும் பாராட்டப்படும். நிதி நிலையில் நிலவிய பற்றாக்குறை நீங்கும். குழந்தைகளின் கல்வி விடயங்களுக்காக அலைச்சல் இருக்கும். பணியில் எதிர்பாராத வகையில் சில தவறுகள் ஏற்படலாம்; கவனம். உடன்பிறப்புகளால் உதவிகள் கிடைக்கும்.

**மிதுனம்:** இன்று சில காரணங்களால் சற்று சோர்வுடன் காணப்பட்டபோதும் உற்சாகத்தோடு செயற்படுவீர்கள். எதிர்நோக்கியிருக்கும் செலவுகளுக்காக நிதிநிலையில் மாற்று ஏற்பாடுகள் செய்து கொள்வீர்கள். குடும்ப நலனில் கூடுதல் அக்கறை கொள்வீர்கள். தொழில் வகையில் லாபம் கூடும். அலுவலகப் பணிகளில் பளு கூடுதலாக இருக்கும்.

**கடகம்:** இன்று அடுத்தடுத்து பணிகள் ஏற்பட்ட போதும் நிதானமான செயல்பாடுகளால் எல்லா பணிகளையும் செய்து முடிப்பீர்கள். நெருங்கிய நபர் ஒருவரின் உதவி மிகுந்த பயனுள்ளதாக இருக்கும். வீடு மற்றும் வாகனம் மாற்றம் பற்றிய சிந்தனை மேலோங்கும். இல்லறத்துணையின் விருப்பம் ஒன்றை நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்:** இன்று தாங்கள் தங்களின் தீவிர சிந்தனையால் சில விவகாரங்களுக்கு நல்லதொரு தீர்வுகளை ஏற்படுத்துவீர்கள். கடன்களில் ஒரு பகுதி குறையும். தொழிலில் நிலவிய சிக்கல்களுக்கு தீர்வு காண்பீர்கள். உறவினர் ஒருவரின் செயற்பாடு அதிகம் யோசிக்க வைக்கும்.

**கன்னி:** இன்று சில எதிர்பாராத நிகழ்ச்சிகள் உங்கள் மனதை சிறிதளவு யோசிக்க வைக்கும். பெற்றோர்களின் அதிருப்திக்கு ஆளாவீர்கள். தொழில் ரீதியான புதிய ஒப்பந்தங்களுக்கான பணிகளில் தீவிரம் கொள்வீர்கள். அலுவலகப் பணிகளில் சக ஊழியர்களோடு வாக்குவாதம் வேண்டாம். நண்பர்கள் மத்தியில் உரையாடும்போது வார்த்தையில் கவனமிருக்கட்டும்.

**நாளை**

பங்குனி 25 சனிக்கிழமை 07.04.2012
திதி: பிரதமை மு.இ11.25 வரை
நட்சத்திரம்: சித்திரை மரண பி.இ 12.01 வரை
சுபநேரம்: 03.07-04.37 வரை
ராகு காலம்: 09.07-10.37 வரை

**துலாம்:** இன்று உங்களுக்குக் கிடைக்கும் தகவல்கள் மகிழ்ச்சி தரும். பணியில் பளு கூடிய போதும் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். ஒரு காரியத்துக்காகத் திட்டமிட்ட பணம் ஒன்றை மற்றொரு காரியத்துக்காக பயன்படுத்த வேண்டியிருக்கும். தொழிலில் சிற் சில பிரச்சினைகள் ஏற்பட்டு விலகும். நண்பர் ஒருவரின் பணிக்காக உங்களுக்கு அலைச்சல் செலவுகளும் ஏற்படும்.

**விருச்சிகம்:** உங்களின் மனதில் குழப்பம் சற்று கூடுதலாகவே காணப்படும். குழப்பத்தைத் தவிர்த்து, பணியை வரிசைப்படுத்தி செயற்படுத்துங்கள். எதிர்பார்த்த வரவுகள் சற்று தாமதப்படும். வியாபாரத்தில் மாற்றங்களுக்கு முயற்சிப்பீர்கள். தொழிலில் புதிய தொடர்புகள் ஏற்படும்.

**தனுசு:** இன்று மன உற்சாகம் தரும் நிகழ்ச்சிகள் அதிகம் இருக்கும். பற்றாக்குறை வரவுகள் என்ற போதும் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் சிரமம் இருக்காது. உறவினர் ஒருவரின் வருகை சில சங்கடங்களை ஏற்படுத்தலாம். வியாபாரத்தில் எதிர்பார்த்தது ஒன்று நடந்தது ஒன்றாக இருக்கும்.

**மகரம்:** இன்று தங்களின் பணிகளை தெளிவாகவும் விரைவாகவும் செய்து முடிப்பீர்கள். பணம் பற்றிய கவலைகள் மறையும். குழந்தைகளின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு அதற்காக சில ஏற்பாடு மேற்கொள்வீர்கள். அலுவலக பணிகளில் எதிர்பாராதவிதமாக பணியில் பளு கூடும். சுபகாரிய விடயமாக பயணம் இருக்கும்.

**கும்பம்:** இன்று திட்டமிட்ட பணிகளைத் திட்டமிட்டபடி செய்து முடிப்பீர்கள். பண வரவுகள் மகிழ்ச்சி தரும். குழந்தைகளுக்காக செலவுகள் இருக்கும். தொழிலில் எதிர்பாராத இடையூறுகள் ஏற்பட்டபோதும் தகுந்த நபர்களின் துணையோடு முடிவுக்குக் கொண்டு வருவீர்கள். பெற்றோர்களுக்காக சில செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

**மீனம்:** இன்று பணிகள் மற்றும் அலைச்சல் காரணமாக உடல்நிலையில் சோர்வு காணப்படும். வீட்டு காரியம் ஒன்றை சிரமத்தை பொருள்படுத்தாது செய்து முடிப்பீர்கள். குழந்தைகளின் மனமகிழ்ச்சிக்காக சிறு பிரயாணம் ஒன்று இருக்கும். அரசியல்வாதிகளின் தொடர்புகள் பயன் தரும். உறவினர்களின் வருகை இருக்கும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | 5 | | | | 7 | 8 | |
| | | 6 | | 4 | | 9 | 5 | 1 |
| 1 | 9 | | 5 | 3 | | 4 | | |
| | | | | | 6 | | | 7 |
| 8 | | | 3 | | 5 | | | 9 |
| 6 | | | 1 | | | | | |
| | | 9 | | 5 | 3 | | 1 | 2 |
| 7 | 3 | 2 | | 1 | | 5 | | |
| | 6 | 1 | | | | 3 | | 8 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 5 | 8 | 1 | 9 | 6 | 2 | 4 | 3 |
| 2 | 4 | 9 | 8 | 3 | 4 | 6 | 5 | 7 |
| 6 | 3 | 4 | 2 | 7 | 5 | 1 | 8 | 9 |
| 1 | 7 | 6 | 5 | 8 | 9 | 3 | 2 | 4 |
| 8 | 4 | 5 | 7 | 2 | 3 | 9 | 6 | 1 |
| 3 | 9 | 2 | 6 | 4 | 1 | 8 | 7 | 5 |
| 5 | 2 | 3 | 9 | 6 | 7 | 4 | 1 | 8 |
| 4 | 6 | 1 | 3 | 5 | 8 | 7 | 9 | 2 |
| 9 | 8 | 7 | 4 | 1 | 2 | 5 | 3 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மண்ணில் விழுந்த விதையாய்

**இன்று புனித வெள்ளி**

இன்று பெரிய வெள்ளி. கிறிஸ்தவர்கள் இயேசுவின் பாடுகளையும் மரணத்தையும் நினைக்கும் நாள். சாவினூடாக வாழ்வுக்கு கடந்து போதல் பற்றி தியானிக்கும் நாள். பாடுகளின்பரிசுபுதுவாழ்வு என்பதை நெஞ்சில் நிறுத்தும் நாள். இறப்பின் உட்பொருளை புரிந்து கொள்ள சந்தர்ப்பம் வழங்கும் நாள். இறப்பு மனித வாழ்வின் மறுக்க முடியாத ஒரு பகுதி பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்வின் ஏதோஒரு கட்டத்தில் இறப்பை எதிர்கொள்கின்றான். ஆனால் அவன் இறப்பை எதிர்கொள்ள நேரும் விதமும் இறப்புக்கு முன்பு அவன் வாழ்வை வாழ்ந்த வகையும் அவனது வாழ்வின் வீச்சை தீர்மானிக்கின்றன. ஒருவன் தனது வாழ்வை தனக்காக வாழ்தல் என்பதிலிருந்து பிறருக்காக வாழ்தல் என்பதை நோக்கி நகர்த்திச் செல்லும் பாங்கும் தனது வாழ்வின் முடிவாகிய மரணத்தை அவன் பிறருக்காக ஏற்றுக் கொள்ளும் அல்லது எதிர்கொள்ளும் தன்மையும் அவனது இவ்வுலக இருப்புக்கே புதிய பரிமாணம் ஒன்றை வழங்கி விடுகின்றது. அவனது இவ்வுலக வாழ்வைக் காலாதி காலத்துக்கு நினைவு கூரத்தக்க ஒன்றாக மாற்றி விடுகின்றது. அவனை உயிர்த்த மனிதனாக மாற்றி விடுகிறது. இத்தகைய வாழ்வை மரணம் வெற்றி கொள்வதில்லை. மாறாக இவர்கள் மரணத்தை வெற்றி கொண்டு விடுகின்றனர். இவர்கள் இனி உயிர்த்த மனிதர்கள்.

**எமது சூழல்**

மரணம் வாழும் மரணம் ஆளும் ஒரு மக்களினத்தைச் சேர்ந்தவர்கள் நாங்கள். பயங்கரமான அடக்குமுறைகளை எதிர்கொண்டு ஒரு விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து, அதன் உச்சமாக பயங்கரமானபோர் ஒன்றைச் சந்தித்து இழப்புக்களையே எம் சொத்தாக்கி மரணத்தையே எம் சொந்தமாக்கி சோகத்தையே எம் சுகமாக்கி வாழ நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள் நாங்கள். அதனால் எம் நினைவுகளில் நிழலாடும் முகங்கள் ஏராளம். பயங்கரமான அந்த போரின் பின்னணியில் எமது உறவுகள் சந்தித்த மரணங்களின் வகைகளும் ஏராளம். எண்ணுந்தோறும் மனங்கள் விம்முகின்றன. இதயம் அழுகின்றது. சோகம் சுமந்த மக்களினமாக எமது வாழ்வு நகர்கிறது. தனி மனிதர்களாக மட்டுமல்ல ஒரு மக்களினமாகவே இறந்து விடுவோமோ என்று அஞ்சும் சூழ்நிலையில் இன்று வாழ்கின்றோம். மரணத்தின் கோடுகளைத் தாண்ட முடியாது போய்விடுமோ கல்லறைகளின் கதவுகளைத் திறக்கவே முடியாது விடுவோமோ என்ற அங்கலாய்ப்பு எம்மையெல்லாம் வாட்டுகிறது.

**கல்லறைக் கடப்பு**

இத்தகைய பின்னணியில்தான் நாம் கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்பவற்றை ஆழமாகத் தியானிக்கும் பாஸ்கா காலத்துக்குள் காலடி எடுத்து வைக்கிறோம். கிறிஸ்துவின் வாழ்வு பாடுகள் மரணத்துடன் முடிந்த விடயமல்ல. அது கல்லறையைத் தாண்டிய கதை. புதிய வரலாறு. மரணத்தின் மறுபக்கம் உயிர்ப்பு என்ற எமது நம்பிக்கையை விதைத்த ஒளிக்கீற்று. துன்புறும் மக்கள் அனைவருக்குமான துருவவெள்ளி.

இயேசு ஏன் படுகொலை செய்யப்பட்டார்? என்ற வினாவை நாம் எழுப்புவோம் என்றால் அதற்கான விடை இயேசு தமது மக்களை தீமையின் பிடியிலிருந்து விடுவித்து, அவர்களுக்கு புதுவாழ்வு வழங்க முயன்றதால் தான் என்பதாகவே அமையும். உண்மையில் இயேசு தமது மக்களை அன்பு செய்தார். அவர்கள் மகிழ்வாகவும் நிம்மதியாகவும் வாழ வேண்டும் என்று எதிர்பார்த்தார். அவர்களை அடிமைப்படுத்தியவர்களையும் ஒதுக்கி வைத்தவர்களையும் எதிர்த்தார். இந்த உலக ஆட்சியின் தீமையின் கூறுகளை மிகச்சரியாக அடையாளம் கண்டார். வகுப்புவாதமும் பிரிவினையும் ஏற்றத்தாழ்வும் எவ்வாறு மனுக் குலத்தைக் கூறுபோட்டு வந்துள்ளது என்பதையும் பணமும் பதவி அதிகாரங்களும் வன்முறையும் எவ்வாறு இத்தகைய பிளவுண்ட சமூகத்தில் ஒடுக்குமுறையாளருக்குத் துணை போகின்றது என்பதையும் அவர் தெளிவாகப் புரிந்திருந்தார். தீமையினால் நிறைந்திருந்த இந்த உலக ஆட்சிக்கு மாற்றீடாக அவர் ஒரு புதிய ஆட்சியை முன்மொழிந்தார். இப்புதிய ஆட்சி ஏற்றத்தாழ்வும் பிரிவினையும் அற்ற ஒரு சகோதரத்துவ சமத்துவ ஆட்சி. இங்கு ஆணென்றுமில்லை, பெண்ணென்றுமில்லை, அடிமையென்றுமில்லை, உரிமைக்குடிமகனென்றுமில்லை, யூதனென்றுமில்லை, கிரேக்கனென்றுமில்லை. கிறிஸ்து இயேசுவுக்குள் அனைவரும் சகோதர சகோதரிகளே.

இத்தகைய உன்னத சமூகத்துக்கு வரமறுத்த அவர்களின் தவறுகளை அவர் சுட்டிக் காட்டினார். அனைவரையும் மனமாற்றத்துக்கு அழைத்தார். ஆனால் இயேசுவின் இறையாட்சிக் கனவு தமது தற்போதைய வாழ்வு தந்த சுகபோகத்தை பறித்து விடுமென உணர்ந்த பரிசேயரும் சதுசேயரும் ஏனையோரும் சினந்தனர். அவரைத் தொலைத்து விட வழி தேடினர். ஈற்றில் ஒன்று கூடிச் சதி செய்து அவரைக் கொன்றே போட்டனர்.

தீமையினால் நன்மையை வென்றுவிடலாம் என்றே அவர்கள் கருதினர். ஆயினும் அது தவறு என்று இறைவன் வெளிப்படுத்தினார். தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும். தர்மம் மறுபடியும் வெல்லும் என்பது ஆன்றோர் வாக்கு. இதற்கு இயேசு முன்னுதாரணமானார். இயேசுவின் உயிர்ப்பு உலக வரலாற்றில் புதிய அத்தியாயம் ஒன்றை ஆரம்பித்து வைத்தது. தன்னலம் மறுக்கும் வாழ்வும் வாழ்வின் முடிவும் ஒருபோதும் வீண் போகாது அது மண்ணில் விழுந்த விதையாய் அறுபதும் முப்பதும் நூறுமாக விளைந்து பலன் தரும் என்பதை அது உணர்த்தி நின்றது.

**உயிர்ப்பாய் வாழ்வோம்.**

உண்மையில் இவ்வுலகில் உயிர் வாழ்தலை முதன்மைப்படுத்தி நாம் உயிர்ப்பாய் வாழ மறுத்து விடுகின்றோம். உயிர் வாழ்தல் இவ்வுலகில் எமது பௌதீக இருப்பைக் குறிக்கிறது. ஆனால் உயிர்ப்பாய் வாழ்தல் என்பது எமது உயிர் வாழ்வை ஒரு உன்னத நிலைக்கு உயர்த்திக் கொள்வதைக் குறிக்கின்றது.

மற்றவர்களுக்காக வாழும் உயர்ந்த வாழ்வே உண்மையான உயிர்த்த வாழ்வு. அதனால் தான் இயேசு உயிரும் உயிர்ப்பும் நானே என்கிறார். கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால் தான் அது பயன்தரும். நாமும் மற்றவர்களுக்காக நமது வாழ்வை தாரை வார்த்து கொடுக்க தயாராகும் போதுதான், நாமும் பயனுள்ளவர்களாக உண்மையில் உயிருள்ளவர்களாக உயிர்த்தவர்களாக வாழ முடியும்.

தமது இன்னுயிரை முழு மனுக்குலத்துக்குமாக ஈகம் செய்த எங்கள் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து மானுட வாழ்வினதும் மரணத்தினதும் உட்பொருளை விளக்கும் உன்னதமானவராக உயர்ந்து நிற்கின்றார். எமது மண்ணிலும் பலர் தமது இன்னுயிரை ஈகம் செய்து எமக்கு பிறரன்பு வாழ்வின் முன்னுதாரணமாகத் திகழ்கின்றார்கள். சுயகடப்பே உண்மைப் பாஸ்கா என்பதை அவர்கள் எல்லோரும் வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள். ஆகவே இந்த நாள்களிலே அவர்கள் அனைவரையும் நினைப்போம். அவர்களது வாழ்வையும் மரணத்தையும் இயேசுவின் வாழ்வோடும், மரணத்தோடும் சேர்த்து ஒப்புக் கொடுப்போம்.

எம்மை ஒறுத்து இன்றும் எமது மண்ணில் துன்பம் சுமக்கும் மக்களின் துயர் துடைக்கும் மனப்பாங்கு எம்மில் பெருகவும் அதன் மூலம் எமது பிறரன்பு வாழ்வுக்கான அடித்தளங்களை நாங்களும் இட்டுக் கொள்ளவும் முயலுவோம்.

அருள்பணி ம.வி.இ.இரவிச்சந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தினர் தெற்கில் 'ஹீரோக்கள்'; வடக்கில் 'பூதங்கள்'

## நாடாளுமன்றில் அநுர குமார திஸநாயக்க

இங்கே நாம் இராணுவ வீரர்களுக்கு மாலை போட்டு கௌரவிக்கின்றோம். ஆனால் இவர்கள் தானே எமது பிள்ளையை கணவரை, மனைவியை, சகோதரனைக் கொன்றவர்கள் என்ற பீதியுடன் பார்க்கின்றனர். இராணுவத்தை ஒரு பயங்கர பூதமாகவே வடக்கில் பார்க்கின்றனர்.

இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸநாயக்க.

ஜெனிவா பிரேரணை தொடர்பான ஒத்திவைப்புப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் இடம்பெற்றது. சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடிய நாடாளுமன்றம் வாக்கெடுப்பின் பின்னர் நாளை மறுதினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சபையில் விவாதத்தை தொடக்கிய அநுரகுமார திஸநாயக்க, ஜெனிவாத் தீர்மானம் அரசியல் உள்நோக்கம் கொண்ட ஒன்று. இது அமெரிக்காவின் ஒரு சதி என்றும் குறிப்பிட்டார். அமெரிக்காவின் இந்த முயற்சி வெளிநாட்டுத் தலையீடுகளுக்கு பாதை அமைத்துக் கொடுத்துவிட்டது என்றும் கண்டித்தார். ஐக்கிய அமெரிக்க ராச்சியத்தில் ஒரு கைப்பொம்மையாகவே மனித உரிமைகள் சபை இயங்குகின்றது என்றும் சுட்டிக்காட்டினார்.

### தெற்கில் இராணுவத்தினர் ஹீரோ வடக்கில் பூதம்

பயங்கரவாதத்தை ஒழித்துவிட்டனர் என தெற்கில் இராணுவத்தினரை மாலையிட்டு கௌரவிக்கின்றோம். ஆனால் வடக்கில் இன்றும் இராணுவத்தைப் பெரும் பீதியுடனும் அச்ச உணர்வுடனும் தான் பார்க்கின்றனர். வடக்கில் இன்று 75 வீதம் இராணுவ நிர்வாகமே நடக்கின்றது. வீடுகள், பாடசாலைகள், பெருந் தெருக்கள், அரச அலுவலகங்கள் அனைத்தும் இராணுவ மயம். வீட்டில் இருப்பவர்கள் காலையில் வெளியே வரும்போது இராணுவத்தினரின் முகத்திலேயே விழிக்க வேண்டியுள்ளது. பாடசாலை மாணவிகள் பாதையில் செல்ல அஞ்சுகின்றனர்.

### எல்லாம் இராணுவ மயம்

இங்கே நாம் இராணுவ வீரர்களுக்கு மாலை போட்டு கௌரவிக்கின்றோம். ஆனால் இவர்கள் தானே எமது பிள்ளையை கணவரை, மனைவியை, சகோதரனைக் கொன்றவர்கள் என்று பீதியுடன் பார்க்கின்றனர். இராணுவத்தை ஒரு பயங்கர பூதமாக பார்க்கின்றனர்.

வட பகுதி மக்களின் மனநிலை கண்டறியப்பட்டு இராணுவ ஆட்சி அழிக்கப்பட்டு சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று மறுபக்கம் அரசையும் சாடினார் அநுரகுமார திஸநாயக்க.

### எதிர்மாறான வழிமொழிவு

இந்தப் பிரேரனையை வழிமொழிந்து உரையை ஆரம்பித்தார் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான லக்ஸ்மன் கிரியெல்ல. எடுத்த எடுப்பிலேயே ஜெனிவாத் தீர்மானம் ஒன்றும் புதிதல்ல. அவை ஜனாதிபதியின் நம்பிக்கைக்கு பாத்திரமானவர்களால் தயாரிக்கப்பட்டவை தான் என்றார் லக்ஸ்மன் கிரியெல்ல. இந்தக் கூற்று ஆளும் தரப்பினருக்கு கொதிப்பை ஏற்படுத்திவிட்டது. ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூச்சலிட ஆரம்பித்தனர்.

### அஸ்வரின் ஆட்சேபனை

இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டார் ஆளும் கட்சி உறுப்பினரான ஏ.எச்.எம்.அஸ்வர் சபாநாயகர் அவர்களே! ஒரு பிரேரணை முன்வைக்கப்பட்டால் அதனை வழிமொழிபவர் அப்பிரேரணையை ஆதரித்தே வழிமொழிய வேண்டும். இதுதான் நடைமுறை. ஆனால், இங்கே உறுப்பினர் அநுரகுமார திஸநாயக்க ஜெனிவாத் தீர்மானத்தைக் கண்டித்து தீர்மானம் கொண்டு வருகின்றார். ஆனால் வழிமொழியும் உறுப்பினர் கண்டித்துப் பேசுகிறார். இதற்கு இடமளிக்கக் கூடாது என்றார். இதனால் சபையில் சிறிது சலசலப்பு ஏற்பட்டது. எனினும் உறுப்பினர்கள் தமது கருத்துக்களை வெளியிடலாம் அதற்கு உங்கள் தரப்பில் பதில் அளிக்க முடியும் என்று சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்தார் சபாநாயகர்.

### அன்று இனித்தவை இன்று கசக்கின்றனவா?

அன்று புலிகளை அழிப்பதற்காக இந்தியாவும் அமெரிக்காவும் ஆயுதங்களையும் படைகளையும் வழங்கி உதவியபோது இனிப்பாக இருந்தது. இன்று அதே நாடுகள் குறைகளைச் சுட்டிக் காட்டினால் கசப்பாக இருக்கின்றதா? என்று கேட்டார் கிரியெல்ல. ஜனாதிபதியினால் உருவாக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைத்தானே நடைமுறைப் படுத்தும்படி கூறுகின்றனர். இதைக் கண்டு ஏன் அஞ்சுகின்றீர்கள்.

### ஆறு மாதங்களில் காணாமற்போனோர் விவரம் என்ன?

நீங்கள் ஒன்றை மறந்துவிடக் கூடாது. தீர்மானங்களை நிறைவேற்றியதுடன் அமெரிக்கா ஓய்ந்து விடவில்லை. கடந்த ஆறு மாதங்களில் கடத்தப்பட்டோர் மற்றும் காணாமற்போனோர் தொடர்பான விவரங்களைக் கேட்டுள்ளது. அந்த விவரங்களையாவது அரசு வெளியிடுமா என்றும் ஒரு போடு போட்டார் கிரியெல்ல.

### உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்தாமையே பிரச்சினைக்கு காரணம்

தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான சுரேஷ் பிரேமச்சந்திரன் இந்த அரசு காலங்காலமாகப் பல்வேறு உடன்படிக்கைகளை செய்துகொண்டுள்ளது. ஆனால் அதில் ஒன்றையாவது நடைமுறைப்படுத்தியதில்லை. உறுதிமொழிகள் எல்லாம் காற்றில் பறக்க விடப்பட்டதாலேயே இன்று ஜெனிவா தீர்மானம் என்றார். குறிப்பாக அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுகளின் போது சரணடைந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்ப் பட்டியலை வெளியிடுவதாக உறுதியளித்தனர். இன்று வரை அவற்றை வெளியிடவில்லை. இப்போதாவது வெளியிடுவார்களா? என்றார். ஆனால் ஆளுந் தரப்பிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை.

### ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கைகள் எல்லாம் குப்பைக் கூடையில்

நமது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவி ஏற்ற காலம் முதல் எத்தனையோ ஆணைக்குழுக்களை நியமித்துவிட்டார். ஆனால் அந்தக் குழுக்களின் அறிக்கைகள் எல்லாம் குப்பைக் கூடைகளில் தான் போடப்பட்டுள்ளன. ஆனால் அவர் நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை ஒன்றுதான் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவரை சென்றுவிட்டது. இதனைப் பாராட்ட வேண்டும்என்று குறிப்பிட்டார்ஐ.தே.க. உறுப்பினரான மங்கள சமரவீர.

### அன்றும் இன்றும் நான் மஹிந்தவின் வழியில் - மங்கள சமரவீர

மங்கள சமரவீர மற்றொரு விடயத்தையும் சபையில் அம்பலப்படுத்தினார்.

அதாவது இந்த சபையில் இருப்பவர்களைவிட நான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நெருக்கமாகப் பழகியவன்.

அப்போது ஜனாதிபதி கூறுவார் "மங்கள எந்த ஒரு நாட்டில் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுகின்றதோ அந்த நாட்டிற்கு எதிராக ஐக்கிய நாடுகள்



இரா.புத்திரசிகாமணி

சபை என்ன, நரகத்திற்கும் சென்று மோதுவேன் என்றார். நான் எப்போதும் அவருடைய கூற்றுக்களை மதிப்பவன். அதன்படிதான் நான் அன்றும் இன்றும் செயல்படுகின்றேன். இதில் இப்போது குற்றம் காண்பது தவறு என்று குத்திக் காட்டினார் மங்கள சமரவீர.

ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேறியுள்ள நிலையில் மஹிந்த அரசு சர்வதேச ரீதியில் படுதோல்வி அடைந்து நிர்வாணமாகக் காட்சியளிக்கிறது. இதனைப் புனிதமான தேசியக் கொடியைப் பயன்படுத்தி மூடிமறைப்பதற்கு அரசு முயற்சிக்கிறது என்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர.

அரசு உலகோடு ஒத்துப்போகாவிட்டால் ஆதரவளித்த 14 நாடுகளும் கைவிரிக்கும் எனவும் அவர் தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய பதுளை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர், "கல்யாணம் முடிந்த கையோடு மனைவி இல்லாமல் கணவன் கட்டிலில் காத்துக் கிடப்பதைப் போன்று மனித உரிமைகள் அமைச்சர் இல்லாமல் நடாளுமன்றில் விவாதம் நடந்து கொண்டிருக்கிறது" என்றார்.

### அமைச்சர் டக்ளஸின் நியாய வாதம்

இந்த விவாதத்தில் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மிகவும் உணர்வு பூர்வமாக அரசுக்கு ஆதரவாகப் பேசினார். ஜெனிவா தீர்மானத்தை தூக்கி எறிய வேண்டும் என்றார். வடக்கில் இப்போது எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை. மக்கள் நிம்மதியாக வாழ்கின்றனர். பாதுகாப்பு வலயங் கள் நீக்கப்பட்டுள்ளன. அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டு விட்டது என்று அரசின் சேவைகளை அடுக்கிக் கொண்டே போனார்.

### கூட்டமைப்பின் மீது பாய்ச்சல்

இப்படி பேசிக் கொண்டே போன அமைச்சர் டக்ளஸ் திடீரென ரி.என்.ஏ. மீது பாய்ந்தார். இன்று யாழ்ப்பாண மக்களுக்கு பிரச்சினை இல்லை. தமிழ்க் கூட்டமைப்பினர்தான் பிரச்சினைகளை உருவாக்குகின்றனர் என்று கூறினார். இது கூட்டமைப்பு உறுப்பினர்களைச் சீண்டிவிட்டது.

கூட்டமைப்பு உறுப்பினர்களான சரவணபவன், சிறீதரன், பிரேமச்சந்திரன் உட்பட பலரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்குப் பதிலடி கொடுத்துக் கொண்டே இருந்தனர். வழமை போல் அமைச்சர் உதயன் பத்திரிகையையும் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனையும் குறை கூறத் தவறவில்லை.

### ஜெனிவா தீர்மானத்துக்கு காரணமே அரசுதான்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் புலம்பெயர் தமிழர்களுடன் இணைந்து ஜெனிவாவுக்குக் கொண்டு சென்றது என்று கூறினார். ஆனால் இது தவறு. நாடு சுதந்திரம் அடைந்த காலம் முதல் தமிழ் மக்கள் ஓரம் கட்டப்பட்டு உதாசினப்படுத்தப்பட்டதாலேயே இந்த விடயம் ஜெனிவாவுக்குக் கொண்டு செல்லப்பட்டது என்றார் சம்பந்தர்.

தொடர்ந்து விவாதத்துக்கு பதிலளித்துப் பேசினார் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.

---

# கைதானவருடன் தொடர்பில்லை கட்சி உறுப்பினர் மட்டுமே: அங்கஜன்

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ். பொலிஸாரால் பண மோசடிக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள நபர் எனது பிரத்தியேக செயலாளர் அல்ல. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இலட்சக்கணக்கான உறுப்பினர்களில் ஒருவராகவுள்ளார். அவர் மீது பொலிஸார் எடுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கத் தயாரென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர் இ.அங்கஜன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரச நியமனங்கள் பெற்றுத் தருவதற்காகக் கூறி யாழ். இளைஞர், யுவதிகளிடம் பணத்தைப் பெற்று மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள ஆத்மராஜா சாயிசீசன் என்பவர் எனது பிரத்தியேக செயலாளர் எனக் குறிப்பிட்டு ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள இந்த நபர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இலட்சக்கணக்கான உறுப்பினர்களில் ஒருவரே தவிர ஒரு போதுமே அவர் என் பிரத்தியேக செயலாளராக இருந்ததில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் கட்சிப் பணிக்காக செயற்பட்டு வரும் ஆயிரக்கணக்கான உறுப்பினர்களில் ஒருவராக மட்டுமே இருந்துள்ள இந்த நபர் நீண்ட காலமாக கட்சி அலுவலகத்துடனான தனது தொடர்புகளைத் துண்டித்திருந்த நிலையிலேயே தற்போது பண மோசடியில் ஈடு பட்டுள்ளதாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டம் அனைவருக்கும் சமம் என்பதன்ால் இவர் மீது பொலிஸார் எடுக்கும் எந்த விதமான சட்ட நடவடிக்கைகளுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் என்ற வகையிலும் பல்லாயிரக்கணக்கான இளைஞர் யுவதிகளின் பிரநிதி என்ற வகையிலும் எனது முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கத் தயாராகவுள்ளேன்.

அரச நியமங்கள் தொடர்பில் யார் பணம் கேட்டாலும் எனக்கு முறையிடுமாறு நான் ஏற்கனவே பல தடவைகள் ஊடகங்கள் மூலம் இளைஞர், யுவதிகளிடம் கோரிக்கை விடுத்திருந்ததையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இனிமேலாவது அரச நியமனங்கள் தொடர்பில் இவ்வாறான நச்சுப் பாம்புகளிடம் ஏமாற வேண்டாமென இளைஞர், யுவதிகளிடம் கேட்டுக் கொள்வதுடன் யார் பணம் கேட்டாலும் எனது கவனத்துக்குக் கொண்டு வருமாறு வேண்டுகின்றேன். எம்மால் யாழ். மாவட்ட மக்களுக்கென முன்னெடுக்கப்பட்டு வரும் அப்பழுக்கற்ற மக்கள் சேவை தொடர இவ்வாறான பிரகிருதிகள் வேறு யாராவது இருப்பினும் அவர்கள் தொடர்பில் தகவல்களைத் தந்துதவுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

---

# குழந்தையின் கொலை; சந்தேக நபர்களுக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.6

யாழ்.நகரில் உள்ள சட்டவிரோத கருக்கலைப்பு நிலையம் ஒன்றில் பிறந்த குழந்தை கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

கருக்கலைப்பு நிலையத்தை நடத்தி வந்த நாட்டு வைத்தியர் ஒருவரையும் அதற்கு உடந்தையாக இருந்த பெண்ணையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க யாழ்.நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சந்தேக நபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி இருவரையும் பிணையில் விடுவிக்கும்படி கோரிக்கை விடுத்தார். எனினும் அதனை நிராகரித்து எதிர்வரும் 16 ஆம் திகதி வரை இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (10-4)

---

# புதிய சம்பளத்திட்டத்தை உடன் நடைமுறைப்படுத்துக

## கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.6

யாழ். மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுப் பணியாளர்களுக்கான புதிய சம்பளத் திட்டத்தை உடன் நடைமுறைக்குக் கொண்டு வருமாறு யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் தெரிவித்துள்ளார்.

தனது அனுமதியுடனேயே இந்தப் புதிய சம்பளத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படவேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

நட்டத்தில் இயங்கும் சங்கங்கள் இந்தச் சம்பளத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவது குறித்து ஆராய்ந்தே முடிவெடுக்க வேண்டும் என்று கூறினார்.

இது தொடர்பான கூட்டம் ஒன்று வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

கூட்டுறவுச் சங்கங்களில் பொதுமுகாமையாளர்கள், கணக்காளர்கள், ஆளணி முகாமையாளர்கள் இதில் கலந்துகொண்டனர்.

இதன்போதே அருந்தவநாதன் மேற்கண்ட விடயத்தைக் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது வெளியாகிய புதிய சம்பளத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான புதிய படிவம் ஒன்று திணைக்களத்தால் சகல சங்கங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்து அதை உடனடியாக சங்கங்கள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்க வேண்டும்.

இந்தக் கொடுப்பனவைச் சங்கங்கள் பணியாளர்களுக்கு வழங்குவதற்கு அந்தச் சங்கங்களின் இயக்குநர் சபை ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும்.

பின்னர் இயக்குநர் சபையின் அறிக்கை திணைக்களத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டு திணைக்கத்தின் அனுமதி பெற வேண்டும் என்று கூறினார். (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துச் சிற்பி ஆற்றுகைப் பள்ளி

O/L, A/L அழகியல் பாடம் கற்கும் மாணவர்களின் நன்மை கருதி செய்முறைப் பரீட்சைக்கு ஏற்ற விதத்தில் இசை ஆசிரியர் கலாவித்தகர் திரு. கி.பத்மநாதன், ஓவிய ஆசிரியர் திரு. எம்.எஸ்.சிவதாசன், நடன ஆசிரியர் திரு. து.ராமதாஸ், நாடகமும் அரங்கியலும் ஆசிரியர் திரு. தி.சிவகுமாரன் ஆகியோரின் வழிநடத்தலில் களப்பயிற்சிகள், கரத்தரங்குகள், செய்முறைச் செயற்பாடுகள், வதிவிட செயலமர்வுகள் உடனான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறுவதால் இடவசதியினைக் கருத்திற்கொண்டு ஒவ்வொரு பிரிவிலும் 20-25 மாணவர்கள் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

வெளிவாரிப் பட்டத்துக்கான அழகியல் பாட வகுப்புக்களும் இடம்பெறும்.

பதிவுகள் 06.04.2012 இலிருந்து 16.04.2012 வரை (மு.ப. 9.30 - பி.ப. 5.30) மேற்கொள்ளப்படும்.

தொலைபேசியூடாகவும் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

உங்களது உன்னத இலட்சியங்களை அடைந்து உலகில் ஒருவராய் உயர்ந்திட வாரீர்.

**முத்துச் சிற்பி**
**ஆற்றுகைப் பள்ளி**
**இருபாலை வீதி, கோண்டாவில்.**
**கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு முன்பாக**
**தொலைபேசி: 0718034248**

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 01.10.1972



மறைவு: 10.04.2011

**அமரர் நாகராசா கோணேஸ்வரன் J.P, B.Sc, MSW, SLAS**

(உதவி அரசாங்க அதிபர், புதுக்குடியிருப்பு, கோணேஸ் மற்ஸ் அக்கடமி நிறுவுநர் - அளவெட்டி)

இன்று (06.04.2012) கோணேஸ் அக்கடமி சார்பாக பழைய மாணவர்களாலும், கல்வி பயிலும் மாணவர்களாலும் அமரர் நாகராசா கோணேஸ்வரர் அவர்களின் ஞாபகார்த்தமாகவும் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனை பிரார்த்தித்து இரத்ததானம் வழங்கப்படுகின்றது.

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

கோணேஸ்மத்ஸ்,
அக்கடமி, சமூகத்தினர்.

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



**கணபதிப்பிள்ளை இராசலட்சுமி**

(ஓய்வுபெற்ற உப அதிபர் யா/ இணுவில் இந்துக் கல்லூரி)

கடந்த 04.04.2012 புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. 07.04.2012 சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலன்று இணுவில் சிவகாமி அம்மன் கல்யாண மண்டபத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும் வண்ணம் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இணுவில் சந்தி,
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

- குடும்பத்தினர்.

University of London
International Programmes

மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள லண்டன் பல்கலைக்கழ கத்தின் LLB கற்கைநெறி பற்றிய பூரண விளக்கங்களை கேட்ட றிய வேண்டுமா?

உங்கள் சந்தேகங்களுக்கு விளக்கமளிக்க லண்டனில் இருந்து வருகை தந்துள்ள ஆலோசகரை சந்தித்து பயன்பெறும் அரிய சந் தர்ப்பத்தை பயன் படுத்திக் கொள்ளுங்கள்.

இடம் : Spectra Skills
காலம் : 07.04.2012 காலை 11.00 - 13.00

spectra skills
19, Stanley Road, (2nd Floor Peoples' Bank Building) Jaffna.
Tel : 021 222 1422 / 1423.

## மறைந்த, வாழ்கின்ற கலைஞர்களின் விவரங்கள் கோரப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ்ப்பாணப் பிரதேச செயலக கலாசார பேரவையினால் மறைந்த, வாழ்கின்ற கலைஞர்களின் விவரங்கள் கோரப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் கோரியுள்ளார்.

யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவையினால் வெளியிடப்படவுள்ள கலாசார மலரில் உள்ளடக்குவதற்காக இந்த விவரங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் இந்த விவரங்களை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். பிரதேச செயலகக் கலாசார பேரவையில் ஒப்படைத்துதவுமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். (10, 15)

## கைதடி குடும்ப முன்பள்ளிகளின் விளையாட்டுப் போட்டி

கைதடி குடும்ப முன்பள்ளிகளின் விளையாட்டுப் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாலயத்தில் முன்பள்ளி இணைப்பாளர் திருமதி சுபத்திராதேவி தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (10, 15)

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், கே.கே.எஸ், றோட் யாழ்ப்பாணம். இணுவில்

A/L - 2014
கலை, வர்த்தகப் பிரிவு
மீண்டும் புதிய பிரிவு
நாளை ஆரம்பம்
(07.04.2012 சனி - 8.00 am)
யாழ். நகரில் - கலைப்பிரிவு - 8.00 am
வர்த்தகப் பிரிவு 9.00 am
இணுவில் - கலைப்பிரிவு 8.00 am
வர்த்தகப் பிரிவு 2.00 pm
உங்கள் அனுமதிகளை விரும்பிய இடத்தில் பெற்றுக்கொள்ளவும்.

குறிப்பு: யாழ். நகரில் பொருளியற் கல்லூரிக்கு வரும் மாணவர் கவனத்துக்கு எமது நிறுவனத்தை ஒத்த பெயரில் எமது நிறுவனத்துக்கு அருகில் மாணவர்களை ஏமாற்றும் வகையில் போலி நிறுவனம் ஒன்று இருக்கிறது. நீங்கள் அதை அவதானித்து வரவும். எங்கள் ஆசிரியர்கள் அங்கு கற்பிப்பது இல்லை என்பதை அறியத் தருகின்றோம்

Vacancy for Marketing Executive
Do yo like to earn more than Rs. 30,000 per Month. Do you have Bike licence
If your answer to the above is "Yes"
Then send us your CV to epixcell@gmail.com

காணியும் வீடும் விற்பனைக்கு
கோண்டாவில், பலாலி வீதியில் இராம கிருஷ்ணன் பாடசாலைக்கு அண்மையில் 2½ பரப்பு காணியில் ஐந்து அறைகள் கொண்ட நவீன வசதிகளுடைய வீடு விற்பனைக்குண்டு. அத்துடன் கோண்டாவில் டிப்போவுக்கு பின்புறமாக சிவன் கோயிலுக்கு அண்மையில் 25 பரப்பு தோட்டக்காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0776874886, 0776280885

வேலை ஆள் உடன் தேவை
எமது ஸ்தாபனத்துக்கு பொதி செய்வதற்கு பெண் பிள்ளைகள் உடன் தேவை.
தொடர்பு: 37/1, கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 2229516, 0776722055

ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா
சுவிஸ், இலண்டன் விசா
ஆலோசனைகளுக்கு:
திசைகாட்டி
(பிறை) லிமிட்
யாழ்ப்பாணம் - 021 2219016
- 021 2285541
- 011 2366925

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மீனம்மா கணேசமூர்த்தி



தம்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மீனம்மா கணேசமூர்த்தி நேற்று(05.04.2012) வியாழக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு (பிரபல வைத்தியரும் சோதிடரும்)-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், கணேசமூர்த்தியின் (இளைப்பாறிய தபால் அதிபரும் சோதிடரும்) அன்பு மனைவியும் ஜெயவேணி, ஜெயச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயும், சோதிநாதனின் (மதுவரி அத்தியட்சகர், யாழ்.மாவட்டம்) அன்பு மாமியும், விஷ்னுசந்தர் (சப்ரகமுவ பல்கலைக் கழகம்), தனஞ்சயன், சஞ்சயன், கிரிதரன் (ஹாட்லிக் கல்லூரி), கார்த்திகாயினி (தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை) ஆகியோரின் பிரியமான பேர்த்தியும், காலஞ்சென்ற லட்சுமிப்பிள்ளை மற்றும் கதிர்காமசுந்தரம் ஆகியோரின் சகோதரியும் ரவீந்திரன் (லண்டன்), குலேந்திரன் (லண்டன்), பவானி (பிரான்ஸ்), ராயினி (பிரான்ஸ்), சுபாஜினி (கனடா) ஆகியோரின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வத்தனை,
புலோலி மேற்கு, பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.



## முத்துக்குமாரு தங்கவேற்பிள்ளை

புங்குடுதீவு 3ஆம் வட்டாரம், குறிகாட்டுவானைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு தங்கவேற்பிள்ளை (05.04.2012) வியாழக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு (பொன்னம்பலம் வாத்தியார்) -செல்லம்மா தம்பதியரின் அன்புமகனும், வேலணை கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தம்பு - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், இந்திராணிதேவியின் அன்புக்கணவரும் பிரசாந், பிருந்தா ஆகியோரின் அன்புத்தந்தையும் ஏரம்பமூர்த்தி, சச்சிதானந்தன் (ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர்), சிவதாசபிள்ளை (ஓய்வு பெற்ற தபாலதிபர்), கோடிலிங்கம் (ஜேர்மனி), சசிதேவி (கனடா), காஞ்சனமாலை, சிவாஜி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஜெயராணிதேவி, மகாராணிதேவி, குகநாதன், ரஜனி, சரோஜினிதேவி, தயாநிதி, கமலாஜினி காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் நாகேந்திரன், செல்வராணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

421, கே.கே.எஸ் வீதி,
பன்றிக்கோட்டுப்பிள்ளையார்
கோயிலடி, யாழ்ப்பாணம்

தகவல்:
மு. ஏரம்பமூர்த்தி
மு. சச்சிதானந்தன்
மு. சிவதாசபிள்ளை



## சிவஸ்ரீ இராமநாதக் குருக்கள் சபேசக்குருக்கள்

*(பசுபதீஸ்வரர் தேவஸ்தான முன்னாள் பிரதமகுரு)*

பருத்தித்துறை, பசுபதீஸ்வரர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ இ. சபேசக்குருக்கள் 04.04.2012 புதன்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பருத்தித்துறை இராமநாதக்குருக்கள்- அமிர்தேஷ்வரி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான தெல்லிப்பழை சங்கீத ஆசிரியர் விஸ்வநாத ஐயர் - அர்த்தனாரீஸ்வரி தம்பதியரின் மருமகனும், சாரதாம்பாளின் (கிரிஜா) பாசமிகு கணவரும், பிரணவதர்சன் (ஆஸ்திரேலியா), பிரியதர்சினி, பிரசாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கைலாச ராஜூக் குருக்கள் (லண்டன்) மாமனும், சௌந்தரநாயகி, வரதராசக்குருக்கள், உஷாதேவி, வாகீஸ்வரக்குருக்கள் (லண்டன்), சசிதேவி, வாமதேவி, மாலினி, இரமேஸ்வரக்குருக்கள் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், V.A.சர்மா, சந்திரசேகர சர்மா, குமாரக்குருக்கள், யோகானந்தக் குருக்கள் (லண்டன்), சுந்தரராஜன் ஐயர், நாராயணவாத்தியார், ஜம்புநாதன் (மிருதங்கம்), இராஜராஜேஸ்வரி, வத்சலா, கண்ணு, கலா, ஜெயா, உஷா ஆகியோரின் அன்பு மைத்துனரும், நயினாதீவு கைலாசக் வாமதேவக் குருக்கள் - தேன்மொழி தம்பதியரின் சம்பந்தியும், மகதி, நேதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, (08.04.2012) ஞாயிற்றுக்கிழமை இறுதிக் கிரியைகள் நடைபெற்று, தகனக்கிரியைகாக மதியம் கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

56,B குவாரி றோட்,
தெகிவளை.

தகவல்:
இர. சந்திரசேகரசர்மா
(மைத்துனர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீல் பண்ணப்பட்ட காரீய அமில மின்கலம் (பெட்ரி)
ஸ்ரீ லங்காவில் SUNWAY மின்கலன்களுக்கு (பெட்ரி) களுக்கு ஏகப் பிரதிநிதி




பாவனை
UPS டெலிகொம் முறைமைகள்
இலத்திரனியல் (எலக்ட்ரொனிக்) தராசு, தீ பாதுகாப்பு,
அபாய அறிவிப்பு முறைமைகள்
வைத்திய உபகரணங்கள்
கடல்படு உபகரணங்கள், இயந்திரங்களை இயக்குதல்
சோலர் மற்றும் காற்றின் சக்தி



உடன் அழையுங்கள்
Premanath: 071-8475629



**2012/2013 Chemistry பிரத்தியேக வகுப்பு**

2012/2013 Batch Basic, General, Physical Chemistry Organic Chemistry கடந்தகால வினாக்கள் என்பன. ஆசிரியரால் (B.Sc(cey), M.Sc(cey) (Chemistry) (Sri Jaewardenepura University)தனியாகவோ குழுவாகவோ கற்பிக்கப்படும்.

தொடர்பு: 0776038913



## காணி விற்பனைக்கு

யாழ். திருநெல்வேலி விவசாயப் பண்ணைக்கு அண்மையில் இரண்டு பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0772205931


## தவறிவிட்டது

N.P.WB. 5293 மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு திருநெல்வேலிப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஐங்கரன் ஸ்ரோர்ஸ் திருநெல்வேலி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.


The Lover — Teen Girl

# கடை வாடகைக்குத் தேவை

எமது ஸ்தாபனம் யாழ் மாவட்டத்தில் தனது சேவையினை விஸ்தரிக்கும் முகமாக மானிப்பாய், நெல்லியடி, சாவகச்சேரி, யாழ் நகர் மத்தி போன்ற இடங்களில் காட்சியறை அமைப்பதற்கு சிறந்த கடைகள் தேவைப்படுகின்றது. எனவே வாடகைக்கு வழங்க விரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தொ.பேசி :- 0777251036 / 021 221 9377
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.


## "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"

# சிரார்த்த நாள் பிரார்த்தனை

06.04.2012



கரவருடம்
பங்குனித்
திங்கள்





| அமரர் சின்னையா பொன்னம்மா | அமரர் வெற்றிவேலு சின்னையா |
|---|---|
| திதி: பூர்வபக்க திரயோதசி | திதி: அபரபக்க திருதியை |
| திகதி : 04.04.2012 | திகதி : 09.04.2012 |

கொற்றவன் போல் வாழ்ந்த வெற்றி சின்னையரைப் பற்றியதால்
நற்பேறுகள் பல பெற்ற பொன்னனைய பொன்னம்மாள்
இப்புவியில் வாழ்வாங்கு வாழ்ந்தின்று எமைவிட்டேகி
உமையம்மை பாகரிடம் ஓடோடிச் சென்றுவிட்டார்
ஓராண்டென்ன நூறாண்டு சென்றாலும் இம் மண்ணில் – எம்
ஊனுடம்புள்ளவரை உம் நினைவகலாதே!
செம்மையாய் நாம் வாழ வழிசமைத்த பெற்றோரே
இம்மையும் மறுமையும் எமக்கருள்புரிவீரே!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆராதிக்கும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

பண்ணாகம்,
சுழிபுரம்.

## ஊடகவளங்கள் மற்றும் பயிற்சிமையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**Media Resources and Training Centre, University of Jaffna**

*விசேட மீள்பரீட்சைகள் (பழைய பாடத்திட்டம்)*
*இதழியல் டிப்ளோமா கற்கைநெறி (முழுநேரம், பகுதிநேரம்)*

இதழியல் டிப்ளோமா கற்கைநெறி முழுநேரம் அணி III (2008/2009), பகுதி நேரம் அணி II (2008/2010) கல்வியாண்டு மாணவர்களுக்கான விசேட மீள் பரீட்சை எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப படிவங்களை ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் பணிப்பாளர் / ஊடகவளங் கள் மற்றும் பயிற்சி மையம் ஊடாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 15.04.2012

பதிவாளர்


# அனைவருக்கும் இன்ரநெற்

இன் **NALIN**

Mega Sale 3100/= இலிருந்து

மிகக் குறைந்த விலையில் அதிவேக
HUAWEI Multi Dongle (E173, E177), ZTE Dongle 7.2, 14.2 வேக அளவுகளில் உத்தரவாதத்துடன் (Warranty)

Tel: 021 222 0838, 0777 667975
365 Luxan Plaza,
Kasthuriar Road,
Jaffna.

Tel: 021 222 1121, 1166, 0777 667974
No.195/2, Palaly Road,
Parameswara Junction,
Jaffna.



# நல்லூர் சரவணா ரெக்ஸ்



Mega Sales

சித்திரைப் புத்தாண்டுக்கு இன்னும் 05 நாள்கள் மட்டுமே!

சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை
(03.04.2012 - 12.04.2012) வரை
சிறுவர் முதல் பெரியவர்வரை
அனைவருக்குமான ஆடைகளை
மலிவாகப் பெற்றுக்கொள்ள....

சரவணா ரெக்ஸ் கிளைகளை நாடுங்கள்



நல்லூரில்......
526,529, பருத்தித்துறை வீதி,
நல்லூர் (பின் வீதி).
யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021 222 1723.

யாழ்.நகரில்.....
770, 772, கே.கே.எஸ்.வீதி,
(தட்டாதெருச் சந்தி), யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021 222 0421.

வடமராட்சியில்.....
இல.171, பிரதான வீதி,
நெல்லியடி (சம்பத் வங்கிக்கு அருகில்)
தொ.பேசி: 021 226 2992.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



2012ஆம் ஆண்டின் கம்பன் விழாவில்
பேராசிரியர் சாலமன் பாப்பையா
அவர்களால் நிறுவப்பட்ட
**ஏற்றமிகு இளைஞர்** விருதை
இன்று (06.04.2012) வெள்ளிக்கிழமை
பெற்றுக்கொள்ளும்

நாதஸ்வர வித்துவான் ஏ.டி.நல்லூர்

**சுப்புசாமி பாலமுருகன்**

அவர்களை வாழ்த்திப் பாராட்டுவதில்
பெரு மகிழ்வடைகின்றோம்.

அன்புடன் இனிதே வாழ்த்தும்,
**நல்லூர் நண்பர்கள்.**

# மரண அறிவித்தல்

## திருமதி பாக்கியலட்சுமி கோபாலபிள்ளை

### (நயினாதீவு)



நயினாதீவு, 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பாக்கியலட்சுமி கோபாலபிள்ளை நேற்று முன்தினம் (03.04.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கோபாலபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவசம்பு தம்பதியரின் மகளும், நாகமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான நடராசா, பரமசாமி, பத்மநாதன், குணரட்ணம் மற்றும் பழனிவேலு, சோதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், வாமதாசன் (ஓய்வுநிலை, இலங்கை மின்சாரசபை), வல்லிபுரம் (பிரான்ஸ்), உருத்திராம்பாள், அம்பிகைபாலன் (யா/நயினாதீவு கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்), சிவகடாட்சம் (பிரதம தபாலகம், யாழ்ப்பாணம்), திரிபுராம்பாள் (தில்லா) (யா/நாவந்துறை றோ.க. வித்தியாலயம்), ஜெகதாம்பாள் ஆகியோரின் அன்புத் தாயும், நாகலெட்சுமி, சிதம்பரேஸ்வரி (பிரான்ஸ்), பாலசுப்பிரமணியம் (கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்), நிர்மலாதேவி (யா/பெரியபுலம் மகா வித்தியாலம்), பத்மமலர் (யா/கொட்டடி நமச்சிவாய வித்தியாலயம்), காலஞ்சென்ற ருத்திரலிங்கம் மற்றும் இராஜேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான சபாரெத்தினம், இராசையா, சிவக்கொழுந்து, இராசம்மா மற்றும் கணபதிப்பிள்ளை (கனடா), காராளபிள்ளை, கனகம்மா (கனடா), லீலாவதி, சிவபாக்கியம், புவனேஸ்வரி, ஜெயலட்சுமி, சிவனேசரத்தினம் மற்றும் காலஞ்சென்ற மாசிலாமணி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற சங்கரதாசன் மற்றும் முரளிதாசன், ரூபதாசன், கிரியம்பிகை, பதிபா, தாயகி, பிறேமிலா, சேதுசங்கர், சாரங்கன், நிருஜா, ரஜீதன், கிரிஜாலினி, சுஜீதன், அபிதன், அபிஷனா, நாகதர்சினி, உஷாலினி, திரிபுரகஜன், பிறீதா, சர்மிலின், கேமன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சசிக்காவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2012) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ.சி.பழனிவேல் (சகோதரன்),
கோ.வாமதாசன் (மகன்).

**7 ஆம் வட்டாரம், நயினாதீவு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸ் – டிப்பர் – ஹைஏஸ் விபத்து காயமடைந்தவர்களில் ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், ஏப்.6

வவுனியாபொலிஸ் நிலையத்துக்கு அருகில் நேற்று முன்தினம் தனியார் பஸ்- டிப்பர்- ஹைஏஸ் வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் காயமடைந்தவர்களில் ஒருவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று மரணமானார்.

அனுராதபுரம் வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட, ஹைஏஸ் வாகனத்தில் பயணம் செய்த நிசான் சாந்த என்பவரே மரணமானவர் ஆவார். சடலம் அனுராதபுரம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் 18 பேர் காயமடைந்திருந்தனர். அவர்களில் 4 பேரின் நிலை கவலைக்கிடமாக இருந்தது.

வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நால்வரில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

காயமடைந்தவர்களில் பெரும்பாலானவர்கள் சிகிச்சையின் பின்னர் நேற்று வெளியேறினர் என வவுனியா வைத்தியசாலை வட்டாரங்கள் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் ஓமந்தை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ்ஸும், எதிரே வந்துகொண்டிருந்த டிப்பர் வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதிக் கொண்டன. அப்போது டிப்பர் வாகனத்தின் பின்னால் வந்து கொண்டிருந்த 'ஹைஏஸ்' வாகனத்தின் சாரதி தனக்கு முன்னால் நிகழ்ந்த விபத்தைக் கண்டு நிலைதடுமாறி, வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் டிப்பரின் பின் பகுதியில் மோதினார். இந்த விபத்துக் குறித்த விசாரணைகளை ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். அதிவேகமாக வாகனத்தைச் செலுத்தியதாலேயே இந்த விபத்து நிகழ்ந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.(10-15)



மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயம் அபிஷேகம் செய்யப்பட்டு 75 வருட நிறைவை முன்னிட்டு ஆலயப் பணியுடன் சமூகப் பணிகளைச் செய்தவர்களுக்கான பாராட்டு வைபவம் அண்மையில் பேராலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் திருமலை-மட்டக்களப்பு ஆயர் அதிவண.யோ. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை புலவர் அ.வெ.அரியநாயகத்தை மாலை அணிவித்து கௌரவித்தார். (ச-7)

## நிறைவடைந்தது மீளக்குடியமர்வு

### வவுனியா பிரதேச செயலர் அறிவிப்பு

வவுனியா, ஏப்.6

வவுனியா பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்வுப் பணிகள் யாவும் நிறைவடைந்துள்ளன என்று வவுனியா பிரதேச செயலர் அ.சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார்.

கடந்தகால போர் அனர்த்தங்களின்போது இடம்பெயர்ந்த மக்களின் மீளக்குடியமர்வு தொடர்பாகக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**மக்கள் இடம் பெயர்ந்த பகுதிகளில் காணப்பட்ட கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு மீள்குடியமர்வு இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.**

மக்கள் இடம்பெயர்ந்த பகுதிகளில் காணப்பட்ட கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு மீள்குடியமர்வு இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. ஆனால் சில குடும்பங்கள் மீளக்குடியமர்வதற்கு ஆர்வம் காட்டாமையால் ஒரு சில பகுதிகளில் மீளக்குடியமர்வு இடம்பெறவில்லை. சாளம்பைக்குளம் பகுதியில் 420 குடும்பங்கள் மீளக்குடியமர்வுக்கு பதிவுகளை மேற்கொண்டுள்ளபோதும் 120 குடும்பங்களே மீளக்குடியமர்ந்துள்ளன. மிகுதி 300 குடும்பங்களுக்கும் மீளக்குடியமர்வுக்குரிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டபோதும் இதுவரை மீளக்குடியமர முன்வரவில்லை.

இதேபோல கள்ளிக்குளம் பகுதியிலும் பெருமளவு மக்கள் மீளக்குடியமர்ந்தபோதும் இன்னமும் 100 குடும்பங்கள் வரை மீளக்குடியமர ஆர்வம் காட்டவில்லை. எனவே மீளக்குடியமராத மக்கள் மீள்குடியமர்ந்து அரச, அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் உதவிகளைப் பெற்றுத் தமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப முயற்சிக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை கடந்த காலங்களில் இராணுவத்தினரால் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் அமைக்கப்பட்டுக் கைவிடப்பட்ட இராணுவக் காவலரண்கள், மண் அணைகள் என்பன மக்களின் மீளக்குடியமர்வு கருதி இராணுவப் பொறியியல் பிரிவின் உதவியுடன் அகற்றப்பட்டு வருகின்றன.(க-400)

## மாயமாக மறைந்த சுழல் கலப்பைகள்

கிளிநொச்சி, ஏப்.6

கிளிநொச்சி பிரதேச விவசாயிகளின் தேவைகளுக்கென இந்திய அரசினால் வழங்கப்பட்ட உழவு இயந்திரங்களின் இரண்டு சுழல் கலப்பைகள் மாயமான முறையில் மறைந்துள்ளன.

மீளக் குடியமர்ந்த விவசாயிகளின் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஏதுவாக இந்திய உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டன. இவை உரிய முறையில் பயன்படுத்தப்படாது பராமரிப்பின்றி இருந்து வருகின்றன.

இந்த நிலையில் கிளிநொச்சிக் கமநல சேவை நிலையத்துக்கு வழங்கப்பட்ட உழவு இயந்திரங்கள் சில பழுதடைந்துள்ளன. அத்துடன் உழவு இயந்திரங்களுக்குப் பயன்படுத்தப்படும் இரண்டு சுழல் கலப்பைகள் மாயமான முறையில் மறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் இவை மறைந்துள்ளதாகவும் நீண்ட நாள்களுக்குப்பின்னரே பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டக் கமநல அபிவிருத்தித்திணைக்களமும், கிளிநொச்சி கமநல சேவைநிலையமும் ஒரே வளாகத்தில் அமைந்துள்ளதுடன் இங்கு 24 மணிநேரமும் இரண்டு காவலாளிகள் கடமையில் இருக்கின்றனர். அத்துடன் ஒரு சுழல் கலப்பை 380 கிலோ எடையுள்ளது. 2லட்சத்து 65 ஆயிரம் ரூபா பெறுமதியும் கொண்டது. இவ்வாறு 5 லட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு கலப்பைகளும் எவ்வாறு மறைந்தன என்ற சந்தேகம் பலரிடம் ஏற்பட்டுள்ளது.

இதுகளவாடப்படவில்லை. சிலரின் உதவியுடன் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருக்கலாம் என்றும் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இதே வேளை உழவு இயந்திரப் பெட்டியொன்றும் களவு போயுள்ளதாகச் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.(க-6)

## கிரவல் மண் அகழ்வினால் புது முறிப்பில் பெரும் அவலம்

கிளிநொச்சி புதுமுறிப்புப் பகுதியில் அளவுக்கதிகமான கிரவல் அகழ்ந்தெடுக்கப்படுவதனால் 12 குடியிருப்புக் காணிகள் மறைந்து போயுள்ளதுடன் குளத்தின் வான்பகுதிக்கும் பாதிப்பு அபாயம் தோன்றியுள்ளது.

கிளிநொச்சி புதுமுறிப்புப் பகுதியின் குளத்தை அண்மித்த பகுதியில் பெருமளவில் கிரவல் அகழ்ந்தெடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு கிரவல் அகழ்ந்து எடுக்கப்படுவதால் 12 குடியிருப்புக் காணிகள் இல்லாது போயுள்ளன.

இதே வேளை தற்போது குளத்தின் வான்பகுதியை அண்மித்த பகுதிகளிலும் கிரவல் அகழ்ந்தெடுக்கப்பட்டு அந்த இடம் வான் பகுதியை விட ஆழமான பகுதியாக மாறியுள்ளது. அதனால் குளத்துக்கும் பாதிப்பு ஏற்படும் அபாய நிலை காணப்படுகின்றது. நேற்றுமுன்தினம் இது தொடர்பாகப் பிரதேச மக்கள் கிராம அலுவலரிடம் முறைப்பாடு செய்ததையடுத்துக் கிராம அலுவலரினால் கிரவல் அகழ்வு தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இவ்வாறு சூழலுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையிலும் இங்குள்ள இயற்கை வளங்களை அழிக்கும் வகையிலும் வன்னிப் பகுதிகளில் மண் மற்றும் கிரவல் அகழ்வுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-6)

## மூன்று தலைமுறையாகியும் காணிப்பத்திரங்கள் இல்லை

பூநகரி நாச்சிக்குடா கரையோரக் கிராமமான ஜேம்ஸ் புரத்தில் மூன்று தலைமுறையாக வாழும் குடும்பங்களின் குடியிருப்புகளுக்கு இதுவரை காணி உறுதிகள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

90 வருடங்களுக்கு முன்னர் கடற்றொழிலில் ஈடுபட்ட 30 குடும்பங்கள் அன்றைய அரச நிர்வாகத்தினரால் இங்கு குடியமர்த்தப்பட்டன. இந்தக் குடும்பங்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்ற போதிலும் இன்றுவரை இவர்களின் குடியிருப்புகளுக்கான காணி உறுதிகள் வழங்கப்படவில்லை.

தமது காணிகளுக்கு அரச அனுமதிப் பத்திரமோ அல்லது உறுதியோ வழங்குமாறு உரிய அதிகாரிகளுடன் இதற்காக பல தடவைகள் தொடர்பு கொண்டு கேட்டபோதும் இவற்றை வழங்காது இழுத்தடிப்பதாகவும் தமக்குப் பின்னர் குடியமர்த்தப்பட்ட ஆயிரக்கணக்கான குடியிருப்பாளர்களுக்குக் காணி அனுமதிப் பத்திரங்களும் காணி உறுதிகளும் அரச நிர்வாகத்தினால் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். (க-9)

## முழுநிலாக் கலையரங்கு

வவுனியா வடக்குக் கல்வி வலயத்தினால் நடத்தப்படும் பௌர்ணமி தின முழுநிலாக் கலையரங்கு இன்று 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெறவுள்ளது.

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் இடம்பெறும் இந்த நிகழ்வு காலை 9.30 மணியளவில் புதுக்குளம் சித்திவிநாயகர் அரங்கில் இடம் பெறும்.

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன. (க-400)

## கல்முனை மாநகரசபை ஊழியர் 6பேர் நிரந்தர நியமனத்தில் புறக்கணிப்பு ஏன்?

அம்பாறை, ஏப்.6

கல்முனை மாநகர சபையின் கனிஷ்ட சேவை சார்ந்த ஊழியர்களுக்கு கடந்த வாரம் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டபோது சேவை மூப்பின் அடிப்படையில் ஐந்து தமிழர்களும், முஸ்லிம் ஒருவரும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்று அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

இந்தப் புறக்கணிப்பு விடயம் தொடர்பாக பொது ஊழியர் சங்கம் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு அவசர மனு ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது. இந்த மனுவிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

கல்முனை மாநகர சபையில் தொழிலாளர்களுக்குரிய ஆளணி வெற்றிடம் நிரப்ப நடவடிக்கை எடுக்கும்போது சேவை மூப்புக் கூடிய ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும் என்று கடந்த 19 ஆம் திகதி மனு மூலம் மாநகர முதல்வர் மற்றும் ஆணையாளரையும் கோரியிருந்தோம்.

எமது இந்தக் கோரிக்கை புறக்கணிக்கப்பட்டுள்ளது. மாநகர சபையில் கடமை புரியும் கனிஷ்ட ஊழியர்களுக்கு கடந்தவாரம் நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட போது சுகாதாரப் பகுதியில் சேவையாற்றும் சேவை மூப்புக்கூடிய ஐந்து தமிழர்களும், முஸ்லிம் ஒருவரும் புறக்கணிக்கப்பட்டுள்ளமையை ஊழியர்கள் எமது தொழிற்சங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

எனவே கல்முனை மாநகரசபை ஆணையாளரால் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு இந்த நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதா என்று பரிசீலிக்க வேண்டும்.

எனவே கல்முனை மாநகர சபையில் கனிஷ்ட சேவை சார்ந்த ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட பெயர்ப்பட்டியலை மாநகர ஆணையாளரிடமிருந்து தாங்கள் பெற்று ஆராய்வதுடன், தகைமையிருந்தும் புறக்கணிக்கப்பட்ட ஊழியர் [illegible] என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

## மரண அறிவித்தல்

### திருமதி கோமதியம்மாள் இராமச்சந்திரன்



இல 19, B.A. தம்பி லேன் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த திருமதி கோமதியம்மாள் நேற்று(05.04.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமச்சந்திரனின் (சீதா சோடா கம்பனி கணக்காளர்) அன்பு மனைவியும். காலஞ்சென்றவர்களான புதியவனம்பிள்ளை-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகலட்சுமி (பாப்பா), தனலட்சுமி (தனம்), பர்வதவர்த்தினி (காந்தி), காலஞ்சென்ற முத்துலிங்கம், சண்முகசுந்தரம் (சண்முகா அண்ணா, யாழ். மாவட்டக் கூட்டுறவு அச்சகப் பணியாளர், முன்னாள் தயா அச்சகப் பணியாளர்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான காளியப்பாபிள்ளை, நிதியாம்பிள்ளை, வீரக்குமாரசாமி (குமார்) மற்றும் சகுந்தலா ஆகியோரின் மாமியும், மணி, மீனா, கோமதி, இராமு, விஜி, நந்தினி, காலஞ்சென்றவர்களான உமா, சுதா மற்றும் காந்தன், விஸ்ணுப்பிரியா (பிரியா), கோமதி (மதி), லட்சுமணன், தர்விகன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2012) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 4 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 19, B.A. தம்பி லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெல்லுங்கள் ரூ. 5,000/=

## உங்களுக்கான கேள்வி இதுதான்...

ஏப்ரல் 6ஆம், 7ஆம் திகதிகளில் மகாஜன, ஸ்கந்தா அணிகள் மோதும் 12ஆவது "வீரர்களின் போரில்" வெற்றிபெறும் அணி எது?

- சரியான விடையை கீழே பிரசுரமாகும் கூப்பனில் எழுதி மகாஜனக் கல்லூரி மைதானம், ஸ்கந்தாக் கல்லூரி, உதயன் அலுவலகம் ஆகிய இடங்களில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுங்கள்.
- விடைகளை ஏப்ரல் 7ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னர் பெட்டிகளில் இடவேண்டும். அதற்குப் பின்னர் வரும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
- சரியான விடை அளிப்பவர்களில் இருந்து வெற்றியாளர் ஒருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு அவருக்கு ரூபா.5,000/= பணப்பரிசு வழங்கப்படும்.
- உதயனில் பிரசுரமாகும் கூப்பனில் எழுதப்படும் விடைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

**உதயன்**

ஏப்ரல் 6ஆம், 7ஆம் திகதிகளில் மகாஜன, ஸ்கந்தா அணிகள் மோதும் 12 ஆவது "வீரர்களின் போரில்" வெற்றி பெறும் அணி எது?

..............................




யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் வந்திருந்த இலங்கை கடற்படை உதைபந்தாட்ட அணியினர் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்கினர் (ங-23)

# பல்கலை அணி வென்றது

## சதமடித்துக் கலக்கினர் ஜெயரூபன், தஷரிதன்



ஜெயரூபன்



தஷரிதன்

யாழ்ப்பாணம், ஏப்.6

ஜெயரூபன், தஷரிதன் ஆகியோரின் சதம் கை கொடுக்க 121 ஓட்டங்களால் யாழ்.சென்ரல் விளையாட்டுக் கழக அணியை யாழ்.பல்கலைக்கழக அணி வெற்றி பெற்றது.

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடத்தப்படுகின்ற 9 ஆவது, அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான 50 பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் யாழ். சென்ரல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக் கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.பல்கலைகழக அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 299 ஓட்டங்களைப் பெற்றது.

ஜெயரூபன் 106 ஓட்டங்களையும், தஷரிதன் 102 ஓட்டங்களையும், லவன் 25 ஓட்டங்களையும், விதுஸ் 17 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ்.சென்ரல் அணி சார்பாக சலிஸ்ரன் 7 ஓவர்கள் பந்து வீசி 36 ஓட்டங்களுக்கு 4 இலக்கினையும், றொகான் 10 ஓவர்கள் பந்து வீசி 49 ஓட்டங்களுக்கு 2 இலக்கினையும், றஜீவ்குமார் 10 ஓவர்கள் பந்து வீசி 59 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

300 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் விளையாட்டுக் கழக அணியினர் 37 ஓவர்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 178 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டனர்.

றஜீவ்குமார் 63 ஓட்டங்களையும், பாலோந்திரா 31 ஓட்டங்களையும், கபில்தேவ் 13 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ்.பல்கலைகழக அணி சார்பாக ஜெனந்தனன் 6.2 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளையும், விதுஸ் 9 ஓவர்கள் பந்து வீசி 3 இலக்குகளையும் வீழ்த்தினர். (ங-23)

# வவுனியா தெற்கு வலய கபடியில் வென்ற அணிகள்

வவுனியா,ஏப். 6

வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கபடிச் சுற்றுப் போட்டியின் பெண்கள் பிரிவில் 15 வயதுப்பிரிவில் பூவரசங்குளம் மகாவித்தியாலயமும் 19 வயதுப் பிரிவில் பாவற்குளம் கணேஸ்வராவும் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டன.

இந்தப் போட்டியின் இறுதியாட்டங்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முஸ்லிம் மகாவித்தியாலய அஷ்ரப் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன.

முதலில் இடம் பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் பாவற்குளம் கணேஸ்வரா மகா வித்தியாலயமும் பரக்கும்பா மகா வித்தியாலயமும் மோதின. இதில் கணேஸ்வரா மகா வித்தியாலயம் 34:12 என்ற புள்ளி அடிப்படையில் பரக்கும்பா மகாவித்தியாலத்தை வெற்றி கொண்டது.

இந்தப் பிரிவில் மூன்றாமிடத்தை மடுக்கந்த மகா வித்தியாலயம் பெற்றுக் கொண்டது.

அடுத்து இடம் பெற்ற 15 வயது பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் பூவரசங்குளம் மகாவித்தியாலயமும், பாவற்குளம் மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன. இதில் பூவரசங்குளம் மகாவித்தியாலயம் 65:16 என்ற அடிப்படையில் வென்று சம்பியனாகியது.

இதேவேளை பெண்களுக்கான மென்பந்து துடுப்பாட்டப் போட்டியில் வவுனியா இறம்பைக்குளம் மகா வித்தியாலயம், வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி என்பன முறையே முதல் இரு இடங்களையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ங-400)

வவுனியா,ஏப். 6

வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலயமட்ட கபடிச் சுற்றுப் போட்டிகளின் ஆண்கள் பிரிவுகளில் பரக்கும்பா மகாவித்தியாலயம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகளின் இறுதியாட்டங்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை முஸ்லிம் மகாவித்தியாலய அஸ்ரப் விளையாட்டு மைதானத்தில் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எ.எம்.சுபைர் தலைமையில் இடம்பெற்றன.

முதலில் இடம்பெற்ற 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் பரக்கும் மகாவித்தியாலயமும் வவுனியா தமிழ் மகாவித்தியாலயமும் மோதின. இதில் பரக்கும்பா மகாவித்தியாலய அணி 34:05 என்ற புள்ளிகள் அடிப்படையில் தமிழ் மத்திய மகா வித்தியாலய அணியை வெற்றி கொண்டு இந்த வருட சம்பியனாகியது.

இந்தப் பிரிவின் மூன்றாம் இடத்தை மடுக்கந்தை மகாவித்தியாலயம் பெற்றுக்கொண்டது.

அடுத்து இடம்பெற்ற 15 வயதுப் பிரிவினர்களுக்கான போட்டியில் பரக்கும்பா மகா வித்தியாலயமும் பாவற்குளம் கணேஸ்வரா வித்தியாலயமும் மோதின. இதில் பரக்கும் மகாவித்தியாலயம் 42:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியனாகியது.

இந்தப் பிரிவில் மூன்றாமிடத்தை பண்டாரிக்குளம் விபுலாணந்தாக் கல்லூரி பெற்றுக் கொண்டது. (ங-400)

# யாழ்ப்பாணக் கல்லூரியிடம் வீழ்ந்தது சண்டிலிப்பாய் இந்து

வலி.வடக்கு, ஏப்.6

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம் பெற்ற ஆண்களுக்கான கூடைப் பந்தாட்டப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.



மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இறுதிப்போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டியில் இரு அணிகளும் சம நிலையில் காணப்பட்டாலும் கடைசி நேரத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றியை தனதாக்கிக் கொண்டது. சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி கடைசி கால் பாதி ஆட்டத்தில் காட்டிய வேகத்தை போட்டி ஆரம்பமாகிய மூன்று கால் பாதி ஆட்டங்களிலும் காட்டாத நிலமை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் பின்னடைவுக்கு காரணமாக அமைந்தது.

நான்கு கால் பாதி ஆட்டங்களைக்கொண்ட இந்தப் போட்டியில் முதல் மூன்று கால் பாதி ஆட்டங்களையும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தன்வசமாக்கியது. எனினும் இறுதிக் கால் பாதி ஆட்டத்தை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அதிரடியான விளையாட்டின் மூலம் 8:7 புள்ளிகள் என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

ஆட்ட இறுதியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 18:10 புள்ளிகள் என்ற அடிப்படையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை வென்று வலய சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (ங-86)

# இன்றைய ஆட்டங்கள்

வவுனியா, ஏப்.6

*முல்லைத்தீவு வலயப் பாடசாலைகளுக்கு இடையேயான கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று காலை 8.30 மணி முதல் வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.*

*இதில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு.*

*ஆண்கள் பிரிவு: புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, குமுழமுனை மகாவித்தியாலயம், முல்லைத்தீவு மகாவித்தியாலயம், விசுவமடு மகாவித்தியாலயம், உடையார்கட்டு மகா வித்தியாலயம், கதிர்காமர் வித்தியாலயம், வித்தியானந்தாக்கல்லூரி.*

*பெண்கள் பிரிவு: குமுழமுனை மகாவித்தியாலயம், சுதந்திரபுரம் அ.த.க.பாடசாலை, வித்தியானந்தாக் கல்லூரி, பாரதி வித்தியாலயம், முல்லைத்தீவு மகாவித்தியாலயம், உடையார்கட்டு மகாவித்தியாலயம்.* *(400-433)*

# முல்லை. வலய மட்ட பெருவிளையாட்டுகள்

வவுனியா, ஏப்.6

முல்லைத்தீவு வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலயமட்டப் பெருவிளையாட்டுக்களில் நாளை சனிக்கிழமை ஆண், பெண் இருபாலருக்குமான எல்லே சுற்றுப் போட்டிகள் இடம் பெறவுள்ளன.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் இந்தப் போட்டிகளில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

விசுவமடு மகாவித்தியாலயம், வற்றாப்பளை மகா வித்தியாலயம், வள்ளிபுனம் கனிஷ்ட வித்தியாலயம், கதிர்காமர் வித்தியாலயம், அலம்பில் றோ.க.த.க. பாடசாலை, உடையார் கட்டு மகாவித்தியாலயம், முல்லைத்தீவு மகா வித்தியாலயம்.

விக்னேஸ்வரா வித்தியாலய மைதானத்தில் இடம் பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் பெண்கள் அணி பற்றிய விவரம் வருமாறு.

பாரதி வித்தியாலயம், முல்லைத்தீவு மகாவித்தியாலயம், வள்ளிபுனம் கனிஷ்ட வித்தியாலயம், கதிர்காமர் வித்தியாலயம், வற்றாப்பளை மகாவித்தியாலயம், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, செம்மலை மகாவித்தியாலயம்.

ஆகிய அணிகள் பங்குபற்றவுள்ளதாக முல்லைத்தீவு கல்வி வலய உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மைக்கல்திலகராஜா தெரிவித்துள்ளார். (ங-400-433)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீற்றர்ஸன் அதிரடி; இங்கிலாந்து பலம்

கொழும்பு, ஏப்.6

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பீற்றர்ஸனின் அதிரடிச் சதத்தின் உதவியுடன் பலமான நிலையை இங்கிலாந்து எட்டியுள்ளது.


இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி கொழும்பு சரவணமுத்து மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இதில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 275 ஓட்டங்களுடன் தனது சகல இலக்குகளையும் இழந்தது. அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன சதமடித்தார். உப தலைவர் மத்தியூஸும், சமரவீரவும் அரைச்சதம் கடந்தனர். இங்கிலாந்தின் சுழல் மன்னன் சுவான் 4 இலக்குகளை வீழ்த்தினார். இந்நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காக களமிறங்கிய இங்கிலாந்து துடுப்பாட்டத்தில் இலங்கையின் பந்து வீச்சை வெளுத்துக்கட்டி பலமான இலக்கு நோக்கி நகரத் தொடங்கியது. இங்கிலாந்து அணித் தலைவர் அன்ட்ரூ ஸ்ட்ரோஸ் அரைச்சதம் அடித்து ஆட்டமிழந்தார்.

நேற்றுமுன்தினம் ஆட்ட நேர நிறைவில் களத்தில் குக்கும், ரொட்டும் ஆட்டமிழக்காது இருந்தனர்.

நேற்று போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் தொடர்ந்தது. இங்கிலாந்து முதல் நாளைப் போலவே தொடர்ந்தும் துடுப்பால் மிரட்டியது. அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான குக் சதமடிக்கும் வாய்ப்பை 6 ஓட்டங்களால் தவறவிட்டு டில்ஷானின் பந்தில் 94 ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து களமிறங்கிய பீற்றர்ஸன் ஒரு நாள் போட்டிகளைப் போல அதிரடியாக ஆடி இங்கிலாந்தின் ஓட்ட வேகத்தை விரைவாக உயர்த்தினார். மறுமுனையில் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த ரொட் 64 ஓட்டங்களுடன் ஹேரத்தின் சுழலில் சிக்கினார். அவரின் இழப்பைத் தொடர்ந்து களமிறங்கிய பெல் ஒரு முனையில் இலங்கையின் பந்து வீச்சை தாக்குப் பிடிக்க மறுமுனையில் பீற்றர்ஸன் பந்துகளை பவுண்டரிகளாகவும், சிக்ஸர்களாகவும் மாற்றிக்கொண்டிருந்தார். பெல் 18 ஓட்டங்களுடன் வெளியேற பின்னர் களமிறங்கிய பிரையரும் சொற்ப ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார். அதன் பின் சதமடித்து கலக்கிய பீற்றர்ஸனும் ஹேரத்தின் சுழலில் வீழ்ந்தார். அவர் 165 பந்துகளில் 151 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். சகல துறை வீரர் பட்டேல் 29 ஓட்டங்களுடன் வெளியேற இங்கிலாந்தின் இலக்குகள் மளமளவென சரிந்தன. ஹேரத் ஆட்டத்தின் பிற்பகுதியில் தன் கைவரிசையைக் காட்டியதே இதற்குக் காரணம். இறுதியில் 152.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து இங்கிலாந்து அணி 460 ஓட்டங்களைக் குவித்தது. இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத் 6 இலக்குகளைச் சாய்த்தார்.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காக இலங்கை களமிறங்கியது. எனினும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் திரிமன்னேயுடன் வழக்கமாக இணைந்து இறங்கும் டில்ஷானுக்குப் பதிலாக 'நைட் வோச் மன்' தம்மிக்க பிரசாத் களமிறங்கினார். ஆட்டத்தில் வீசப்பட்ட ஒரேஒரு பந்துப் பரிமாற்றத்தை முழுமையாக எதிர்கொண்ட பிரசாத் ஓட்டங்கள் பெறாவிட்டாலும் இலக்கு இழப்பைத் தவிர்த்தார். எனினும் உதிரியாக நான்கு ஓட்டங்கள் இலங்கைக்கு கிடைக்க மூன்றாம் நாள் ஆட்டநேர நிறைவில் இரண்டாவது இன்னிங்ஸில் இலங்கை இலக்கு இழப்பின்றி 4 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நான்காம் நாள் ஆட்டம் இன்று தொடரும். பலமான ஆரம்ப அடித்தளமிட்டு மிகப் பெரிய ஓட்ட எண்ணிக்கையை இலங்கை எட்டாவிட்டால் இந்தப் போட்டியில் இங்கிலாந்து வெற்றிபெறுவதை தவிர்க்க முடியாது போய்விடும். (ங)





இலங்கை எதிர் இங்கிலாந்து
இலங்கை - 275 & 4/0 இங்கிலாந்து - 460

இங்கிலாந்து

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ஸ்ட்ரோஸ் | c பிரசன்ன ஜெயவர்த்தன b டில்ஷான் | 61 | 126 | 4 | 0 |
| குக் | c மஹேல b டில்ஷான் | 94 | 278 | 9 | 0 |
| ரொட் | c மஹேல b ஹேரத் | 64 | 137 | 7 | 0 |
| பீற்றர்ஸன் | lbw b ஹேரத் | 151 | 165 | 16 | 6 |
| பெல் | c ரந்திவ் b பிரசாத் | 18 | 53 | 1 | 0 |
| பிரையர் | c பிரசாத் b ஹேரத் | 11 | 26 | 2 | 0 |
| பட்டேல் | c பிரசாத் b ரந்திவ் | 29 | 72 | 1 | 0 |
| பிரஸ்னன் | b ஹேரத் | 05 | 17 | 0 | 0 |
| சுவான் | c டில்ஷான் b ஹேரத் | 17 | 33 | 1 | 1 |
| அன்டர்சன் | lbw b ஹேரத் | 02 | 06 | 0 | 0 |
| பின் | (ஆட்டமிழக்காமல்) | 02 | 04 | 0 | 0 |

இலக்கு இழப்பு: 1-122, 2-213, 3-253, 4-347, 5-380, 6-411, 7-419, 8-454, 9-458, 10-460
உதிரிகள் 6
மொத்த ஓட்டங்கள் 460

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| லக்மால் | 22 | 4 | 81 | 0 |
| தம்மிக்க பிரசாத் | 23 | 8 | 63 | 1 |
| ஹேரத் | 53 | 9 | 133 | 6 |
| டில்ஷான் | 20 | 4 | 73 | 2 |
| ரந்திவ் | 34.3 | 4 | 107 | 1 |

ENGLAND CRICKET

இலங்கை (இரண்டாவது இன்னிங்ஸ்)

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| பிரசாத் | (ஆட்டமிழக்காமல்) | 0 | 6 | 0 | 0 |
| திரிமன்னே | (ஆட்டமிழக்காமல்) | 0 | 0 | 0 | 0 |

உதிரிகள் 4
மொத்த ஓட்டங்கள் 4

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| அன்டர்சன் | 1 | 1 | 0 | 0 |

Sri Lanka Cricket

## இது எங்களுக்கு புதிது

மும்பை இந்தியன்ஸ் அணிக்கெதிரான ஆட்டம் இடம்பெற்ற சென்னை எம்.ஏ.சிதம்பரம் மைதானத்தின் ஆடுகளம் குறித்த அறிவு சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு இருந்திருக்கவில்லை எனவும், அதன் காரணமாக ஆட்டத்தில் தோல்வியடைய வேண்டி ஏற்பட்டது எனவும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் பயிற்றுவிப்பாளர் ஸ்டீவன் பிளமிங் தெரிவித்துள்ளார்.

இந்த ஆட்டம் இடம்பெற்ற ஆடுகளம் புதிய வடிவத்தில் காணப்பட்டது. வழக்கமான சென்னை ஆடுகளம் போலல்லாது அந்த ஆடுகளத்தில் அதிகமான புற்கள் காணப்பட்டதுடன், ஆங்காங்கே ஆடுகளத்தில் மாற்றங்களும் காணப்பட்டன. ஆட்டத்தின் ஆடுகளம் வித்தியாசமானதாகக் காணப்பட்டதாகத் தெரிவித்த ஸ்டீவன் பிளமிங், பழக்கமான ஆடுகளங்களில் பங்குபற்றும் போது சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வெற்றிகளைப் பெற்றுக்கொண்டு வந்ததாகத் தெரிவித்தார்.

மும்பை அணியைப் போன்றே சென்னை அணியும் ஆடுகளம் எவ்வாறு இருக்கும் என்று அறியாதிருந்ததாகத் தெரிவித்த ஸ்டீவன் பிளமிங், அந்த நிலைமை சொந்த மைதானத்தில் விளையாடும் அனுகூலத்தை தங்களது அணிக்கு இல்லாமற் செய்திருந்ததாகத் தெரிவித்தார். தோல்விக்கான சாட்டாக இதைக் கூறவில்லை எனத் தெரிவித்த அவர், இது முழுமையான உண்மை எனவும் தெரிவித்தார்.

எனினும் ஆடுகளம் தொடர்பாக அறிந்து கொண்டதாகத் தெரிவித்த அவர், இனிவரும் ஆட்டங்களில் சிறப்பாக ஆடக்கூடியதாக அமையும் எனவும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தின் போது தொடர்ச்சியான இடைவெளிகளில் இலக்குகளை இழந்து வந்ததாகத் தெரிவித்த அவர், எனினும் சில தருணங்களில் உண்மையான திறமையை வெளிப்படுத்தக்கூடியதாக அமைந்ததாகவும், அது எதிர்வரும் ஆட்டங்களுக்கு சிறப்பானதாக அமையும் எனவும் தெரிவித்தார். (5)

## தொடரும் மெஸ்சியின் சாதனை

மெஸ்சியின் அசத்தல் சாதனை கோல் கைகொடுக்க, சம்பியன்ஸ் லீக் அரையிறுதிக்கு பார்சிலோனா அணி முன்னேறியது.சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரின், காலிறுதி இரண்டாவது லீக் போட்டியில் பார்சிலோனா, ஏ.சி.மிலன் அணிகள் மோதின. போட்டியின் தொடக்கத்தில் இருந்தே மிலன் அணியினர் முரட்டு ஆட்டம் ஆடினர். இதனால், 11 ஆவது நிமிடத்தில், பார்சிலோனா அணிக்கு கிடைத்த 'பெனால்டி' வாய்ப்பில், மெஸ்சி முதல் கோல் அடித்தார். 32 ஆவது நிமிடம் இதற்கு மிலன் அணியின் நாசரினோ பதிலடி கொடுத்தார். முதல் பாதி முடிய சற்று முன் (41 ஆவது) மெஸ்சி, 'பெனால்டி' மூலம் மற்றொரு கோல் அடித்தார். 53 ஆவது நிமிடம் இனியஸ்டா, தன்பங்கிற்கு ஒரு கோல் அடிக்க, பார்சிலோனா அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, அரையிறுதிக்கு முன்னேறியது.

**மெஸ்சி சாதனை**

இந்தப் போட்டியில் 2 கோல் அடித்த மெஸ்சி, சம்பியன்ஸ் லீக் தொடரில் குறைந்த (24) வயதில், 51 கோல்கள், ஒரே சீசனில் அதிக கோல்கள் 14 அடித்த வீரர் என்ற சாதனை படைத்தார். இதற்கு முன் லா லிகா வீரர் ரூடு வான் நிஸ்டல்ரூய் (நெதர்லாந்து) ஒரு தொடரில் 12 கோல்கள் அடித்து இருந்தார். (5)

## செல்சி, ரியல் மாட்ரிட் அரையிறுதிக்கு தகுதி

சம்பியன்ஸ் லீக் அரையிறுதி போட்டியில் பார்சிலோனா- செல்சி, ரியல் மாட்ரிட்- பேயர்ன் மியூனிச் அணிகள் மோதுகின்றன.

நேற்றுமுன்தினம் லண்டன் ஸ்டிராம் போர்டு பிரிட்ஜ் மைதானத்தில் செல்சி, பென்பகா அணியை சந்தித்தது. ஏற்கனவே நடந்த முதல் லெக் காலிறுதி ஆட்டத்தில் செல்சி 1-0 என்று வெற்றி பெற்றிருந்தது.

ஆட்டத்தின் 21ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை செல்சி வீரர் பிராங்க் லேம்பர்டு கோலாக மாற்றினார். இதற்கு 85ஆவது நிமிடத்தில் பென்பகா அணியின் சேவி கார்சியா பதில் கோல் அடித்தார்.

ஆனாலும் கடைசியில் 92ஆவது நிமிடத்தில் செல்சி அணியின் ரால் மெர்சிலஸ் 2ஆவது கோலை அடித்தார். இதன் மூலம் 2-1 என்ற கணக்கில் செல்சி வெற்றி பெற்று 3-1 என்ற சராசரி கோல் அடிப்படையில் அரையிறுதிக்கு முன்னேறியது.

மற்றொரு ஆட்டத்தில் ரியல்மாட்ரிட் 5-2 என்ற கோல் கணக்கில் ஏபோல் நிக்கோசியா அணியை வீழ்த்தியது. முதல் ஆட்டத்தில் ரியல்மாட்ரிட் 3-0 என்று வெற்றி பெற்றிருந்தது. எனவே 8-2 என்ற சராசரி கோல் அடிப்படையில் ரியல்மாட்ரிட் அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

அரையிறுதி ஆட்டத்தில் செல்சி பார்சிலோனாவையும், ரியல் மாட்ரிட் பேயர்ன் மியூனிச் அணியையும் சந்திக்கின்றன. ஏப்ரல் 27ஆம் திகதி முதல் அரையிறுதி முதல் லெக் ஆட்டத்தில் ரியல்மாட்ரிட், பேயர்ன் மியூனிச் அணியை சந்திக்கிறது.

தொடர்ந்து 28ஆம் திகதி பார்சிலோனா 2ஆவது அரையிறுதி முதல் லெக் ஆட்டத்தில் செல்சியை எதிர்கொள்கிறது. வரும் மே 4,5ஆம் திகதிகளில் அரையிறுதி 2ஆவது லெக் ஆட்டங்கள் நடைபெறுகின்றன.

## ஐ.பி.எல்லில் கடும் நடவடிக்கை

ஐ.பி.எல்., தொடரில் விதிகளுக்கு புறம்பாக செயல்படும் பந்து வீச்சாளர்கள் மீது, நடுவர்கள் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, நிர்வாகம் தெரிவித்துள்ளது. பந்து வீச்சாளர்களுக்கான கடும் விதிமுறைகள் கடந்த பெப்ரவரி 1 முதல் நடைமுறைக்கு வந்தது. இதன்படி, ஆட்டத்தின் போது பந்து வீச்சாளர் பந்தை எறிவதாக நடுவர் அல்லது ஆட்ட மத்தியஸ்தர் சந்தேகப்பட்டு தெரிவித்தால், தொடர்ந்து பந்து வீச்சு செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்.

இதையடுத்து இந்த விதியை ஐந்தாவது ஐ.பி.எல். தொடரில் முழுமையாக கடைப்பிடிக்குமாறு நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது. இதுகுறித்து ஐ.பி.எல். இணையத்தளத்தில் வெளியிட்ட அறிக்கை விவரம்:

புதிய விதிப்படி பந்து வீச்சாளர்கள் பந்துவீசும் முறையில் சந்தேகம் இருந்தால், நடுவர்கள் உடனடியாக புகார் தெரிவிக்கலாம். இந்தியாவில் நடந்த உள்ளூர் தொடரின் போது, இந்த முறைதான் பின்பற்றப்பட்டது. ஆட்டங்களின் போது நடுவர்கள் நேரடியாக அல்லது 'ரி.வி' ஒளிபரப்பின் மூலம் மற்றும் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி பந்து வீச்சாளர்கள் நடவடிக்கையை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். ஒருவேளை விதி 24.2 இன் படி பந்து வீச்சாளர் பந்தை எறிவதாக நடுவர் அல்லது ஆட்ட மத்தியஸ்தர் தெரிவித்தால், போட்டியில் விதிக்கு புறம்பாக செயல்[illegible] முறைப்படுத்த வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு இருந்தது. (5)

## சச்சினுடன் ஆடியது மாறுபட்ட அனுபவம்

சென்னை ரசிகர்களை உற்சாகப்படுத்தும் வகையில், மும்பை இண்டியன்ஸ் அணியின் தொடக்க வீரர் ரிச்சர்டு லெவி இந்தியாவின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கருடன் களமிறங்கினார். இவர் அதிரடியாக விளையாடி(35 பந்து, 50 ஓட்டங்கள்(3 சிக்சர், 6 பவுண்டரி)) மும்பை அணியின் வெற்றிக்கு வித்திட்டார்.

இதுகுறித்து லெவி கூறும் போது, உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கருடன் தொடக்க வீரராக களம் இறங்கியதை என்னால் நம்ப இயலவில்லை.

அவர் என்னுடன் மிக இயல்பாக பேசினார். இது ஒரு மாறுபட்ட அனுபவம், அதிரடியாக ஆடும் வகையில் எனக்கு பந்து அமைந்தது. ஒருசில பந்துகள் தான் அதிகமாக பவுன்ஸ் ஆனது என்றார்.

தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த லெவி 20 ஓவர் சர்வதேச போட்டியில் குறைந்த பந்தில் சதம் (45 பந்து) அடித்த சாதனையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலிக்குக்கு வட்மோர் ஆதரவு




பாகிஸ்தான் அணியின் 'ரி-20' அணியின் தலைவராக சகலதுறை வீரர் சொய்ப் மலிக்கை நியமிக்க பாகிஸ்தான் அணியின் புதிய பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோர் தனது முழுமையான எண்ணத்தையும், ஆதரவையும் வெளிப்படுத்தியுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்தோடு மட்டுப்படுத்தப்பட்ட பந்து பரிமாற்றங்கள் கொண்ட போட்டியில் சொய்ப் மலிக் மீண்டும் பாகிஸ்தான் அணி சார்பாக பங்குபற்றவும் வட்மோர் தனது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார்.

வெளியாகியுள்ள தகவல்களின் அடிப்படையில் இலங்கைக்கு பாகிஸ்தான் அணி கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொள்வதற்கு முன்னர் பாகிஸ்தான் அணியின் '20/20' அணித் தலைமையில் மாற்றம் ஏற்படும் எனவும், அணித் தலைவராக மாறுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ள வீரராக சொய்ப் மலிக் காணப்படுகிறார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. ஆஸ்திரேலிய அணிக்கெதிரான தொடர் இலங்கையில் நடத்துவதற்கு பேச்சு வார்த்தைகள் இடம்பெற்று வருவதுடன், ஓரளவுக்கு அது நிச்சயமாகியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அண்மையில் இடம்பெற்று முடிந்த பாகிஸ்தானின் உள்ளூர் '20/20' தொடரில் சொய்ப் மலிக் தலைமை தாங்கிய சியல்கொட் அணி சம்பியன் பட்டம் வென்றதுடன், அந்தத் தொடர் முழுவதும் சொய்ப் மலிக் சிறப்பாகப் பிரகாசித்திருந்தார்.

ராவல்பின்டியில் இடம்பெற்ற இந்தத் தொடர் முழுவதையும் பாகிஸ்தானின் புதிய பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோர் நேரடியாகச் சென்று பார்வையிட்டிருந்தார். அதன் போதே சொய்ப் மலிக்கின் அணித்தலைமைப் பண்பில் அவர் ஈர்க்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த ஆண்டு செப்ரெம்பரில் '20/20' உலகக்கிண்ணப் போட்டி இடம்பெறவுள்ள நிலையில் பாகிஸ்தான் அணியின் '20/20' அணித்தலைமை மாற்றம் ஏற்படுத்தப்பட்டால் அது முக்கியமான மாற்றமாக அமையும் எனக் கருதப்படுகிறது. உலகக்கிண்ணப் போட்டிக்கு நடுவே ஏராளமான '20/20' போட்டி காணப்படாமையால் புதிதாக அணித் தலைவராக நியமிக்கப்படும் வீரர் நிச்சயமாக '20/20' உலகக்கிண்ணத்திலும் அணித் தலைவராகச் செயற்படுவார்.

தற்போதைய அணித் தலைவரான மிஸ்பா உல் ஹக் தொடர்ச்சியாக சிறப்பாக அணியை வழிநடத்தி போட்டியை வென்று கொடுத்து வருகின்ற போதிலும், அவரது வயது மற்றும் அவரது அணித் தலைமைப் பாணி சில ரசிகர்களையும், சில விமர்சகர்களையும் ஈர்த்திருக்கவில்லை. அதன் காரணமாக மிஸ்பா உல் ஹக்கை டெஸ்ட் போட்டிக்கு மாத்திரம் அணித் தலைவராக நியமிக்குமாறு சில கோரிக்கைகள் எழுந்திருந்தன. எனினும் மற்றுமொரு புறத்தில் மிஸ்பா உல் ஹக் இற்கு ஏராளமான ஆதரவும் காணப்பட்டு வருகிறது.

(5)


**Dongle**
மிகக் குறைந்த விலையில்
பக்கம் -24C பார்க்க

**மணல் விற்பனைக்குண்டு**
நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்
4 கெட்டர் - 24,000/- அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு. (கல்லு 1 - 38/-)
தொடர்புகளுக்கு கண்ணா 0776766499

நாளை ஆரம்பம்
A/L 2014 (கலை, வர்த்தகப் பிரிவுகள்)
காலை 9 மணி
DMI Jaffna

**ACADEMY OF LOGIC**
(பலாலி வீதி, இலுப்பையடிச்சந்தி)
**A/L 2014**
ஆரம்பம்: ஏப்ரல்-07 சனி - 8 மணி

கலை

| | |
|---|---|
| அரசியல் M.அசோக் | அளவையியல் N.பிரதீபன் |
| புவியியல் P.S.V.தினேஸ் | தமிழ் K.ஜெசிந்தன் |
| கிறிஸ்த நாகரீகம் S.I.கினனி (தேவா) | இந்து நாகரீகம் S.K.ரமணன் |
| நாடகம் S.ரமேஸ் | வரலாறு S.சுஜந்தன் |

வர்த்தகம்

| | |
|---|---|
| வணிகக்கல்வி S.சிவராசா | பொருளியல் M.C.சுதாகரன் |

கணக்கீடு A.T.சுரேன்

**A/L Chemistry**
Personal & Group Classes
நீங்கள் விரும்பிய பாட அலகுகள், கடந்த கால வினாக்கள்
தொடர்புகளுக்கு: 0777112931
By J.Jeyan (B.Sc.)

**Industrial Training for Computer Networks**
Server Installation (2008)
Client Installation (Win 7)
Active Directory Service
DHCP Service
DNS
Group Policy
Windows Deployment Server (RIS)
Routing
Switching
IP Addressing
VLSM
Basic Level Troubleshooting
Network Monitoring Tools
Cabling
5 Days Only 9.00am - 3.00pm
By Industrial Experts
Tel : 021 222 9901 Mobile : 0775632056
Register on or before 9 th of April.
IDM Nations Campus Jaffna Branch
Managed by Aharam Solution (Pvt) Ltd
#216, Navalar Road, Jaffna

NEC
A/L 2014 கணக்கீடு A/L 2014
B.Com, H.N. Dip in Acc.
07.04.2012 சனி

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
அனைத்துப் பிரிவுகளுக்குமான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

| Batch I: 04.04.2012 | Batch II: 07.04.2012 | Batch III: 11.04.2012 |
|---|---|---|
| 09.00 - 12.00 | 03.00 - 5.00 | 09.00 - 12.00 |

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
**Quick Learning Course** (Spoken English with Grammar) 1½ Months
**Diploma In English** 2½ Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

எமது கல்லூரியினால் நடாத்தப்படும் சர்வதேசப் பரீட்சைகள்
**A1 Exam - Sponsor /Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
◇ U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
◇ எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
◇ சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
◇ நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
◇ ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
**BI Exam - Student Visa** மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
**IELTS** (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது)
We guarantee minimum band 5.0 Upwards 2½ Months
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074

சர்வதேச தராதரமுடைய சான்றிதழுக்கான கற்கைநெறிகள்
குறுகிய காலத்துக்குள், மிகக்குறைந்த கட்டணத்துடன்......
ICDL International Computer Driving Licence
COURSE & EXAMS Rs. 6500 ONLY

Concepts of ICT
Using the Computer and Managing Files
Word Processing
Spreadsheets
Using Databases
Presentation
Web Browsing and Communication
**Gateway** Centre for ICT Education
347, Kasthuriyar Road, Jaffna
Phone : 021 567 5555 Fax : 021 222 7967
E - mail : gatewayjfn@sltnet.lk

**ஷாம்சன் இங்கிலீஷ் - 3 மாத பயிற்சிநெறி**
இன்றுவரை உங்களால் ஆங்கிலத்தில் பேசமுடியாதிருப்பதற்கான காரணம் ஆங்கிலம் கடினம் என்பதால் அல்ல, தவறான வழிமுறையில் கொப்பியில் எழுதியும், CD, புத்தகத்தின் வாயிலாக அதை முயற்சித்தமையாலாகும்.
ஆங்கிலத்தை மட்டுமல்ல உலகில் எந்தவொரு மொழியையும் இலக்கணம், CD, புத்தகம் வாயிலாகக் கற்று சரளமாகப் பேசவே முடியாது. நீங்கள் கூட உங்கள் தாய்மொழியை அவ்வாறு படிக்கவில்லையே!
எமது பழக்கப்படுத்தல் மூலமான ஆங்கிலப் பயிற்சியானது ஒரு சிறு குழந்தை எவ்வாறு தன் தாய்-தந்தையருடன், அயலவருடன் பேசிப் பேசி மொழியைப் பழகியதோ அதை அடிப்படையாகக் கொண்டதாகும்.
நீங்களும் எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சிப்பட்டறையில் (Work Shop) இணைய விரும்புகிறீர்களா? அப்படியானால் எதிர்வரும் 07.04.2012 இல் ஆரம்பமாகும் புதிய பிரிவில் இணையுங்கள். (ஆசிரியர்கள், தொழில்புரிவோர், பட்டதாரிகள் மற்றும் 15 வயதுக்கு மேற்பட்ட அனைவரும்)
சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I மு.ப. 8 - 10
பிரிவு II மு.ப. 10 - 12
பிரிவு III பி.ப. 1 - 3
பிரிவு IV பி.ப. 3 - 5
ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்
**SAAMSON ENGLISH**
279, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (ஆஸ்பத்திரி பின்புறம்)
தொ.பே. 077 621 4567


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.